# கண்ணெதிரே தோன்றினாள்

## 1

மலைமுகடுகளாய் நிமிர்ந்து
நிற்கிறாள் புல்வெளிகளாய்
பரந்து விரிகிறாள் பூக்களாய்
மலர்ந்து சிரிக்கிறாள் இளம்
தென்றலாய் என்னைத் தாலாட்டுகிறாள்
இயற்கை அன்னை!

குன்னூர். பசுமையையும் குளுமையையும் தன்னுள் வைத்துக் கொண்டு சிலிர்க்க வைத்தது. விடிந்து வெகு நேரமான பின்பும் சூரியன் வெளியே வராமல் மேகக் கூட்டத்தினுள் பதுங்கியிருந்தான்.

ஊர் முழுக்க இலவசமாய் சாம்பிராணிப் புகையைப் போட்டு விட்டாற்போல் புகையை பரப்பிக் கொண்டிருந்தது பனிமூட்டம். இரவெல்லாம் சொட்டிய பனித்துளிகள் புற்களின் மீது வைரத் துணுக்குகளாய்ச் சிதறிக் கிடந்தது.

மரங்களின் மீதும் மலைமுகடுகளின் மீதும் பனிச் சிதறல்கள் உறைந்து போயிருந்த காட்சி ரம்மியமாய் இருந்தது. பனியைப் பற்றியோ குளிரைப் பற்றியோ கவலைப் படாத சிலர் குளிரை விரட்டும் ஆடைகளோடு தங்களது வேலைகளைக் கவனிக்கச் சென்று கொண்டிருந்தனர்.

பள்ளிக் குழந்தைகள்கூட எறும்பு வரிசை போல் சாரை சாரையாய் மலைப் பகுதியில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தனர். சுற்றுப்புறம் முழுக்க பச்சை ஆடையைப் போர்த்திக் கொண்டிருந்த மலைச்சரிவுப் பகுதியில் அந்த வீடு இருந்தது.

சற்றே பெரிதாய் பழங்கால அரண்மனை போல் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது. ஆங்காங்கே சின்னதும் பெரியதுமாய் வீடுகள் இருந்தாலும் அவற்றின் நடுவே பளிச்சென நின்றிருந்த அந்த வீட்டின் மொட்டை மாடியில் நின்றிருந்தான் ஸ்ரீதரன்.

பார்க்கப் பார்க்க சலிக்காத இயற்கையுடன் ஒன்றிப் போயிருந்த ஸ்ரீதரன், தனது மேற்படிப்பை அயல்நாட்டில் முடித்து விட்டு, சொந்த ஊர் திரும்பியிருக்கும் அழகான இளைஞன். படித்த களையான முகம். சிரிப்போடு இருக்கும் கண்கள். எதற்கும் அலட்டிக் கொள்ளாத அலட்சியம்.

பனியனும் ஷார்ட்ஸுமாய் நின்று கொண்டிருந்த வனைக் கலைத்தது சிவசாமியின் குரல்.



"தம்பி! பருத்திப் பால் கொண்டு வந்திருக்கேன்..." - பவ்யமான குரலில் புன்னகையோடு திரும்பினான் ஸ்ரீதரன்.

"பரவாயில்லையே... எனக்குப் பருத்திப் பால் பிடிக்கும்னு மறக்காம செய்திருக்கீங்களே... தேங்க் யூ சிவசாமி!" - நன்றியோடு வாங்கிக் கொண்டான்.

இளம் மஞ்சள் நிறத்தில் ஏலம் மணத்துடன் தேங்காய்ப்பூவோடு இருந்த பானத்தை வெகுவாய் ரசித்துப் பருகினான்.

"சிவசாமி! சூப்பர் டேஸ்ட். எந்த நாட்டுக்குப் போனாலும் எந்தக் காபி குடிச்சாலும் நீங்க போடுற பருத்திப் பாலுக்கு ஈடு இணையே இல்லை."

"என்ன தம்பி நீங்க... ரொம்பப் புகழ்றீங்க?" - சற்றே வயதான அந்த சிவசாமி கூச்சத்தில் நெளிந்தார்.

"இது வெறும் புகழ்ச்சி இல்லை சிவசாமி... உண்மை. நீங்க மட்டும் வெளியிடத்தில போய் பருத்திப்பால் செய்து விற்பனை ஆரம்பிச்சீங்கன்னு வையுங்க... உங்களை அடிச்சிக்க ஆளே கிடையாது."

"எனக்கு அதெல்லாம் வேணாம் தம்பி. கடைசி வரை நம்ம வீட்லயே உங்களுக்கெல்லாம் சாப்பாடு செய்து பரிமாறி என் காலத்தைக் கழிச்சாப் போதும்."

"என்ன சிவசாமி! ஏதோ ஜாலிக்கு பேசினா சீரிய ஸாயிட்டீங்க...!"

"தம்பி வந்தாத்தானே இந்த வீடு கலகலக்குது... இந்த வாட்டி எவ்ளோ நாள் தம்பி இருப்பீங்க?"

"இனிமே இங்கேதான் இருக்கப் போறேன். படிச்சுப் படிச்சு போரடிச்சுப் போச்சு. இனிமே நம்ம வீட்ல இந்த

இயற்கை அன்னையோட மடியில சந்தோஷமா வாழ வேண்டியதுதான்..."

சிவசாமி அமைதியானார். அவன் குடித்து முடிக்கும் வரை அமைதியாய் நின்று அவன் நீட்டிய டம்ளரை வாங்கிக் கொண்டே கேட்டார்.

"தம்பிக்கு என்ன சாப்பாடு பண்ணட்டும்?"

"அப்பா வந்திட்டும் சிவசாமி... சேர்ந்தே சாப்பிடலாம்."

"நல்லதுங்க. மாவு இருக்குது. ஊத்தப்பம் செய்துடவா?"

"டபுள் ஓ.கே. அப்பா வர நேரமாகுமா?"

"ஒண்ணும் சொல்லிட்டுப் போகலை. நீங்க இப்போ வருவீங்கன்னு தெரியாதே! தெரிஞ்சா போயிருக்க மாட் டாங்க..."

"நான்தான் சஸ்பென்ஸா இருக்கட்டும்னு போன் பண்ணாம வந்தேன். இதுவும் நல்லதுக்குத்தான். திடீர்னு என்னைப் பார்த்ததும் ஷாக்காகி நிற்பாங்களே... பார்க்க ரொம்ப ஜாலியா இருக்கும்!" – சொல்லிவிட்டு ஸ்ரீதரன் சிரிக்க, சிவசாமி மௌனமாய்க் கீழே இறங்கத் திரும்பினார்.

"சிவசாமி! ஒன் மினிட்."

"என்னங்க தம்பி!"

"என்னாச்சு உங்களுக்கு?"

"எனக்கு என்ன தம்பி. ஒண்ணும் இல்லையே...!"

"இல்லே... ஏதோ இருக்கு. சொல்லுங்க..."

"தம்பி!"



"எப்பவுமே நான் ஊருக்கு வந்தா உங்க முகத்துல ஒரு சந்தோஷம் தெரியும். உங்க பேச்சுல, நடையில உற்சாகம் இருக்கும். இந்த முறை அது மிஸ்ஸிங்."

"தம்பி! அது வந்து..."

"ஒவ்வொரு முறையும் நான் திரும்பிப் போகும்போது இங்கேயே இருந்திடுங்க தம்பின்னு நூறு வாட்டியாவது சொல்வீங்க. ஆனா இனிமே நான் இங்கேதான் இருக்கப் போறேன்னு சொல்லியும் உங்க முகத்தில துளிகூட சிரிப்பு இல்லையே...!"

'கெட்டிக்காரன். முகத்தையும் அசைவையும் வைத்தே எதிராளியின் மனதைக் கண்டு கொள்வான்.' சின்னச் சிரிப்போடு சமாளித்தார்.

"அது வேறொண்ணுமில்லை தம்பி. ரெண்டு நாளா பனி ஜாஸ்தி. அது கொஞ்சம் உடம்புக்கு ஒத்துக்கல்ல...!"

"பொய். எத்தனை பனி கொட்டினாலும் ஸ்வெட்டர்கூட போடாம வெளியே சுத்திட்டு வர்றவர் நீங்க. உங்களுக்குப் பனி ஒத்துக்கலையா? நான் நம்ப மாட்டேன்."

"அதெல்லாம் ஒரு வயசு தம்பி. இப்போ வயசாகுதில்ல... உடம்பு பழைய மாதிரி இல்லை...!" – குரல் நைந்து வந்தது.

"சிவசாமி! நிஜமாவே உங்களுக்கு உடம்பு சரி யில்லையா? என்ன பண்ணுது? ஹாஸ்பிடல் போலாமா?"

"அதெல்லாம் வேண்டாம் தம்பி. சுக்குக் கஷாயம் வெச்சுக் குடிச்சா சரியாகிடும்."

"நீங்க மாறவே இல்லை சிவசாமி!"

"தம்பி! நீங்களும் பனியில ரொம்ப நேரம் நிற்க வேண்டாம். இறங்கி வாங்க. சளி பிடிச்சுக்கப் போகுது."

"எனக்கு ஒண்ணும் பண்ணாது. எவ்வளவு சில்லுன்னு இருக்கு. எவ்வளவு கூல் கிளைமேட். இதையெல்லாம் இவ்வளவு நாளா மிஸ் பண்ணிட்டோமேன்னு வருத்தமா இருக்கு.

பேசாம இங்கேயே ஏதாவது படிச்சிட்டு அப்பாவுக்கு ஹெல்ப் பண்ணிட்டு எஸ்டேட்டை கவனிச்சிக்கிட்டு இருந்திருக்கலாம்..." – அவன் அலட்சியமாகவே சொல்ல, திகைப்பாய் அவனை நிமிர்ந்து பார்த்தார் சிவசாமி.

"இருந்திருக்கலாம். இங்கேயே இருந்திருந்தா இத்தனை சங்கடங்களைத் தவிர்த்திருக்கலாம்."

"என்ன?" – ஸ்ரீதரன் புருவம் சுருங்கக் கேட்டவுடன் சுதாரித்தார்.

"அது... அப்பாவைப் பத்தித்தான்...!"

"அப்பாவுக்கென்ன? ஓ! ஆஸ்துமா தொல்லைதானே... ம்ப்ச்...! நானும் எத்தனையோ முறை கூப்பிட்டுப் பார்த்தேன். ஆனா அப்பா இந்த ஊரை விட்டு வரமாட்டேன்றாங்களே...!"

"பொறந்து வளர்ந்த ஊராச்சே...!"

"இருக்கட்டுமே... ஒரு ஆறு மாசம் என்கூட வந்து இருக்கலாமே... ட்ரீட்மெண்ட் எடுத்தா ஈஸியா குணமாகியிருக்கும்."

"இப்பவும் மருந்து சாப்பிட்டுத்தான் இருக்காங்க."



"வழக்கமான மருந்து மாத்திரைதானே...?"

"இல்லைய்யா... இப்போ வேற மருந்து சாப்பிடுறாங்க. ஹோமியோபதியாம்...!"

"என்ன? ஹோமியோபதி மருந்தா? எந்த டாக்டர்கிட்ட பார்க்கிறாங்க?"

"டாக்டர் பேர் தெரியாதுங்க. கார்ல போயிட்டு வருவாங்க. லேகியம் எல்லாம் சாப்பிடுறாங்க..."

"எப்போ இருந்து?"

"ரெண்டு மாசமா சாப்பிடுறாங்க. இப்போ பரவாயில்லைங்க..."

"என்கிட்ட ஒருநாள்கூட இதைப் பத்தி சொல்லலையே...!"

"நேர்ல வந்த பிறகு சொல்லலாம்னு விட்டிருப்பாங்க."

"சரி! இப்போ அப்பா எங்கே போயிருக்காங்க. அப்பா யார் வீட்லயும் போய் ஸ்டே பண்ண மாட்டாங்களே?"

"மாசத்துல ரெண்டு நாள் ஆஸ்பத்திரிக்கு போயிட்டு வர்றாங்கய்யா...!"

"என்ன? ரெண்டு நாளா?"

"நேத்துக் காலையில போனாக்கா... ராத்திரி தங்கிட்டு இன்னிக்குக் காலையில பத்து மணிக்கு மேலதான் வருவாங்கய்யா...!"

"எந்த ஹாஸ்பிடலுக்குப் போறாங்க?"

"அது தெரியாதுய்யா..."

"என்ன சிவசாமி நீங்க... வீட்ல இருக்கிறது நீங்க ரெண்டே பேர். அப்பாகூட நீங்க போக வேண்டாமா? தனியாவா அனுப்புறது? உடம்பு முடியாதவங்க... ஏதாவது ஆச்சின்னா...?"

"ஐயா... தனியா போறதில்லங்க..."

"பின்னே?"

"அது..." – எனத் தொடங்கியவர் மேலே பேச முடியாமல் எச்சில் விழுங்கினார்.

"என்ன சிவசாமி! சொல்லுங்க..."

"தம்பி! அடுப்பில பாலை வெச்சிட்டு வந்தேன். சுண்டிப் போயிருக்கும். இதோ வர்றேன்...!" என நழுவியவரை கைபற்றி நிறுத்தினான்.

"சிவசாமி! என்கிட்ட என்ன மறைக்கிறீங்க?"

"அய்யோ! நான் எதையும் மறைக்கலைங்க..."

"பின்னே ஏன் பதில் சொல்லாம ஓடுறீங்க?"

"அப்படியெல்லாம் இல்லீங்க?"

"நேத்து ஈவ்னிங் நான் வந்ததுல இருந்து இதோ இப்போ வரைக்கும் என்னைப் பார்த்தாலே உங்க உடம்பு உதறுது... பேச்சுத் தடுமாறுது..."

"இல்லீங்க தம்பி!"

"பொய் சொல்லாதீங்க சிவசாமி. எனக்கோ அப்பாவுக்கோ தெரியாம ஏதாவது தப்பு பண்றீங்களா?"

பதறிப் போனார் சிவசாமி. "மகமாயி! தம்பி... நானா தப்பு பண்ணுவேன்?"



"பின்னே ஏன் தடுமாறுறீங்க? கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க..."

"தம்பி! நான்..."

"அப்பா யார்கூட ஹாஸ்பிடல் போயிருக்காங்க?"

"தம்பி! அவசரப்படாதீங்க. அப்பா வந்திட்டும்... அவுக வாயால சொன்னாத்தான் நல்லது."

"என்ன சொல்லணும்?"

"தம்பி! நான்... நான் என்னன்னு சொல்லுவேன்?"

"எதுவா இருந்தாலும் சொல்லுங்க... அப்பாவுக்கு எதுவும் பிரச்சனையா?"

"அதெல்லாம் இல்லை தம்பி!"

"வேறென்ன? எதுவா இருந்தாலும் சொல்லுங்க..."

"தம்பி! வந்து... பெரிய ஐயா... ஒரு... ஒரு..." – சிவசாமி தயங்கிக் கொண்டிருந்த போதே தூரமாய் ஹாரனுடன் வெள்ளை நிற அம்பாஸிடர் வந்து கொண்டிருந்தது.

சிவசாமியின் முகம் பிரகாசமானது. "தம்பி! அதோ அப்பாவோட கார் வந்திடுச்சு. கீழே வாங்க...!" – சொல்லி விட்டு அவர் கீழே இறங்கிவிட,

நின்ற இடத்தில் இருந்தே பார்வையை வெளியே வீசினான் ஸ்ரீதரன். மலைப்பாதையின் வளைவில் மெதுவாய் ஊர்ந்து மேலேறி வந்தது கங்காதரனின் கார்.

அப்பாவைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆர்வத்தைவிட சிவசாமியின் மழுப்பலான வார்த்தைகளும் தயக்கமும் குழப்பத்தை அதிகப்படுத்தியது. கார் வீட்டை

நெருங்குமுன் சிவசாமி கீழே இறங்கிச் சென்றுவிட, நிதானமாய்த் தானும் இறங்கினான்.

படிக்கட்டில் இறங்கி வீட்டிற்குள் நுழைந்து முன் புறத்தை அடையும் முன்... கார் வந்து நின்று, கதவைத் திறந்து மூடும் சப்தம் கேட்டது.

அதற்குள் காரை நெருங்கிவிட்ட சிவசாமி, கங்காதரனிடம் மெல்லிய குரலில் ஏதோ சொல்ல, ஆவலாய் நிமிர்ந்தார் கங்காதரன்.

உயரமாய்க் கம்பீரமாய் லேசான நரையோடு முறுக்கிய மீசையோடு... கூர்மையான பார்வையோடு இருந்த தந்தையைப் பார்த்து வியந்தான் ஸ்ரீதரன். எப்போதும் பார்க்கும் உருவம்தான்.

ஆனால் இப்போது முன்பைவிட மினுமினுப்பாய் இருந்தார். உடல்கூட சற்று நிமிர்வாய் எடைகூடித் தெரிந்தது. தலையில் தெரிந்த சில நரைமுடிகள் கம்பீரத்தை இன்னும் தூக்கிக் காட்டின.

எல்லாவற்றையும் விட அந்த உற்சாகமும் துள்ளலும் புதிதாய் இருந்தது. வீட்டிற்குள் இருந்து வந்து கொண்டிருந்த மகனை நாலே எட்டில் ஓடிவந்து கட்டிக் கொண்டார்.

"ராஜா! எப்படியப்பா இருக்கே? படிப்பெல்லாம் முடிஞ்சதா? ஒரு போன் பண்ணியிருந்தா அப்பாவே ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே..." - பரபரப்பாய்க் கேட்டவரிடம் புன்னகையை மட்டுமே பதிலாக்கினான்.

"சாப்பிட்டியாப்பா? சிவசாமி! தம்பிக்கு சாப்பாடு கொடுத்தாச்சா?"



"இன்னும் இல்லீங்கய்யா.... நீங்க வந்ததும் சேர்ந்தே சாப்பிடலாம்னு சொல்லிட்டாங்க...!"

"என் பிள்ளை ஆயிற்றே? என்னை விட்டுவிட்டு சாப்பிடுவானா? நீ டிஃபனை எடுத்து வை. நாங்கள் சேர்ந்தே சாப்பிடுறோம்..." - என்றவர் வெளியே நின்ற காரைத் திரும்பிப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

"யமுனா! இறங்கி வாம்மா... புள்ளையைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டியே...! இதோ வந்திருக்கிறான் பாரு... என் செல்லப்பிள்ளை. வந்து பாரு!" - தந்தையின் உற்சாகக் குரலில் புருவம் நெறிய, காரைப் பார்த்தான் ஸ்ரீதரன்.

காரின் இடப்பக்கக் கதவைத் திறந்து சற்றே தயக்கத்துடன் அந்தப் பெண் இறங்கி வந்தாள். மருண்ட பார்வை. திகிலான முகம்.

புரியாத பார்வையுடன் தந்தையை நோக்கினான். "அப்பா! யார் இவங்க?"

சிவசாமி வீட்டிற்குள் போய்விட, அந்தப் பெண் பயமாய் வந்து கங்காதரனின் முதுகின் பின் பதுங்கிக் கொண்டாள். விலை உயர்ந்த புடவையை நளினமாய்க் கட்டியிருந்தாள்.

கழுத்தில் கனமான தாலி. நெற்றியிலும் வகிட்டிலும் குங்குமம் பிரகாசித்தது. இளம்பெண்தான். என்றாலும் முகத்தில் சற்றே முதிர்ச்சி தெரிந்தது. கண்களைப் பிடிவாதமாய்த் திருப்பி தந்தையைப் பார்த்தான்.

"அப்பா! யார் இவங்கன்னு கேட்டேன்?"

கங்காதரன் லேசாய்த் தடுமாறினார். "வாப்பா! உள்ளே போய் பேசலாம். நீ பசியோட இருப்பியே...?"

அசையாமல் நின்றான். "எனக்கு இப்போ பசிக்கலை. முதல்ல இது யாருன்னு சொல்லுங்க...?"

"இது... இவங்க பேர் யமுனா."

"சரி!"

"இவங்க... இவ... உன்னோட..."

"என்னோட...?" - கண்களை ஆத்திரமாய் விழித்தான்.

"உன்னோட... சி... சின்னம்மா..." - தட்டுத் தடுமாறி கங்காதரன் சொல்லிவிட, நெருப்பை மிதித்தாற்போல் அதிர்ந்து துடித்துப் போனான்.

"எ... என்ன? என்ன சொன்னீங்க?" - தந்தையின் தோளைப் பற்றி உலுக்கினான்.

"அது... அவளுக்குன்னு யாரும் இல்லப்பா. அதனால...!"

"ஸ்டாப் இட்!" - ஸ்ரீதரனின் கத்தலில் மிரண்டு பின்வாங்கினாள் அந்தப் பெண். கண்கள் சிவக்க தந்தையின் சட்டையைக் கொத்தாய்ப் பற்றினான் ஸ்ரீதரன்.

## 2

வாழ்க்கை என்றால் ஆயிரம்
இருக்கும் வாசல்தோறும்
வேதனை இருக்கும் - வந்த
துன்பம் எதுவென்றாலும் வாடி
நின்றால் ஓடுவதில்லை!



சிவசாமி ஓடி வந்து ஸ்ரீதரனை விலக்கி விட்டார். "தம்பி! என்ன காரியம் செய்றீங்க? வாங்க இப்படி!"

சிவசாமியைக் கோபமாய் உதறித் தள்ளினான். "பேசாதீங்க! நீங்களும் சேர்ந்துதானே இந்தக் கேடு கெட்ட காரியத்தைப் பண்ணியிருக்கீங்க...!"

"இல்ல தம்பி! இதுல என் பங்கு எதுவுமே இல்லை..."

"பொய். உங்களுக்குப் பங்கு இல்லைன்னா எனக்குப் போன் பண்ணிச் சொல்லியிருக்கலாமே... ஏன்! நேத்தே வந்தேனே... இந்த நிமிஷம் வரை இதைப்பத்தி ஒரு வார்த்தை விட்டீங்களா?"

"தம்பி! இது உங்க குடும்ப விஷயம். நான் எப்படி?"

"எது? எங்க குடும்ப விஷயமா? உங்களை அப்படியா நடத்திட்டு வர்றோம்? உங்களை வேத்துமனுஷனா நினைப்பேனா நான்?"

கங்காதரன் மகனின் தோளைத் தொட்டார். வெடுக்கெனத் தட்டிவிட்டான்.

"தம்பி! உன் கோபம் எனக்குப் புரியுதுப்பா... ஆனா நீ கொஞ்சம் பொறுமையா நான் சொல்றதைக் கேளு...!"

"வாயை மூடுங்க! என்கிட்ட பேசக் கூடாது. மரியாதை கெட்டுடும்."

"ஸ்ரீ! கோபப்படாதேப்பா... நான் சொல்றதைக் கேட்டுட்டுப் பேசு!"

"உங்ககூட பேசுறதையே நான் அசிங்கமா நினைக்கிறேன். தலைக்கு மேல் வளர்ந்த பிள்ளையை வைத்துக் கொண்டு செய்கிற காரியத்தையா செய்திருக்கிறீர்கள்... ச்சே!"

"தப்புதானப்பா! ஆனா... நான்..."

"நோ! நீங்க சொல்ற எதையும் காது கொடுத்துக் கேட்க விரும்பலை. பேசாதீங்க. நீங்க என் அப்பா இல்லை. என் அம்மாவுக்குத் துரோகம் பண்ணின துரோகி.

வருஷா வருஷம் படையல் போட்டு புதுத் துணி எடுத்து, என் அம்மாவோட நினைவுநாளைக் கொண்டாடு வீங்களே... அதெல்லாம் ஊரை ஏமாத்த நடிச்ச நடிப்பா?

உங்க மனசுல இவ்வளவு கேவலமான எண்ணம் இருந்தா... எனக்கு விபரம் தெரியும் முன்னே கட்டிக்க வேண்டியதுதானே! பிள்ளைக்காகக் கல்யாணமே பண்ணிக்கலை கங்காதரன்னு எல்லாரும் உங்களைப் பாராட்டணும்.

அதுக்காகத்தானே இவ்வளவு நாளா உத்தமரா நடிச்சீங்க. நீங்க என் அம்மாவோட ஆன்மாவை மட்டும் ஏமாத்தலை.

என்னை... நான் உங்க மேல வெச்சிருந்த அன்பை... நம்பிக்கையை... எல்லாத்தையும் கொன்னுட்டீங்க.

நீங்க ஒரு ஃபிராடு. சீட்டிங் ஃபெல்லோ. மொத்தத்தில நீங்க ஒரு மனிதனே இல்லை. ஐ ஹேட் யூ!" - ஆத்திர மாய்க் கத்தினான்.

"இல்லப்பா! உங்க அப்பா உத்தமர். அவர் ஒரு தெய்வம்!" - மென்மையான குரலில் கண்கள் சிவக்கத் திரும்பினான்.

யமுனா கண்களில் துளிர்த்த கண்ணீரோடு பேசினாள்.



"ஆமாம்ப்பா... இவர் தெய்வம்தான். சாகப் போன என்னைக் காப்பாற்றி எனக்கு வாழ்க்கைக் கொடுத்த தெய்வம்."

"ஏய்! ச்சீ... வாயை மூடு. நீ யார் எனக்கு? என்கிட்ட பேச உனக்கு எந்த அருகதையும் கிடையாது. இவர் கையால தாலி வாங்கிட்டா எனக்கு அம்மா ஆகிடுவியா?"

"இந்த உடம்புல உயிர் இருக்கிற வரைக்கும் உனக்கு அம்மாவா இருப்பேன்... நிச்சயமா."

"ச்சீசீ நீ எனக்கு அம்மாவா? அந்த இடம் ஒரு நாளும் உனக்குக் கிடைக்காது."

"தம்பி!"

"பேசாதே. இந்த வீட்டையும் பணத்தையும் பார்த்து ஆசைப்பட்டுத்தானே இவரைக் கட்டிக்கிட்ட. உன் வேஷத்தை அவரோடயே நிறுத்திக்க. என்கிட்ட வேண்டாம்."

"ஸ்ரீ! மரியாதையாப் பேசுடா..." என்ற தந்தையை ஏளனமாய்ப் பார்த்தான்.

"அப் புதுப் பொண்டாட்டிக்கு சப்போர்ட்டா?"

"ஸ்ரீ! இப்படிப் பேசாதப்பா. மனசுக்கு கஷ்டமா இருக்கு."

"கஷ்டமா இருக்கா. ரொம்ப வேடிக்கையா இருக்கு."

"ஸ்ரீ..."

"நீங்க செய்த காரியத்தால நான் வெட்கப்பட்டு வேதனைப்பட்டு நிற்கிறேன். ச்சே! இனிமே எப்படி வெளியே போவேன்? பார்க்கிறவங்க எல்லாரும் கேட்பாங்களே... கேலி பண்ணி சிரிப்பாங்களே...!"

"பார்த்தீங்களா...! இதையெல்லாம் யோசித்துத் தான் வேண்டாம்னு சொன்னேன். கேட்டீங்களா?" - கங்காதரனைப் பார்த்துக் கேட்ட யமுனாவைப் பார்த்து கைதட்டிச் சிரித்தான்.

"பேஷ்! ரொம்ப அருமையான நடிப்பு. இப்படி நடிச்சுத்தான் இவர் கையால தாலி வாங்கினியா? உனக்கு வெட்கமா இல்லை... காசு பணம் இருந்தா கிழவனைக்கூட மயக்கிடுவியா? ச்சே! காசுக்காக உடம்பை விக்கிற பொண்ணுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்?"

"ஸ்ரீதர்! நாவை அடக்கிப் பேசு. அவ உன் தாய்க்குச் சமம்."

"உங்களுக்கு வேண்டுமானால் யார் வேணும்னாலும் மனைவி ஆகலாம். எனக்கு அம்மா ஆக முடியாது."

"அதுக்காக ஒரு பெண்ணை இவ்வளவு அசிங்கமாப் பேசுவியா?"

"பேசுவேன். அசிங்கமானவளை அசிங்கமாத்தான் பேச முடியும்."

"என்ன பிள்ளைடா நீ! படிச்சவன் மாதிரியா பேசுற?"

"படிப்பா? இப்பத்தானே புரியுது. எதுக்காக என்னை வெளிநாட்டுக்கு அனுப்பிப் படிக்க வெச்சீங்கன்னு..."

"என்னடா சொல்றே?"

"இங்கே இருந்தா உங்களோட லீலைகளுக்கு இடைஞ்சலா இருப்பேன்னுதானே என்னைத் தூரமா அனுப்புனீங்க..."

"கண்ணா! இப்படியெல்லாம் பேசாதேடா... உன் அப்பாவைப் பத்தி உனக்குத் தெரியாதா?"



"தெரியாமப் போச்சே... தெரியாமலே போச்சே... என் அப்பாவை மாதிரி உத்தமர் கிடையாது. சின்ன வயசுலேயே இறந்து போன என் அம்மாவை இன்னும் என் அப்பா மறக்கலை. எனக்கு அம்மா, அப்பா, கடவுள் எல்லாமே என் அப்பாதான்னு... என் ஃபிரெண்ட்ஸ்கிட்ட எல்லாம் சொல்வேனே...

இப்ப அவனுங்க எல்லாம் என்னைக் காறித் துப்ப மாட்டானுங்களா? பேரன் பேத்தியைக் கொஞ்சுற வயசுல உங்க அப்பாவுக்கு கல்யாணமான்னு அசிங்கமாக் கேட்க மாட்டாங்களா?

என் மானம், மரியாதை எல்லாத்தையும் குழி தோண்டிப் புதைச்சிட்டு அதுமேல மணவறை அமைச்சு இவ கழுத்துல தாலி கட்டியிருக்கீங்க. என் அம்மாவோட இடத்தை இவளுக்கு... இந்த வே..."

"ஸ்ரீதர்! போதும்டா. உன் வருத்தம், கோபம் எல்லாம் நியாயமானதுதான். நான் செய்ததும் தப்புதான். மறுக்கலை. என் பக்கத்து நியாயத்தையும் நீ கேட்கணும்ப்பா..."

"செய்த தப்புக்கு சப்பைக்கட்டுக் கட்டுறீங்களா?"

"இல்லப்பா... தயவு செய்து நான் சொல்றதைக் கேளு. ஆஸ்துமாவால நான் கஷ்டப்பட்டுக் கிடந்தப்ப என்னைக் கவனிச்சுக்க வந்தவதான் யமுனா. ஒரு தாயா என்னைக் கவனிச்சுக்கிட்டாப்பா..."

"எப்படிக் கவனிக்காம இருப்பா... பசையுள்ள இடமாச்சே...!"

"நீ நினைக்கிறது தப்புப்பா. இவ பணத்துக்கு ஆசைப்படுறவ இல்லை..."

"இதை நான் நம்பணும். இவ போட்டிருக்கிற நகையெல்லாம் யாரோடது. இந்தக் கல் வளையல்... இந்தச் செயின்... இந்தப் பதக்கம்... எல்லாமே என் அம்மாவோடது...

பணத்துக்கு ஆசைப்படாதவ இதையெல்லாம் எப்படி மாட்டிக்கிட்டாளாம்? இல்ல... புதுப் பெண்டாட்டிக்கு நீங்களே மாட்டி விட்டீங்களா?"

"யமுனா! என் பிள்ளை நல்லவன்தான். ஆனா இப்போ ரொம்ப கோபமா இருக்கான். சீக்கிரமே உன்னைப் புரிஞ்சுப்பான். வா... உள்ளே போகலாம்!" - மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டினுள் நுழைய முற்பட்டவரை கைநீட்டித் தடுத்தான் ஸ்ரீதரன்.

"அப்போ இனி இவ இங்கேதான் இருப்பா..."

"ஆமாம்ப்பா... நான் இவ கழுத்தில தாலி கட்டியிருக்கேன்."

"உங்க முடிவில எந்த மாற்றமும் இல்ல..."

"இது என்னடா கேள்வி?"

"ஒன் மினிட்!" - என்றவாறு தன் அறைக்குள் நுழைந்து ஆடை மாற்றிக் கொண்டு வெளியே வந்தான்.

"எங்கேடா வெளியே கிளம்பிட்டியா? சாப்பிட்டுப் போகலாம்."

பதில் பேசாமல் வெளிவாசலை அடைந்தவனை ஓடி வந்து தடுத்தார் சிவசாமி. "தம்பி! எங்கே போறீங்க?"

"எங்கேயோ போறேன்... விடுங்க என்னை?"



"தம்பி! கோபத்தை விடுங்க. ஐயா எது செய்தாலும் அதுக்கு ஒரு காரணம் இல்லாம இருக்காது."

"உன் ஐயாவை நீயே தலையில வெச்சுக்க. என்னை விடுங்க."

"தம்பி வேண்டாம்யா... உள்ளே வாங்கய்யா."

"விடுங்க சிவசாமி. இனி எனக்கும் இந்த வீட்டுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நான் போறேன்."

"ஐயோ! எங்கே தம்பி போவீங்க?"

"செத்துப் போகப் போறேன்..." - கையை உதறிவிட்டு நடந்தவனை ஓடி வந்து மறித்தாள் யமுனா.

"தம்பி! போகாதீங்க. நீங்க இந்த வீட்டுப் பிள்ளை. உங்களை வெளியேத்திட்டு இங்கே நான் வாழ வேண்டாம். நான் போயிடுறேன். நீங்க உள்ளே போங்க..."

"வழியை விடு!"

"தம்பி! ஏற்கெனவே நான் அதிர்ஷ்டம் கெட்டவள். இப்போ தகப்பனையும் பிள்ளையையும் பிரிச்ச பாவமும் சேரணுமா? சொன்னாக் கேளுங்க தம்பி. உள்ளே போங்க."

"ஏய்! வழியை விடு. எனக்கு உன்னைப் பார்த்தாலே அசிங்கத்தைப் பார்த்த மாதிரி இருக்கு..." - முகச் சுளிப்போடு ஸ்ரீதரன் சொல்ல, பேச்சற்று நின்றாள் யமுனா.

கண்கள் பெருகிவிட, கங்காதரனைப் பார்த்துக் கைகூப்பினாள்.

"நீங்களாவது சொல்லுங்களேன்..."

"நான் என்ன சொன்னாலும் அவன் கேட்கப் போறதில்லை... ஆத்திரம் அவன் கண்ணை மறைச்சிருக்கு."

"ஐயோ! ஏதாவது பண்ணிக்கப் போறார்?"

"என் பிள்ளை கோழை இல்லை..."

"ஆனா மானஸ்தன். மான அவமானத்துக்குப் பயந்தவன்..." - கோபமாய் வெடித்தவனைப் பார்த்துக் கெஞ்சினார் சிவசாமி.

"தம்பி! முதல்ல உள்ளே வாங்க. எல்லாம் பிறகு பேசலாம்..."

"இனி இந்த வீட்டுப் படியை மிதிக்க மாட்டேன். இவரு எனக்கு அப்பாவும் இல்லை. நான் இவருக்கு மகனும் இல்லை."

"தம்பி!"

"சொல்லி வையுங்க அவர்கிட்ட... நான் செத்துட்டா என் பிணத்தைக்கூட இவங்க யாரும் பார்க்கக் கூடாது!"

"தம்பி! இப்படியெல்லாம் பேசாதீங்கய்யா... இந்த வீட்டோட ஒரே வாரிசு... இந்தக் குடும்பத்தோட குலவிளக்கே நீங்கதானே...!"

"பயப்படாதீங்க சிவசாமி! உங்க ஐயா சீக்கிரமே இன்னொரு வாரிசைத் தருவாரு. என்னை மாதிரியே அதையும் நீங்களே வளங்க..."

"ஸ்ரீதர்!" - அதட்டிய கங்காதரனை அலட்சியமாய் ஒதுக்கிவிட்டு வெளியேறினான். வேகமாகச் சென்று மகனைத் தடுத்தார்.

"ஸ்ரீ! உன் கோபம் நியாயமானது. தப்பு செய்தவன் நான். என் பிள்ளை என் நிலையை எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வான் என்று நம்பி உன்னிடம் சொல்லாமல் செய்து விட்டேன்.



ஆனா அதுக்காக இவ்வளவு பெரிய தண்டனையை எனக்குக் கொடுத்திடாதேப்பா. யமுனா உனக்கு ஒரு நல்ல தாயா இருப்பா. ப்ளீஸ் ஸ்ரீதர்! உள்ளே வாப்பா..."

"தொடாதீங்க. எனக்கு நல்ல தாயா இருப்பது கிடக்கட்டும். முதல்ல உங்களுக்கு உண்மையான பெண்டாட்டியா இருப்பாளான்னு பாருங்க."

"ஸ்ரீதர்!"

"காசு, பணத்துக்காக தலை நரைச்ச ஒருத்தனைக் கட்டிக்க சம்மதிச்சவ எப்படி நல்லவளா இருப்பா? அவளோட குறிக்கோள் இந்தப் பணம். இந்தச் சொத்து.

இதெல்லாம் மொத்தமா சுருட்டிட்டு ஒருநாள் உங்களை அம்போன்னு விடப் போறா. அப்போ வருத்தப்பட்டு எந்தப் பிரயோஜனமும் இருக்காது.

இந்தக் கண்றாவியை நான் பார்க்கவும் வேண்டாம். என்னை யாரும் தேடவும் வேண்டாம். என் பிணம்கூட உங்களுக்குக் கிடைக்காது. நான் போறேன்."

விறுவிறுவென விலகி நடந்தவனின் பின்னே மூவரும் பரிதவிப்போடு ஓடிவர, அவர்களின் கெஞ்சுதலைக் காதில் கேட்காமல் மளமளவென மலைப்பாதையின் சரிவில் இறங்க ஆரம்பித்தான்.

பின்னால் தொடர்ந்து வந்தவர்களின் குரல் மெல்ல மெல்லத் தேய்ந்து பின் மறைந்தது.

# 3

இதயம் இதயம் எரிகின்றதே
இறங்கிய கண்ணீர் அணைக்கின்றதே
உள்ளங்கையில் ஒழுகும் நீர்போல்
என் உயிரும் கரைவதென்ன!

மழை பூத்தூறலாய் தூவிக் கொண்டிருக்க, சுற்றுப் புறம் மெல்ல இருட்டிக் கொண்டு வந்தது. ஈரக்காற்று உடலை நடுங்கச் செய்தது. மழைத் துளி உடம்பில் ஊசியாய்த் துளைத்தும் அசையாமல் படுத்திருந்தான் ஸ்ரீதரன்.

கோத்தகிரியின் மலைப் பகுதியில் சற்றே உயரமாய் இருந்த பாறையின் மீது கைகளைத் தலைக்கு அடியில் மடித்து வைத்துப் படுத்திருந்தான். வானத்தை வெறித்துக் கொண்டிருந்த கண்களில் லேசாய் ஈரம்.

இதுவே வேறொரு சூழலாய் இருந்தால் வானில் சூழ்ந்திருந்த கரிய மேகக் கூட்டத்தையும் காற்றினால் அது கலைவதையும் வெகுவாய் ரசித்திருப்பான்.

சொட்டுச் சொட்டாய் தொடங்கிய மழைத் துளி சரம் சரமாய் பொழிவதை நிதானமாய் ரசித்து நனைந்திருப்பான். ஆனால் இன்று நடந்த களேபரத்தில் எதையும் ரசிக்க முடியவில்லை.

மனம் முழுக்க வெறுப்பும் கோபமும் மண்டிக் கிடந்தது. அப்பா இப்படி ஒரு காரியம் செய்வார் என்று நினைக்கவில்லையே...

தனது ஆறாம் வயதில் மஞ்சள்காமாலையில் படுத்த அம்மா பிறகு எழவே இல்லை. அன்று முதல் தனது ஒவ்வொரு தேவையையும் பார்த்துப் பார்த்து செய்து, சாப்பிட வைத்து, தூங்க வைத்து, பள்ளிக்கு அனுப்பி... என எல்லாமே அப்பாதான்.



வளர்ந்த பிறகும்கூட அவர்தான் சாப்பிட வைப்பார். வருடம் தவறாமல் அன்னையின் நினைவு நாளன்று படையல் போட்டு சாமி கும்பிடுவதும், அன்று முழுக்க மௌன விரதம் இருப்பதுமாய் அப்பா அம்மாவை மறந்ததே இல்லை.

அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தான். அப்பாவின் அம்மா எத்தனையோ கேட்டுப் பார்த்தும், கெஞ்சிப் பார்த்தும் அப்பா மறுமணத்திற்குச் சம்மதிக்கவே இல்லை.

அப்போதெல்லாம் அப்பாவைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கும். என் அப்பாதான் உலகத்திலேயே பெஸ்ட் அப்பா என நெஞ்சை நிமிர்த்தியதுண்டு.

அப்படிப்பட்ட அப்பா எப்படி மாறிப் போனார்? நான்கு மாதங்களுக்கு முன் ஒருமுறை ஃபோனில் பேசும்போது வீசிங் பிராப்ளம் அதிகமாகி மருத்துவமனையில் மூன்று நாட்கள் அட்மிட் ஆனதாகவும் தற்போது உதவிக்கு ஒரு பெண்மணியை வேலைக்கு அமர்த்தியிருப்பதாகவும் சொன்னார்.

வேலைக்கு ஏதோ வயதான பெண்மணியாக இருக்கலாம் என அதைப் பற்றி பெரிதாக எடுத்துக் கொள்ளவும் இல்லை. அதைப் பற்றி அதிகமாக யோசிக்கவும் இல்லை.

பிறகு பலமுறை பேசியபோது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் என்று சொன்னாரே தவிர, இந்தப்

பெண்ணைப் பற்றி ஒரு வார்த்தை பேசவும் இல்லை. இவன் கேட்கவும் இல்லை.

நான்கே மாதத்தில் ஒரு பெண் வயதான, கண்ணியமான ஒருவரைத் தன் வலையில் வீழ்த்தி அவரையே மணந்து கொள்ள முடியுமா?

நிச்சயம் அந்தப் பெண்ணுக்கு முப்பது வயதிற்கு மேல் இருக்கும். ஏற்கெனவே திருமணம் ஆனவளா? இல்லை.. இதையே தொழிலாக வைத்திருப்பவளா?

அவளது விளையாட்டிற்கு தன் அப்பாவா பலியாக வேண்டும்? இனி எந்த முகத்தோடு வெளியில் நடமா முடியும்? அப்பா எப்படி எந்தக் கவலையும் பயமும் இன்றி இந்தக் காரியத்தைச் செய்தார்?

நிச்சயமாய் அப்பாவின் மீது தப்பு இருக்காது அவள்தான்... அவள்தான் ஏதோ சூழ்ச்சி செய்து வீழ்த்தியிருக்கிறாள்.

என்ன பெண் இவள்? வயோதிகர். அதுவு நோயாளி. வீட்டில் வளர்ந்த பிள்ளை இருக்கிறான் என்று தெரிந்தும் மணந்திருக்கிறாள் என்றால் அவள் எத்தகை இழிகுலத்தில் பிறந்தவளாக இருக்கும்...

சிறுவயதிலேயே அன்னையை இழந்து பெண்வாடை காணாமல் வளர்ந்தவன். பெற்றவளின் நச்சரிப்பு தாளாமல் தன் குழந்தையோடு தனியே வந்து விட்டா கங்காதரன். அதனால் பாட்டியின் உறவும் விலகிப் போனது

படிக்கும் காலத்திலும் நண்பர்கள் கூட்டம் மட்டுமே இருந்தது. அம்மாவைப் பூஜையறையில் சாமி படங்களுக்கு



நடுவே பார்த்துப் பழகிய கண்கள்... பார்க்கும் பெண்களைத் தெய்வமாகவே நினைக்கத் துவங்கியிருந்தது.

அயல்நாட்டில் அரைகுறை ஆடைகளோடு திரியும் பெண்களைக் காண சகியாமல் ஹாஸ்டலிலேயே அடைந்து கொள்வான். அப்போதுகூட விகல்பமாக நினைப்பதில்லை.

அவர்களது நாட்டில் அது சகஜம். அதோடு அது அவரவர் விருப்பம். சுதந்திரம் என எண்ணிக் கொள்வ துண்டு.

ஆனால் முதன்முறையாக இன்று பெண்களின் மீது கடுமையான வெறுப்பு எழுந்தது. யமுனா மீது தொடங்கிய வெறுப்பும் ஆத்திரமும் மொத்த பெண் இனத்தின் மீதும் தோன்றியது.

பணத்திற்காக எதையும் செய்வார்கள்? யாரையும் வீழ்த்துவார்கள்? என்ற மோசமான எண்ணம் மனதில் ஆக்கிரமித்தது. இத்தனை வெறுப்பும் கசப்பும் இருக்கையில் ரசனை தோன்றுமா என்ன?

சலிப்பாய் கண்களை மூடிக் கொண்டான். மழை இப்போது சடச்சட என வலுத்தது. ஏனோ எழ மனமில்லை. வேண்டாம்... இப்படியே இருந்து விடலாம்.

மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து சாப்பிடாமல் பட்டினி கிடந்தே உயிரை விட்டு விடலாம்... யாரையும் பார்க்கவும் வேண்டாம்... யார் கண்ணிலும் படவேண்டாம்.

இது சுற்றுலாத் தலமும் இல்லை. அபாயமான இடமும்கூட. யாரேனும் இத்தனை உயரம் ஏறி வந்து தன்னை டிஸ்டர்ப் பண்ணப் போவதில்லை. இந்தப் பாறையிலேயே தன் வாழ்க்கை முடியட்டும்...

நினைத்த கணமே தனக்கு வெகு அருகே அந்த இனிமையான குரல் கேட்டது.

"உமா! இங்கே பாரேன். தட்டுப்பாறையில யாரோ படுத்திருக்காங்க. மழை பெய்வதுகூட தெரியாம தூங்கிட்டு இருக்காங்க..." – காதிற்கும் மனதிற்கும் இனிய குரல்தான்.

ஆனால் கேட்டது ஒரு பெண்ணின் குரல் என்றதால் வெறுப்பாய் கண்களைத் திறவாமல் படுத்திருந்தான் ஸ்ரீதரன். சற்றுத் தள்ளி இன்னொரு பெண்ணின் குரலும் கேட்டது.

"ஜெய்! எவனாவது குடிச்சிட்டு விழுந்து கிடப்பான். அவன்கிட்டே போகாதே... வா இங்கே...!" – என எச்சரிக்கை செய்தது.

"ஏய்! ஒருத்தரைப் பார்க்காமலே அவரைக் குடிகாரன்னு சொல்லாதே..."

"கொட்டுற மழையில படுத்து எவனாவது தூங்குவானா? போதை தெரியாமக் கிடப்பான். நீ வான்னு சொல்றேனில்ல...?" – மிரட்டினாள் உமா.

"இல்லப்பா... பார்த்தா பாவமா இருக்கு. எழுப்பி விட்டுட்டுப் போயிடலாம்."

"ஜெய்! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. எல்லாரும் கீழே இறங்கிட்டாங்க. நாம ரெண்டு பேரும் தனியா இருக்கோம். இதில அந்தக் குடிகாரனை எழுப்பிவிட்டு வம்பை விலைக்கு வாங்கப் போறியா?"

"இல்ல உமா. இவரைப் பார்த்தா அப்படித் தெரியலை. அதோட இந்த இடத்தைப் பத்தி தெரியாம இருக்கார்னு நினைக்கிறேன்."



"இவ்வளவு தூரம் ஏறி வந்தவனுக்கு எதுவும் தெரியாமலா இருக்கும்?"

"மழை வரும்னு நமக்கே தெரியாது. இப்ப மாட்டிக் கிட்டோம். இவரையும் எழுப்பிக் கூட்டிட்டுப் போயிடலாம்."

"எதைச் சொன்னாலும் கேட்காதே. உன்னால நானும் அண்ணன்கிட்டே வாங்கிக் கட்டிக்கப் போறோம்."

"அண்ணன்கிட்டே நான் பேசிக்கிறேன்..." – என்ற இனிமையான குரல் தன்னை மிகவும் நெருங்கி வருவதை மெல்லிய கொலுசொலி மூலம் உணர்ந்தான்.

"ஜெய்! சொன்னாக் கேளு. நாம இவ்வளவு நேரம் பேசியும்... அந்த சத்தம் கேட்டுக்கூட அந்த ஆள் எழுந்துக்கலை. ஏதாவது தற்கொலை பண்ணின பொணமா இருக்கப் போகுது..." – உமா கோபமாய் குரல் கொடுத்தாள்.

"வாயை மூடு உமா. பாரு! மழைத்துளி பட்டு அவர் முகம் சுருங்குது. ஸார்... ஸார்!" எனக் காதருகே குரல் கொடுத்தாள்.

குரலுக்குரிய முகத்தைப் பார்க்க வேண்டும் என எழுந்த ஆவலைவிட இந்த இடத்தில்கூட நிம்மதியாய் இருக்க விடவில்லையே... யார் இவள்? என்ற கோபத்தில் கண்களைத் திறந்தான்.

கண்களுக்கு வெகு அருகே அந்த முகம் பனியில் குளித்த ரோஜாவாய் மழைத் துளிகளால் நனைந்த முகத்தோடு தெரிந்தது. கலைந்த கேசத்தைத் தழுவிய மழைத் துளிகளில் ஒன்றிரண்டு தன்மீதும் பட்டுத் தெறிக்க, அவசரமாய் எழுந்து அமர்ந்தான் ஸ்ரீதரன்.

ஆளை அசத்தும் புன்னகையோடு சற்று விலகி நின்றாள் ஜெயஸ்ரீ. தன்னைப் பார்த்ததும் புன்னகை செய்கிறாளா... இல்லை இவளது முகமே இப்படித்தானா எனக் குழம்பும் அளவிற்கு இயல்பான புன்னகை சிந்தும் நிலவு முகம்.

மழை நீரால் கழுவி விடப்பட்ட பால் நிலவாய் ஜொலித்த முகத்தை விட்டு தன் கண்களை நகர்த்துமுன் திணறிப் போனான். கண்களைத் திறக்கும் வரை இருந்த கோபம் இப்போது காணாமல் போயிருந்தது.

"யார் ஸார் நீங்க? இங்கே வந்து படுத்திருக்கீங்க?" - அதே மென்குரல். ஆர்ப்பாட்டமோ அலட்சியமோ இல்லாத மென்மையான குரல்.

சட்டென யமுனாவின் குரல் காதில் மோதியது. அவள் கூடத்தான் மென்மையாக மிகவும் கனிவாகப் பேசினாள். வார்த்தை மென்மையாக இருந்தால் போதுமா? உள்ளே விஷத்தைக் கொண்டு வெளியே தேனாய் பேசித்தானே அப்பாவைக் கைக்குள் போட்டிருக்கிறாள்.

முகம் கடுகடுவென மாறிவிட, பதில் பேசாமல் அமர்ந்திருந்தவனிடம் மீண்டும் கேட்டாள் ஜெயஸ்ரீ.

"ஹலோ ஸார்! உங்களைத்தான் கேட்கிறேன்..." - தானும் மழையில் நனைகிறோம் என்ற உணர்வே இல்லாமல் நின்றவளைப் பின்னால் இருந்து வந்த உமா இடித்தாள்.

"ஏய்! அதான் எழுந்துட்டான்ல... இறங்கிப் போவான். நீ வா..." - கிசுகிசுத்தாள்.

"இல்ல உமா! மழைக்கு..."



"நீ வா என்கூட... அவனும் அவன் பார்வையும்... அவன் மூஞ்சியைப் பாரேன். சினிமால வர்ற சைக்கோ ஹீரோ மாதிரி இல்ல...?" - உமா தீவிரமாய் சொல்ல, சற்றே பயமாய்த் திரும்பி அவனைப் பார்த்தாள் ஜெயஸ்ரீ.

நல்ல உயரமாய் வாட்டசாட்டமாய் படித்த களையோடு அழகாய்த்தான் இருக்கிறான். முகத்தில் மட்டும் சற்று கடுமை இல்லாமல் புன்னகையோடு இருந்திருந்தால் இன்றைய ஹீரோக்களைப் பின்னுக்குத் தள்ளியிருப்பான்.

கைகளைப் பாறையில் ஊன்றி அவன் அமர்ந்திருந்த தோரணையே... கம்பீரமாக... பிரமிப்பாகவே இருந்தது. உமாவைத் திரும்பிப் பார்த்தாள்.

"எனக்கென்னவோ அப்படித் தெரியலைப்பா... நல்ல பிள்ளையாய்த்தான் தெரியுது!" - என்றாள் கிசுகிசுப்போடு.

இரு பெண்களுமாய் தன்னைப் பார்ப்பதும் தங்களுக்குள் கிசுகிசுப்பாய்ப் பேசிக் கொள்வதும், லேசாய் அணையத் துவங்கியிருந்த கோபத்தீயில் நெய்யூற்ற சுள்ளென எரிந்து விழுந்தான்.

"உங்களுக்கெல்லாம் வேற வேலையே இல்லையா?" அவனது கடும் குரலில் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்த இரு பெண்களும் திடுக்கிட்டுத் திரும்பினர்.

"என்ன?" - உமாதான் கோபமாய்க் கேட்டாள்.

"உங்களை மாதிரி ஆட்களோட கண்ணிலயே படக்கூடாதுன்னுதானே இங்கே வந்து படுத்தேன். இங்கேயும் வந்திட்டீங்களா... என் நிம்மதியைக் கெடுக்க..." - சீறிய அவனைக் கண்டு மிரண்டு போனாள் ஜெயஸ்ரீ.

சற்று பயமாய் உமாவைப் பார்க்க, அவள் பார்வையால் கேட்டாள். "நான் சொன்னது சரியாப் போச்சா?"

எச்சில் விழுங்கியவாறே ஸ்ரீதரனிடம் திரும்பினாள். "ஸார்! இப்போ எதுக்காகக் கோபப்படுறீங்க? மழை பெய்த தாலதானே எழுப்பினோம்."

"அறிவிருக்கா உனக்கு? மழை பெய்யறதுகூட தெரியாம படுத்திருக்கிறதுக்கு நான் என்ன பொணமா? இல்லே குடிகாரனா?"

உமாவும் மிரண்டு போனாள். தங்கள் பேச்சை முழுவதுமாய் கேட்டிருப்பானோ?

"இல்ல ஸார்! மழை பெய்தா..." - எனத் தொடங்கிய ஜெயஸ்ரீயை கை உயர்த்தித் தடுத்தான்.

"மழை பெய்தா நான் ஒண்ணும் கரைஞ்சிட மாட்டேன். அதோட என்னைப் பத்தி உங்களுக்கென்ன அக்கறை? போங்க... என்னைத் தனியா விட்டுட்டுப் போயிடுங்க!" - கத்தினான்.

உமாவிற்குப் பொசுபொசுவென கோபம் ஏறியது. ஜெயஸ்ரீயை நகர்த்திவிட்டு முன்னே வந்தாள்.

"ஹலோ! சும்மா கத்தாதீங்க. இது என்ன உங்க வீட்டுப் பெட்ருமா? உங்க தூக்கத்துக்கு வேற இடமா கிடைக்கலை?"

"ஏன்? இந்த இடத்தை உங்களுக்குப் பட்டா போட்டு கொடுத்திருக்காங்களா?"

"பட்டா போட்டுக் கொடுக்கலை. ஆனா இந்த இடத்துல எது நடந்தாலும் என் அண்ணன்தான் பதில் சொல்லி



யாகணும். புரியலை... எங்க அண்ணன் ஃபாரெஸ்ட் ஆபீஸர். அவர் கண்காணிப்புல உள்ள இடம் இது."

"ஸோ வாட்? அதுக்காக இங்க வர்றது தப்பா?"

"வர்றது தப்பில்லை. ஆனா வந்த சுவடில்லாம திரும்பிப் போகணும். வீட்ல இடம் இல்லாத மாதிரி படுத்துத் தூங்கக் கூடாது. ஸாருக்கு வீடு வாசல் எதுவும் கிடையாதோ!" - உமாவின் நக்கலில் சிலிர்த்து எழுந்தான்.

"ஏய்! என்னை யாரென்று நினைத்தாய்?"

"யார் ஸார்? தேசிங்கு ராஜாவா? மதன்பூர் மகாராஜாவா?"

"என்ன... திமிரா?"

"ஆமா! மகாராஜா வீட்ல இருந்து தினமும் அறுசுவை விருந்து வருதே.. அதைச் சாப்பிட்டு திமிராகிப் போச்சு."

"வாய்! இந்த வாய்தான் உங்களுக்குப் பலம். இந்த வாயாலதானே காரியங்களைச் சாதிக்கிறீங்க..."

"இந்த வாய்கூட இல்லேன்னா உங்களை மாதிரி கேடிங்களை எப்படி சமாளிக்கிறதாம்?"

"ஏய்! நீ ரொம்பப் பேசுற...! நான்... நான் கேடியா?"

பதில் சொல்ல முயன்ற உமாவைத் தடுத்தாள் ஜெயஸ்ரீ. "வேண்டாம் உமா. பிரச்சனை பண்ண வேண்டாம். மன்னிச்சிடுங்க ஸார். தப்பு எம்மேலதான். நான்தான் உங்களை எழுப்பினேன். ஸாரி!"

கொஞ்சமும் குரலை உயர்த்தாமல் பணிவாய்ப் பெரியவளிடம் கோபத்தைக் காட்ட இயலாமல் மௌனமானான்.

"ஸார்! இந்த இடம் கொஞ்சம் அபாயமானது. இங்கே ரொம்ப நேரம் நிற்காதீங்க. அதுக்காகத்தான் எழுப்பினேன்."

"உங்களை விடவுமா அபாயமானது!" - ஒரு மாதிரியான குரலில் அவன் கேட்க, மீண்டும் கோபமான உமாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள் ஜெயஸ்ரீ.

"ஸார்! நீங்க ஏன் இப்படிப் பேசுறீங்கன்னு புரியலை. பட் நீங்க நினைக்கிற மாதிரி பொண்ணுங்க இல்ல நாங்க... மழை பெய்தா நீங்க படுத்திருந்த பாறைக்கடியில இருக்கிற விஷ ஜந்துக்கள் எல்லாம் வெளியேற ஆரம்பிச்சிடும்.

விஷ வண்டு, பாம்பு, கறுந்தேள்... இப்படி எல்லாமே கடுமையான விஷம் உடையது ஸார். எப்பவும் நடமாடுற நாங்களே மழை பெய்யும்போது இங்கே வரமாட்டோம்.

நீங்க புது ஆளா தெரிஞ்சீங்க. ஏதும் ஆபத்தாகிடக் கூடாதுன்னுதான் எழுப்பி விட்டேன். மத்தபடி இன்னிக்கு மழை பெய்யாம இருந்தா நாங்க உங்க பக்கம் திரும்பிக்கூட பார்த்திருக்க மாட்டோம்.

நிறைய அட்டைப்பூச்சிகளும் உண்டு. உடம்புல ஏறிட்டா அப்படியே ஒட்டிக்கும். சீக்கிரமா போயிடுங்க. வா... உமா போகலாம்..." என்றவாறு திரும்பி நடக்க ஆரம்பித்தனர்.

மழையின் வேகம் சற்றே குறைந்திருக்க, ஜெயஸ்ரீ சொன்ன பூச்சிகளின் நினைவு வர, சட்டென எழுந்து நடக்கத் தொடங்கினான் ஸ்ரீதரன்.

இருள் வேகமாக சூழ்ந்து கொண்டு வர, அந்தப் பெண்கள் சரசரவென கீழே இறங்கிய பாதையைக் கணித்து அவர்களைப் பின்தொடர்ந்தான்.



பூச்சிகளின் ரீங்காரமும் மழைத் துளியின் ஓசையும் தவிர ஆழ்ந்த அமைதியான காடு. பகலெல்லாம் தேவையாய் இருந்த அமைதி... இப்போது சற்றே பயத்தைத் தர, வேகமாக நடந்தவன்... திடீரென கேட்ட அலறலில் இன்னும் மிரண்டு போனான்.

## 4

ஓர் பார்வை பார்த்து உயிர்
தந்த பெண்மை வாராமல்
போய்விடுமோ ஒரு கண்ணில்
கொஞ்சம் வலி வந்தபோதும்
மறுகண்ணும் தூங்கிடுமோ!

முன்னே சென்று கொண்டிருந்த பெண்களிடம் இருந்துதான் அந்த அலறல் கேட்கிறது என உணர்ந்ததும் வேகமாய் ஓடினான்.

தன்னிடம் மென்மையாய் பேசிய பெண் காலைப் பற்றிக் கொண்டு வலியில் துடிக்க, மற்றொரு பெண் பதட்டமாய் நின்று கொண்டிருந்தாள்.

"ஜெய்! என்னாச்சு ஜெய்?"

"உமா! ஏதுவோ குத்தின மாதிரி... இருந்திச்சு..." - வலி தாளாமல் கண்களில் கண்ணீர் வழிய, ஓடிச் சென்று அவர்கள் முன்னே நின்றான்.

"என்ன? என்னாச்சு?"

உமா கடுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொள்ள, சட்டென ஜெயஸ்ரீயிடம் குனிந்தான்.

"என்னாச்சு? கால்ல அடிபட்டிருச்சா?"

"இல்ல... எதுவோ... குத்திடுச்சு."

"ப்பூ! இவ்வளவுதானா? நான் என்னவோ ஏதோன்னு பயந்திட்டேன். ஒரு முள் குத்தினதுக்கா காடே அதிர்ற மாதிரி கத்தினீங்க?"

மறுப்பாய் தலையசைத்தாள் ஜெயஸ்ரீ. "இல்ல... முள் குத்தல்ல...!"

"பின்னே?"

"ஏதோ பூச்சி கடிச்ச மாதிரி... தேள் கொட்டின மாதிரி..."

"ஐயோ! ஜெய்... இப்ப என்ன பண்றது? உன்னால நடக்க முடியுமா? கீழே போனாத்தானே மருந்து போட முடியும்!" - உமா பதறும்போதே வலி தாளாமல் தரையில் சரிந்தாள் ஜெயஸ்ரீ.

"ஏங்க! பயப்பட வேண்டாம். ஒன் மினிட்!" - என்றவன் தன் பேண்ட் பாக்கெட்டினுள் கைவிட்டு கர்ச்சீப்பை எடுத்தான்.

"எங்க கடிச்சது?"

வலது கால் பெருவிரலைக் காட்டினாள். அந்தக் காலைப் பற்றி தூக்கி, தன் மடியில் வைத்துக் கொள்ள, உமா பதறித் தடுத்தாள்.

"ஏய்! ஏய் என்ன பண்றே நீ?"

"என்ன கடிச்சதுன்னு தெரியலையே... எதுக்கும் ஒரு கட்டு போட்டா விஷம் ஏறாம இருக்குமே...!" - ஸ்ரீதரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு ஆண் குரல் கேட்டது.



"ஜெய்... உமா...! எங்கே இருக்கீங்க?" - கேட்டுக் கொண்டே மேலேறி வந்தது ஒரு ஆண் உருவம். கையில் பெரிதாய் ஒரு டார்ச் லைட்.

"அண்ணா...!" என்றவாறு ஓடினாள் உமா.

"இன்னும் என்ன பண்ணிட்டு இருக்கீங்க. எப்பவுமே விளையாட்டுதானா?" - சற்றே கோபமாய்க் கடிந்து கொண்ட குரலைக் கேட்டு புருவம் சுருக்கினான் ஸ்ரீதரன்.

'இது... இது மதனின் குரல் ஆயிற்றே!' யோசனையாய் திரும்பும் முன் உமா பதட்டமாய் அண்ணனிடம் பேசுவது கேட்டது.

"அண்ணா! ஜெய்க்கு கால்ல என்னவோ கடிச்சிட்டது..."

"என்ன?"

"வலி தாளாம அழுறா! சீக்கிரம் வாண்ணா..."

"ஜெய்! ஜெய்... என்னம்மா ஆச்சு?" - ஓட்டமும் நடையுமாய் வந்தவனது டார்ச் ஒளி ஸ்ரீதரின் மேல் பட்டு அவனை அடையாளம் காட்ட, ஆச்சரியமாய் நின்றான் மதன்.

"டேய் ஸ்ரீ! நீ... நீ எப்படிடா இங்கே? ஃபாரின்ல இருந்து எப்போ வந்தே?"

"மதன்! எல்லாம் விபரமாச் சொல்றேன். முதல்ல இந்தப் பொண்ணைக் கவனி..." - அவசரமாய்ச் சொன்னதும் ஜெயஸ்ரீயின் காலில் டார்ச்சை அடித்துப் பார்த்தான்.

"எங்கேம்மா வலிக்குது?"

"கட்டை விரல்ல. நகத்துப் பக்கத்துல அண்ணா. ரொம்ப வலிக்குது. உடம்பெல்லாம் கரண்ட் பாஸான மாதிரி இருக்குண்ணா..."

"மை காட்! அப்போ ஏதோ தேள்தான் கடிச்சிருக்கும். வா... உடனே டாக்டர்கிட்டே போய் இன்ஜெக்ஷன் போட்டுடலாம்."

"முடியலண்ணா... ரொம்ப வலிக்குது..."

"எல்லாம் இந்த ஆளால வந்த வினை. இவருக்கு நல்லது செய்யப் போய் இப்போ இப்படிக் கஷ்டப்படுறா?" - தன் கோபத்தை ஸ்ரீதரின் மேல் காட்டினாள் உமா.

"நான் என்ன பண்ணினேன்?"

"என்ன பண்ணலை? ஒரு பொண்ணு வந்து எழுப்பினா அதுக்கு என்ன காரணம்னு கூட யோசிக்காம சண்டைக்கோழி மாதிரி சிலிர்த்துகிட்டு வந்திட்டீங்க...

நீங்க மட்டும் கோபப்படாம நாங்க சொன்னதைக் கேட்டும் எழுந்து போயிருந்தா... இருட்டும் முன் நாங்களும் கீழே இறங்கியிருப்போம் இல்ல... அந்தக் குருட்டுத் தேளு உன்னைக் கடிச்சிருக்கணும்...."

"ஆஹா! என்ன நல்ல மனசு. மதன்! நிஜமாவே இவ உன் தங்கைதானா? இல்லே தத்து எடுத்தியா?"

"உமா! என்ன நீ? சண்டை போடுற நேரமா இது?"

"இல்லண்ணா...! இந்த ஆளைப் பார்த்தாலே எனக்குக் கோபம் கோபமா வருது. என்னவெல்லாம் பேசினான் தெரியுமா... இவன்...?"



"ஷ்ஷ! அவன் என் ஃபிரண்ட். உன்னைவிட வயசில மூத்தவன். இப்படியெல்லாம் மரியாதை இல்லாம பேசக் கூடாது..."

"அதை விடுடா! டார்ச்சை என்கிட்ட கொடு. இந்தப் பெண்ணால நடக்க முடியாது போலிருக்கு. தூக்கிட்டு வர்றியா?"

"சரிடா! நீ டார்ச்சை பிடிச்சிட்டு முன்னே போ..." - மதன் தன் கையிலிருந்த டார்ச்சை ஸ்ரீதரிடம் கொடுத்து விட்டு குனிந்து ஜெயஸ்ரீயை தூக்கிக் கொள்ள, அந்த வலியிலும் லேசாய் சங்கோஜப்பட்டாள்.

"அண்ணா! நான் மெதுவா நடந்தே வர்றேனே...!"

"வேண்டாம்மா... சீக்கிரமா ஹாஸ்பிடலுக்குப் போகணும். மழை வேற தூறிட்டே இருக்குதே..." - என்றவாறு வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

முன்னே சென்று கொண்டிருந்த ஸ்ரீதர், "மதன்! நீ கோத்தகிரியிலதான் இருக்கியா? எப்போடா குன்னூர்ல இருந்து வந்தே?"

"பாட்டி இறந்த பிறகு இங்கேயே வந்திட்டேன்டா. நாலஞ்சு மாதம் ஆச்சு."

"பாட்டி தவறிட்டாங்களா? எப்படிடா? நல்லா இருந்தாங்களே...!"

"ஹார்ட் அட்டாக். ஒரே நாள்ல எந்த அவஸ்தையும் படாம போயிட்டாங்க...."

"ஸாரிடா... எனக்குத் தெரியாமப் போச்சு."

"விடுடா. நீ எப்போதோ ஒருமுறை வர்ற... சரி! இப்போ எத்தனை நாள் இங்கே இருக்கப் போறே?"

"படிப்பெல்லாம் முடிஞ்சு போச்சுடா. இனிமே இங்கே தான் லைஃப்."

"ஹப்பா! ஒரு வழியா உன் படிப்பு மோகமெல்லாம் முடிஞ்சு போச்சா... இனி உன்னை அடிக்கடி பார்க்கலாம்."

"ம்... பார்க்கலாம்."

"என்னடா! சுரத்தே இல்லாம சொல்றே... உன்னை பார்த்ததில எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?"

"எனக்கும்தான்..."

"ஆனா... உன் பேச்சில அந்த சந்தோஷம் தெரியலையே...!"

"இல்லடா... பாவம்! என்னால இந்தப் பொண்ணுக்கு இப்படி ஆகிப் போச்சு. அதான் கொஞ்சம் வருத்தமா இருக்கு."

"பயப்படாதேடா... டாக்டர் கிட்டே போய் ஊசி போட்டா சரியாகிடும். இங்கே இந்த மாதிரி விஷப் பூச்சிக் கடி அடிக்கடி கிடைக்கும்."

"என்ன மதன்! இவ்வளவு சாதாரணமா சொல்றே?"

"நாங்க இங்கே இன்சார்ஜ் எடுத்தபிறகு நாலு வாட்டி கடி வாங்கியிருக்கேன். ஆனா பாவம் ஜெய்! இவளால அந்த வலியைத் தாங்க முடியாது. சின்னப் பெண் இல்லையா?"

ஆமாம். சின்னப் பெண்தான். முகத்தில்கூட இன்னும் குழந்தைத்தனம் மிச்சமிருந்தது. புடவை அணியாமல்



...சுல் யூனிஃபார்ம் அணிந்து வந்திருந்தால் நிச்சயம் பள்ளிச்சிறுமி என்றுதான் நினைத்திருப்பான்.

"அண்ணா! ரொம்ப கஷ்டமா இருக்குமே... இறக்கி விட்டுடுண்ணா... நடந்தே வர்றேன்."

"நீ என்ன நூறு கிலோவா இருக்கே... இருபத்தஞ்சு கிலோ வெயிட்டெல்லாம் ஒரு வெயிட்டா?"

"இல்லை... நான் நாற்பத்தி மூணு கிலோ இருக்கேன்."

"நீ எடை பார்த்த அன்றைக்கு மிஷின் ரிப்பேரா இருந்திருக்கும்."

"போண்ணா... நீ எப்பவும் இப்படித்தான்."

"ம்... இதோ வந்தாச்சு. உமா! என் பாக்கெட்ல கீ இருக்கு. எடுத்துக் காரைத் திற. சீக்கிரம்..."

"சரிண்ணா... மத்தவங்க எல்லாம் எங்கேண்ணா?"

"மழையா இருக்கேன்னு அவங்களை வேன்ல அனுப்பிட்டேன். நீ காரைத் திற. ஸ்ரீ! நீயும் கார்ல ஏறு. ஹாஸ்பிடல் போயிட்டு வீட்டுக்குப் போலாம்" - என்றவாறு ஜெயஸ்ரீயை காரில் அமர வைத்தான்.

"நானா? நான்... எதுக்குடா? நீங்க கிளம்புங்க..."

"என்னடா விளையாடுறியா? எவ்ளோ நாள் கழிச்சுப் பார்த்திருக்கோம். வீட்டுக்கு வராமப் போக விடுவேனா?"

ஸ்ரீதர் தயக்கமாய் இழுத்தான். "இல்ல மதன்! நான் சும்மா சுத்திப் பார்த்திட்டுப் போலாம்னு வந்தேன். வந்த இடத்தில நேரமாகிப் போச்சு.."

"இப்ப என்ன? வீட்டுல தேடுவாங்க. அப்பாவுக்குத் தகவல் கொடுக்கணும். அவ்வளவுதானே! வா... அப்பாவுக்குப் போன் பண்ணிடலாம்."

அவசரமாய்ப் பதறினான். "இல்ல... இல்ல.. வேண்டாம். பரவாயில்லை. நான் என்ன சின்னக் குழந்தையா? காணாம போயிட்டேன்னு தேடுறதுக்கு...?"

"அப்போ வா."

"இல்ல... இப்ப வேண்டாம். இன்னொரு நாள் வர்றேனே...!"

"என்ன ஸ்ரீ! இவ்வளவு யோசிக்கிறே...! என்னாச்சு உனக்கு?"

"மதன்! உங்க வீட்ல லேடீஸ் எல்லாம் இருக்காங்க. நான் வந்தா நல்லா இருக்காது."

"அண்ணா! இந்த ஆள் என்ன சாமியார் மடத்தில இருந்து வந்திருக்காரா? எப்பப் பாரு முற்றும் துறந்த முனிவர் மாதிரி பேசிட்டிருக்காரு..."

"உமா!"

"பின்னே என்னண்ணா? எப்பவும் ஏதாவது பேசி நேரத்தைக் கடத்துறதே இவருக்கு வாடிக்கையாப் போச்சு. நாம ஹாஸ்பிடல் போக வேண்டாமா?"

"ஸ்ரீ! முதல்ல கார்ல ஏறு. எல்லாம் பிறகு பேசிக்கலாம். ஏறுடா!" – முன்பக்கக் கதவைத் திறந்து ஸ்ரீதரனை அமர வைத்துவிட்டு காரை இயக்கினான் மதன்.

குறுகலான பாதையைக் கடந்து பிரதான சாலையை அடைந்ததும் குரல் கொடுத்தான் மதன்.



"ஜெய்! இப்போ வலி எப்படிம்மா இருக்கு?"

ஜெயஸ்ரீயிடம் இருந்து மெல்லிய முனகல் மட்டுமே பதிலாய் வந்தது. உமா பதறினாள்.

"அண்ணா! மயக்கமாகிட்டா போலிருக்கு..."

"மதன்! ப்ளீஸ் சீக்கிரமா ஹாஸ்பிடல் போயேன்! எனக்கு என்னவோ பயம்மா இருக்கு..." – ஸ்ரீதரின் பதட்டம் மதனையும் தொற்றிக் கொள்ள காரைச் சீறவிட்டான்.

ஐந்தே நிமிடத்தில் மருத்துவமனையை அடைந்து, மதன் தன் கைகளால் ஜெயஸ்ரீயைத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓட, சொல்ல முடியாத வருத்தத்தோடு வெளியே நின்று கொண்டான் ஸ்ரீதர்.

எல்லாம் என்னால்தான்... பாவம் இந்தப் பெண்...! எனக்கு எதுவும் ஆபத்து நேர்ந்துவிடக் கூடாது என்று எச்சரித்தவளைத் தாறுமாறாய் பேசி நேரத்தைக் கடத்தியதால்தானே இப்படி ஆயிற்று.

பிழைப்பாளா? மயக்கம் என்றால் விஷம் உடம்பில் ஏறிவிட்டது என்றுதானே அர்த்தம். வெறும் மயக்கம்தானா? விபரீதமாய் ஏதும் ஆகிவிட்டால்...

பதட்டமாய் நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தவனை... சற்றுத் தூரமாய் இருந்து அழைத்தது ஒரு குரல். சற்றும் பழக்கமற்ற குரல்.

"ஸ்ரீதரன்! ஸ்ரீதரன்தானே..." – குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தான்.

அப்பாவின் வயதையொத்த ஒரு நபர் வேகமாய் அவனை நோக்கி வந்தார்.

"தம்பி! ஶ்ரீதரன்தானே நீ? எப்படி இருக்கப்பா?" உரிமையாய் விசாரித்தவரிடம் தலையை ஆட்டினான் ஶ்ரீதர்.

"நல்லா இருக்கேன்... நீங்க...?"

"உங்க அப்பாவோட நண்பன் நமச்சிவாயம். என்னைத் தெரியலையா? அடிக்கடி உங்க வீட்டுக்கு வந்திருக்கேனே...!"

"ஸாரி ஸார்... ஞாபகமில்லை..."

"அது சரி. உன் அப்பனுக்கே என் ஞாபகம் இல்லாமப் போச்சு. நீ எப்படி ஞாபகம் வைச்சிருப்ப?" - அவர் எதைச் சொல்ல வருகிறார் என லேசாய்ப் புரிபட, வெறுப்பாய் நகர முயன்றவரை நிறுத்தினார்.

"அட நில்லுப்பா! உன் அப்பன் இப்போ எப்படி இருக்கான்?"

"ம்... இருக்கார்."

"உன் அப்பனுக்குப் புத்தி பேதலிச்சுப் போச்சா? கல்யாண வயசுல வீட்ல ஒரு பிள்ளையை வைச்சிட்டு இப்படி ஒரு காரியம் பண்ணலாமா அவன்?"

"இதை உங்க நண்பர்கிட்ட போய்க் கேட்க வேண்டியதுதானே!" - முகம் கடுக்கக் கூறினான் ஶ்ரீதரன்.

"கேட்கணும்தான். ஆனா கண்ணிலேயே பட மாட்டேங்கிறானே... எப்போ வீட்டுக்குப் போனாலும் புது மனைவியோட வெளியே போயிருக்கான்கிற பதில்தான் கிடைக்குது."

பதில் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.



"ஶ்ரீதரா! உனக்கு ஒரு நல்ல இடத்தில இருந்து பெண் பார்த்து வைச்சிருந்தேன்ப்பா... அதைப் பத்தித்தான் உன் அப்பனைப்..."

"மன்னிக்கணும் ஸார். எனக்குக் கல்யாணம் பண்ற எண்ணம் இல்லை!"

"அடப் போப்பா! நீ என்ன சொல்றது? உன் அப்பன் செய்த காரியத்துக்கு எவன் பெண் கொடுப்பான் உனக்கு?"

"என்ன?"

"அட ஆமாப்பா! பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு விஷயம் தெரிஞ்சு போய் என்னைக் கூப்பிட்டு கிழிகிழின்னு கிழிச்சிட்டாரு... பெண்ணோட அப்பா.

மாப்பிள்ளையோட அப்பன் இந்த வயசிலயும் இப்படிப் பெண்ணாசை பிடிச்சவனா இருக்கானே... அப்போ மாப்பிள்ளை எப்படிப்பட்டவனா இருப்பான்னு ரொம்ப கேவலப்படுத்திட்டானுங்க..."

"ரொம்ப சந்தோஷம்! இதைச் சொல்லத்தான் வந்தீங்களா?"

"என்னப்பா! இப்படிப் பேசுற?"

"கிளம்புங்க ஸார். இனிமே யாருக்கும் பொண்ணு பார்க்கிறேன்... மாப்பிள்ளை பார்க்கிறேன்னு... இறங் காதீங்க."

"என்ன தம்பி! நான் உன் வாழ்க்கை இப்படி ஆகிப் போச்சேன்னு கவலைப்படுறேன்!"

"வேண்டாம் ஸார். எனக்காக நீங்க ஏன் கவலைப்படணும்?"

"என்ன தம்பி! நீ என் நண்பனோட பிள்ளை."

"உங்க நண்பரே கவலைப்படலை. நீங்க ஏன் சங்கடப்படுறீங்க? நான் கொஞ்சம் பிஸியாக இருக்கேன். கிளம்புங்க..."

"ஸ்ரீதரா! இப்போ... நீ உன் அப்பன் கூடவா இருக்கே?"

பட்டென கைகளைத் தூக்கிக் கும்பிடு போட்டான். "ஸார்! போங்க ஸார். இல்ல... நானே போறேன்..." - எனக் கோபமாய்த் திரும்பி மருத்துவமனைக்குள் நுழைந்தவன் சட்டென நின்றான்.

வாசல் அருகே கையில் மருந்துச் சீட்டுடன் நின்று கொண்டிருந்த மதனின் முகம் பேயறைந்தாற்போல் இருந்தது.

அனைத்தையும் கேட்டு விட்டான் என்பது புரிய ஸ்ரீதரின் முகம் அவமானத்தால் சிவந்து போனது. எத்தனை முயற்சித்தும் முடியாமல் விழிகள் கலங்கின.

## 5

இடது விழியில் தூசு விழுந்தால்
வலது விழியும் கலங்கி விடுமே
இருட்டில்கூட இருக்கும் நிழல் நான்
இறுதிவரைக்கும் கூட வருவேன்!

கண்கள் கலங்கித் தலைகுனிந்து நின்றவனின் தோளைத் தொட்டான் மதன். குரல் சில்லிட்டுப் போயிருந்தது.



"டேய்... ஸ்ரீ! என்னடா... இதெல்லாம்?"

"ம்ப்ச்... விடுடா...! நான்... நான் கிளம்பறேன்..." - நிமிராமலே பதில் சொல்லிவிட்டு நகர முயன்றவனின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"நில்லுடா! எங்கே போகப் போற?"

"எங்கேயாவது... தெரிந்த முகங்களே இல்லாத இடத்திற்கு..."

"ஸ்ரீ!"

"கஷ்டமா இருக்கு மதன். யாரையும் பார்க்கப் பிடிக்கலை..."

"அப்பா எப்படிடா... இப்படியெல்லாம்...?"

"என்னாலயே இன்னும் நம்ப முடியலை. ஆனா உண்மை அதுதான்..."

"அப்படின்னா?"

"நேர்லயே பார்த்தேன். சண்டை போட்டுட்டுத்தான் வெளியே வந்திட்டேன்.."

"கடவுளே!"

"மதன்! செத்துடலாம்னு கூடத் தோணுது. ஆனா அதுக்கும் தைரியம் வரமாட்டேங்குது..."

"சேச்சே! நீ ஏன்டா சாகணும்?"

"இதோ இந்த நமச்சிவாயம் மாதிரி இன்னும் ஆயிரம் பேர் கேள்வி கேட்டுக் கொல்வாங்களே...?"

"விடுடா! இதெல்லாம் ஊர் வம்பை மட்டுமே பேசித் திரியற கூட்டம். தன் வீட்டுல என்ன நடக்குதுன்னு தெரியாது.

ஆனா அடுத்தவன் வீட்ல நடக்கிறதை கண்ணில விளக்கெண்ணெய் விட்டுட்டுக் கவனிப்பாங்க..."

"இல்ல மதன்! என் வீடுதான் இப்போது கேலிச் சித்திரமா ஆகிப் போச்சே!"

"நீ அப்பாகிட்ட பேசிப் பார்த்தியா?"

"என்னன்னு பேசுறது? என் கண்ணு முன்னால ஜோடியா வந்து நிற்கிறாங்க. இவதான் உன்னோட சின்னம்மான்னு என்கிட்டயே அறிமுகப்படுத்துறார்டா..."

"என்ன?"

"ஆமான்டா... பேச்சிலயோ முகத்திலயோ ஒரு துளிகூட குற்ற உணர்ச்சி இல்லை தெரியுமா? அவரைப் பொறுத்தவரை இது தப்பே இல்லைங்கிற மாதிரி இருக்கார்."

"அந்தப் பொண்ணு எப்படிடா ஒத்துக்கிட்டாங்க?"

"பணம் இருக்கே... கிழவன் போயிட்டாலும் சொத்து கிடைக்குமேன்னு வந்திருப்பா."

"அப்படின்னு சொல்ல முடியாது ஸ்ரீ!"

"ஏன் முடியாது? டேய்! அவளுக்கு நம்மைவிட நாலஞ்சு வயசுதான் கூடுதலா இருக்கும். அவ எனக்குத் தாயாம். அவளே சொல்றா!"

"பெண்மைன்னாலே தாய்மைதானேடா!"

"இதெல்லாம் பேசத்தான் நல்லா இருக்கும்."

"ஓ.கே. நீ இப்படிக் கோவிச்சிட்டு வந்திட்டியே... அங்கே அப்பா உன்னைத் தேடி அலைய மாட்டாரா?"

"மாட்டார். ரொம்ப சந்தோஷமா இருப்பார்."



"என்னடா சொல்றே?"

"நான் தடையா இருப்பேன்னு நினைச்சுப் பயந்திருப்பாரு. இப்போ நானே வெளியேறினதால ரொம்ப சந்தோஷமா நிம்மதியா இருப்பார்."

"நீ செய்தது தப்பு ஸ்ரீ!"

"என்ன?"

"ஆமான்டா... நீ வெளியே வந்திருக்கக் கூடாது."

"பின்னே... அங்கே உட்கார்ந்து என்னை மானங் கெட்ட சாப்பாடு சாப்பிடச் சொல்றியா?"

"ஸ்ரீ! அது உன் வீடுடா. நீ ஏன் வெளியே வரணும்?"

"படிக்காத தற்குறியா இருந்திருந்தா அரிவாளை எடுத்து ரெண்டு பேரையும் வெட்டியிருப்பேன். சொத்து மேல மட்டும் ஆசையிருந்தா அவங்களை வெளியே அனுப்பியிருப்பேன்.

சொத்து வேணும்னு கேஸ் போட்டிருப்பேன். ஆனா... நான் அப்படிப்பட்டவன் இல்லையே மதன். எனக்கு அந்த மாதிரி நடந்துக்கத் தெரியாதே! நான் வேறென்ன பண்ணுவேன்?

என்னால அப்பா செய்த காரியத்தை ஏத்துக்கவும் முடியலை. அவங்க மேல வெறுப்பை வைச்சிக்கிட்டு அந்த வீட்ல இருக்கவும் முடியாது. அதனால்தான் வந்திட்டேன்....!" என்றான் கண்கள் பனிக்க.

"ஸாரி ஸ்ரீ! உன் மனசு புரியாம பேசிட்டேன்."

"இட்ஸ் ஓ.கே.டா. அந்தப் பொண்ணுக்கு எப்படி இருக்கு?"

"பயப்படுற மாதிரி ஒண்ணுமில்லை... நீ கர்ச்சீப்பால கட்டியிருந்தியே...அதனால விஷம் ரொம்பவும் ஏறிடலை. இன்னும் ஒரு ரெண்டு மணிநேரம் ஹாஸ்பிடல்ல இருந்திட்டுப் போகச் சொல்லியிருக்காங்க."

"சரியாகிடும்ல...?"

"நாளைக்கு வரைக்கும் வலி இருக்கும். மாத்திரை கொடுத்திருக்கு. போட்டா வலி குறையும்னு சொல்லியிருக்காங்க..."

"சரிடா... அப்போ நான் கிளம்புறேன்."

"எங்கேடா?"

"பார்க்கலாம். இந்தப் பரந்த உலகத்துல எனக்கு ஒரு இடம் கிடைக்காமலா போகும்?"

"என்கூட வா ஸ்ரீ. நம்ம வீட்டுக்குப் போகலாம்."

"இ... இல்லடா வேண்டாம்."

"ப்ளீஸ் ஸ்ரீ...! நீ இப்போ இருக்கிற மனநிலையில தனியா இருக்க வேண்டாம். நம்ம வீட்டுக்கு வந்திடு."

"மதன்! எனக்கு யாரைப் பார்த்தாலும் எப்போ என்ன கேட்பாங்களோன்னு பயமா இருக்கு."

"ஏன்டா! உங்க அப்பா என்ன தேசத் துரோகமா பண்ணிட்டாங்க... எல்லாருக்கும் தெரியுறதுக்கு... இங்கேதான் இருக்கேன். எனக்கே இதுநாள் வரைக்கும் தெரியலை...

மத்தவங்களுக்கு என்ன தெரியும்? அதோட உன்னையே யாருக்கும் தெரியாதேடா... என் ஃபிரெண்டா



நம்ம வீட்ல இரு. உன் மனசுல உள்ள வருத்தம் போகட்டும். பிறகு பார்க்கலாம்."

"இல்லை மதன்! நான் சென்னைப் பக்கம் போய் ஏதாவது வேலை தேடிக்கலாம்னு இருக்கேன்."

"ஏன்டா! நீ ஏன்டா வேலை தேடணும்?"

"நானே சுயமா சம்பாதிக்க வேண்டாமா? பிறகெப்படி சாப்பிடுறதாம்?"

"ஸ்ரீ! உனக்கு இருக்கிற சொத்தை கவனிக்கவே உனக்கு நேரம் போதாது. நீ ஏன்டா வெளியே வேலைக்கு அலையணும்...?"

"சொத்து, சுகம் எதுவுமே வேண்டாம்னுதானே வந்திருக்கேன். பிறகேன் அதைப் பத்தியே பேசுற?"

"சரி... இனிமே பேசலை. ஆனா நீ நான் சொல்றதைக் கேளு..."

"சொல்லு."

"முதல்ல நம்ம வீட்டுக்கு வா. கொஞ்ச நாள் இரு. உன் விருப்பத்துக்காக நான் இங்கேயே ஏதாவது வேலை பார்த்துத் தர்றேன். சரியா?"

"இங்கேயேவா? இங்கே என்ன வேலை கிடைக்கும்?"

"ஊரைச் சுத்தி டீ எஸ்டேட், ரப்பர் தோட்டம்னு இருக்கு. பெரிய கம்பெனிகளும் இருக்கு. உனக்கு எதில விருப்பமோ அதில வேலை தேடிக்கலாம்."

அரை மனதோடு தலையாட்டினான் ஸ்ரீதர். "பட்! ஒன் கண்டிஷன்?"

"வாட் கண்டிஷன்?"

"நான் உன்கூட இருக்கிறது அப்பாவுக்குத் தெரியவே கூடாது."

"ஏன்டா?"

"தெரிஞ்சா... உடனே இங்கே வந்து நிற்பாங்க. எனக்கு அவங்களைப் பார்க்க விருப்பமில்ல..."

"ஓ.கே. சொல்ல மாட்டேன். வா... மருந்து வாங்கிட்டுப் போகலாம்."

"மதன்! ஒரு நிமிஷம்."

"என்னடா?"

"இல்ல... உன் வீட்ல தங்கைங்க இருக்காங்களே... நான் வந்து தங்கினா... அது சரிவராதே. உன் அம்மா எதுவும் சொல்ல மாட்டாங்களா?"

"ஸ்ரீ! என் வீட்ல இப்போ ஒரு கும்பலே இருக்கு. இது ஹாலிடே டைம் இல்லையா? அதனால அம்மாவோட ரிலேஷன்ஸ் எல்லாரும் திருச்சியில இருந்து வந்திருக்காங்க. இன்னும் ஒன் வீக் இருப்பாங்க.

அதனால நீயும் வந்து ஜோதியோட ஐக்கியமாகிக்கோ. அப்புறம்... எங்க வீட்ல, அம்மா, நான், உமா, சித்தி, சித்தியோட பொண்ணு ஜெயஸ்ரீ, ரஞ்சிதா, சுதாகர்னு எப்பவுமே வீடு நிறைஞ்சுதான் இருக்கும்.

அப்புறம் தாத்தாவும் இப்போ எங்ககூடத்தான் இருக்காங்க. ஸோ! நீ எதுக்கும் தயங்க வேண்டாம். நம்ம குடும்பம் கூட்டுக் குடும்பம்டா!"

"ரொம்ப சந்தோஷமா இருக்குடா."

"எதுக்கு? கூட்டுக்குடும்பம்னு சொன்னதுக்கா?"



"நம்ம குடும்பம், நம்ம வீடுன்னு சொல்றியே அதுக்கு..."

"டேய்! நாம எப்பவுமே ஒண்ணுதானேடா!"

"தேங்க்ஸ்டா நண்பா. உன்னை மட்டும் பார்க்கலைன்னா தனிமையில சிந்திச்சு சிந்திச்சு எனக்குப் பைத்தியமே பிடிச்சிருக்கும்."

"அதெப்படி உன்னை விடுவேன்?"

"மதன்! அம்மாவைப் பார்த்திருக்கேன்... சித்தி யாரு?"

"அப்பாவுடைய தம்பி வொய்ஃப்."

"சித்தப்பா?"

"சித்தப்பா இல்லை. சித்திதான் பசங்களோட நம்ம வீட்ல இருக்காங்க."

"இப்போ ஹாஸ்பிடல்ல அட்மிட்டாயிருக்கிற பொண்ணு?"

"சித்தியோட பெரிய பொண்ணு ஜெயஸ்ரீ. உமா எப்படியோ அதுக்கு நேரெதிர் ஜெயஸ்ரீ. ஸோ... எங்க எல்லாருக்கும் இவ மேல தனி ப்ரியம்."

"உமா உன் தங்கைதானே! "

"ஆமா! உமாவையும் குறை சொல்ல முடியாது. கண்டிப்பா இருப்பா. கட் அன்ட் ரைட் டைப். தப்பு செய்து மாட்டிக்கிட்டா தொலைச்சிடுவா... மத்தபடி ரொம்ப அன்பானவ...

வீட்ல மூத்தவ அவதான். மாப்பிள்ளை பார்த்திட்டு இருக்கோம். இப்பக்கூட அது விஷயமாத்தான் கெஸ்ட் வந்திருக்காங்க. நீ வர்ற நேரம் நல்லது நடக்கட்டுமே..."

"எனக்குக் கொஞ்சம் தயக்கமாவே இருக்குடா..."

"நீ! இதுநாள் வரை தனிமை படிப்பு, ஹாஸ்டல்னு வாழ்ந்திட்டே. வாயேன்... கொஞ்சம் மாற்றமா வாழ்ந்து பார்க்கலாம். சுகமாகவும் இருக்கும். சுவாரஸ்யமாகவும் இருக்கும்."

"அப்போ... வரலாம்ங்கிறியா?"

"வந்தே ஆகணும்..."

"ஓ.கே.டா. அப்புறம் மதன்! நான் அவசரத்தில டிரஸ் எதுவும் எடுத்திட்டு வரலை."

"அதுக்கென்ன என்னோடதை யூஸ் பண்ணிக்கோ..."

"இல்லைடா! என்கிட்ட பணம் இருக்கு. இன்னும் [illegible] ஹவர்ஸ் இங்கேதான் இருக்கணும். நான் போய் எனக்குத் தேவையான திங்க்ஸ் வாங்கிட்டு வந்திடுறேன்."

"பணம் வேணுமா?"

"இல்லைடா... என்கிட்ட இருக்கு."

"சரி. பக்கத்திலதான் மெடிக்கல். நான் போய் மருந்து, மாத்திரை வாங்கறேன். நீ போய் பர்ச்சேஸ் பண்ணிட்டு வந்திடு. ரோட்டை கிராஸ் பண்ணினா வரிசையா கடைகள் இருக்கு."

"நான் பார்த்துக்கிறேன்... நீ கிளம்பு."

"சரிடா! சீக்கிரம் வந்திடு. லேட் பண்ணிடாதே!"

"ம்... மதன்! அப்புறம் ஒரு விஷயம்..."

"என்னடா?"



"அது... நான் சும்மா ஒரு கெஸ்ட்டா உன் வீட்டுக்கு வந்ததா இருக்கட்டும். மத்தபடி அப்பாவைப் பத்தி [illegible]ருக்கும்...?"

"ஏன்டா... இதையெல்லாமா சொல்லுவேன்... போடா!"

"இல்லை மதன். தெரியாமக்கூட சொல்லிடாதே. அப்புறம் யார் முகத்திலயும் விழிக்க முடியாது. அதான்..."

"நீ இப்படிப் பயப்படுற அளவுக்கு... வெட்கப்படுற அளவுக்கு உங்க அப்பா ஒண்ணும் அசிங்கமான காரியம் பண்ணிடலை..."

"என்ன?"

"பின்னே என்னடா? உன் அப்பா என்ன அம்மாவை வீட்ல வைச்சிக்கிட்டா வேற ஒரு பெண்ணைக் கூட்டிட்டு வந்தார்?"

"மதன்...!"

"ஸ்ரீ! நீயே நிதானமா யோசிச்சுப் பார். உன்னோட சின்ன வயசுல உன் அம்மா தவறிட்டாங்க. உன் அப்பா இதுவரை மறுமணம் செய்யலையே... ஏன்?"

"ஏன் கட்டிக்கணும்? சின்ன வயசிலேயே கணவனை இழந்த பெண்கள் எல்லாம் மறுமணம் செய்யாம வாழவில்லையா? அதென்ன ஆணுக்கு மட்டும் ஒரு சட்டம்?"

"எல்லாரும் உன்னை மாதிரி இருக்கிறதில்லை ஸ்ரீ...!"

"இருக்கணும்... என் அப்பாவும் அப்படித்தான் வாழணும்னு ஆசைப்பட்டேன். இறந்து போன என் அம்மாவோட ஆன்மாவை ஏமாத்திட்டாரு மதன்... என்னைப் [illegible]புத்தவரை என் அம்மா மரிக்கலை.

என் வீட்ல எங்ககூட வாழறதாதான் நினைச்சிட்டு இருக்கேன். இப்போ தன்னை மறந்திட்டு இன்னொரு பெண்ணை தன் கணவன் ஏத்துக்கிட்டதை என் அம்மா மறக்க மாட்டாங்க... மன்னிக்க மாட்டாங்க...

நீ வேணா பாரேன்... என் அப்பா இன்னும் என்ன பாடுபடப் போறாங்கன்னு... கட்டிய மனைவியை ஏமாற்று எந்த மனிதனுக்கும் வாழ்க்கையில நிம்மதி கிடைக்கப் போறதில்லை..." - கண்கள் சிவக்க கூறியவனை இமைக்காமல் பார்த்தான் மதன்.

"என்னடா அப்படிப் பார்க்கிறே?"

"ஆச்சரியமா இருக்கு ஸ்ரீ. உனக்கு உன் அப்பான்னா உயிராச்சே!"

"அது நேத்து வரைக்கும். எப்போ அவரை இன்னொரு பெண்ணோட கணவனாப் பார்த்தேனோ... அப்பவே சராசரிக்கும் குறைவான மனிதனா ஆயிட்டார்."

"சரி... சரி... கோபப்படாதே... எல்லாத்தையும் மறந்திடு. நீ கடைக்குப் போயிட்டு வா."

"ஸாரிடா! உன்னைக் கஷ்டப்படுத்துறேனா?"

"சேச்சே! அப்படியெல்லாம் எதுவும் இல்லை எப்பவுமே சிரிச்ச முகத்தோட உன்னைப் பார்த்து பழகி டேனா... இப்படிப் பார்க்க கொஞ்சம் கஷ்டமா இருக்கு."

"ஸாரிடா...!"

"ஸ்ரீ! உன் கஷ்டம், வெறுப்பு, வருத்தம் எல்லாத்தையும் துடைச்சிப் போட்டுடு. காலங்கள் மாறும்போது எல்லாமே மாறிடும்."



"ம்..."

"கலகலப்பா சிரிச்சிட்டே இரு. அப்பத்தான் யாருக்கும் எந்தச் சந்தேகமும் வராது. இயல்பா இரு."

"ட்ரை பண்றேன்டா."

"சரி டயமாச்சு. நீ போய் பர்ச்சேஸ் பண்ணிட்டு வா. நானும் மாத்திரை வாங்கிட்டு உள்ளே போறேன். தேட ஆரம்பிச்சிடுவாங்க..."

"சரிடா! நான் போயிட்டு வர்றேன்..." - என்றவாறே சாலையைக் கடந்தவனை நெஞ்சம் கனக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் மதன்.

## 6

உன்னோடு நான் கண்ட
சொந்தம் மண்ணோடு
மழை கொண்ட பந்தம்
காய்ந்தாலும் அழகாய் மிஞ்சும்!

ஜெயஸ்ரீ வலியால் முனகிக் கொண்டிருக்க, கட்டிலைச் சுற்றிலும் உறவினர்கள் கூட்டம். ஜெயஸ்ரீயின் தலையைத் தன் மடிமீது வைத்து வருடிக் கொண்டிருந்தாள் அல்லியா. கண்களில் கண்ணீர் வழிந்தது.

"ரொம்ப வலிக்குதா ஜெயாம்மா?"

"வலிக்குதும்மா..."

"ஜெய்! ஊசி போட்ட பிறகும் வலி குறையலையா?" - அவன் கேட்க, மறுப்பாய் தலையை அசைத்தாள் ஜெயஸ்ரீ.

"இல்லண்ணா... ரொம்ப வலிக்குது!"

"அண்ணா! மாத்திரை போடச் சொன்னாரே டாக்டர்... தூங்குறதுக்கான மாத்திரைன்னு நினைக்கிறேன்..." - என்றவாறே மாத்திரையைப் பிரித்தாள் உமா.

"அம்மா! ஜெய்க்கு ஏதாவது சாப்பிட எடுத்திட்டு வாங்க சாப்பிட்டு மாத்திரை போடட்டும்."

"இதோ எடுத்திட்டு வர்றேன்..." – தேவகி நகர்ந்தாள்.

"ஜெய்! சாப்பிட்டு மாத்திரை போட்டுத் தூங்கு எல்லாம் சரியாகிடும்..."

"சரிண்ணா!"

அகல்யா மதனை நோக்கினாள். "மதன்! பயப்படு மாதிரி இல்லையே... என் பிள்ளைக்கு ஒன்னு ஆகாதில்ல...?"

"பயப்படாதீங்க சித்தி. எந்தப் பூச்சி கடிச்சதுன் தெரியலை. ஆனா விஷக்கடிக்கான ஊசி போட்டாச்சு. இ பயமில்லை... வலி தெரியாம இருக்கிறதுக்கு மாத்தி கொடுத்திருக்கு... போட்டா சரியாகிடும்..." – என்றவ முன்பக்க அறையில் இருந்து தொலைபேசி ஒலிக் வேகமாகச் சென்றான்.

தலைமாட்டில் அமர்ந்திருந்த தாத்தா பரிவாய்த் த வருடினார்.

"நீ ஏன்டா கண்ணு அங்கெல்லாம் போற...?"

"தாத்தா! போனது தப்பில்லை. நாங்களும்தா போனோம். இருட்டும் முன்னாலே கீழே இறங்கி வரலி இவளுக்கு மட்டும் ஏன் வரமுடியலியாம்?"

"இவதான் பெரிய ரசிகையாயிற்றே... புல், பூண்டு எல்லாம் பேசிட்டு இருந்திருப்பா..."



"அப்படியிருந்தாலும் பரவாயில்லையே... சமூகசேவை பண்ணப் போயிருக்கா...!" - நொடித்தாள், அத்தையின் மகள் சாருமதி.

"என்ன?"

"ஆமாம் தாத்தா. எவனோ ஒருத்தன் தட்டுப்பாறை மேல படுத்திருந்தான். நாங்க எல்லாரும் ஏதோ குடிகாரப் பயன்னு திரும்பிப் பார்க்காம வந்திட்டோம். இவளும் வரவேண்டியதுதானே!"

"வரலியா?"

"ம்ஹூம்... எங்களை எல்லாம் போகச் சொல்லிட்டு அவனை எழுப்பி விடப் போயிட்டா... அங்கேதான் லேட்டா கிடுச்சு..."

"என்ன ஜெயாம்மா இது? நீ ஏன் அங்கே போனே?"

"தாத்தா! பாவம் தாத்தா அந்த ஆள். அவருக்குத் தட்டுப்பாறையைப் பத்தித் தெரியாதுன்னு நினைக்கிறேன். இல்லேன்னா மழை பெய்யும்போது அந்தப் பாறை மேல படுத்திருப்பாரா?"

"அவனுக்குத் தெரியாம இருந்திருக்கலாம்... உனக்குத் தெரியுமில்ல... நீ ஏன் போனே?"

"சாரு! நான் எச்சரிக்கை பண்ணிட்டு உடனே திரும்பிடணும்னுதான் போனேன். ஆனா... அது ஒரு சின்னப் பிரச்சனையாகிப் போச்சி."

"பிரச்சனையா? என்னம்மா பிரச்சனை?" – பதறினாள் அகல்யா.

"பயப்படுற அளவுக்குப் பெரிய பிரச்சனை இல்லைம்மா... அவரை எழுப்பி அந்த இடத்தைப் பத்தி

சொல்றதுக்குள்ள இருட்டிப் போச்சு..." - என சமாளித் தவளை அதட்டினாள் உமா.

"இப்ப எதுக்குப் பூசி மெழுகிற... உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே!"

"என்ன? என்ன உண்மை?"

"சித்தி! ஜெய் எழுப்பப் போனபோதே நான் வேண்டாம்னு சொன்னேன். இவதான் கேட்காமப் போய் எழுப்பினா... அந்த ஆள் என்னன்னா என்கிட்டயே எகிறுறான்..."

"எதுக்கு?"

"யாருக்குத் தெரியும்? பைத்தியக்காரன் மாதிரி காச்மூச்சன்னு கத்துறான்."

"ஐயோ...!"

"நாங்க சும்மா விடுவோமா? லெஃப்ட் அன்ட் ரைட் வாங்கிட்டோமில்ல...!"

கையில் சூடான இட்லியுடன் வந்த தேவகி மகளைத் திட்டினாள். "ஏய்! சண்டை போட்டீங்களா?"

"பின்னே! பாவமேன்னு எழுப்பி விடப் போனா என்கிட்டயே முறைக்கலாமா? அதான் திரும்பக் கொடுத்தோம்."

"உங்களுக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலையெல்லாம்...?" - என்றவாறே சாம்பாரை ஊற்றி ஜெயஸ்ரீயிடம் கொடுத்தாள் தேவகி.

"அதை உங்க செல்ல மககிட்டயே கேளுங்க..." - என்றாள் உமா.



"எதை?"

"வேண்டாத வேலையைச் செய்தது நானில்லை... இவதான் செய்தா. சரி... தனியாப் போறாளேன்னு நான் துணைக்குத்தான் நின்றேன்."

கட்டிலில் அமர்ந்து அமைதியாய் சாப்பிட்டுக் கொண்டிருந்த மகளைப் பரிவோடு பார்த்தாள் தேவகி.

"ஜெயாம்மா! இனிமே இப்படியெல்லாம் பண்ணாதே. வெளியே போனா அண்ணன் கூடவே திரும்பியிருக்கணும்... சரியா?"

"சரி... பெரியம்மா!"

"இப்படி தனியா நிற்கக்கூடாது. நடுக்காட்டுல இருட்டின நேரம் ஒரு ஆம்பிளைகிட்ட போய் சண்டை போட்டிருக்கீங்களே... ஏதாவது ஏடாகூடமா நடந்திருந்தா என்ன ஆகியிருக்கும்?"

"அதெல்லாம் ஒண்ணும் ஆகியிருக்காது..." - என்றாள் உமா.

"எப்படிச் சொல்றே?"

"அப்படி ஏதாவது மோசமா நடந்திருந்தா அவனை மலைமேல இருந்து உருட்டி விட்டிருப்பேன்..."

"அடிப்பாவி! இது என்ன பேச்சு?"

"பின்னே என்னம்மா... எங்களுக்கு ஒரு ஆபத்துன்னா எங்களைக் காப்பாத்திக்க வேண்டாமா?"

"ஆபத்து நம்மைத் தேடி வரலை. நீங்கதான் அதைத் தேடிப் போயிருக்கீங்க."

"அது என்னவோ உண்மைதான்."

"இனிமே இந்த மாதிரியெல்லாம் நடந்துக்கக் கூடாது."

"இதையும் அவகிட்டயே சொல்லுங்க..."

"ஏன்டி?"

"இவளுக்கு அன்னை தெரஸான்னு நினைப்பு. யாரைப் பார்த்தாலும் சமூக சேவை செய்யப் போயிடுறாளே... நான் என்ன சொன்னாலும் காதில வாங்க மாட்டேங்கிறா?"

"ஏன் ஜெயாம்மா?"

"பெரியம்மா! போன வாரம்கூட அதே இடத்திலதானே ஒருத்தரை பாம்பு கடிச்சுச் செத்துப் போனதா அண்ணன் சொல்லிச்சு..."

"ஆமா."

"அதே மாதிரி எதுவும் ஆயிடக்கூடாதுன்னுதான் போய் எழுப்பினேன். யார் பெத்த பிள்ளையோ? இங்கே ஏதாவது ஒண்ணு ஆச்சின்னா அவரைப் பெத்தவங்க துடிப்பாங்களே...!" - ஜெயஸ்ரீ சொல்ல, வாசலுக்கு வெளியே தயக்கமாய் ஒதுங்கி நின்ற ஸ்ரீதரனுக்கு சுரீரென்றது.

முன்பின் அறியாத ஒருவனுக்கு உதவ நினைப்பது எத்தனை உயர்வான குணம். இவள் என் குடும்பம் துடிப்பது வரை யோசித்திருக்கிறாளே...

இந்த உறவுகளை இவர்களது பாசப்பிணைப்புகளை பார்க்கையில் பிரமிப்பாகத்தான் இருந்தது. தன் குடும்பத்தில் ஒருத்தி காயப்பட்டிருக்கிறாள் என்றதும் எப்படித் தவிக்கிறார்கள்?



எத்தனை ஆறுதல்... எத்தனை கனிவு... கோபத்தில் கூட அன்புதான் பெரிதாகத் தெரிகிறது. ஏதேனும் ஆகியிருந்தால் என்னவாகும் என்ற ஆதங்கமே தெரிகிறது.

இதுதான் குடும்பமா? இதுதான் உறவுகளா? இதில் ஒன்றைக்கூட நான் உணர்ந்ததில்லையே...! தனிமை, படிப்பு, பயணம்... இவற்றைத் தவிர வேறு எதைக் கண்டேன்?

அப்பா! அந்த ஒரு உறவைத்தானே கண்டிருக்கிறேன். நேற்று வரை எல்லாமுமாகத் தெரிந்த அப்பா இன்று வேண்டாத உறவாகிப் போனார். எல்லாவற்றையும் வெறுத்துவிட்ட என்னால் இந்த வீட்டில் இருக்க முடியுமா?

ஏற்கெனவே தன்னைப் பற்றிய பேச்சுதான் தாறுமாறாய் உள்ளே ஓடிக் கொண்டிருக்கிறது. அனைவருமே தன்மீது ஏகக் கடுப்பில் இருப்பார்கள். இதில் மதன் இதோ வருகிறேன்... என்று போனவனை இன்னும் காணவில்லை.

அவன் வந்து தன்னை அறிமுகம் செய்யும்போது இவர்கள் முகம் எப்படி இருக்கும்? விரோதியைப் பார்ப்பது போல் அல்லவா பார்ப்பார்கள். பேசாமல் இப்படியே திரும்பிப் போய் விடலாமா?

இந்த எண்ணம் தோன்றிய உடன் தன்னையே கடிந்து கொண்டான். தன்னால் ஒரு பெண் காயப்பட்டுக் கிடக்கிறாள். அவளைப் பாராமல் ஒரு வார்த்தை மன்னிப்புக் கேளாமல் போவது முறையா?

அறையை எட்டிப் பார்த்தான். மதன் வந்தபாடில்லை. உள்ளே இன்னும் சம்பாஷணை நீண்டு கொண்டே

இருந்தது. அந்தப் பெண் எப்படி இருக்கிறாள்? இன்னும் வலியில் அவதிப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறாளா?

மெதுவாக நகர்ந்து ஜன்னல் அருகே வந்து எட்டிப் பார்த்தான். ஜெயஸ்ரீ மாத்திரையை விழுங்கிக் கொண்டிருந்தாள். ஈரப் புடவையை மாற்றி இரவு உடையில் இருந்தாள்.

முடிக்கற்றைகள் காய்ந்து காற்றில் பறந்து கொண்டிருந்தது. வலியில் முகம் சுருங்கியபோதும் மிக அழகான முகம். அப்பழுக்கற்ற குழந்தை முகம்.

அருகே அமர்ந்திருந்த பெண்மணி காயம்பட்ட காலை மடிமீது வைத்து வருடிக் கொண்டிருந்தார். இதுதான் இவளது அன்னையோ? தாயை அப்படியே பிரதி எடுத்தாற் போல் இருந்தாள்.

தாத்தாவின் முகம் அடையாளம் தெரிந்தது. சுந்தரமூர்த்தி வீட்டிற்கு மதனுடன் அடிக்கடி போய் வந்ததுண்டு. மதனின் அன்னையைப் பெற்றவர்கள்தான் சுந்தரமூர்த்தி – தனலட்சுமி.

அவர்களது வீட்டில் செல்லப்பிள்ளையாக வளர்ந்தவன் மதன். குன்னூரில்தான் அவர்கள் வசித்து வந்தார்கள் என்பதால் சிறுவயது முதலே தொடங்கிய நட்பு பள்ளி – கல்லூரியைத் தாண்டி இன்னும் நிலைத்திருக்கிறது.

"சரி... ஜெயாம்மா தூங்கட்டும். எல்லாரும் சாப்பிட்டுப் படுங்க..." – தாத்தாதான் குரல் கொடுத்தார்.

"அப்பா! நீங்களும் வாங்க.... தோசை ஊத்துறேன்!" என எழுந்தாள் தேவகி.



"நீ போம்மா... நான் குழந்தை தூங்கியதும் வந்து சாப்பிடுகிறேன்."

"வேணாம் தாத்தா. லேட்டா சாப்பிட்டா உங்க உடம்புக்கு ஆகாது. நீங்க போய் சாப்பிடுங்க..."

"இல்லடாம்மா... எனக்குப் பசியில்லை. நான் உன்கூடவே இருக்கேன்..."

அகல்யா புன்னகைத்தாள். "பெரியப்பா! நான்தான் இவளைப் பார்த்துக்கிறேனே... நீங்க போய் சாப்பிட்டுப் படுங்க..."

"இல்லம்மா! குழந்தை தூங்கட்டும். பிறகு சாப்பிடலாம்!"

"ஜெய்! நீ தூங்குற வரை எங்களுக்கு சாப்பாடு கிடைக்காது போலிருக்கு. சும்மாவாச்சும் கண்ணை மூடி தூங்குற மாதிரி நடிடி."

"ஏய்! உமா குட்டி. இது தப்பு."

"எது தாத்தா?"

"என் பேத்தியை நடிக்கச் சொல்றது... அவ எப்பவும் போல இயல்பாவே இருக்கட்டும்."

"தாத்தா... சும்மா ஒரு பேச்சுக்குத்தானே சொன்னேன்..."

"சரி. எல்லோரும் போங்க. எனக்குத் தூக்கமா வருது..." – ஜெயஸ்ரீ உண்மையாகவே கண்கள் செருகி, தூங்க ஆரம்பித்தாள்.

"ஷ்... எல்லோரும் வாங்க. அவ தூங்கட்டும்."

"உமா! ஜன்னலைச் சாத்திட்டுப் போம்மா. ஊதக் காத்து அடிக்குது..."

"சரி சித்தி!" - என ஜன்னலை நெருங்கியவள் திடுக்கிட்டாள்.

"ஏய்! நீ... நீ இங்கே என்ன பண்றே?" - உமாவின் சத்தத்தில் மற்றவர்கள் சுவுடிவிட, பயந்து போனான் ஸ்ரீதரன்.

"ஏய்! யாருப்பா அது?" - தாத்தாவின் அதட்டலில் மிரண்டு முன்னே வந்தான்.

"நான்தான் தாத்தா... ஸ்ரீதர்."

"அட! கங்காதரன் புள்ளை... நீ எப்படியப்பா இங்கே?"

"நான்தான் தாத்தா கூட்டிட்டு வந்தேன். உங்ககிட்ட அறிமுகப்படுத்துறதுக்குள்ள போன் வந்திடுச்சு. பேசப் போயிட்டேன்..." - என்றவாறே மதன் வந்து மனதிற்குப் பாலை வார்த்தான்.

"எங்கேடா போயிட்டே?"

"ஸாரி ஸ்ரீ. உன்னை வெயிட் பண்ணச் சொன்னதையே மறந்திட்டேன். முக்கியமான போன்கால்டா. தப்பா எடுத்துக்காதே!"

"நோ ப்ராப்ளம்."

"தாத்தா! அம்மா... இவன் என்னோட நண்பன் ஸ்ரீதரன். ரொம்ப நாள் கழிச்சு இன்னிக்குத்தான் பார்த்தேன். வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திட்டேன்."

"அடடே! பார்த்து ரொம்ப நாளாச்சே... எப்படிப்பா இருக்கே? உள்ளே வாப்பா... ஏன் வெளியே நின்ன?" தேவகி அன்போடு வரவேற்க, உமா கடுப்பானாள்.



"அம்மா! இவன்தான்..." - எனத் தொடங்க மதன் பார்வையால் எச்சரித்தான்.

"வாயை மூடிட்டு உள்ளே போ..." - என ஒற்றை விரலால் எச்சரிக்கை செய்ய, கோபமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போனாள் உமா.

"என்னாச்சு இவளுக்கு?"

"அவளுக்குப் பசிக்குதாம்மா... எங்களுக்கும் பசிக்குது. சாப்பிடலாமா?"

"அட! வாங்கப்பா... சாப்பாடு எல்லாம் ரெடி..." - முன்னே சென்றாள் தேவகி. சுந்தரமூர்த்தியை நெருங்கினான் மதன்.

"தாத்தா!"

"என்னப்பா?"

"ஸ்ரீ கொஞ்ச நாள் நம்ம வீட்லதான் இருக்கப் போறான்."

"தாராளமா இருக்கட்டுமே.. இதுல என்ன தயக்கம்?"

"அவன் ரொம்ப சங்கோஜப்படுறான் தாத்தா."

"எப்பா ஸ்ரீதர்! இது நம்ம வீடு. தேவகியை உன் அம்மாவா நினைச்சுக்க... சங்கோஜப்பட மாட்டே... சரியா?"

"சரி தாத்தா."

"மதன்! இந்தப் புள்ளையை மாடி ரூம்ல தங்க வச்சிடு. கீழே எல்லாம் விருந்தாளிங்க இருக்காங்கள்ல..."

"சரி... தாத்தா!"

"மதன்! இன்னிக்கே கோயம்புத்தூருக்குப் போயி பசங்களை அழைச்சிட்டு வரலாம்னு இருந்தேன். மழை வந்திடுச்சு. நாளைக்குக் காலையில கிளம்பறேன்..."

"சரி தாத்தா... முடிஞ்சா கிளம்புங்க. இல்லைன்னா ஒரு ரெண்டு நாள் கழிச்சு நான் போய் அழைச்சிட்டு வர்றேன்."

"இல்லப்பா! உனக்கு இங்கே நிச்சயதார்த்த வேலை இருக்குமே... நான் போயிட்டு வந்திடுறேன்."

"சரி தாத்தா... நான் இவனை மாடிக்கு அழைச்சிட்டுப் போறேன்."

"சரிப்பா... ஸ்ரீதர்! உங்க அப்பாவுக்கு இப்போ உடம்பெல்லாம் சௌக்கியமா இருக்குதா?"

ஸ்ரீதரனின் முகம் லேசாய் மாறியது. "ம்... இருக்கார்."

"ஒரு நர்ஸ் பொண்ணு இருந்தாளே... அவ இருக்காளா இப்போ...?"

"இருக்கா... இருக்கா..." – என்றவன்... அதற்கடுத்த கேள்விகளை எதிர்கொள்ள மனமின்றி வேகமாய் மாடி ஏற ஆரம்பித்தான். இனி இது போன்று எத்தனை கேள்விக் கணைகளை எதிர்கொள்ள வேண்டுமோ?

தந்தையின் செயல் மீண்டும் நினைவிற்கு வர மனம் தகிக்க ஆரம்பித்தது.

அவன் பின்னே ஓடி வந்தான் மதன். "என்னடா! தாத்தா பேசிட்டு இருக்கும்போதே வந்திட்டே?"

"எனக்குப் பயமா இருந்தது மதன்..."

"ஏன்?"



"அடுத்து உங்க தாத்தா என்ன கேட்டிருப்பாங்க தெரியுமா?"

"என்ன கேட்பாங்க?"

"உன் அப்பன் அவளையே கட்டிக்கிட்டானாமேன்னு கேட்டிருப்பாங்க..." – முகம் முழுக்க வேதனையோடு அவன் சொல்ல, நண்பனை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான் மதன்.

"ஏன்டா! நீயே வீணா கற்பனை பண்ணிக்கிற? தாத்தாவுக்கு அந்த விஷயமெல்லாம் தெரியாதுடா."

"எப்படிச் சொல்றே?"

"தாத்தா இங்கே வந்து கிட்டத்தட்ட ஆறு மாசமாகப் போகுதுடா."

"இருந்தாலும் குன்னூருக்குப் போய் வர இருப்பாங்கல்ல?"

"எப்பவாவது போய் வீட்டைப் பார்த்திட்டு வருவாங்க."

"பின்னே தெரியாமலா இருக்கும்? நான் இங்கே வந்திருக்கவே கூடாது."

"ஸ்ரீ! இங்கே யாரும் உன்னை எதுவும் கேட்க மாட்டாங்க. சொல்லவும் மாட்டாங்க. அதுக்கு நான் பொறுப்பு."

"மதன்! நான் இந்த ரூம்லயே இருந்துடுறேன். என்னை வெளியே எங்கேயும் கூப்பிடாதே!"

"ஏன்டா?"

"ப்ளீஸ்... எனக்குத் தனிமை வேணும். அமைதி வேணும். சாப்பாடு கூட நீயே இங்கே கொண்டு வந்திடேன். எனக்கு யாரையும் பார்க்க விருப்பமில்லை..." – சொன்ன நண்பனைப் பார்த்து பெருமூச்சோடு தலையசைத்தான் மதன்.

# 7

தந்தை என்றால் மன்னிக்க வா
தப்பு என்றால் தண்டிக்க வா
தந்தை உள்ளம் தாங்காது!

இரவின் அமைதியில் கங்காதரனின் மூச்சுத் திணறல் பயமுறுத்த திணறிப் போனாள் யமுனா. படுக்கையில் படுக்கவும் முடியாமல் நிமிர்ந்து அமரவும் முடியாமல் அவர் தவிக்க, கண்களில் நிற்காமல் நீர் வழிந்தது.

கணவரின் தோளைப் பற்றி எழுப்பி இரண்டு தலையணைகளை வைத்து அதில் சாய்ந்து அமர வைத்தாள். விக்ஸை எடுத்து மார்பில் தடவி, சூடு பறக்க தேய்த்து விட்டாள்.

"என்னங்க! ஹாஸ்பிடல் போகலாமா?" – கண்ணீரோடு கேட்டவளிடம் மறுப்பாய் தலையசைத்தார்.

"வே... வேண்டாம்."

"இப்படி மூச்சுவிட முடியாம திணறுறீங்களே... என்னால பார்க்க முடியலையே... டாக்டர் கொடுத்த மருந்தாவது சாப்பிடுங்க..."

"வேண்டாம். எனக்கு எதுவுமே வேண்டாம்."



"ஏங்க! இப்படிப் பண்றீங்க? எனக்கு பயமா இருக்கே!"

"யமுனா... யமுனா! என் பிள்ளை... என்னை விட்டுப் போயிட்டானே... என்னை உதறிட்டுப் போயிட்டானே..."

"நான் எத்தனையோ முறை சொன்னேனே... உங்க பிள்ளையின் கோபம் நியாயமானதுதானே!"

"அவன்... அவன் ரொம்ப நல்லவன் யமுனா. பொறுமைசாலி. தங்கமான பிள்ளை. அவன் இப்படிக் கோபப்படுவான்னு நான் நினைச்சுக்கூடப் பார்க்கலை."

"எப்படிங்க கோபம் வராம இருக்கும்? தலைக்கு மேலே வளர்ந்த புள்ளைகிட்ட என்னை சின்னம்மான்னு சொல்லும்போது கோபம் வராம இருக்குமா?"

"நான் சொன்னதை அவன் கடைசி வரைக்கும் காது கொடுத்துக் கேட்கவே இல்லையே... யமுனா!" – கணவனின் கண்ணீரும் பரிதவிப்பும் நெஞ்சைச் சுட, மௌனமாய் அழுதாள் யமுனா.

"எ... என்னங்க... நான்... நான் வேணும்னா போயிடவா?"

சுவாசிப்பதை நிறுத்தி திகைப்பாய் பார்த்தார். "யமுனா! நீ என்ன சொல்றே?"

"ஆமாங்க! உங்க புள்ளைக்கு என் மேலதான் கோபம். நான் போயிட்டேன்னா உங்க கிட்ட வந்திடு வாரில்லை...?"

"யமுனா! என்னை இதயமே இல்லாதவன்னு நினைச்சிட்டியா?"

"ஐயோ! அப்படி இல்லீங்க..."

"உனக்குன்னு யாரு இருக்கா?"

"பரவாயில்லீங்க... எனக்குப் பழகிப் போச்சு. ஆனா நீங்களும் என்னை மாதிரி அநாதை ஆக வேண்டாம்."

"யமுனா! இப்படியெல்லாம் பேசாதே... நீ அநாதை இல்லை. உனக்கு நான் இருக்கேன். என்னாலதானே நீ அநாதையாகி நின்ன?"

"நடந்தது நடந்து போச்சு. எனக்காக உங்க பிள்ளையை நீங்க ஏன் இழக்கணும்? நான் போயிடுறேங்க..."

"வேண்டாம் யமுனா! குற்ற உணர்ச்சியில செத்தி வேன் நான்... என் உசுரு இருக்கிற வரைக்கும் நீ என் கூடத்தான் இருக்கணும்..."

பேச்சு வராமல் கங்காதரனின் காலில் தன் தலையை வைத்து கண்ணீர் சிந்தினாள் யமுனா. அவளது தலையை வருடினார்.

"அழாதேம்மா... ஸ்ரீதர் வருவான். நிச்சயமா வருவான் என்னைப் பார்க்காம அவனால இருக்க முடியாது."

"அவர் எங்கே போயிருப்பாருங்க?"

"இங்கதான் எங்கேயாவது இருப்பான். எப்படியும் வந்திடுவான்."

"இதையேதானே ரெண்டு நாளா சொல்லிட்டு இருக்கீங்க..."

"இல்லை... கண்டிப்பா வந்திடுவான். எனக்கு நம்பிக்கை இருக்கு."



"பின்னே ஏங்க... மருந்து மாத்திரை சாப்பிட மாட்டேங்கிறீங்க... உங்க பிள்ளை உங்களைத் தேடி வரும்போது நீங்க ஆரோக்கியமா இருக்க வேண்டாமா?"

"எனக்கு எந்த மருந்தும் வேண்டாம். அவனைப் பார்த்தா போதும். நான் தெம்பாகிடுவேன்."

"டாக்டர் மருந்தை நிறுத்தாம சாப்பிடச் சொன்னாரே... இப்பத்தான் தேறி வந்தீங்க. நல்லா குணமடையற நேரத்தில இப்படிப் பண்ணினா எப்படி?"

"யமுனா! இத்தனை வருஷத்தில எம்புள்ளை ஒருமுறைகூட என்கிட்ட கோவிச்சதே இல்லை. என்கிட்ட பேசாம இருந்ததே இல்லை.

இப்போ என்கிட்ட கோவிச்சிட்டுப் போயிட்டானே... எனக்கு எப்படி சாப்பாடு இறங்கும்... என்னால... எப்படி?" – பேச முடியாமல் மூச்சுத் திணறியது.

"சரிங்க! பேச வேண்டாம். படுத்துக்கங்க..."

"இல்லை... என்னால படுக்க முடியலை. படுத்தா நெஞ்செல்லாம் அடைக்கிற மாதிரி இருக்கு. கண்ணை மூடினா என் பிள்ளை ஞாபகமா இருக்கு..."

"அம்மா! பால் கொண்டு வந்திருக்கேன்..." – அறைக்கு வெளியே சிவசாமியின் பவ்யமான குரல் கேட்டது. அவசரமாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டு, கட்டிலை விட்டு இறங்கிச் சென்று கதவைத் திறந்தாள்.

கையில் பால் குவளையோடு நின்றிருந்த சிவசாமி யமுனாவின் கலங்கிய கண்களைப் பார்த்து மெதுவாய்க் கேட்டார்.

"அம்மா! ஐயா மருந்து சாப்பிட்டாங்களா?"

"இல்லண்ணே! எத்தனை முறை சொல்லியும் கேட்கலை... மூச்சுவிட முடியாம கஷ்டப்படுறாங்க."

"அம்மா! பேசாம மருந்தை இந்தப் பால்ல கலந்து கொடுத்திடுங்க..."

"என்ன அண்ணே சொல்றீங்க?"

"எங்க சின்னய்யா கூட இப்படித்தான் மருந்து சாப்பிடக் கஷ்டப்படுவாங்க. ஐயா இப்படித்தான் பால்ல கலந்து குடிக்க வைப்பாங்க..."

"கண்டுபிடிச்சிட்டா?"

"மூக்கடைப்புல வாசனை தெரியாதும்மா... கலந்து கொடுங்க. நல்லாத் தூங்கட்டும்."

"சரிண்ணே!"

"உங்களுக்கு சாப்பாடு ரெடிம்மா. ஐயா தூங்கினதும் வர்றீங்களா?"

"இல்லண்ணே! நீங்க சாப்பிட்டுப் படுங்க. எனக்கு வேண்டாம்."

"என்னங்க நீங்க! இப்படியே வயித்தைக் காயப் போடலாமா?"

"மனசு நிறைய துக்கம் இருக்கும்போது பசிக்குமா?"

"அம்மா! மொதல்ல ஐயாவுக்கு மருந்தைக் கொடுங்க. உங்ககிட்ட முக்கியமான விஷயம் பேசணும்..."

"என்ன விஷயம்?"



"சொல்றேன்... முதல்ல ஐயாவுக்கு மருந்தைக் கொடுங்க."

"சரி!" - என்றவாறு பாலை வாங்கிக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள். கட்டிலில் படுத்துக் கண்களை மூடியிருந்தார் கங்காதரன்.

சுவரோரமாய் போடப்பட்டிருந்த மேஜையின் மீதிருந்த மருந்து பாட்டிலை ஓசைப் படாமல் திறந்து அளந்து, பாலில் ஊற்றி ஸ்பூனால் கலக்கியவாறே கணவனை நெருங்கினாள்

"என்னங்க! பால் சாப்பிடுங்க."

"அதெல்லாம் வேணாம்மா..." - கண்களைத் திறவாமலே கூறினார்.

"சிவசாமி அண்ணன் மிளகு, மஞ்சள்தூள் எல்லாம் போட்டு எடுத்துட்டு வந்திருக்காங்க. தொண்டைக்கு இதமா இருக்கும். குடிச்சிட்டுப் படுங்க."

"அவனுக்கு வேற வேலை இல்லை..."

"நீங்க குடிச்சாத்தான் அவரு சாப்பிடுவாராம்."

"இது வேறயா? அவனுக்கு என்மேல ரொம்பப் பிரியம் யமுனா. சின்ன வயசுல இருந்தே இங்கதான் இருக்கான். அவனுக்கும் யாரும் கிடையாது."

"என்னை மாதிரியா?"

"உனக்கு எல்லாருமே இருக்காங்க யமுனா. ஆனா சிவசாமியோட பொறப்பே கொடுமையானது தெரியுமா?"

"ம்... அவரே சொல்லியிருக்காரு..."

"புதரோரமாகக் கிடந்த குழந்தையை நாய் தின்னப் போச்சாம். எங்க அப்பாதான் பார்த்து தூக்கிட்டு வந்தாங்க. எங்க அம்மாவுக்கு அவன்தான் மூத்த பிள்ளை.

ஆனா அந்தப் பய ரொம்ப பயப்படுவான். எங்க முன்னால உட்காரக்கூட மாட்டான். அவ்வளவு பவ்யம். எங்க குடும்பத்துக்கே கிடைச்ச வரம் அவன். நான் தும்மினாக்கூட கஷாயத்தோட வந்து நிற்பான்..." - பேசிக் கொண்டே பாலை வாங்கி ஒரே மூச்சில் குடித்து முடித்தார்.

திக்திக்கென அடித்துக் கொண்ட இதயத்தோடு நின்றவள் பாலைக் குடித்து முடித்ததும் சற்றே நிம்மதியானாள். காலி டம்ளரை வாங்கிக் கொண்டாள்.

"என்னத்தையெல்லாம் கலந்தானோ... கசக்குது!" - முகத்தைச் சுளித்தவரைப் பார்த்துப் புன்னகைத்தாள் யமுனா.

"எல்லாம் உங்க மேல உள்ள அக்கறைதான். படுங்க... தூங்கி எழுந்தா எல்லாம் சரியாகிடும்."

"எல்லாம் சரியாகிடுமா?"

"ஆமாம்..."

"அப்போ... ஸ்ரீ வந்திடுவானா?" - ஏக்கமாய்க் கேட்டவரைப் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

"வருவாருங்க... உங்க அன்பு அவரை இங்கே கொண்டு வந்திடும்."

"யமுனா! அவன் சின்னப் பையன்தான். சும்மா அவன் இவன்னே சொல்லு. ஆயிரம் இருந்தாலும் அவன் நம்ம பிள்ளைதானே!"



"ச... சரிங்க."

"அவனுக்கு இப்பத்தான் இருபத்தி ஆறு வயசாகுது."

"அப்போ ஏங்க இன்னும் கல்யாணம் பண்ணாம வச்சிருக்கீங்க?"

"நானா வேண்டாம்னு சொல்றேன். அவன்தான் படிப்பு படிப்புன்னு வேற எதையும் கேட்க மாட்டேன்னுட்டான். இப்பக்கூட என் நண்பன் நமச்சிவாயம்னு ஒருத்தன்... ஒரு நல்ல இடம் வந்திருக்குன்னு சொன்னான்."

"அப்போ அதையே பேசி முடிச்சிடலாங்க..."

"எங்கே? அதுக்குப் பிறகு நான் நமச்சிவாயத்தையும் பார்க்கலை... இவன்கிட்டயும் எதையும் பேச முடியலை... அதுக்குள்ள போயிட்டானே...!"

"சரிங்க... முதல்ல உங்க உடம்பு குணமாகட்டும். பிறகு உங்க நண்பரைப் பார்த்துப் பேசுங்க. பிறகு புள்ளைகிட்ட பேசலாம்."

"சரி யமுனா. ரொம்பத் தூக்கமா வருது."

"தூங்குங்க... நான் லைட்டை ஆஃப் பண்ணிடவா?"

"ம்..." - என்றவாறு தூங்க ஆரம்பித்தார் கங்காதரன். சில நிமிடங்கள் நின்று, அவர் நன்றாகத் தூங்க ஆரம்பித்ததும் போர்வையால் போர்த்திவிட்டு, இரவு விளக்கை எரியவிட்டு, மற்றவற்றை அணைத்துவிட்டு அறைக்கதவைச் சாத்திவிட்டு வெளியேறினாள் யமுனா.

சமையலறையின் வெளியே காத்திருந்த சிவசாமி எழுந்து வந்தார்.

"ஐயா தூங்கிட்டாராம்மா... மருந்து கொடுத்தீங்களா?"

"ம்... கொடுத்தேன். தூங்கிட்டாங்க... அண்ணே! ஏதோ முக்கியமான விஷயம்னு சொன்னீங்களே...!"

"சொல்றேம்மா... முதல்ல சாப்பிடுங்க."

"அதெல்லாம் இருக்கட்டும். முதல்ல விஷயத்தை சொல்லுங்க?"

"அம்மா! இன்னிக்கு சாயங்காலமா ஐயாவோட நண்பர் ஒருத்தர் வந்திருந்தாரம்மா..."

"யாரு?"

"பேரு நமச்சிவாயம். அய்யாவோட பால்ய சிநேகிதன்."

"நமச்சிவாயமா? ஏதாவது சொன்னாரா? நாங்க வீட்லதானே இருந்தோம். ஏன் எங்களைக் கூப்பிடலை?"

சிவசாமி தயக்கமாய் இழுத்தார். "வந்து... அம்மா, அவரு ஒரு லொடலொட கேசும்மா... எப்போ எப்படி பேசணும்னு தெரியாது."

"அப்படின்னா?"

"உங்களை முன்னாடி வெச்சுக்கிட்டே ஐயாகிட்ட உங்களைப் பத்தி விமர்சனம் பண்ணுவாரு..."

"எனக்குப் புரியலை?"

"இல்லம்மா! ஐயா உங்களைக் கட்டிக்கிட்டது தெரிஞ்சு அதைப்பத்தி ஏடாகூடமா பேசுறாரு... அதையே ஐயாகிட்ட கேட்பாரு... அதான்..."

அவமானத்தால் முகம் சிவந்து போனாள் யமுனா.



"மன்னிச்சிடுங்கம்மா... உங்களைக் கூப்பிடாதது தப்புதான். நான்..."

"சரி! எதுவும் சொன்னாரா அவர்?"

"ஆமாம்மா! சொன்னாரு... நிறைய சொன்னாரு."

"என்ன? என்ன சொன்னார்? சின்னவர் கல்யாணத்தைப் பத்தி..."

"ம்... சொன்னாரும்மா. அந்த இடம் அமையாது போலிருக்கு..."

"ஏன்?"

"அது வந்தும்மா..."

"சும்மா சொல்லுங்க."

"அம்மா! பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு... உங்க கல்யாண சமாச்சாரம் தெரிஞ்சு போச்சாம்."

"என்ன?"

"ஆமாம்மா! அதனால அவங்க ரொம்ப மோசமா பேசிட்டாங்களாம். அதைப்பத்திச் சொல்லிட்டுப் போகத்தான் வந்திருக்காரு..."

சிவசாமி சொல்லிக் கொண்டே போக யமுனாவின் முகம் கலவரமானது. தன்னுடைய வரவால் இந்தக் குடும்பத்தில் எவ்வளவு குழப்பமும் இழப்புகளும் ஏற்பட்டிருக்கிறது என்பது அப்போதுதான் உறைக்க ஆரம்பித்தது.

இனி இது எப்படித் தீரும்? எப்படித் தீர்ப்பது? யாரிடம் சென்று பேசி சரி செய்வது? ஸ்ரீதர் எங்கு சென்றான் என்றே

தெரியவில்லை. தெரிந்தாலாவது அவனிடம் பேசி முதலில் தகப்பனையும் மகளையும் சேர்த்து வைக்கலாம்.

இப்போது அதற்கே வழியில்லை. இரண்டு நாட்களாய் மகளைத் தேடி அலைந்து சோர்ந்து ஏமாற்றமாய்த்தான் வீடு திரும்பினார் கங்காதரன். கொட்டும் பனியில் அலைந்ததும் மருந்துகளைச் சரியாக சாப்பிடாமல் விட்டதும் பலமாய் பிடித்துக் கொண்டது.

சாப்பிட முடியாமல் தூங்க முடியாமல் மூச்சுத் திணறலால் பெரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறார். இதில் மகளின் திருமணப் பேச்சும் முறிந்து போனது என்று தெரிந்தால் அவரது நிலை இன்னும் மோசமாகிவிடும்.

இதைத் தெரிந்துதான் சிவசாமி அந்த நமச்சிவாயத்திடம் தானே பேசி அனுப்பியிருக்கிறார். தன்னால் ஏற்பட்ட பிரச்சனை இது. நான்தான் இதைச் சரிசெய்ய வேண்டும். எப்படி? யாரிடம் பேசப் போகிறேன்?

உயிரை மாய்த்துக் கொள்ளப் போனவளைக் காப்பாற்றி, தனக்காக வாழ்க்கையையும் கொடுத்தவர் இன்று மகனிடம் விரோதமாகி மற்றவர்களிடமும் கேலிப் பொருளாய் ஆனதை தாளஇயலாமல் தவித்தாள்.

"நீங்க விசனப்படாதீங்கம்மா. ஐயாவுக்கு உடம்பு குணமான பிறகு பொறுமையா இந்த விவகாரத்தைச் சொல்லிடலாம்..." என்றார் சிவசாமி.

பதட்டமாய் மறுத்தாள் யமுனா. "வேண்டாம்... அவருக்கு எதையும் சொல்ல வேண்டாம்."

"அம்மா..."



"ஆமாண்ணே! ஏற்கெனவே அவர் ரொம்பக் காயப்பட்டுப் போயிருக்காரு. . மேலும் வேதனையைக் கூட்ட வேண்டாமே..."

"சொல்லாம விட்டா தப்புங்களே...!"

"நாம ஒண்ணும் மறைக்கலை அண்ணே...! இப்ப சொல்ல வேண்டாம்னுதான் சொன்னேன்."

"ஏம்மா! எப்படியும் சொல்லித்தானே ஆகணும்..."

"ஆமா! ஆனா அதுக்கு முன்னால சின்னவரை எப்படியாவது கண்டுபிடிக்கணும்... அவரை சமாதானம் பண்ணி வீட்டுக்குக் கூட்டிட்டு வரணும்..."

"அந்தப் பொறுப்பை என்கிட்ட விட்டுடுங்கம்மா..."

"அண்ணே!"

"ஆமாம்மா! நமச்சிவாயம் இன்னொன்னும் சொன்னாரு..."

"என்ன?"

"நம்ம சின்ன ஐயாவைப் பார்த்தாராம் அவரு..."

யமுனாவின் விழிகள் விரிந்தன. முகம் முழுக்கப் பிரகாசிக்க, சந்தோஷமாய்க் கேட்டாள்.

"என்ன? சின்னவரைப் பார்த்தாரா? எப்போ... எங்கே?"

"ரெண்டு நாள் முன்னேதான் பார்த்தாராம்."

"எங்கே பார்த்தாராம்?"

"கோத்தகிரியில ஒரு ஆஸ்பத்திரி வாசல்ல..."

"ஹாஸ்பிடல்லயா? அண்ணே! அவரு உடம்புக்கு என்னவாம்...?"

"பதறாதீங்கம்மா... தம்பி நல்லாத்தான் இருந்ததாம். ரொம்ப கோபமாப் பேசினாராம். ஏதோ வேலை இருக்குன்னு சொன்னாராம்..."

"எந்த ஆஸ்பத்திரின்னு கேட்டீங்களா?"

"அதையெல்லாம் விசாரிச்சிட்டேன்மா... இனி ஒரு பயமும் இல்லை."

"இதை ஏன் உடனே சொல்லலை நீங்க...?"

"நான் சொல்லியிருந்தா ஐயா உடனே தேடிக் கிளம்பி இருப்பாங்க. வெளியே பனி அதிகமா இருக்கும்மா... அதான் சொல்லலை... அம்மா! நீங்க ஐயாவைப் பார்த்துக்கங்க... நான் போய் தம்பியைக் கூட்டியாரேன்..."

"அண்ணே! நீங்களா? உங்களுக்கு அந்த இடம் தெரியுமா?"

"இதோ இருக்கிற இடம்தானேம்மா... போய் விசாரிச்சு தம்பியைக் கையோட கூட்டியாந்திடுறேன்... ஐயா கேட்டா... சிவசாமி தம்பியோடதான் வருவான்னு சொல்லுங்க..."

கண்கள் கலங்கினாள் யமுனா.

"ரொம்ப நன்றிண்ணே! புள்ளையைப் பார்க்க முடியாம அவர் படுற வேதனையை என்னால பார்க்க முடியலை. எப்படியாவது கூட்டிட்டு வந்திடுங்க..."

"நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாதீங்கம்மா... தம்பி நான் எது சொன்னாலும் கேட்பாரு... எப்படியும் கையோட கூட்டிட்டு வந்திடுறேன்..." - சிவசாமியின் குரலில் இருந்த நம்பிக்கையும் உற்சாகமும் யமுனாவையும் தொற்றிக் கொள்ள, கண்ணீரோடு புன்னகைத்தாள்.



# 8

சொல் என்றும் மொழி என்றும்
பொருள் என்றும் இல்லை
சொல்லாத சொல்லுக்கு
விலை ஏதும் இல்லை!

குளித்து முடித்து ஈரக்கூந்தலோடு கையில் காபியோடு வந்து நின்ற ஜெயஸ்ரீயை நிமிர்ந்து பாராமலே தலையைக் குனிந்து கொண்டான் ஸ்ரீதர்.

புன்னகையோடு தானும் குனிந்து அவனது முகத்தைப் பார்த்தாள் ஜெயஸ்ரீ.

"என்ன ஸார்! இன்னும் உங்களுக்கு கோபம் போகல்ல போலிருக்கு?" - என்றாள் கேலியாய்.

"சேச்சே! அப்படியெல்லாம் எதுவுமில்லை."

"அப்போ குட்மார்னிங் சொல்லி லைட்டா ஸ்மைல் பண்ணி என்கிட்ட இருந்து காபிய வாங்கிக் குடிக்கலாமே!"

"ஸாரி!"

"எதுக்கு?"

"இல்ல... என்னாலதான் உங்களுக்கு பூச்சி கடிச்சி... ஹாஸ்பிடலுக்கு போயி..."

"ஹலோ ஸார்... போனதை பத்தி பேசி ஏன் ஸார் பயமுறுத்தறீங்க! நானே அதை மறந்திட்டேன்..."

"தேங்க்ஸ்."

"இது எதுக்கு?"

"அதையெல்லாம் மறந்துடு..."

இதற்கும் புன்னகைத்தாள். "கஷ்டமோ நஷ்டமோ வந்தா அதை உடனே மறந்திடணும் ஸார். அதையே நினைச்சிட்டு இருந்தா நம்ம வைப்பு சோகமாகிடும்."

வெடுக்கென நிமிர்ந்தான் ஸ்ரீதர். எத்தனை சின்னப் பெண். எவ்வளவு தெளிவாய் பேசுகிறாள். தான் நான்கு நாட்களாய் அறைக்குள் அடைந்து கிடந்து என்னையும் வருத்திக் கொண்டு மதனையும் வருத்திவிருக்கிறேன்.

உறவினர்களின் கூட்டத்தை நெருங்காமல் மா அறையிலேயே பதுங்கியிருந்து வெளியே செல்லும் போதெல்லாம் அழைத்த மதனிடம் வெறுப்பாய் மறுத்து அவனையும் சங்கடப்படுத்தியிருக்கிறேன்.

பதிலேதும் பேசாமல் காபியை வாங்கிக் கொண்டான்

"என்ன ஸார்! நான் எதுவும் தப்பாச் சொல்லிட்டேனா?"

"நோ... நோ..."

"பின்னே? உங்க முகமே மாறிப்போச்சே!"

"இல்லை... நான் எப்பவுமே இப்படித்தான்."

"பொய்!" - தயங்காமல் பட்டெனச் சொன்னவளை வியப்பாய் பார்த்தான்.

"என்ன?"

"இப்ப நீங்க பொய்யின்னு சொன்னேன்."

"ஏன்?"

"உங்க காலேஜ் டே போட்டோஸ் எல்லாம் அண்ணா காட்டியிருக்கான். அதுல நீங்கதான் ரொம்ப ஜாலியாவும் நிறைய ஃபிரண்ட்ஸ் இல்லை எவ்வளவோ இருந்தீங்க."



"ஏ... எப்போ? எப்போ பார்த்தீங்க?"

"நேற்றுதான் காட்டினான். ஏன்?"

"மதன் எங்கே? நீங்க காபி கொண்டு வந்திருக்கீங்க?"

"கெஸ்ட் எல்லாரும் இன்னிக்கு ஊருக்கு கிளம்புறாங்க. அவங்களை வழியனுப்பப் போயிருக்கான்."

"ஒரு வாரம் இருப்பாங்கன்னு சொன்னானே...!"

"ஆமாம். அப்படித்தான் ப்ளான். பட் நீங்க வந்ததும் மாறிப்போச்சு."

"என்ன?"

"ஆமா! நாங்க உள் வீட்ல இருந்தா உள் நண்பன் அறையை விட்டு வெளியே வரமாட்டேங்கிறார். அதனால நாங்க கிளம்புறோம்னு மாமா ஃபேமிலி கோவிச்சுட்டு போயிட்டாங்க."

ஸ்ரீதரின் முகம் மாறியது. "என்... என்னாலயா?" - கேட்கும்போதே குரல் தடுமாறியது. பளிச்சென சிரித்தாள் வைஷ்ணவி.

"என்ன பயந்திட்டீங்களா? அப்படியெல்லாம் எதுவு மில்லை..." - சொல்லிவிட்டு மீண்டும் சிரிக்க, நிம்மதியாய் பெருமூச்சு விட்டான் ஸ்ரீதர்.

"பயமுறுத்திட்டீங்களே?"

"அதெப்படி ஸார்? ஒரே சும்மா நான்களாக்கா உட்கார வைப்பது உங்களால...?"

"முதல்ல இருந்தது பழக்கம்."

"வெளியே சுத்தப் போக மாட்டீங்களா?"

"ம்ஹூம். நம்ம ஊர் மாதிரி இருக்காது அங்கே."

"அப்போ நம்ம ஊர்லன்னா சுத்துவீங்களா?"

"ம்... நேரம் போறதே தெரியாம சுத்தியிருக்கேன்."

"அன்னிக்கு தடடுப்பாறையில படுத்திருந்தீங்களே... அதை மாதிரி..."

"ம்..." - அசடு வழியப் புன்னகைத்தான்.

"ஆச்சரியா இருக்கு ஸார்!"

"என்ன?"

"உங்களுக்கு சிரிக்கவே தெரியாதுன்னு நினைச்சோம்."

"அநாவசியமா சிரிக்கிறதில்ல."

"சிரிக்கணும் ஸார். நாம எவ்வளவு சிரிக்கிறோமோ அவ்வளவு ஆரோக்கியம். வாய்விட்டு சிரிச்சா நோய் மட்டும் போகாது. நம்ம சோர்வு வெறுப்பு எல்லாமே போயிடும்." - அவள் இயல்பாகப் பேச, முகம் மாறினான்.

"சரி! காபி எதுக்குக் கொண்டு வந்தீங்க?"

"குடிக்கத்தான். இது என்ன கேள்வி?"

"நான் குடிக்க வேண்டாமா?"

"குடிங்க ஸார். இதுக்குக்கூட பர்மிஷன் கேட்கணுமா?"

"நீங்க இப்படிப் பேசிட்டு இருந்தா நான் எப்படிக் குடிக்கிறது?"

"ஓ! ஸாரி ஸார். நான் போரடிக்கிறேனா?"

"எனக்குக் கொஞ்சம் தனிமை வேணும்."



"தனிமை சில சமயம் சுகம். பல சமயம் கஷ்டம் ஸார்."

"எனக்கு இது பழக்கம்தான்னு சொன்னேனே."

"ஓ.கே. நீங்க காபி குடியுங்க. நான் வர்றேன்." - என்றவள் சற்று நகர்ந்து சென்று கூந்தலை உலர்த்தினாள். அவள் உதறிய கூந்தலில் இருந்து சில துளிகள் மேலே விழ, சற்று தூரமாய் நகர்ந்து கொண்டான்.

புன்னகையோடு தோளைக் குலுக்கிவிட்டு, தண்ணீர் தொட்டி அருகே சென்று, பைப்பில் ரப்பர் டியூபை செருகி, தண்ணீரைத் திறந்து விட்டாள்.

மாடியில் சுவரோரமாய் வைத்திருந்த ரோஜாத் தொட்டிகளுக்கு நீரைப் பாய்ச்சினாள். மொட்டும் பூவுமாய் இருந்த செடிகளை கவனமாய் பார்த்து விட்டு பைப்பை மூடினாள்.

அதற்குள் காபி குடித்து முடித்திருந்தவனிடம் காலி டம்ளரை வாங்கிக் கொண்டு எதுவும் பேசாமலே திரும்பி நடந்தாள். ஐந்தே நிமிடத்தில் நூறு வார்த்தை பேசியவள் மௌனமாய் திரும்பிச் சென்றது உறுத்தியது.

மறுகணமே மனதின் கசப்பு விஸ்வரூபம் எடுக்க, முகத்தைத் திருப்பிக் கொண்டு குளியலறைக்குள் நுழைந்தான். பொறுமையாய் குளித்து முடித்து அறைக்குள் வந்த போது வழக்கமாய் உணவோடு காத்திருக்கும் மேஜை இன்று வெறுமையாய் இருந்தது.

இன்று மதன் இல்லையே. எப்போது வருவான்? வயிற்றில் பசி எழுந்தது. ஆடையை மாற்றிவிட்டு ஈரத் துணிகளைப் பிழிந்து காய வைத்துவிட்டு, பொறுமையாய் நடைபோட்டுக் கொண்டிருந்தான்.

நேரம்தான் போய்க்கொண்டிருந்ததே தவிர சாப்பாடு வந்தபாடில்லை. கீழே இறங்கிப் போகவும் தயக்கமாய் இருந்தது. மதனின் அம்மாவைத் தவிர வேறு யாரையும் தெரியாது.

சாப்பாடு போடுங்கள் என்று யாரிடம் போய்க் கேட்பது? சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான். பணம் இருந்தது. பேசாமல் வெளியே சென்று சாப்பிட்டு விடலாம் என்ற எண்ணத்துடன் கதவை மூடிவிட்டு செருப்பை மாட்டிக் கொண்டு படிகளில் இறங்கத் துவங்கினான்.

கடைசிப் படிக்கட்டில் இறங்கியபோது அந்த மென் குரல் கேட்டது.

"வாங்க தம்பி! சாப்பாடு எல்லாம் ரெடியா இருக்கு சாப்பிட வாங்க." – சற்றுமுன் தன்னிடம் பேசிவிட்டுப் போன அந்தப் பெண்ணின் முகச்சாயலை அப்படியே கொண்டிருந்தார் அந்தப் பெண்மணி.

"அது... நான்... மதன் வந்திட்டுமே..." – என்றான் தயக்கமாய்.

"மதன் அப்படியே டியூட்டிக்கு போயிடுவான். மதியம் தான் வருவான்."

"பரவால்ல ஆன்ட்டி. நான் வெளியே சாப்பிட்டுக்கிறேன்."

"ஐயோ! வீட்ல சாப்பாடு இருக்கும்போது எம்ப்பா வெளியே போகணும். எல்லாம் எடுத்து வெச்சிட்டேன் வாப்பா!" – மறுக்க முடியாத அளவிற்கு மிகவும் மென்மையான தணிவான கனிவான அழைப்பு.



மௌனமாய் பின்தொடர்ந்தான். சாப்பாடு மேசை மீது தட்டு வைத்து பரிமாறிக் கொண்டிருந்தாள் உமா. உள் அறையை நோக்கி குரல் கொடுத்தாள்.

"ஜெய்! தேசிங்கு ராஜா கமிங். சூடா பூரி போட்டு எடுத்திட்டு வா."

"தம்பி பேரு தேசிங்கு ராஜாவா? நல்ல பேரு." – என்றாள் அந்த அம்மாள்.

"இல்ல ஆன்ட்டி! எம்பேரு ஸ்ரீதரன்." – என்றான் உமாவை முறைத்துக் கொண்டே.

"ஸ்ரீதரனா? உமா குட்டி நீ வேற பேர் சொன்னே?"

"எனக்கு இப்பத்தான் சித்தி இவரோட பேர் தெரியும்." – உமாவின் பதிலில் யோசனையாய் அந்த அம்மாளை ஏறிட்டான் ஸ்ரீதரன்.

நெற்றியிலும் வகிட்டிலும் குங்குமம் மின்ன, கனிவான முகம், சாந்தமான புன்னகையுடன் மிளிர்ந்தது. உமாவை ஏறிட்டான்.

"இவங்க...?"

"என் சித்தி. ஜெயஸ்ரீயோட அம்மா. பேரு அகல்யா."

மதனிடம் பேசிய வார்த்தை நினைவில் மோதினாலும் முகத்தை மாறாமல் வைத்துக்கொண்டு, "வணக்கம் ஆன்ட்டி" – என்றான்.

"உட்காருப்பா. நல்லா இரு. ஜெயாம்மா! இன்னும் என்ன பண்றே?" – என்ற குரலுக்கு தட்டில் சூடான உப்பிப் போன பூரிகளைக் கொண்டு வந்தாள் ஜெயஸ்ரீ.

"அம்மா! நீங்களே பரிமாறுங்க."

"ஏம்மா?"

"இவருக்கு நாங்க பரிமாறினா சாப்பாடு இறங்காது சித்தி" - என்றாள் உமா கசப்பாய்.

"ஏன் உமா குட்டி இப்படிச் சொல்றே?"

"சித்தி! இவரு ஒரு சாமியார் சித்தி. பெண்கள்கிட்ட பேசமாட்டாரு. அப்படியே பேசினாலும் சண்டைதான் போடுவாரு."

"ஏன்டி பொண்ணுங்களா! இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிள்ளை இருக்கிறது அபூர்வம்டி. இந்தப் பிள்ளையைய கடுவன் பூனை அது இதுன்னு சொன்னீங்க?" - அகல்யா இயல்பாய் கேட்க, உமா நெற்றியில் அறைந்து கொண்டாள்.

"ஷ்! சித்தி! நீங்க வேறு..." - என்றாள் கிசுகிசுப்பாய்.

"பெண்களா இருக்காங்கன்னு ஒட்டி இழையாம ஒதுங்கி இருக்கிற பிள்ளைய அப்படியெல்லாம் சொல்லலாமா?"

"சித்தி நீங்க ஒருத்தரே போதும். வா! ஜெய் போலாம்." - இரு பெண்களும் விலகிச் செல்ல, அமைதியாய் சாப்பிட்டான் ஸ்ரீதரன்.

"பொறுமையா சாப்பிடுப்பா." - என்றவாறே குருமாவை ஊற்றினாள்.

"தேவகிம்மா இல்லையா?"

"கோயிலுக்கு போயிருக்காங்கப்பா. வர்ற நேரம்தான்."

"இன்னிக்கு எதுவும் விசேஷமா ஆன்ட்டி?"



"உமாவுக்கு வரன் பார்த்திருக்கு. நல்லபடியா முடிவாகியிருக்கு. அதான் கோவிலுக்கு போயிருக்காங்க."

"ஓ! ரொம்ப சந்தோஷம்."

"இன்னொரு பூரி வெக்கட்டுமா?"

"இல்ல ஆன்ட்டி போதும்" - என்றவாறே எழுந்து கொண்டான்.

"ஜெய்! அந்தப் பருத்திப் பாலை கொண்டு வாம்மா."

கைகழுவியவன் நின்றான். "ஆன்ட்டி! பருத்திப் பாலா?"

"ஆமா தம்பி! உனக்கு ரொம்பப் பிடிக்குமாமே. மதன் தான் சொன்னான். எங்களுக்கு சரியா செய்ய வராது. பக்கத்து வீட்டு பாட்டிகிட்ட கேட்டு ஜெயாம்மாதான் செய்தா. குடிச்சுப் பாருப்பா."

ஏலக்காய் மணம் வீச திரும்பிப் பார்த்தான். பெரிய டம்ளரை சூடான பானத்துடன் நீட்டினாள் ஜெயஸ்ரீ.

"தேங்க்ஸ்!" - வாங்கிக் கொண்டான்.

"அம்மா! எதுவும் குறைச்சலா இருந்தா கேட்டுச் சொல்லுங்க. நாளைக்கு சரியா செய்திடுறேன்."

"ரொம்ப பிரமாதமா இருக்குங்க. அப்படியே சிவசாமி அண்ணன் செய்த மாதிரி. எங்க வீட்ல சாப்பிட்ட மாதிரி." - சொல்லும்போதே தொண்டை அடைத்தது.

வீட்டு நினைவும் கூடவே தந்தையின் நினைவும் வர கண்ணோரம் கரித்தது. தன்னை எங்கெல்லாம் தேடி அலைகிறாரோ. நான் இங்கே உண்டு உறங்கி சுகமாய் பொழுதைக் கழித்துக் கொண்டு...

கண்களில் நீர் நிறைந்தது. பார்த்துக் கொண்டிருந்த வர்கள் பதறிவிட, அகல்யா ஸ்ரீதரனை நெருங்கினாள்.

"என்னாச்சுப்பா?" - பரிவோடு தோளைத் தொட்டாள்.

"ஒ... ஒன்னுமில்ல ஆன்ட்டி." அவசரமாய் கண்ணீரை சுண்டி எறிந்தான். டம்ளரை டேபிள் மீது வைத்தான்.

"என்னப்பா! மிச்சம் வெச்சிட்ட...?"

"போதும் ஆன்ட்டி. வயிறு நிறைஞ்சு போச்சு!"

"சரி! ஜெயாம்மா! இதையெல்லாம் எடுத்து வெச்சிடு."

"சரிம்மா."

"ஆன்ட்டி..."

"என்னப்பா?"

"இனிமே இந்த... பருத்திப் பால் எல்லாம் செய்ய வேண்டாம்."

"ஏம்ப்பா?"

"உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்."

"இதுல என்னப்பா சிரமம் இருக்கு?"

"இல்ல ஆண்ட்டி! இதெல்லாம் மறக்க பழகிக்கணும். இனிமே செய்ய வேண்டாம்."

உமாவும் ஜெயஸ்ரீயும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஆன்ட்டி! கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன். மதன் வந்தா சொல்லிடுங்க."

"சரிப்பா!"



"வர்றேன் ஆன்ட்டி." - என்றவாறு வெளியேறி ...னை இருவரும் பார்த்துக் கொண்டே நின்றனர்.

அகல்யா உள் அறைக்குள் சென்றுவிட, உமா ...யஸ்ரீயிடம் கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

"ஜெய்! இந்த ஆளைப் பார்த்தா உனக்கு என்ன ...ணுது?"

"என்ன தோணுதுன்னா?"

"இவரு முகத்தையும் கண்ணையும் பார்த்தா இவரு ...ம்ப காயப்பட்ட மாதிரி தோணுதில்ல..."

"ஆமாம்ப்பா! பேச்சும் ஒரு மாதிரியாத்தான் இருக்கு."

"பெண்களைக் கண்டாலே எவ்வளவு வெறுப்பு வருது ..."

"ம். காலையில காபி கொடுக்கப் போகும்போது ...ல்ல நார்மலா பேசினாரு. திடீர்னு ஒரு மாதிரி கோபமா ...ட்டாரு."

"இப்போ பேசும்போது கவனிச்சியா?"

"எதை?"

"எல்லாத்தையும் மறக்கப் பழகணுமாம்."

"அதானே. அப்படி எதை மறக்கணுமாம்?"

"இதென்னடி கேள்வி! நான் கன்பார்ம்டா சொல்றேன். ... ஆள் நிச்சயமா லவ் பெய்லியரான ஆள்தான்."

"அதெப்படி அவ்வளவு உறுதியாச் சொல்றே?"

"அதான் நம்மைக் கண்டாலே ஓடுறார். சரியான ஆடு ...கியிருக்கார். பாவம்தான்."

"ஏன் உமா! இவ்வளவு அழகான ஆளைக்க யாராவது வேண்டாம்னு ஒதுக்குவாங்களா?"

"போடி இவளே! இவனும் இவன் மூஞ்சியு அப்படியே மெஷின் மாதிரியில்ல. மனுஷன்னா கொ மாவது சிரிக்கணும்டி. எப்பவும் உர்ருன்னு சிம்பன்ஸி மா இருந்தா எவளுக்குப் பிடிக்கும்?"

"சேச்சே! இப்படியெல்லாம் சொல்லாதப்பா!"

"பின்னே என்ன சொல்றதாம்? பொண்ணுங்கள் அப்படியே இவர் அழகில மயங்கிடுவாங்கன்னு நினைப் மத்தவங்க கிட்ட எப்படி வேணா இருக்கட்டும். நம்ம முறைக்கலாமா?"

"அதானே! நம்மைப் பார்த்தா அப்படியா தெரியுது?"

"பயம்டி. ஒருமுறை பட்ட சூடு. திரும்பவும் கிடை மோன்னு பயம்."

"எனக்கென்னவோ உமா! நீ நினைக்கிறது சரி படலை."

"ஏன்?"

"ஆண்கள் சோகமா இருந்தாலே இந்த காரணம்தான் இருக்க முடியுமா?"

"பின்னே?"

"அவங்களுக்கு எத்தனையோ வருத்தம் இருக்க அந்த வருத்தத்தில கூட வெறுப்பு வரலாம்."

"எனக்கு நம்பிக்கை இல்ல."

"எனக்கு என்னவோ இவர் குடும்பத்திலதான் ஏ கஷ்டம்னு தோணுது. அண்ணாகிட்ட வேலைக்கு சொ யிருக்காராம்."



"ஏன் ஜெய்! கஷ்டப்பட்டவன் ஃபாரின்ல போய் படிச்சிட்டு வருவானா? இதுல வேற ஏதோ ஒரு மேட்டர் இருக்கு."

"சரி! எதுவாவும் இருந்திட்டுப் போகட்டும்.. நாம கொஞ்சம் ஒதுங்கியே இருப்போம்."

"ஏன்? எதுக்கு?"

"பாவம்! அவருக்கென்ன கஷ்டமோ. நாம ஏன் அதை அதிகரிக்கணும்."

"அப்படி என்னதான் கஷ்டம்னு கண்டுபிடிக்கணும். இன்னிக்கு அண்ணன் வரட்டும். கண்டிப்பாக் கேட்டுத் தெரிஞ்சுக்கணும். அப்பத்தான்..." - என பேசியவளின் வார்த்தை நின்றுவிட, ஜெயஸ்ரீ உமாவை நிமிர்ந்து பார்த்தாள்.

உமாவின் விழிகள் தெறித்துவிடுவதைப் போல் இருக்க, அவளது பார்வையை தொடர்ந்து பார்த்த ஜெயஸ்ரீயும் விக்கித்துப் போனாள்.

கனல் கக்கும் கண்களோடு "வாசலருகே நின்று கொண்டிருந்தான் ஸ்ரீதரன்.

# 9

நீ சுடும் தீ என்றால் நான்
குளிர் காய்வேன் அன்பே
தீயாய் இரு - நீ ஒரு முள்
என்றால் நான் அதில் ரோஜா
அன்பே முள்ளாய் இரு!

கண்கள் சிவக்க தங்கள் முன் நின்றிருந்தவனைப் பார்த்ததும் வெலவெலத்துப் போயினர் இருவரும். இயல்பாகவே உமாவை விடவும் ஜெயஸ்ரீ பயந்தவள். அதிர்ந்து பேசாதவள்.

உமாவுடன் இணைந்து இருக்கும்பொழுது இருக்கும் தைரியம் தனியாக நிற்கும் சமயம் பறந்துவிடும். ஆனால் இன்று உமா அருகே நிற்கும்போதும் உதறியது.

நடுங்கிய கரங்களால் உமாவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள். உமாவின் உடலிலும் நடுக்கம் தெரிந்தது. என்றாலும் அதை வெளிக்காட்டாமல் புன்னகைத்தாள்.

"வா... வாங்க ஸ்ரீதர் ஸார். இப்பத்தான் வெளியே போனீங்க...?"

பதில் பேசாமல் கடுத்த முகத்துடன் அவர்களைக் கடந்து விறுவிறுவென மாடிக்கு ஏறினான். ஜெயஸ்ரீ மெதுவாய் உமாவை அழைத்தாள்.

"உமா! என்ன இவரு ஒண்ணுமே பேசாம போயிட்டாரு."

"சண்டை போடக்கூட பெண்களோட பேசக்கூடாதுன்னு நினைச்சிட்டாரோ என்னமோ. எனிவே நமக்கு நல்ல நேரம்தான்."

"ஏன்?"

"நாம பேசினதைக் கேட்டதுக்கு யாரா இருந்தாலும் உண்டு இல்லைன்னு ஆக்கியிருப்பாங்க இல்ல. இவர் காச்மூச்சுன்னு கத்தியிருந்தா உன் அம்மாவும் என் அம்மாவும் நம்மள சும்மா விட்டிருப்பாங்களா?"



"ம்ஹூம்."

"அதான் சொல்றேன். இப்ப நாம தப்பிச்சிட்டோமில்ல."

ஜெயஸ்ரீ பதட்டமானாள். "ஐயோ! இல்ல உமா. நாம தப்பிக்கல. வசமா மாட்டிக்கிட்டோம்."

"என்னடி சொல்றே?"

"அங்கே பாரு..." - மாடியை நோக்கி கைநீட்டினாள்.

"அங்கே என்ன?" - மேலே நிமிர்ந்து பார்த்தவள் தானும் பதறிப் போனாள். கொடிகளில் காயப் போட்டிருந்த துணிகளை மளமளவென உருவி தன் கையிலிருந்த கவருக்குள் போட்டுக் கொண்டிருந்தான் ஸ்ரீதரன்.

"ஜெய்! என்ன பண்றான் அவன்?"

"ஏய்! அவர் வீட்டை விட்டுப் போகப் போறார் போலிருக்கு..."

"என்ன?"

"ஐயோ! வீட்டைப் பூட்டிட்டுக் கிளம்பிட்டாரு உமா. போச்சு... இப்போ என்ன பண்றது?"

"அண்ணன் வந்தா கொன்னுடுவான். ஜெய்! ஏதாவது பண்ணு..."

"நானா? நான் என்ன பண்றது?"

"ஜெய்! ப்ளீஸ்... ஏதாவது செய். அவர்கிட்ட போய்ப் பேசிப் பாரேன்..."

"நான்... எப்படி?"

"ஜெய்! ஜெய்... நான் போய்ப் பேசினா அவருக்கு இன்னும் கோபம் வரும். நீ பேசினாத்தான் அமைதியாக் கேட்பாரு."

"என்னைப் பார்த்தாலே அவருக்குக் கோபம் வரும் உமா."

"இல்லை ஜெய்! நீ பேசினா யாருக்குமே கோபம் வராது. அதோட அவர் என்ன திட்டினாலும் நீ கோபப்பட மாட்டே..."

"உமா!"

"ஜெய்! இப்போ நான் போய்ப் பேசினா எகிறிடுவாரு... எனக்குக் கோபம் வந்திடும். நானும் கத்தினா பிரச்சனை பெரிசாகிடும். அம்மா காதில விழுந்திடும். போ ஜெய்...!"

"உமா! பேசாம அம்மாவைக் கூப்பிடுவோமா?"

"காரியமே கெட்டுடும். இந்த ஆள் நாம பேசினதெல்லாம் சொல்லிடுவானே...?"

"இதுக்குத்தான் ஒருத்தர் இல்லாத நேரம் அவங்களைப் பத்தி விமர்சனம் பண்ணக்கூடாது."

"ஏய்! கருத்துச் சொல்ற நேரமா இது. ஏய்! கீழே இறங்குறான்டி... போ... போ..." - ஜெயஸ்ரீயை படி வரை இழுத்துச் சென்று விட்டாள்.

"உமா...!" - தயக்கமாய் இழுத்தவளைப் பார்த்துக் கெஞ்சினாள்.

"என் கண்ணு இல்ல... போய் சமாதானம் பண்ணும்மா... நான் இங்கே நின்னு யாரும் வந்தா பார்த்துக்கிறேன்..."

"ம்..." - என்றவாறு நிமிர, நான்கைந்து படிகளில் இறங்கி விட்டான் ஸ்ரீதரன். கையில் துணிகள் அடங்கிய பை. முகத்தில் அதே கடுமை.



வரவழைத்துக் கொண்ட துணிவுடன் இயல்பான புன்னகையோடு படியேறினாள் ஜெயஸ்ரீ.

"என்ன ஸார்! வெளியே கிளம்பிட்டீங்களா?"

பதில் இல்லை. அடுத்த படிக்கட்டில் இறங்கும் முன் அவனெதிரில் போய் நின்று கொண்டாள். இரு கரங்களையும் பக்கவாட்டு சுவர் மீது வைத்துக் கொள்ள, வழியின்றி கோபமாய் நிமிர்ந்தான்.

"வழியை விடு."

"ஸாரி ஸார். நாங்க பேசினது தப்புதான். அதுக்காக நீங்க இப்படி அண்ணன் இல்லாத நேரம் கிளம்பிப் போறது சரியில்லையா?"

"தப்பு. உன் அண்ணன் பேச்சைக் கேட்டு நான் இங்கே வந்ததுதான் பெரிய தப்பு."

"ஸார்.."

"வாயை மூடு. முதல்ல வழியை விடு."

"ஸார் ப்ளீஸ்... கோபப்படாதீங்க. இப்படி வழியில நின்னு பேச வேண்டாம். மாடி ரூமைத் திறங்க. பொறுமையாப் பேசலாம்."

"ச்சீ! என்ன பொண்ணு நீ. நான் யாருன்னு தெரியுமா? எப்படிப்பட்டவன்னு தெரியுமா உனக்கு?" - கண்களை உருட்டி மிரட்டலாய் அவன் கேட்க, மிரண்டு விழித்தாள் ஜெயஸ்ரீ.

"தெ...தெ... தெரியாது."

"தெரியாமலே என்கூட ரூம்ல உட்கார்ந்து பேசணும்னு சொன்னா நீ எப்படிப்பட்ட பொண்ணா இருக்கணும். தனியா

பேசி மயக்க நான் ஒண்ணும் பொம்பளை பொறுக்
இல்லை... அதுக்கு வேற ஆளைப் பாரு..."

கோபத்தில் என்ன பேசுகிறோம் என்றே தெரியாம
சத்தமாக அவன் பேச... சர்வமும் நடுங்கிப் போனா
ஜெயஸ்ரீ. அதைவிட அவனது பேச்சின் அர்த்தம் நெருப்பி
இறக்கியது போல் சுட்டது.

உதடு துடிக்க கோபமாய் நிமிர்ந்தாள். "எ... என்
சொன்னீங்க? இப்போ என்ன சொன்னீங்க?"

"வழியை விடு. நான் போகணும்..."

"எனக்குப் பதில் சொல்லிட்டுப் போங்க..."

"உன்கிட்ட பதில் சொல்ல வேண்டிய அவசி
இல்லை."

"சொல்லணும்..." - என்றாள் அழுத்தம் திருத்
மாய். கலங்கிய கண்களைப் பற்களைக் கடித்துக் கட்
படுத்தினாள். கீழே நின்ற உமாவும் எதிரே நின்ற ஸ்ரீதர
கூட ஜெயஸ்ரீயை நிமிர்ந்து பார்த்தனர்.

"என்ன சொன்னீங்க? உங்களைத் தனியா பே
மயக்கிடுவேனா? மிஸ்டர்! என்னைப் பத்தி என்
நினைச்சிட்டு இருக்கீங்க உங்க மனசில...

எங்க அண்ணனோட நண்பர்ங்கிறதால
உங்ககிட்ட நான் நின்னு பேசிட்டு இருக்கேன். மத்தபடி உ
வீட்டுப் பொண்ணுங்க மாதிரி எங்களை நினை
வேண்டாம்."

"ஹேய்! ஸ்ரீ....!"



"ஷ்ஷ... இந்த சீறுறது... பாயறது எல்லாம் என்கிட்ட வேண்டாம். உங்க மனசில தப்பு இருக்கு. அதை மறைக்கத்தான் கோபம்ங்கிற முகமூடியைப் போட்டுட்டு எல்லாரையும் ஏமாத்திட்டு இருக்கீங்க."

"என்ன? என் மனசில தப்பு இருக்கா?"

"ஆமா! உங்க முட்டாள்தனத்தால எவகிட்டயோ ஏமாந்திட்டு அந்தக் கோபத்தை எங்க மேல காட்டுறீங்களா?"

"ஏய்! நீ... நீ பேசாமப் போயிடு..." - பற்களைக் கடித்தான்.

"ஏன் போகணும்? சொல்ல வந்ததை சொல்லிட்டே போறேன். உங்க மனசில என்ன பேரழகன்ற நினைப்பா? பார்க்கிற பொண்ணெல்லாம் மயங்கிடுவான்கிற திமிரா?

மிஸ்டர்! நாட்டையே கட்டி ஆளுற அரசனா இருந்தாலும் சரி... பெண்கள் மயங்குகிற அளவுக்கு அழகான மன்மதனா இருந்தாலும் சரி... எல்லாப் பெண்களும் பின்னாலயே வந்திட மாட்டாங்க...

மொதல்ல அதைப் புரிஞ்சுக்கங்க... உங்களுக்குப் பயம். பொண்ணுங்களைப் பார்த்தாலோ பேசினாலோ உங்க மனசு தடுமாறிடும்கிற பயம். அதுக்காக எங்க மேல பழியைப் போடலாமா?

லுக்! எங்க அண்ணனோட ஃபிரெண்ட்ங்கிறதால எங்க அண்ணனை மாதிரி நீங்களும் நல்லவரா இருப்பீங்கன்னு நினைச்சித்தான் பேசினோம். ஆனா நீங்க எவ்வளவு மோசமானவர்ன்னு இப்பத்தான் தெரிஞ்சது."

"என்ன? நான் மோசமானவனா?"

"ஆமா! மோசமான ஒருத்தராலதான் இப்படியெல்லாம் பேச முடியும். நல்லவங்களுக்கு அந்த மாதிரி எண்ணமோ பேச்சோ வராது."

"பேஷ்! இதுதான் உங்க சாமர்த்தியம்..." – ஏளனமாய்ச் சிரித்தான்.

"என்ன?"

"எந்தத் தப்பைச் செய்தாலும் ஈஸியா அடுத்தவங்க... குறிப்பா ஆண்கள் மேல பழியைப் போட்டுட்டு தப்பிச்சுக்கிறது..."

"அப்படி என்ன நாங்க தப்பு பண்ணிட்டோம்?"

"ஒரு ஆம்பிளையைப் பத்தி அவன் இல்லாத நேரம் எவ்வளவு மோசமாப் பேசுறீங்க... இது தப்பில்லையா?"

"அதுக்குக் காரணம் நீங்கதான்."

"என்ன?"

"ஆமா! ஒரு வீட்டுக்கு வந்தா கலகலப்பாப் பேசணும்... இல்லைன்னா ஸாஃப்ட்டாப் பேசணும்... அதை விட்டுட்டு கடுகடுன்னு இருந்தா பேசத்தான் செய்வோம்."

"பட்! இப்படிப்பட்ட வீட்ல என்னால இருக்க முடியாது."

"அதை என் அண்ணன் வந்த பிறகு சொல்லிட்டே போகலாமே...? ஏன் இப்படித் திருடன் மாதிரி ஓடணும்?"

"ஏய்! ஸ்டாப் இட்."

"பேசாம உள்ளே போங்க ஸார். இனிமே உங்களைப் பத்தியோ உங்க கூடவோ யாரும் பேச மாட்டோம். போங்க..."

"நீ எனக்கு ஆர்டர் போடுறியா?"



"இதோ பாருங்க... உங்ககிட்ட சண்டை போட [illegible]னோ... எதிர்த்துப் பேசணும்னோ... நான் வரல்ல... [illegible]ங்க பேசினதுக்கு ஸாரி கேட்கத்தான் வந்தேன். [illegible]ங்கதான் தப்புத் தப்பாப் பேசி என்னைக் கோபப்பட வைச்சிட்டீங்க...

நீங்க பேசின வார்த்தைகள் என் அம்மா காதிலயோ [illegible]யம்மா காதிலயோ விழுந்தா என்னாகும்னு யோசிச்சிப் [illegible]தீங்களா?

எங்க அம்மா ஏற்கெனவே நிறையக் காயப் [illegible]ருக்காங்க. என்னால இன்னொரு முறை எங்கம்மா [illegible]யை அனுபவிக்க வேண்டாம். நான் பேசினது உங்க [illegible]க் கஷ்டப்படுத்தி இருந்தா மன்னிச்சிடுங்க...

நீங்க இங்க எவ்வளவு நாள் வேணா இருக்கலாம். [illegible]வரைக்கும் நாங்க உங்க கண்லகூடப் படமாட்டோம். [illegible]ளுக்காக உங்க நண்பனை உதறிட்டுப் போக [illegible]டாம்..." – மென்மையான குரலில் சொல்லிவிட்டுத் [illegible]... வாசலுக்கு வெளியே கார் வந்து நிற்கும் ஓசை [illegible]து.

தயக்கமாய் ஒருமுறை ஸ்ரீதரனைத் திரும்பிப் பார்த்து [illegible] எதுவும் பேசாமலேயே கீழே இறங்கிச் சென்றாள். [illegible]சயின்றி நின்றான் ஸ்ரீதரன்.

காரை விட்டு இறங்கி வந்த மதன், படிக்கட்டில் [illegible]டு நின்றவனைப் பார்த்து, நேராக மாடிக்கு வந்தான்.

"என்னடா! கையில பையோட எங்கே கிளம்பிட்ட?"

"அது... வந்து... துணிகளை அயர்ன் பண்ண [illegible]... அதான்...!"

"அதுக்கு ஏன் வெளியே எடுத்திட்டுப் போறே! நம்ம வீட்லயே அயர்ன் பாக்ஸ் இருக்கு. முத்துகிட்ட கொடு. அவ அயர்ன் பண்ணித் தந்திடுவான்."

"ம்..."

"பிறகென்ன நிற்கிற? வா... மாடிக்குப் போகலாம்."

"மதன்! என்னோட வேலை என்னாச்சு?"

"நாளைக்கே ஜாய்ன் பண்ற மாதிரி வேலை ரெடியா இருக்குடா..."

"எங்கே... என்ன வேலை?"

"ஏன்டா அவசரப்படுறே? இன்னும் ஒரு வாரத்தில வீட்ல விசேஷம் இருக்கு. கூடமாட ஒத்தாசைக்கு உன்னை விட்டா யார் இருக்கா?"

"என்னடா விசேஷம்?"

"அதான் சொன்னேனே...! உமாவிற்கு வரன் பார்க்கிறோம்னு. இன்னிக்குத்தான் நாள் பார்த்தோம். வர்ற ஞாயிற்றுக்கிழமை சிம்பிளா நிச்சயம் பண்ணிடலாம்னு சொல்லியிருக்காங்க.

அது விஷயமா பேசிட்டு வரத்தான் இவ்வளவு நேரமாச்சு. நீ சாப்பிட்டியா?"

"ம்... சாப்பிட்டேன்."

"ஸ்ரீ! வீட்ல முத கல்யாணம். நிச்சயதார்த்தம்னாலே பாதிக் கல்யாணம்னு சொல்வாங்க. ஏகப்பட்ட வேலை இருக்கு... உன்னால ஹெல்ப் பண்ண முடியுமா?"

"இதென்னடா கேள்வி? உனக்காக இதைக்கூட செய்ய மாட்டேனா?"



"தேங்க்ஸ்டா..."

"இதுக்கு ஏன்டா நன்றி! இந்த மாதிரி விசேஷம் நடத்த எனக்கு அக்கா, தங்கைன்னு யார் இருக்கா?"

"சேச்சே! உமா உனக்கும் தங்கைதானே... அவங்களுக்கெல்லாம் நீ கலகலப்பா பேசலையேங்கிற வருத்தம் இருக்கு..." - இயல்பாக மதன் சொல்லிக் கொண்டே படியேற, லேசான குற்ற உணர்வுடன் மௌனமாய் பின்தொடர்ந்தான் ஸ்ரீதரன்.

இதே வார்த்தையைத்தானே அவளும் சொன்னாள். நான்தான் எதையும் யோசிக்காமல், புரிந்து கொள்ளாமல் கோபமாய்ப் பேசி விட்டேன். கலகலப்பான குடும்பம். நான் மட்டும் தீவாய் ஒதுங்கியிருக்கிறேன்.

அதனால் இயல்பாகப் பேசலாம் என நினைத்த அவளிடம் எத்தனை வெறுப்பைக் காட்டியிருக்கிறேன். இன்று காலையில்கூட இயல்பாய்ப் பேசியவளிடம் முகம் திருப்பினேனே...!

எல்லாம் அவளால்... அந்த யமுனாவால் வந்த வெறுப்பு. அது தன் மனவருத்தம். இனி அதை மற்றவர்கள் மீது காட்டக்கூடாது. இத்தனை வருடங்களாய் இருந்த அன்புகள் காணாமல் போய் விடக்கூடாது.

போனவை போகட்டும்... இனி யார் மீதும் எதற்காகவும் வெறுப்பைக் காட்டக்கூடாது. அப்பா செய்த தவறுக்கு நாம் ஏன் மற்றவர்களிடம் கோபப்பட்டு வெறுப்பை சம்பாதிக்க வேண்டும்?

அறைக்குள் நுழைந்து கட்டிலில் அமர்ந்தான் மதன். "ஸ்ரீ! இந்த விசேஷம் முடிஞ்ச பிறகு நீ வேலையில

சேர்ந்தாப் போதும். ஏன்னா வேலையில சேர்ந்ததும் வீ
போட்டா நல்லா இருக்காது."

"சரிடா. ஆனா வீட்லயே உட்கார்ந்தா எனக்
போரடிக்குது."

"அவ்வளவுதானே. நாளையில இருந்து நான் வெளி
போகும்போது நீயும் வந்துடு. வெளி வேலையையும் பார்
மாதிரி ஆச்சு. என் வேலையைப் பத்தியும் தெரிஞ்சக்கலா

"தேங்க்ஸ்டா! இப்பவே போலாமா?"

"பொறுமை. அம்மா வந்துடட்டும். விஷயத்தை
சொல்லிட்டு மதியம் சாப்பிட்ட பிறகு போகலாம். அ
முன்னால கொஞ்சம் நெருங்கின சொந்தக்காரங்களு
தகவல் சொல்லணும்."

"மதன்..."

"என்னடா?"

"வந்து..."

"சொல்லுடா..."

"நிச்சயத்திற்கு அப்பாவைக் கூப்பிடுவியா?" - த
மாகக் கேட்டான்.

"கூப்பிட வேண்டாமா?"

"வேண்டாம் மதன். நான்... நான் எல்லாத்தை
மறக்கணும்னு நினைக்கிறேன்.

உங்ககூட சகஜமா கலகலப்பா வாழணும்னு ஆ
படுறேன். அவரைப் பார்த்தா... என்னால..."



"நீ வருத்தப்படாதே! உன் மனசை எந்த சூழ்நிலை
யிலும் யாருக்காகவும் காயப்படுத்த மாட்டேன். ப்ராமிஸ்."

"தேங்க்ஸ்டா!" – கலங்கிய கண்களோடு நண்பனைக் கட்டிக் கொண்டான்.

# 10

கண்ணீர் ஈரம் சுடுகின்ற நேரம்
பனித்தோட்டம் எல்லாம் அனலாக
மாறும் சோகம் சொன்னால்
உன் பாரம் தீரும்!

சூரியன் ஆரஞ்சு நிறமாய் மேற்குத் திசையை நோக்கி இறங்கிக் கொண்டிருக்க, அதற்காகவே காத்திருந்தது போல் பனிக் காற்று வீசத் துவங்கியது. மேகங்கள் அவசரமாய் ஓடிவந்து சூரியனை மூடிக்கொண்டது.

மாடியின் பால்கனியில் மெதுவாய் நடைபோட்டுக் கொண்டிருந்தான் ஸ்ரீதரன். உமாவின் நிச்சயதார்த்தம் முடிந்ததும் வேலையில் சேர்ந்துவிட வேண்டும். என்ன வேலையாக இருந்தாலும் சரி.

நண்பனின் வீட்டில் உட்கார்ந்து தண்டமாய் சாப்பிடுவது சரியில்லை. வேலை பார்க்கும் இடத்திலேயே தங்கிக் கொள்ள இடம் கிடைத்தால் போதும். மதனை அவன் வேலை செய்யும் இடத்திலேயே பார்த்துக் கொள்ளலாம்.

தேவையில்லாமல் இங்கு வரக்கூடாது. அன்று சற்று கோபமாகப் பேசியபிறகு இதுவரை ஜெயஸ்ரீயோ உமாவோ தன் கண்ணில் படவில்லை. லேசாய் வருத்தம் இருந்தாலும் மனதைக் கல்லாக்கிக் கொண்டான்.

கூடுமானவரை இந்தப் பெண்ணை பார்க்காமல் இருப்பதுதான் நலம். அவளைப் பார்க்கும் போதெல்லாம் மனம் தன் கட்டுக்குள் நிற்பதில்லை. அவள் பின்னே ஓடுகிறது. இதை முதலிலேயே தட்டி வைக்க வேண்டும்.

வேண்டாம். பெண்களின் உறவே வேண்டாம். இப்படியே தனித்து வாழ்ந்து விடலாம். என்ன சொந்த பந்தம்? அத்தனை துன்பத்திற்கும் உறவுகள்தான் காரணம்.

இதனால்தான் சாமியார்கள் உறவுகளை உதறிவிட்டு காவி உடுத்திவிடுகிறார்கள் போலும். மனதிற்குள் பலவித எண்ணங்களோடு நடமாடுகையில் கீழே ஜெயஸ்ரீயின் குரல் கேட்டது.

"முத்து! முத்து!" - வேலைக்காரனை அழைத்தாள்.

"என்னங்கம்மா?" - வீட்டின் பின்னே இருந்து குரல் கேட்டது.

"என்ன பண்ணிட்டு இருக்கே முத்து?"

"செடிகளுக்கு உரம் வெச்சிட்டு இருக்கேம்மா." - என்றவாறு ஓடிவந்தான்.

"நேரமாகுமா? வெச்சு முடிச்சிட்டியா?"

"இன்னும் மூணு பாத்திக்கு வெக்கணும்மா, என்னங்கம்மா எதுவும் வேலையிருக்கா?"

"மாடியில ஒரு விருந்தாளி இருக்காரில்ல. அவருக்கு காபி கொடுக்கணும். அதான்..."

"ஒரு நிமிஷம்மா. கைகால் அலம்பிட்டு வந்திடுறேன்."

"சரி!"



"ஜெய்! முத்துவ எதுக்காகக் கூப்பிட்ட?" - என்றவாறு வந்தாள் உமா.

"ஸ்ரீதர் சாருக்கு காபி கொடுக்கணும்."

"அவர் காபி வேண்டாம்னு சொல்லிட்டார். முத்து! நீ போய் உன் வேலையைக் கவனி."

"சரிங்கம்மா!" - என்றவாறு அவன் விலகிச் செல்ல, ஆச்சர்யமாய் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீதரன்.

"நான் எப்போது இவளிடம் காபி வேண்டாம் என்று சொன்னேன். இவள் என்னைப் பார்க்கவே இல்லையே. எதற்காக இப்படிச் சொல்கிறாள்?"

முத்து போய்விட்டான் என்பதை உறுதி செய்துவிட்டு கோபமாய் ஜெயஸ்ரீயிடம் திரும்பினாள் உமா.

"ஜெய்! உனக்கு அறிவு இருக்கா?"

"என்ன?"

"முத்துவிடமா காபியை கொடுத்து அனுப்புவாய்?"

"வேறு யார்கிட்ட கொடுக்கிறதாம்?"

"ஏன்? அம்மா எங்கே?"

"ரெண்டு பேரும் கோவிலுக்கு போயிருக்காங்க. இன்னும் வரல்ல!"

"இன்னுமா வரல்ல?"

"ம்... இவ்வளவு நேரம் வெயிட் பண்ணி பார்த்திட்டு தான் முத்துவைக் கூப்பிட்டேன்."

"அதுக்காக முத்துகிட்டயா கொடுப்பே?"

"ஏன் உமா? கொடுத்தா என்ன?"

"மண்டு. அவர் கோபக்காரரோ குணக்காரரோ... நம்ம வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளி. அவருக்கு தோட்டக்காரன் கிட்ட காபி கொடுத்து அனுப்பலாமா?"

"அனுப்பினா என்ன?"

"என்னவா? ஏற்கனவே அந்த ஆளு ஒரு துர்வாச முனிவர். இதுல நாம முத்துகிட்ட காபி கொடுத்து அனுப்பினா என்னை அவமானப்படுத்தவா முத்துகிட்ட கொடுத்து விட்டீங்கன்னு கேட்டு சண்டைக்கு வருவாரு."

"சேச்சே! அவருக்கு நாம போனாத்தான் கோபம் வரும் உமா. மத்தபடி முத்துகிட்ட ரொம்ப சிநேகமாப் பேசுறாரே!"

"பேசுவாரு. ஆனா நம்மகிட்ட ஏகப்பட்ட கடுப்பில இருக்காரே. எப்போ சமயம் கிடைச்சாலும் திட்டித் தீர்த்திடுறாரே."

"ஆமாம். அதுக்கு பயந்துதான் நான் காபி எடுத்திட்டு போகலை."

"வேண்டாம். போகாதே. அப்புறம் அதுக்கும் கத்துவாரு."

"இந்த சுதாகர் இல்லாதது இப்பத்தான் ரொம்ப கஷ்டமாத் தெரியுது."

"ஏன்?"

"அவன் இருந்தா அவன்கிட்ட கொடுத்து விடலாமில்ல. நேரமும் ஆகுது உமா. பாவம். அவருக்கு காபி கொடுக்க வேண்டாமா?"

"ஒண்ணும் வேண்டாம். அண்ணன் வரட்டும். சேர்ந்து குடிக்கட்டும்."



"அண்ணனையும் இன்னும் காணோமே..."

"நீ ஏன் இவ்வளவு வருத்தப்படுற. வர்றப்ப வரட்டும் உமா."

"உமா! அவர் பாவமில்லையா? வீட்டுக்கு வந்த விருந்தாளியை நாமதானே கவனிக்கணும்."

"நமக்குத் தெரியுது. அவருக்குத் தெரிய வேண்டாமா? ஒரு வீட்டுக்கு விருந்துக்கு வந்திருக்கோமே... கொஞ்சம் கலகலப்பாப் பேசுவோம் சிரிப்போம். ம்ஹூம். எப்பப் பாரு கோழி முட்டையை அடைகாக்கிற மாதிரி ரூம்லயே அடைஞ்சு கிடக்கிறாரு. மாடியில அப்படி என்னதான் இருக்கோ. அதெப்படி கொஞ்சம்கூட சலிக்காம ஒரே இடத்துல இருக்க முடியுது இவரால...?"

"வேண்டாம் உமா! அவரைப் பத்திப் பேசாதே!"

"ஏன்?"

"அடுத்தவங்களைப் பத்தி அவங்க இல்லாத நேரம் பேசுறது தப்பு."

"ம்க்கும். நீயும் பாடம் எடுக்க ஆரம்பிச்சிட்டியா?"

"உமா! அவரைப் பத்தி பேசும்போதெல்லாம் எப்படியும் அவர் காதில விழுந்திடுது. இப்பக்கூட திடீர்னு கீழே இறங்கி வந்திடுவாரோன்னு பயம்மா இருக்கு."

"பயப்படாதே! இடியே விழுந்தாலும் அவர் கீழே இறங்க மாட்டாரு."

"ஏன்?"

"ஏன்னா... நாம இருக்கோமே. பிறகெப்படி வருவார்?" உமா கேலியாய்ச் சொல்ல, தலையசைத்து சிரித்தாள்

ஜெயஸ்ரீ. மேலே இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீதரன் அந்த சிரிப்பில் சொக்கிப் போனான்.

தன்னைப் பற்றி பேசுகிறார்கள் எனத் தெரிந்தும் ஏனோ இன்று கோபம் வரவில்லை. மாறாக முகம் புன்னகை பூத்தது. ம்... சரியாகக் கணித்து வைத்திருக் கிறார்களே என மெச்சத் தோன்றியது.

குளிருக்கு இதமாய் காபி குடிக்க வேண்டும் போல் தோன்றிய எண்ணத்தை ஒதுக்கினான். இன்று மதன் வரும்வரை காபி கிடைக்காது என்ற எண்ணத்துடன் தன் அறைக்குள் நுழைய முயன்றபோது கீழே யாரோ அழைக்கும் குரல் கேட்டது. நின்று திரும்பிப் பார்த்தான்.

"வீட்ல யாருங்க?"

யாரிவன்? உரிமையாய் வீட்டுக்குள் வந்து நின்று குரல் கொடுப்பவன்? ஸ்ரீதரன் யோசிக்கும்போதே ஜெயஸ்ரீ வந்தாள்.

"யாருங்க?"

"அம்மா இல்லையாம்மா?"

"கோவிலுக்கு போயிருக்காங்க."

"பெரியம்மா...?"

"அவங்களும்தான். என்ன விஷயம்? யார் நீங்க?"

"நான் டி.வி.எஸ். நகர்ல இருந்து வர்றேன். அம்மாகிட்ட ஒரு ஜாதகம் கொடுத்திருந்தேன். அது இப்போ தேவை படுது. வாங்கிட்டு போகலாம்னு வந்தேன்."

"தெரியலையே. அம்மாகிட்டதான் கேட்கணும்."

"ரொம்ப நேரமாகுமா?"



"வர்ற நேரம்தான்." - அவள் சொல்லிக் கொண் டிருக்கும்போதே அகல்யாவும் தேவகியும் வந்தனர். அகல்யா அவசரமாய் வீட்டிற்குள் போய்விட, தேவகி முகம் மலர்ந்து வரவேற்றாள்.

"அடடே! சங்கரா! வாப்பா. எப்போ வந்தே?"

"இப்பத்தாம்மா..."

"வாப்பா! உட்காரு. உமா! காபி கொண்டு வாம்மா."

"வேண்டாம்மா. நான் காபி குடிக்க வரல்ல இங்க."

"என்னாச்சுப்பா?"

"ஏம்மா! எங்க மாமா பையனுக்கு உங்க வீட்டுப் பெண்ணைக் கேட்டிருந்தோமே..."

"ஆமாம்பா. இப்பக்கூட அது விஷயமாத்தான் ஜாதகம் பார்த்திட்டு வர்றோம். பத்துப் பொருத்தம் இருக்குப்பா. முடிக்கலாம்னு சொல்லிட்டார்."

"என்னம்மா விளையாடுறீங்களா?"

"சங்கரா! என்ன உன் பேச்சு ஒரு மாதிரி இருக்கு?"

"வேற எப்படி இருக்கும்? ஒரே பொண்ணை எத்தனை பேருக்கு சம்பந்தம் பேசுவீங்க?"

"சங்கரா!" - தேவகியின் குரல் உயர்ந்தது. அது வரையில் மேலே நின்று இது இவர்களது குடும்ப விஷயம் என இருந்த ஸ்ரீதரன், வந்திருந்தவன் பேச்சு சரியில்லை என்று தோன்ற கீழே இறங்கி வந்தான்.

"அம்மா! என்னாச்சு? யார் இது?" - என்றான் தேவகியைப் பார்த்து.

"இந்த ஊர்க்காரன்தாம்ப்பா. நல்ல பையன். நமக்கு தூரத்து உறவுதான். ஆனா ஏன் இப்படிப் பேசுறான்னு புரியலியே."

ஸ்ரீதரன் இறங்கி வந்ததும் ஜெயஸ்ரீ நகர்ந்து அறைக்குள் சென்று சற்று பயமாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அருகே வந்த உமாவின் முகத்திலும் கலக்கம். ஜன்னலோரம் நின்ற அகல்யாவின் முகம் வெளிறிப் போயிருந்தது.

"என்ன ஜெய்? இவன் ஏன் கத்திட்டு இருக்கான்?"

"எனக்கும் ஒண்ணும் புரியலை உமா."

"அண்ணன் வேற வீட்ல இல்லையே!"

சங்கரன் ஸ்ரீதரனை மேலும் கீழுமாய்ப் பார்த்தான். "ஸார் யாரு?"

"நான் மதனோட நண்பன்!"

"ஓஹோ! சார் நீங்களே ஒரு நியாயத்தை சொல்லுங்க ஸார்."

"என்ன?"

"இவங்க பெண்ணை என் மாமா மகனுக்குக் கேட்டோம். ஜாதகமும் கொடுத்தோம். வாங்கிகிட்டு இது வரைக்கும் ஒரு பதில் சொல்லல. இப்போ என்னன்னா அந்தப் பொண்ணுக்கு நிச்சயதார்த்தம்னு ஊரே சொல்லுது."

"சங்கரா! நீ என்னப்பா சொல்றே?" - தேவகி பதறினாள்.

"உண்மையைத் தாம்மா சொல்றேன். உங்க பொண்ணுக்கு கல்யாணம் பேசி முடிச்சாச்சா? இல்லையா?"



"ஆமாம்ப்பா. முடிவாகிடுச்சு."

"பிறகேம்மா இப்பத்தான் ஜாதகம் பார்த்திட்டு வர்றோம்னு பொய் சொல்றீங்க?"

"சங்கரா! கல்யாணம் பேசி முடிச்சது எம் பொண்ணுக்கு. ஜாதகம் பார்த்திட்டு வந்தது என் சின்னப் பொண்ணுக்கு."

"என்னது?"

"ஆமாம்ப்பா! இப்பத்தான் பார்த்திட்டு வர்றோம்."

"சின்னப் பொண்ணுன்னா... யாரு? உங்க மச்சினன் பொண்ணா?"

"ஆமாம். அவளுக்குத்தான் பேசினோம்."

"ஏம்மா! எங்களைப் பார்த்தா உங்களுக்கு கேணப் பயலுக மாதிரித் தெரியுதா?"

"சங்கரா!"

"அந்தப் பொண்ணை யாரும்மா உங்ககிட்ட கேட்டது?" சங்கரனின் கேள்வியில் ஸ்ரீதரன் உட்பட அனைவரும் அதிர்ந்தனர். உட்புறமாக திரும்பி ஜெயஸ்ரீயை பார்த்தான்.

ஜெயஸ்ரீயின் முகம் அவமானத்தில் சிவக்க, ஆத்திரமாய் தாயை நோக்கினாள். அகல்யா கண்ணீரோடு இயலாமையாய் மகளைக் காண துணிவின்றி சுவரோடு சாய்ந்து தரையில் அமர்ந்தாள்.

உமா முகத்தில் திடுக்கிடலோடு செய்வதறியாது ஜெயஸ்ரீயின் தோளைப் பற்றிக் கொண்டாள். தேவகியும் அதிர்ந்துதான் நின்றாள்.

"சங்கரா? நீ என்னப்பா சொல்றே?"

"நாங்க கேட்டது உங்க பெண் உமாவை!"

"என்ன?"

"உங்களுக்கு வேணா மச்சினன் பொண்ணு உங்க பொண்ணாத் தெரியலாம். ஆனா எங்களுக்கு அப்படி யில்லை. முதல்ல ஜாதகத்தை கொடுங்கம்மா, நான் கிளம்புறேன்."

"சங்கரா! ஏன் என் சின்னப் பொண்ணுக்கு என்ன?"

"எதுவும் தெரியாத மாதிரி கேட்காதீங்கம்மா. பொண்ணு மட்டும் நல்லா இருந்தாப் போதுமா? மத்ததெல்லாம் பார்க்க வேண்டாமா? அதெல்லாம் சரிப்படாது."

"சங்கரா!"

"தேவகிம்மா. நான் இதுக்கு மேல பேசினா நல்லா இருக்காது. உங்க மச்சினன் குடும்பத்தைப் பத்திதான் ஊருக்கே தெரியுமே. தெரிந்தும் பெண் எடுக்க நாங்க என்ன வக்கத்துப் போன குடும்பமா? முதல்லேயே நீங்க அந்த பொண்ணுக்குத்தான்னு சொல்லியிருந்தா ஜாதகமே தந்திருக்க மாட்டோம்."

சங்கரன் கோபமாகவே சொல்ல, அதற்கு மேலும் அங்கே நிற்க முடியாமல் ஜெயஸ்ரீ விசும்பிக் கொண்டே ஓடிவிட, ஸ்ரீதரனின் மனம் வெகுவாய்க் கலங்கியது.

"மிஸ்டர். ஏன் இப்படிக் கூச்சல் போடுறீங்க. முதல்ல அடுத்தவங்க மனசு புண்படாமப் பேசக் கத்துக்கங்க."

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியும் ஸார். நீங்க ஒன்னும் கத்துக் கொடுக்க வேண்டாம்."



"ஏய்..." - எனத் தொடங்கிய ஸ்ரீதரனை அடக்கினாள் தேவகி.

"வேண்டாம்ப்பா! எதுவும் பேச வேண்டாம். சங்கரா! உனக்கு இப்ப என்ன வேணும்?"

"ஜாதகத்தைத் தந்தா போயிட்டே இருப்பேன்." - அவன் அலட்சியமாகச் சொல்ல, தன் கையில் இருந்த கவரைப் பிரித்து, சிறிய ஜாதகப் புத்தகத்தை எடுத்து நீட்டினாள்.

"இந்தா! கிளம்பு!"

"இனிமே இப்படியெல்லாம் ஏடாகூடமா பேசி எங்க நேரத்தை வீணாக்காதீங்க."

"ஏய்! அதான் தந்திட்டாங்கள்ல... பிறகேன் பேசிட்டு நிக்கிற... கிளம்பு!" - ஸ்ரீதரன் சீறியதும் லேசாய் முணு முணுத்தவாறே அவன் கிளம்பிச் செல்ல, தயக்கமாய் தேவகியை ஏறிட்டான்.

"அம்மா! இந்த ஆள் ஏன் இப்படிக் கோபப்படுறான்? அந்தப் பொண்ணுக்கு என்ன குறைச்சல்?"

"இதெல்லாம் எங்க குடும்பத்துக்கான சாபம் தம்பி. வேறெதும் கேட்காதீங்க..." - என்றவாறு அறைக்குள் நுழைந்தாள். தரையில் அமர்ந்து விசும்பிக் கொண்டிருந்த அகல்யாவை நெருங்கி அணைத்துக் கொண்டாள்.

"அக்கா! எங்களுக்கு விடிவே கிடையாதா? எம் பொண்ணு என்ன பாவம் பண்ணினா? அவளுக்கு ஏன் இந்த தண்டனை?" - தேம்பினாள்.

"அழாதே அகல்யா! காலம் மாறும். நம்ம பொண்ணுக்கு இதைவிட நூறு மடங்கு நல்ல மாப்பிள்ளை கிடைப்பான்."

"எனக்கு நம்பிக்கை இல்லைக்கா...!"

"இப்படியெல்லாம் பேசாதேம்மா... ஊர்ல வேற மாப்பிள்ளையே கிடைக்காதா? நம்ம ஜெய்யோட அழகுக்கு ஏத்த மாப்பிள்ளை நம்மைத் தேடி வருவான்... பாரேன்!"

"வந்தவன் எல்லாம் ஓடுறானே அக்கா... நான் பெரிய தப்புப் பண்ணிட்டேன். அவரு போனதுமே என் குழந்தைகளைக் கொன்னுட்டு நானும் போயிருக்கனும். தப்புப் பண்ணிட்டேன்."

"அகல்யா! என்ன பேசுற நீ?"

"அக்கா! எம்புள்ள அழறதைப் பார்க்க முடியலியே... கல்யாணமே வேண்டாம்னு சொல்றாளே... நான் என்ன பண்ணுவேன்?" - தேவகியைக் கட்டிக் கொண்டு அகல்யா அழ, ஸ்ரீதரனின் மனம் கலங்கித் தவித்தது.

தவிப்பாய் அறைக்குள் எட்டிப் பார்த்தான். கட்டிலில் விழுந்து அழுது கொண்டிருந்த ஜெயஸ்ரீயிடம் ஏதோ ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஏனோ அந்தப் பெண்ணின் அழுகையை மனம் தாங்கவில்லை. இவளுக்கு என்ன குறை என்று அவன் அப்படிக் கத்திவிட்டுப் போனான்! இவள் வாழ்க்கையில் அப்படி என்ன மர்மம் இருக்கக்கூடும்?

இன்று மதனிடம் எப்படியும் கேட்க வேண்டும். மதனை இன்னும் காணவில்லையே...! தவிப்பாய், தயக்கமாய் மாடிக்கு ஏறினான். மனம் முழுக்கப் பாரமாய் இருந்தது.

உமா போனை எடுத்து எண்களைச் சுழற்றினாள். மதன் எடுத்ததும், "அண்ணா! இன்னும் என்ன செய்கிறாய்?" - என்றாள்.



"இதோ கிளம்பிட்டே இருக்கேன்மா..."

"*சீக்கிரமா வா.*"

"என்ன உமா? எதுவும் அவசரமா?"

"முதல்ல வா சொல்றேன். போனை வெச்சிடு!" என வைத்ததும்... தன் முன்னே இருந்த பைக் சாவியை எடுத்துக் கொண்டு அலுவலகத்தை விட்டு வெளியே வர, மின்சாரம் தீண்டினாற் போல் அதிர்ந்தான்.

வெளிவாசல் அருகே கைகளைக் கட்டிக் கொண்டு தவிப்பாய்க் காத்துக் கிடந்தார் சிவசாமி.

## 11

அந்த வானத்தைப் போல
மனம் படைச்ச மன்னவனே
பனித்துளியைப் போல குணம்
படைச்ச தென்னவனே!

**சி**வசாமியைக் கண்டதும் என்ன செய்வதென்று ...ரியால் ஒரு கணம் தயங்கி நின்றான் மதன்.

'இவர் எப்படி இங்கே வந்தார்? ஸ்ரீயைத் தேடி வந்திருப்பாரா? தான் இங்கே இருப்பதை யாருக்கும் சொல்ல வேண்டாம் என்றானே... இவரிடம் என்ன சொல்லி சமாளிப்பது?'

யோசித்தவாறே நின்றவனைப் பார்த்ததும் மலர்ந்தார் சிவசாமி. அவசரமாய் நெருங்கி வந்தார். நிறைய களைத்துப் போய்த் தெரிந்தார்.

"தம்பி! என்னைத் தெரியுதுங்களா?"

"சிவசாமி அண்ணே! உங்களை மறப்பேனா? எத்தனை நாள் உங்க கையால சாப்பிட்டிருக்கேன்... வாங்கண்ணே...! எப்போ வந்தீங்க?"

"வந்து கொஞ்ச நேரம் ஆச்சு தம்பி!"

"ஏண்ணே! உள்ளே வந்திருக்கலாமே... ஏன் வெளியே நிக்கிறீங்க?"

"தம்பி! ஏதோ வேலையா இருந்தீங்க... அதான் தொந்தரவு பண்ண வேண்டாம்னு..."

"என்ன அண்ணே நீங்க! சரி வாங்க. வெளியே போய் காபி சாப்பிட்டுட்டே பேசலாம்!" - என பைக்கை நெருங்கினான்.

"தம்பி நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும் தம்பி!" அவர் எதைப் பேசப் போகிறார் என்று தெரிந்ததால் புன்னகைத்தான்.

"அண்ணே! எது பேசுறதா இருந்தாலும் காபி சாப்பிட்டுட்டுப் பேசலாமே... இன்னிக்கு வேலை அதிகம்."

"சரி தம்பி! போகலாம்..." - என்றதும் இருவரும் பைக்கில் ஏற, ஒரு சிறிய தேநீர் விடுதிக்கு அழைத்துச் சென்றான் மதன். தேநீர் அருந்தும் வரை அமைதியாய் இருந்த சிவசாமி, தயக்கமாய் மதனை ஏறிட்டார்.

"சொல்லுங்க அண்ணே! என்ன விஷயம்?"

"தம்பி! வந்து... சின்னய்யா தன்னோட படிப்பை முடிச்சிட்டு ஊர்ல இருந்து வந்திட்டாங்க..."

"என்ன? ஸ்ரீ வந்துட்டானா?"



"ஆமா தம்பி! இனிமே இங்கேதான் இருக்கப் போறாங்களாம்..."

"ரொம்ப நல்ல விஷயம். இப்போ எங்கே இருக்கான்?"

"தம்பி! இப்போ நான் தம்பியைத் தேடித்தான் இங்கே வந்திருக்கேன்..."

"அண்ணே! என்ன சொல்றீங்க... நீங்க?"

"தம்பி! பெரிய ஐயாவுக்கும் சின்னய்யாவுக்கும் ஒரு சின்ன வாக்குவாதம். பேச்சு முற்றிப்போய் சின்னய்யா வீட்டை விட்டுப் போயிட்டாங்க..."

"என்ன?"

"ஆமாம் தம்பி! நாங்க எல்லாம் எவ்வளவோ கெஞ்சியும் அவர் கோபமா போயிட்டாரு..."

"ஸ்ரீ அப்படியெல்லாம் பண்ணமாட்டானே... அப்படி என்ன பிரச்சனை அண்ணே?"

"ஏதோ குடும்ப விவகாரம் போலிருக்கு..." - தயக்கமாய் சொன்னவரை மனதிற்குள்ளாக மெச்சினான் மதன். இவரல்லவா... உண்மையான வேலைக்காரர்.

குடும்பப் பிரச்சனையை அடுத்தவர்களிடம் தெரிவிக்காமல்... அதே சமயம் தன் எஜமானனைத் தேடி வயதான காலத்தில் இப்படி ஓடி வருகிறார் என்றால் நிச்சயம் இவர் பெரிய மனிதர்தான்.

ஸ்ரீதரனும் கங்காதரனும் இவரை வேற்றாளாய் நினைக்காமல் இருப்பதற்கு இதுதான் காரணமோ? சிவசாமியின் மீது மதிப்பு அதிகமானது.

"சரி! இங்க எப்படி வந்தீங்க அண்ணே?"

"தம்பி! அய்யாவோட நண்பர் நமச்சிவாயம் நம்ம வீட்டுக்கு வந்திருந்தார். அவர்தான் சொன்னாரு... தம்பியை இந்த ஊர்ல ஏதோ ஆஸ்பத்திரியில பார்த்தாராம்..."

'உளறுவாயன் உளறிக் கொட்டி விட்டாரே...!' பற்களைக் கடித்தான் மதன்.

"என்ன? இங்கேயா இருக்கானாம்?"

"அப்படித்தான் சொன்னாரு... அதனாலதான் தே[illegible] வந்தேன். உங்க வீட்டுக்கு வர விலாசம் தெரியாது. அக்க[illegible] பக்கம் விசாரிச்சிட்டு ஆபீஸுக்கு வந்திட்டேன்."

"நல்லவேளை நீங்க வீட்டுக்குப் போகலை..." என்றான் அவசரமாய்.

"ஏன் தம்பி?"

"இல்லை... நான் அங்கே இருக்க மாட்டேனே. அதான்."

"தம்பி! சின்னய்யாவுக்கு இங்கே உங்களைத் த[illegible] யாரையும் தெரியாது. உங்களைப் பார்க்கத்தா[illegible] வந்திருப்பாருன்னு நினைச்சேன்..." - தயக்கமாய் சிவா[illegible] இழுக்க... தடுமாறினான் மதன்.

இந்தப் பெரிய மனிதரிடம் என்ன பொய் சொல்வ[illegible] எப்படி?

அவனது தடுமாற்றத்தை வைத்து, அவனது நிலை[illegible] புரிந்து கொண்ட சிவசாமி, இறைஞ்சும் குரலில் கேட்டா[illegible]

"தம்பி!"



"சொல்லுங்கண்ணே...!"

"பெரிய ஐயா! இப்போ உடம்புக்கு ரொம்ப முடியாம இருக்காங்க."

"என்ன? அப்பாவுக்கு என்னாச்சு?"

"ஏற்கெனவே மூச்சுத்திணறல் இருந்தது. இப்போ இதயமும் பலவீனமா இருக்குன்னு டாக்டர் சொன்னாரு... மருந்து சாப்பிட்டுட்டு இருந்தாங்க. இந்த சின்னய்யா கோபத்தில போயிட்டதால... மனம் நொந்து எதுவுமே சாப்பிடாம அடம் பிடிக்கிறாங்க...

உடம்பு ரொம்ப பலகீனமாப் போயிடுச்சு. படுக்கையை விட்டு எழுந்துக்கவே முடியலை. எப்பவும் புள்ளையோட நினைப்புல கண்ணீர் விடுறாங்க... கண்கொண்டு பார்க்க முடியலை தம்பி!" - கண்கள் கசியச் சொன்னவரை வேதனையாய்ப் பார்த்தான் மதன்.

"அண்ணே! அப்பாவோட உடம்பு இப்படி இருக்கும் போது நீங்க இப்படிக் கிளம்பி வரலாமா? தனியாக் கஷ்டப் படுவாரே...?"

"வீட்ல ஒரு நர்சம்மா இருக்காங்க தம்பி. இப்போ அவங்கதான் ஐயாவைப் பார்த்துப்பாங்க..."

"ஓ!"

"தம்பி! பெரிய ஐயாவோட நிலைமையைப் பார்த்[illegible] நம்பிக்கையோட வந்திருக்கேன். தயவு செய்து உண்மையைச் சொல்லுங்க தம்பி. சின்னய்யா இங்க வரலியா?"

"அண்ணே! அது வந்து..."

"இப்போ உங்ககூடத்தானே இருக்காரு..." - சிவசாமி ஆர்வமாய்க் கேட்க, ஒரு பெருமூச்சுடன் தலையசைத்தான் மதன்.

"ம்... என் வீட்லதான் இருக்கான்."

"வாங்க தம்பி. நான் உடனே அவரைப் பார்க்கணும்..."

"அவசரப்படாதீங்க அண்ணே! அவன் இப்போ ரொம்பக் கோபமா இருக்கான். அப்பாவைப் பத்தி பேச்சை எடுத்தாலே ஆத்திரப்படுறான்."

"பெரிய ஐயாவோட நிலையைப் பத்தி நான் சொல்றேன் தம்பி. தம்பிக்கு அவங்க அப்பா மேல ரொம்பப் பிரியம். நான் சொன்னாக் கேட்கும்."

"யார் சொல்றதையும் கேட்கிற நிலைமையில இப்ப அவன் இல்லை. அவனோட கோபம் அதிகமானா எங்க வீட்டை விட்டுக்கூடப் போயிடுவான்... அப்புறம் அவனைத் தேடுறது கஷ்டம்."

"ஐயோ! இப்போ என்னப்பா பண்றது?"

"அப்பாகிட்ட போய் சொல்லுங்க. ஸ்ரீயைப் பத்தி பயப்பட வேண்டாம். அவன் பத்திரமா மதன் வீட்ல இருக்கான்னு சொல்லுங்க..."

"நான் சொன்னா நம்ப மாட்டாரு... தம்பி!"

"ஏன்?"

"அவரைச் சாப்பிட வைக்க நான் பொய் சொல்றேன்னு நினைப்பாரு..."

"அண்ணே! ஸ்ரீயோட கோபம் குறையுற வரைக்கும் அவன் எங்க வீட்லயே இருக்கட்டும். அவன்கிட்ட பொறுமையாப் பேசி சமாதானப்படுத்தி வீட்டுக்கு அழைச்சிட்டு வாரேன்."



"தம்பி! எனக்கொரு உதவி செய்யறீங்களா?"

"சொல்லுங்க அண்ணே!"

"என்கூட குன்னூருக்கு வாங்க தம்பி."

"நானா? நான் எதுக்கு?"

"வீட்டுக்கு வந்து பெரிய ஐயாகிட்ட பேசுங்க தம்பி. நீங்க சொன்னா ஐயாவுக்கு ஒரு நம்பிக்கை வருமே... அப்படியாவது சாப்பிடத் தொடங்குவாங்களே...!"

மதன் சிலகணம் யோசித்தான்.

"போலாமா? ஸ்ரீதரனுக்குத் தெரியாமல் போய் பார்த்துவிட்டு வரலாம். அங்கே என்ன சூழ்நிலை என்று தெரிந்து கொண்டால் ஸ்ரீயிடம் பேச எளிதாக இருக்குமே..."

"சரிண்ணே...! நீங்க இப்ப என் வீட்டுக்கு வர வேண்டாம். பயமாச்சு... உங்களை என்னோட கெஸ்ட் ரூம்ல தங்க வைக்கிறேன். சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க. நான் வீட்டுக்குப் போயிட்டு காலையில கார் எடுத்திட்டு வந்து அழைச்சிட்டுப் போறேன்."

"சரி தம்பி!"

"போலாமா?"

"ம்..." - மீண்டும் அவரை ஏற்றிக்கொண்டு தனது விருந்தினர் இல்லத்தில் விட்டுவிட்டு சாப்பிட ஏற்பாடு செய்துவிட்டு வீட்டை அடைகையில் நன்றாக இருட்டி இருந்தது.

வாசலிலே அமர்ந்திருந்தாள் உமா. மதனைக் கண்டதும் கோபமாய் எழுந்தாள்.

"இவ்வளவு நேரமா எங்கே போய் சுத்திட்டு வர்ற?"

"என்ன? அம்மா இன்னிக்குப் பயங்கர சூடா இருக்காங்க. என்ன மேட்டர்? அம்மாகிட்ட செமத்தியா வாங்கினியா?"

"அண்ணா! முதல்ல உள்ளே வா."

"என்ன உமா? முகமெல்லாம் வாடியிருக்கு..." லேசான பதட்டத்தோடு வீட்டிற்குள் நுழைந்தான். மதனின் வருகையை உணர்ந்து ஸ்ரீ தானும் கீழே இறங்கி வந்தாள்.

"ஸ்ரீ! நீ இன்னும் தூங்கலியா?"

"இல்லடா! நீ ஏன்டா இவ்வளவு லேட்?"

"அது... பொறப்பட்டு வர்ற நேரம் முக்கியமான ஒருத்தர் வந்திட்டார். அவர்கிட்ட பேசி அனுப்பிட்டு வர லேட்டாகி விட்டது..." - சொல்லிக் கொண்டே வந்தவன் சட்டென நின்றான்.

படுத்திருந்த ஜெயஸ்ரீ, அண்ணனைக் கண்டதும் எழுந்து அமர்ந்தாள். முகமும் கண்களும் சிவந்து வீங்கியிருக்க, தலை கலைந்திருந்தது. கண்கள் கோவைப்பழமாய் சிவந்திருந்தது.

"ஜெய்! என்னம்மா... என்னாச்சு...? ஜுரமா? போகும் போது நல்லாத்தானே இருந்தே...!" - எனக் கேட்டவன் அவளை நெருங்கி நெற்றியில் கை வைத்தான்.

கண்ணீர் மீண்டும் சுரக்க, மதனின் கைகளைப் பற்றிக்கொண்டாள்.



"அண்ணா! அம்மாகிட்ட சொல்லுங்கண்ணா... தயவுசெய்து என்னோட கல்யாணப் பேச்சை எடுக்க வேண்டாம்னு சொல்லுங்கண்ணா..." - எனத் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

புருவம் சுருங்க நிமிர்ந்து அறைக்குள் நின்றவர்களைப் பார்த்தான்.

"என்ன நடந்தது?" - கேள்வியில் கோபம் தொனித்தது. மற்றவர்கள் சற்றுத் தடுமாறிக் கொண்டு நிற்க, ஸ்ரீதரன் நடந்தவைகளை ஒப்பித்தான்.

கோபத்தில் மூக்கு விடைக்க தன் தாயிடம் திரும்பினான். "அம்மா! என்ன இதெல்லாம்?"

"சங்கரனோட அப்பாதான் பெண் கேட்டு வந்தாருப்பா... ஜாதகமும் கொடுத்தாரு. தாத்தாவும் நல்ல இடம்னு சொன்னதால..."

"எது செய்தாலும் தெளிவாக் கேட்டுட்டு செய்ய மாட்டீங்களா?"

"இப்படி... ஆகும்னு நினைக்கலைப்பா?"

"ஸ்ரீ! நீ அவனை சும்மாவா விட்டே? பேசின வாய்மேல நாலு தட்டி ரெண்டு பல்லையாவது உடைச்சிருக்க வேண்டாமா?"

"செய்யலாம்னுதான் நினைச்சேன் மதன். அம்மாதான் தடுத்திட்டாங்க...!"

"ஏம்மா?"

"மதன்! தப்பு நம்ம மேல இருக்கும்போது அவனை என்ன பண்றது? நான்தான் முதலிலே கேட்டுத் தெரிஞ்சுக்கணும்..."

"இனிமே எனக்குத் தெரியாம எந்த ஜாதகமும் வரக்கூடாது. எனக்குத் தெரியும். என் தங்கைக்கு எப்போ எப்படி எந்த மாப்பிள்ளையைப் பார்க்கணும்னு...!"

அகல்யாவின் விசும்பல் கேட்டு பக்கவாட்டில் திரும்பினான். "சித்தி! உங்களுக்கும் சேர்த்துத்தான் சொல்றேன். இவ என் தங்கை. இவளை அப்படியே விட்டுட மாட்டேன். எதுக்கும் அவசரப்படாதீங்க... உமா எனக்கு எப்படியோ அதைவிட ஜெயஸ்ரீ ஒருபடி மேல எனக்கு... புரியுதா?

இனிமே யாரும் எதுக்காகவும் என் தங்கையை அழ வைக்கக்கூடாது. நீ அழாதேடா... அவனெல்லாம் ஒரு மாப்பிள்ளையா? நான் பார்க்கிறேன் பார் உனக்கு... ராஜகுமாரன் மாதிரி!" - என்றவாறே அவளது தலையை வருடிவிட்டான்.

"இல்லண்ணா... எனக்கு எந்த மாப்பிள்ளையும் வேண்டாம். என்னை இப்படியே விட்டுடுங்கண்ணா...!"

"ம்ஹூம்.... இப்படியெல்லாம் பேசக்கூடாது. அண்ணன் இருக்கும்போது உனக்கு என்ன கவலை? நான் இருக்கேன்டா உனக்கு..."

"அண்ணா!"

"எதுக்கும் கலங்கக்கூடாது. எது நடந்தாலும் நல்லதுக்கேன்னு நினை. இதைவிட பெஸ்ட்டான வாழ்க்கை கிடைக்கும்னு நினைச்சுக்க..."

"அண்ணா!"

"அழாதேடா! அண்ணனுக்குக் கஷ்டமா இருக்குல்ல, கண்ணைத் துடை. பாரு... உன்னைப் பார்த்து அம்மாவும் அழறாங்க..."



கண்களைத் துடைத்துக் கொண்டாள் ஜெயஸ்ரீ. எழுந்து சென்று தாயின் கண்ணீரைத் துடைத்தாள். "எழுந்திருங்கம்மா... அண்ணன் வந்திடுச்சே... சாப்பாடு எடுத்து வைக்கலாம்."

ஸ்ரீதரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எத்தனை சோகத்தில் இந்தப் பெண் எப்படி சட்டென அடுத்த வேலைக்குச் சென்று விட்டாள். ஆறுதல்... அண்ணனின் ஆறுதலுக்கு உடனடி நிவாரணம் கிடைத்திருக்கிறது.

இதே ஆறுதலைத் தன்னால் தர முடியுமா... இந்தப் பெண்ணுக்கு? கடைசி வரை இவளைக் கண்கலங்காமல் பாதுகாக்க முடியுமா? இவள் அழுதால் என் மனம் பதறுகிறதே...!

பசி மறந்து தூக்கம் மறந்து இவளுக்காக வருத்தப் படுகிறதே... இவள்மீது அப்படியென்ன இரக்கம் எனக்கு? இதற்குப் பெயர் என்ன? குழம்பித் தவித்தான்.

## 12

தட்டிவிட்டேன் மனக்கதவை
திறந்து பார்க்க விரைந்து வா
நெஞ்சம் உந்தன் நெஞ்சம்
கொண்ட சஞ்சலங்கள் மறைய!

தலை விண்விண் என்று தெறிக்க விரல்களால் அழுத்திக் கொண்டே படுத்திருந்தான் ஸ்ரீதரன். இரவு வரை ...துடன் சுற்றும்போது பனியைப் பற்றிய பயம் இல்லை.

ஆனால் இப்போது தலைமீது பாறாங்கல்லை ஏற்றி வைத்தது போல் கனத்தது. உடல்கூட லேசாய் சுட்டது.

காலையிலேயே உடம்பைப் பார்த்துவிட்டு... வீட்டில் இருந்து ஓய்வெடுக்கும்படி கூறிவிட்டு மதன் வெளியே போய் விட்டான்.

தலைவலி ஒருபுறம் அழுத்தினாலும் தனிமை இன்று வெகுவாய் வருத்தியது. யாராவது வந்து தலையைப் பிடித்து விட்டால் தைலம் தேய்த்துவிட்டால் நன்றாக இருக்குமே என மனம் ஏங்கியது.

தனிமைகூட சில சமயங்களில் மட்டும்தான் இனிமை போலும். பல சமயங்களில் அது பலவித வருத்தங்களையும் ஏக்கங்களையும் கொண்டு வந்து விடுகிறது.

மனக்கண்ணில் ஜெயஸ்ரீயின் முகம் வந்தது. என்ன தெய்விகமான முகம். இனிய குரல். மென்மையான மனம். இதமான வார்த்தைகள். அவளிடம் எப்படிக் கோபப்பட்டேன்? அதன் பிறகு இதுவரை தன் கண்ணில் படவே இல்லையே...!

கதவை லேசாய்த் தட்டும் ஓசை கேட்டது. "உள்ளே வரலாமா?" - சின்னக் குரல். இதுவரை கேட்காத குரல். தலையைத் திருப்பி வாசலைப் பார்த்தான்.

பதினைந்து வயது மதிக்கத்தக்க சிறுவன் நின்று கொண்டிருந்தான். அருகே சின்னப் பெண். அகல்யாவின் ஜாடையில். இது... ஜெயஸ்ரீயின் தங்கையாக இருக்குமோ?

எழுந்து அமர்ந்தான். "வாங்க... உள்ளே வாங்க...!"

கையில் சிறிய குவளையோடு சுதாகர் முன்னே வர அவன் பின்னால் ரஞ்சிதா வந்தாள். கட்டிலை நெருங்கியதும் சுதாகர் ஸ்ரீதரனைப் பார்த்துப் புன்னகைத்தான்.



"குட் மார்னிங் ஸார்."

"குட் மார்னிங். நீங்க யாரு ஸார்?"

"நான் சுதாகர். இவ என்னோட தங்கை ரஞ்சிதா. ரஞ்சின்னு கூப்பிடுவோம்."

"ஓ! அகல்யா ஆன்ட்டியோட பசங்களா?"

"ம்... ம்... அம்மாதான் அனுப்பினாங்க. உங்களுக்குத் தலைவலிக்குதாமே...!"

"ம்... லேசான தலைவலிதான்."

"அப்படி அலட்சியமா விடக்கூடாது. அப்புறம் ஜூரம் வந்திடும். இந்தாங்க... இதைக் குடிங்க!" - எனக் கையில் இருந்த குவளையை நீட்டினான்.

"என்ன இது... காபியா?"

"ம்ஹூம்... கஷாயம்."

"கஷாயமா?" - முகத்தைச் சுளித்ததும் குபீரெனச் சிரித்தான் சுதாகர்.

"ஹைய்! நீங்களும் என்னை மாதிரிதானா? எனக்கும் கஷாயம் குடிக்கிறதுன்னா ரொம்பக் கஷ்டம்!" - என்றான் முகத்தைச் சுருக்கியவாறே...

ஸ்ரீதரனின் முகம் புன்னகை பூத்தது. நகர்ந்து உட்கார்ந்து இருவரையும் தன் அருகில் அமர வைத்துக் கொண்டான்.

"ரொம்ப ஸ்வீட்டா பேசுறியே... உங்க ரெண்டு பேரையும் நான் இதுவரை பார்த்ததே இல்லையே...!"

"நாங்கதான் ஊருக்குப் போயிருந்தோமே... நேற்று நைட்டுதான் வந்தோம்."

"எங்கே? வெளியூருக்கா?"

"ம்... எங்க பாட்டி வீட்டுக்குப் போயிருந்தோம்."

"பாட்டி வீடு எங்கே இருக்கு?"

"கோயம்புத்தூர்ல..."

"ம்... படிக்கிறீங்களா... ரெண்டு பேரும்?"

"ம்... நான் டென்த். ரஞ்சி நைன்த் படிக்கிறா..."

"நல்லாப் படிக்கிறீங்களா?"

"கிளாஸ் ஃபர்ஸ்ட்."

"வெரிகுட். சரி... எது கேட்டாலும் ஸார்தான் பதில் சொல்றீங்க... மேடம் பேச மாட்டாங்களா?"

"அவ ஜாஸ்தி பேசமாட்டா. வாயைத் திறந்தா மூடமாட்டா..." - சுதாகர் பாவனையோடு பேசிக் காட்ட... ரஞ்சிதா அவனை முறைத்தாள்.

"அதை நீ சொல்லாதே... அம்மா என்ன சொல்லி அனுப்பினாங்க... நீ என்ன பண்ணிட்டு இருக்க?"

"ஸ்ஸ்... ஸார் மொதல்ல இதைக் குடிச்சிங்க. அப்புறம் நாம பேசலாம்."

புன்னகையோடு வாங்கிக் கொண்டான். "ரஞ்சி! உன் அண்ணன் உனக்கு ரொம்பப் பயப்படுவானோ?"

"இவனா...? பேய்க்குக் கூட பயப்பட மாட்டான்!"

"நிஜம்மாவா? பார்த்தா அப்படித் தெரியலியே?"



"ஸார்! முதல்ல கஷாயத்தைக் குடிச்சிடுங்க. சூடு ஆறிப் போயிடும்."

"நான் குடிச்சிடுறேன். ஆனா இந்த ஸார் வேண்டாமே...!"

"ஆமா ஸார். எங்களுக்கும் அப்படிக் கூப்பிட கஷ்டமாத்தான் இருக்கு. ஸ்கூல்ல இருக்கிற மாதிரி ஒரு ஃபீலிங்ஸ்."

மென்மையாய்ச் சிரித்தான் ஸ்ரீதரன். "ஓ.கே. என் பேரு ஸ்ரீதரன். வீட்ல ஸ்ரீதர்னு கூப்பிடுவாங்க. ஃபிரண்ட்ஸ் எல்லாம் ஸ்ரீன்னு கூப்பிடுவாங்க. நீங்க எப்படி வேணும்னாலும் கூப்பிடலாம்."

"ஸ்ரீன்னு கூப்பிட்டா ரொம்ப உரிமை எடுத்துக்கிட்ட மாதிரி இருக்கும்... அதனால ஸ்ரீதர் அண்ணான்னு கூப்பிடலாமா?"

"தாராளமாய்க் கூப்பிடலாம்."

"ஸ்ரீதர் அண்ணா முதல்ல மருந்தைக் குடியுங்க..." - ரஞ்சிதா சொல்ல, கஷாயத்தைக் குடிக்க, வாயருகே கொண்டு சென்றான். மூலிகை நெடி தாக்க,, முகத்தைச் சுருக்கினான்.

"ரொம்பக் கசக்கும் போலிருக்கே!"

"நீங்க மருந்தே சாப்பிட்டதில்லையா?"

"ம்ஹூம்...! எனக்கு உடம்பு சரியில்லன்னா ஹாஸ்பிடல் போய்த்தான் பழக்கம். இந்த மாதிரி மருந்தெல்லாம் குடிச்சதே இல்லை."

"ஏன்? உங்க அம்மாவுக்கு மருந்து காய்ச்சத் தெரியாதா?"

"எனக்கு... அம்மா இல்லையே...!" - மெதுவாக ஸ்ரீதரன் சொல்ல இருவரின் முகமும் வாடியது.

"ஸாரி அண்ணா!"

"பரவாயில்லை..."

"அப்பா இருக்காங்களா?"

"ம்... இருக்கார்."

"உங்க அப்பா உங்களை வெளியே அழைச்சிட்டுப் போவாங்களா? நீங்க கேட்டதெல்லாம் வாங்கித் தருவாங்களா?"

"ம்... வாங்கித் தருவாங்க..." - என்றான் புன்னகையுடன்.

"ம்ப்ச்... எங்களுக்கு அப்பா இல்லை. உங்களுக்கு அம்மா இல்லை. நாம ரொம்பப் பாவம் இல்ல...?"

"சுதாகர்! உங்க... அப்பா?"

"இல்லை... அம்மா மட்டும்தான். ஆனா அம்மா பாவம்... வீட்டை விட்டு வெளியே வரமாட்டாங்க. அக்காவோ மதன் அண்ணாவோதான் வெளியே அழைச்சிட்டுப் போவாங்க."

"உங்க அப்பா எப்படி இருப்பாங்க?"

"நாங்க பார்த்ததே இல்லை. போட்டோவில கூட இல்லை. நாங்க சின்ன வயசா இருக்கும்போதே போயிட்டாங்களாம்..." - ரஞ்சிதா அழும் குரலில் சொல்ல ஸ்ரீதரனின் கண்கள் கலங்கியது.



பேச்சு வராமல் தொண்டை அடைக்க மௌனமானான்.

"என்ன அண்ணா! கண்ணெல்லாம் கலங்கியிருக்கு. தலை ரொம்ப வலிக்குதா?"

"ம்..."

"நான் வேணும்னா தைலம் தேய்ச்சு விடவா?" - பரிவோடு கேட்ட ரஞ்சிதாவை வியப்பாய்ப் பார்த்தான் ஸ்ரீதரன்.

அன்று மதன் சொன்னானே... பெண்மைன்னாலே தாய்மைதான் என்று. அது எத்தனை உண்மை. தன் அன்னை இன்று உயிரோடு இருந்தால் இதைத்தானே செய்திருப்பாள்.

அவனது மௌனத்தையே சம்மதம் என எடுத்துக் கொண்டு கையோடு கொண்டு வந்திருந்த நீலகிரித் தைலத்தை நெற்றியில் தடவி, மென்மையாய்த் தேய்த்து விட ஆரம்பித்தாள்.

பிஞ்சு விரல்களின் ஸ்பரிஸம் ஸ்ரீதரனின் உடம்பைச் சிலிர்க்க வைத்தது. தலையை அழுத்திய பாரம் சட்டென விலகினாற் போல் இருந்தது. அந்தப் பரிவு, அன்பு, மென்மை இவற்றில் தன்னை மறந்து கண்கள் கசிய மூடிக்கொண்டான்.

மூடிய விழிகளில் இருந்து இமைகள் கசிந்தன. சுதாகர் தங்கையை அதட்டினான்.

"ஏய்! மெதுவாத் தேய்ச்சு விடு. நிறைய தைலத்தை வச்சிட்டியா? அண்ணனுக்குக் கண் எரியுது போலிருக்கு..."

"நீ சும்மா இரு. இப்படித்தான் தேய்க்கணும்... அப்படி தான் தலைவலி போகும்னு அக்கா சொல்லியிருக்கு...!"

சட்டெனக் கண்களைத் திறந்தான். "யாரு?"

"எங்க அக்காதான் சொல்லி அனுப்பிச்சு..."

"எப்போ?"

"அம்மா கஷாயம் தந்தாங்களா... அப்போ அக்காதான் அந்த ஸார் இதையெல்லாம் குடிப்பாரோ என்னவோ... அப்படிக் குடிக்கலைன்னா இந்தத் தைலத்தை நெற்றியிலே பூசி நல்லாத் தேய்ச்சு விடுன்னு சொல்லி அனுப்பிச்சு."

மீண்டும் கண்ணீர் சுரந்தது. இது மருந்தின் நெடியா ஏற்பட்ட கண்ணீர் அல்ல என்பது அவனுக்கே புரிந்தது.

சற்று முன்தானே யாராவது தைலம் தேய்த்து விடமாட்டார்களா... என ஏங்கினேன். என் மனவருத்தத்தை அந்தப் பெண்ணும் யூகித்திருக்கிறாளே... மதன் சொன்ன வார்த்தை சத்தியம்.

நான்தான் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறேன். அப்பாகூட அன்று சொன்னாரே... மூச்சுத் திணறலில் தவிக்கும்போது தாயாய் இருந்து கவனித்தாள் என்று...

அதற்குப் பிறகுகூட ஏதோ சொல்ல வந்தா நான்தான் கேட்கவில்லை. ஒருவேளை அப்பாவும் ... முடியாத நேரத்தில் இப்படித்தான் தவித்திருப்பாரோ தனிமையில் ஏங்கியிருப்பாரோ..?

அதனால்தான் தாயாய் கவனித்துக் கொ... பெண்ணின் மீது பிரியம் ஏற்பட்டதோ! நானும் அ...



இல்லாமல் அம்மாவும் இல்லாமல் அப்பா எத்தனை நாள் தனிமையில் வாடியிருப்பார்?

முதன்முறையாக அப்பாவின் மீதிருந்த கோபம் ...சாய் மாறியது. இரக்கமும் பரிதாபமும் தோன்றியது.

"இப்போ பரவாயில்லையா அண்ணா?" - காதோரம் ...சக்குரல் கேட்க, திடுக்கென கண்விழித்தான்.

"ம்? அட! தலைவலி போயே போச்சு...!" – என்றான் ...சிரிப்புடன். ரஞ்சிதா விழிகளை விரித்தாள்.

"நிஜமாவா?"

"ஷ்யூர். இப்போ ரொம்ப ஃப்ரீயா இருக்கு."

"பார்த்தியா என்னோட கைராசியை! நான் தைலம் ...பாட்டதாலதான் தலைவலி சரியாப் போச்சு!" – சகோ...ரனைப் பார்த்துப் பெருமையாய்ச் சொன்னவளின் ...களைப் பற்றிக் கொண்டான் ஸ்ரீதரன்.

"உண்மைதான் ரஞ்சி. நீ என் தலைவலியை மட்டு...ல... மனபாரத்தைக்கூடப் போக்கி விட்டாய்."

"அண்ணா!"

"உன்னைப் பார்க்கும்போது என் அம்மாவையே ...த்தது போலிருக்கு."

"உங்க அம்மாவை நீங்க பார்த்திருக்கீங்களா?"

"ம்... சின்ன வயசுல... இப்போக்கூட தினமும் ...ப்பேன்."

"எப்படி?"

"போட்டோவில பார்ப்பேன்."

"வீட்ல பெரிசா மாட்டி வெச்சிருக்கீங்களா?"

"ம்... அம்மாவோட போட்டோ எப்பவும் என்கூடவே இருக்கும்."

"இப்போ இருக்கா?"

"ம்... என் பர்ஸ்ல இருக்கு. இதோ இந்த டாலர்ல இருக்கு..." - கழுத்தில் கிடந்த செயினைக் காட்டினான்.

"உங்க அம்மாவை நாங்க பார்க்கலாமா?" ஆவலாய்க் கேட்டவனின் கன்னத்தைத் தட்டிச் சிரித்தான்.

"கண்டிப்பா... இதோ!" - தனது செயினை வெளியே எடுத்து, அதில் தொங்கிய லாக்கெட்டைத் திறந்து காட்டினான் ஸ்ரீதரன்.

இதய வடிவிலான லாக்கெட் அது. சுற்றிலும் வெள்ளைக் கற்கள் பதிந்திருக்க, நடுவே அவனது அன்னையின் புகைப்படம். சின்னஞ்சிறிய முகம் புன்னகையோடு தெய்வீக அழகோடு தெரிந்தது.

"வாவ்! அண்ணா... உங்க அம்மா ரொம்ப அழகு."

"அப்படியே சாமி மாதிரியே இருக்காங்க."

"ஆமாம்... என் அம்மாதான் எனக்கு சாமி."

"நம்ம அப்பா படத்தைக்கூட இப்படிச் செயின்ல மாட்டிக்கிட்டா நாம பார்த்திட்டே இருக்கலாம்..." - என்றாள் ரஞ்சிதா ஏக்கமாய்.

சுதாகரின் முகம் கடுத்தது. "சாமி படத்தை மாட்டிக்கலாம். ஆனா நம்ம அப்பா சாமியில்ல..."

"ஏண்ணா அப்படிச் சொல்றே?"



"நீ சின்னப் புள்ளை. உனக்கு ஒண்ணும் தெரியாது!" - என்றான் பெரிய மனித தோரணையில்.

"நான் ஒண்ணும் சின்னப்புள்ளை இல்லை... உன்னைவிட ஒரு வயசுதான் சின்னவ. சும்மா சொல்லு!"

"ரஞ்சி! நமக்கு அம்மா, அப்பா சாமி... எல்லாமே நம்ம அம்மாதான் புரியுதா! சும்மா அப்பா பாட்டு பாடாதே!"

"ஏன்? பாடினா என்னவாம்?"

"நீ பேசினதைக் கேட்டா அம்மா அழுவாங்க. அம்மாவை அழ வைக்கக் கூடாதுன்னு அக்கா சொல்லியிருக்கா இல்ல...!"

"ம்..."

"இனிமே அப்பாவைப் பத்தி பேசக்கூடாது... சரியா?"

"சரி..." - மனமே இல்லாமல் தலையாட்டினாள் ரஞ்சிதா.

ஸ்ரீதரனுக்கு சற்றுக் குழப்பமாக இருந்தது. இவர்கள் அப்பா எங்கே போய் விட்டார்? நிச்சயமாய் இறந்து போகவில்லை. அகல்யா அம்மாவின் நெற்றி வகிட்டில் குங்குமம் இருக்கிறது.

கழுத்தில் தாலியும் இருக்கிறது. பிறகேன் இந்தக் குழந்தைகள் தந்தையைக் காணாமல் ஏங்க வேண்டும்? அப்பா இல்லை என்று சொன்னானே மதன்...

ஏன் அப்படிச் சொன்னான்? மதன் வந்ததும் இந்தப் பிரச்சனைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்களது தந்தை எங்கே இருக்கிறார் எனத் தெரிந்து கொண்டு, என்ன

பிரச்சனை எனத் தெரிந்தால் அதைத் தீர்த்து வைக்க முயற்சி செய்யலாம்.

பாவம்! இந்தக் குழந்தையின் முகத்தில் எத்தனை ஏக்கம்! மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்கும் போது அந்த மெல்லிய கொலுசொலி கேட்டது.

அன்று தட்டுப்பாறையில் படுத்திருந்தபோது தன்னை நெருங்கிய அதே கொலுசொலி. கண்கள் ஆவலாய் வாசலைப் பார்த்தது. ம்ஹூம்.. யாரும் இல்லை.

பிரமையோ என எண்ணிய நேரத்தில் அந்த மென் குரல் சற்றே ரகசியமாய் ஒலித்தது.

"டேய் சுதாகர்! என்னடா பண்ணிட்டு இருக்கீங்க... வெளியே வாங்க!" - சுவரின் மறைவிலிருந்து ஒலித்தது அந்தக் குரல்.

"ஐயோ... அக்கா!" - என எழுந்தவர்களை சைகை யால் அமர வைத்தான். "என்னன்னு கேளுங்க...?" என்றான் ரகசியமாய்.

"என்ன அக்கா?"

"டேய் மருந்தைக் கொடுத்திட்டு வான்னுதானே சொல்லி அனுப்பினேன். இவ்வளவு நேரமா என்ன பண்றீங்க?" அதே ரகசியத் தொனி.

"சும்மா பேசிட்டு இருந்தோம்."

"என்ன... பேசிட்டு இருக்கியா? உடம்பு சரியில்லாத வங்களை ரெஸ்ட் எடுக்க விடாம பேசினியா நீ?"

இப்போது லேசான கண்டிப்பும் தொனிக்க, பதில் பே முயன்ற சுதாகரின் வாயை மூடிய ஸ்ரீதரன் வாசலை பார்த்து தானே பேசினான்.



"உடம்பெல்லாம் சரியாப் போச்சு. அதனால இவங்க இங்கேயே இருக்கட்டும். எனக்கும் போரடிக்காம இருக்கு..."

அவனது வார்த்தைக்குப் பதிலின்றி போகவே, புன்னகைத்தான்.

"என்ன சுதாகர்! உங்க வீட்டுச் சுவர் உன்கிட்ட மட்டும்தான் பேசுமா? நான் பேசினா பதில் சொல்லாதா?" - சத்தமாகவே சொன்னான்.

அதற்கும் பதிலில்லை. சில நொடி கடந்தபின் மெதுவாய் கிசுகிசுத்தாள் ஜெயஸ்ரீ.

"டேய் சுதாகர்... ரஞ்சி... ரெண்டு பேரும் வாங்க."

"எதுக்குக்கா? பேசிட்டு இருக்கோமில்ல...!"

"அவருக்கு சாப்பாடு ரெடியா இருக்கு. எடுத்திட்டு வந்து டுகிட்டு இருங்க."

"ஏன் அண்ணா! மேல தனியாவா இருந்து சாப்பிடுவீங்க?"

"எப்பவும் அப்படித்தான் சாப்பிடுவேன்."

"இன்னிக்கு எங்களோட இருந்து சாப்பிட்டுப் பாருங்க... ஜாலியா இருக்கும்."

"எது? சாப்பாடா?"

"எல்லாம்தான். பேச்சு, அரட்டைன்னு சாப்பிடும்போது ங்க எல்லாருமே ரொம்ப ஜாலியா இருப்போம். தனியா இருந்து சாப்பிட்டா போர் அடிக்கும்."

"அப்படியா?"

"ஆமாண்ணா! வந்து பாருங்களேன் இன்னிக்கு... அப்புறம் ஒருநாள்கூட தனியா இருந்து சாப்பிட மாட்டீங்க."

"ரஞ்சி! சும்மா அவரைத் தொந்தரவு பண்ணாதீங்க வாங்க..."

"சுதாகர்! நீ இவ்வளவு சொன்ன பிறகு எனக்கே உங்களோட இருந்து சாப்பிடணும் போலத்தான் இருக்கு ஆனா..."

"என்ன ஆனா?"

"நான் வர்றது உங்க வீட்டுச் சுவத்துக்குப் பிடிக்கலை போலிருக்கு..."

"அச்சச்சோ! அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல..." சுவரின் பின்னே பதறினாள் ஜெயஸ்ரீ. புன்னகைத்தான் ஸ்ரீதரன்.

"அப்போ வரலாமா?"

"ம்?"

"சாப்பிட வரலாமா?"

"தாராளமா வரலாம். சாப்பாடு ரெடி."

"மதன் வந்திட்டானா?"

"இன்னும் இல்ல..."

"அவன் வந்தபிறகு வர்றேனே..."

"சரி!"

"இந்தச் சுவர் எப்பவுமே பேசுமா? ஆச்சரியமா இருக்கே!"



"எங்ககூட பேச விரும்பாதவங்ககிட்ட சுவர்தான் பேசும்."

"ஓஹோ! பட்... சுவரோட வாய்ஸ்கூட ஸ்வீட்டாவே இருக்கு!" - என்றவாறே வாசலை நெருங்கியவனின் குரல் தன்னை நெருங்குவதை உணர்ந்து விலகும்முன் அவள் முன்னே வந்து நின்றான்.

வெகு திடீரென அவனை அருகே கண்டதும் சற்று பதறிப் போனாள் ஜெயஸ்ரீ. இரு கண்களிலும் மானின் மிரட்சி. கை, கால்களில் உதறல். ஓடத் தயாராய் அவள் நின்ற கோலம் ஸ்ரீதரனின் முகத்தில் சிரிப்பை வரவழைத்தது.

சிறியவர்கள் உள்ளேயே அமர்ந்திருக்க, குரலைத் தழைத்துக் கொண்டான்.

"என்ன? என்னைப் பார்த்தா பயமா இருக்கா?"

"ம்...?" - இன்னும் மிரண்டாள்.

"பயமா இருக்கான்னு கேட்டேன்."

"ம்..."

"ஏன்?"

"ம்..."

"நான் என்ன பேயா?"

"ம்ஹூம்..."

"பின்னே... காட்டில இருக்குமே சிங்கம்... புலி... அதுமாதிரி இருக்கேனா?"

"ம்ஹும்..."

"பின்னே என்ன பயம்?"

"ம்ஹும்..."

"இன்னிக்கு மௌன விரதமா?"

"ம்ஹும்..."

"அப்போ ஏன் வாயை மூடியே பதில் சொல்றீங்க?"

"நான்... நான்... போகணும்."

"எங்கே?"

"கீழே..."

"போ."

"வழி... வழியை விட்டாப் போயிடுவேன்."

"ஸாரி!"

"ம்..."

"ஸாரி... வெரி ஸாரி."

"எதுக்கு?"

"எல்லாத்துக்கும்... இனிமே அப்படியெல்லாம் பேச மாட்டேன்..."

இதுவரையிலும் இல்லாத மென்மையைப் புதிதாய் அவனது குரலும் முகமும் காட்ட, வியப்பாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள் ஜெயஸ்ரீ.

புன்னகையோடு தெரிந்த அவனது முகம் பிரகாசமாய் மின்னியது.



# 13

தந்தை என்ற சொல்லில்
தெய்வம் வந்து வாழ்கிறது
பிள்ளையின் நெஞ்சம் அதை
நம்ப முடியாமல் மறுக்கின்றது.

கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்த கங்காதரனைப் பார்க்கையில் மனம் வலித்தது மதனுக்கு. எத்தனை கம்பீரமாய் நடமாடிய மனிதர்! இப்படி ஒரு சில நாளிலேயே முதுமையை எட்டிவிட்டாரே!

சவரம் செய்யாத முகம். பொலிவிழந்து காணப்பட்டது. வெகுவாய்த் தளர்ந்திருந்தார். மெல்ல அவரை நெருங்கி அவரது கரத்தைப் பற்றினான் மதன்.

"அப்பா...!"

பளிச்சென கண்களைத் திறந்தார் கங்காதரன். "வந்திட்டியா... கண்ணா! எங்கேடா போயிட்டே... அப்பா எப்படிப் பதறி..." - பேசியவாறே எதிரில் நின்றவனைப் பார்த்தவரின் பேச்சு சட்டென நின்றது.

"நீ... நீ..."

"அப்பா! நான் மதன்..."

"மதனா! வாப்பா... எப்படி இருக்கே?"

"இருக்கேன்பா... நீங்க ஏன்ப்பா இப்படி இளைச்சீட்டீங்க?" - மதனின் குரலில் உண்மையான வருத்தம் தொனித்தது.

பெருமூச்சு விட்டார் கங்காதரன். "இந்த உடம்பு எப்படிப் போனா என்னப்பா?"

"வருத்தமாப் பேசாதீங்கப்பா...!"

"எப்படிப்பா வருத்தப்படாம இருக்க முடியும். என் பிள்ளை... என்மேல கோவிச்சுக்கிட்டுப் போயிட்டானே... எங்கே போனானோ? எப்படி இருக்கானோ?"

"நல்லா இருக்கான்ப்பா..."

"என்ன?" - சட்டென எழுந்து அமர்ந்தார். உதடுகள் துடிக்க, கரங்கள் நடுங்க, மதனின் கைபற்றி தன் அருகே அமர வைத்துக் கொண்டார்.

"மதன்! நீ... நீ என்னப்பா சொல்றே?"

"ஸ்ரீ... இப்ப என்கூடத்தான்ப்பா இருக்கான். நல்லா இருக்கான்..."

"நிஜமாவா சொல்றே?"

"ஆமாம்ப்பா... போன வாரம் மலை மேல தட்டுப்பாறை பக்கத்தில பார்த்தேன். என் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிட்டேன்..."

"அவன் எப்படிப்பா இருக்கான்? சாப்பிடுறானா? சந்தோஷமா இருக்கானா?"

"நல்லா இருக்கான்ப்பா... இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா இயல்பு நிலைக்கு வரத் தொடங்கியிருக்கான்."

"அவன்... ஏதாவது சொன்னானா?"

"ஒன்னும் சொல்லலைப்பா..."

"ஒன்னுமே சொல்லவில்லையா?"

"இல்லை... ஆனா உங்க நண்பர் நமச்சிவாயம் சொன்னதையெல்லாம் நான் கேட்டுட்டேன்."



"என்ன? நமச்சிவாயமா? அவன் என்ன சொன்னான்?"

"அதெல்லாம் பிறகு சொல்றேன்ப்பா... அவர் பேசின பிறகுதான்... ஸ்ரீ எதுக்காக வீட்டை விட்டு வெளியே வந்திருக்கான்னு எனக்குத் தெரிஞ்சது."

"தெரிஞ்சு போச்சா?"

"அப்பா! நடந்தது எதையும் மாத்தமுடியாது. அதனால இனி நடக்கப் போறதைப் பத்திப் பேசுவோம்."

"சொல்லுப்பா..."

"இன்னும் நாலு நாள்ல என் தங்கைக்கு நிச்சயதார்த்தம்."

"ரொம்ப சந்தோஷம்ப்பா..."

"அதுவரை ஸ்ரீ என்கூடவே இருக்கட்டும். அவன் மனசை மாத்த முயற்சி பண்றேன்."

"வேண்டாம்ப்பா... அவன்கிட்ட எதையும் பேசாதே. அப்புறம் உன்கிட்டயும் கோவிச்சிக்கிட்டு வேற எங்கேயும் போயிடப் போறான்."

"அதெல்லாம் போக மாட்டான்ப்பா... நான் விடவும் மாட்டேன்."

"மதன்! என்னை உன் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறியா?"

"அப்பா! எதுக்குப்பா?"

"எனக்கு... எம்புள்ளையை ஒரு தரம் பார்க்கணும் போல இருக்கு..."

"இப்ப வேண்டாம்ப்பா... கொஞ்ச நாள் பொறுத்துக்குங்க... நானே அவனை இங்கே அழைச்சிட்டு வந்திடுறேன்..."

"வருவானா?"

"நிச்சயம் வருவான். ஸ்ரீயோட மனசைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா? அவன் கோபமெல்லாம் உடனே போயிடும்."

"நானும் அப்படித்தான் நினைச்சேன்... ஆனா என் பிள்ளை என்னைப் பார்க்க வரவே இல்லையே...!"

"வருவான்ப்பா... அவனும் அடிக்கடி உங்களைத்தான் நினைச்சிட்டு இருக்கான்."

"நிஜமாவாப்பா?"

"ஆமாம்ப்பா... கொஞ்ச நாள் போகட்டும். கண்டிப்பா அவன் மனசு மாறும். நானே கூட்டிட்டு வர்றேன்."

"என் புள்ளையைக் கூட்டிட்டு வந்திடுப்பா... உனக்கு புண்ணியமாப் போகும்."

"பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்கப்பா... அது என் கடமை."

"ரொம்ப சந்தோஷம்ப்பா... இப்பத்தான் என் மனசு நிம்மதியாச்சு..."

"அப்பா! அப்புறம் இன்னொரு விஷயம்?"

"சொல்லுப்பா..."

"ஸ்ரீ என்கூட நல்லா இருக்கான்... அதனால இனி அவனைப்பத்திக் கவலைப்பட்டு உங்க உடம்பைக் கெடுத்துக்காதீங்க!"



"சரிப்பா..."

"இனிமே, நீங்க மத்தவங்களையும் நினைச்சுப் பார்க்கணும். அவங்களுக்காகவும் வாழ்ந்தாகணும்..." - கதவோரமாய் நின்று புடவைத் தலைப்பால் போர்த்திக் கொண்டு மௌனமாய் இருந்த யமுனாவைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

"புரியுதுப்பா..."

"வேளாவேளைக்கு மருந்து சாப்பிடாம உங்க உடம்பை நீங்களே வருத்திக்கலாமா?"

"இல்லப்பா... ஸ்ரீதர் எங்கே போனான்னு தெரியாம எனக்குச் சாப்பிடவோ தூங்கவோ முடியல்ல... அதான்..."

"இனிமே அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். இதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்."

"ரொம்ப நன்றிப்பா."

"சரிப்பா! நான் கிளம்புறேன். அப்பப்போ போன் பண்றேன்..."

"சரிப்பா..."

"நான் கிளம்புறேன்."

"யமுனா! தம்பிக்கு சாப்பிட ஏதாவது கொடுத்தியா?"

"காபி கொடுத்தேன்ங்க..."

"சாப்பாட்டு வேளையாச்சே... சாப்பிட வையும்மா..."

"இல்லப்பா... நிறைய வேலை இருக்கு. இன்னொரு நாள் ஸ்ரீயோட வந்து சாப்பிடுறேன். நீங்க உடம்பைப் பார்த்துக்கங்க..."

"சரிப்பா!" – எழுந்தவரைப் படுக்க வைத்தான்.

"நீங்க எழுந்துக்க வேண்டாம். நான் போயிட்டு வர்றேன்..."

"சரிப்பா... போயிட்டுப் போன் பண்ணு... மறந்திடாதே!"

"கண்டிப்பா பண்றேன்..." – என்றவாறு அறையை விட்டு மதன் வெளியேற, கணவனிடம் நெருங்கினாள் யமுனா.

"அவரை அனுப்பிட்டு வரட்டுமா?"

"போம்மா... வீட்டுக்கு வந்தவங்களை வாசல் வரை போய் வழியனுப்புறதுதான் மரியாதை. போய் அனுப்பிட்டு வா."

"சரிங்க..." – என்றவள் வெளியேறி, சிவசாமியோடு பேசிக் கொண்டே வாசலருகே சென்றுவிட்ட மதனை அழைத்தாள்.

"தம்பி ஒரு நிமிஷம்..."

மதன் நின்று திரும்பினான். "கூப்பிட்டீங்களா?"

"ஆமா தம்பி...! சின்னவர் நிஜமாவே உங்க வீட்லதான் இருக்காரா?"

சிவசாமி குறுக்கிட்டார். "என்னங்கம்மா இப்படிக் கேட்கிறீங்க? நான் கோத்தகிரியில ஒவ்வொரு லாட்ஜ் ஹோட்டல்ல ஏறி இறங்கினப்ப மதன் தம்பிதான் என்னைப் பார்த்திட்டு வந்து பேசினாங்க.

நிலைமையைச் சொன்னதும் தம்பி இவங்க வீட்டில் இருக்கிறதைச் சொல்லிட்டு, கையோட பெரிய ஐயாவைப் பார்த்தே தீரணும்னு என்கூட கிளம்பி வந்திட்டாங்க.



இப்ப ஏம்மா உங்களுக்கு இந்தச் சந்தேகம்? ஐயாவுக்கு நம்ம தம்பி எப்படியோ... அதே மாதிரிதான் இந்த மதன் தம்பியும்..."

"சிவசாமி அண்ணே! நான் சந்தேகப்பட்டுக் கேட்கலை. ஐயாவோட உடல்நிலையைப் பார்த்திட்டு உங்களுக்கு மனசு கேட்காம..."

"இவரை அழைச்சிட்டு வந்து பொய் சொல்லறேன்னு நினைச்சிட்டீங்களாம்மா...!"

"என்னை மன்னிச்சிடுங்க சிவசாமி அண்ணே!"

"பெரிய வார்த்தை பேச வேண்டாம்மா... உங்க மனவருத்தம் எனக்குப் புரியுது. ஆனா தம்பி சொன்னது பொய் இல்லைம்மா..."

"ஒரு நிமிஷம்!" – என்றவாறே மதன், தன் செல்போனை எடுத்து, தன் வீட்டுத் தொலைபேசி எண்ணை அழுத்திவிட்டு, ஸ்பீக்கர் போனை அழுத்தினான்.

சில நொடிகளில் தொலைபேசி மணியடிப்பது கேட்டது. எல்லாரும் போனையே பார்த்துக் கொண்டிருக்க, எதிர் முனையில் தொலைபேசி எடுக்கப்பட்டு பெண் குரல் கேட்டது.

"ஹலோ!"

"உமா! நான் அண்ணன் பேசுறேன்."

"சொல்லுண்ணா..."

"ஸ்ரீ மாடியிலதானே இருக்கான்?"

"இல்லைண்ணா... சாப்பிட்டுட்டு இருக்கார். இவ்வளவு நேரம் உனக்காக வெயிட் பண்ணிட்டு இப்பத்தான் சாப்பிடுறார்."

"கீழேயா இருக்கான்?"

"ஆமாண்ணா... ரஞ்சியும் சதாகரும் கூட்டிட்டு வந்தாங்க... அண்ணா! ஒரு விஷயம் சொல்லட்டுமா?"

"என்ன?"

"உன் ஃப்ரெண்ட்க்கு சிரிக்கத் தெரியுதுண்ணா. அதோட ஜோக், கடி ஜோக்குன்னு சொல்லி எல்லார் வயித்தையும் புண்ணாக்கிட்டார்."

"இஸிட்?"

"ஆமா! பாரு... டைனிங் டேபிள்ல சிரிக்கிறது இங்கே வரை கேட்குதில்ல..."

உண்மைதான். ஸ்ரீயின் ஆரவாரக் குரலோடு மற்றவர்களின் சிரிப்பும் கேட்டது.

"உமா! இதெல்லாம் எப்படி?"

"எனக்கும் புரியலைண்ணா... பசங்ககிட்ட ஜாலியா பேசுறாரு... என்கிட்டயும் ஜெய்கிட்டயும் பத்துவாட்டி என் கேட்டாரு... நாங்க எது பேசினாலும் எங்களை மடக்கி சிரிக்க வெச்சிடுறாரு...

வெரி நைஸ் பர்ஸன் அண்ணா! நான்தான் அவனை ரொம்ப மிஸ் பண்ணிட்டேன். ஸாரி அண்ணா!"

"சரி... ஸ்ரீகிட்ட கொஞ்சம் போனைக் கொடேன்."

"இதோண்ணா...! ஸ்ரீதர் அண்ணா! அண்ணா பேசறான். உங்ககூட பேசணுமாம்..." - உமாவின் அழைப்பைத் தொடர்ந்து, "யா! கமின்..." - என்ற ஸ்ரீதரின் குரல் கேட்டது.



தொடர்ந்து ரிஸீவர் கைமாற ஸ்ரீதரின் குரல் உற்சாகமாகக் கேட்டது.

"ஹாய்டா! எங்கே இருக்கே?"

"இங்கே ஒரு முக்கியமான வேலையா இருக்கேன் ஸ்ரீ... வரக் கொஞ்சம் லேட்டாகும்."

"சாப்பிட்டியா மதன்? உனக்காகத்தான் இவ்ளோ நேரம் வெயிட் பண்ணினோம்..."

"சாப்பாட்டுக்கு வரலைன்னு சொல்லத்தான் போன் பண்ணினேன். நான் வெளியே சாப்பிட்டுக்கிறேன்..."

"ஓ.கே.டா! நைட் வர லேட்டாகுமா?"

"ஈவ்னிங் வந்திடுவேன். உமாவுக்கு ட்ரெஸ் பர்ச்சேஸ் பண்ணனும். எல்லாரையும் ரெடியா இருக்கச் சொல்லு..."

"சரிடா!"

"நீயும் ரெடியாயிடு. சேர்ந்தே போகலாம்."

நண்பனிடம் இருந்து மறுப்பை எதிர்பார்த்த மதன் [illegible] பதிலில் மலர்ந்தான்.

"போலாம்டா..."

"ஸ்ரீ! நீதானே பேசுற?"

"வேற யாருடா உன்னை இத்தனை உரிமையாய் டா போட்டுப் பேசுவாங்க?"

"சந்தோஷமா இருக்குடா!"

"எதுக்கு? டா போட்டுப் பேசுறதுக்கா?"

"டேய்! நீ இவ்வளவு உற்சாகமாகப் பேசினதைச் [illegible]னேன்...!"

"உண்மைதான் மதன். நான் ரொம்ப ஹேப்பியா இருக்கேன். உன் வீட்ல அம்மா, ரஞ்சி, சுதாகர் எல்லாருமே ரொம்பப் பிரியமா இருக்காங்க...

உமாகூட ஜாலியா பேசினா தெரியுமா? நான்தான் இத்தனை நாள் இந்த சந்தோஷத்தை மிஸ் பண்ணிட்டேன்..."

"எப்படியோ என்னோட ஸ்ரீ பழைய மாதிரி கலகலப்பா மாறினதே போதும் எனக்கு... சரிடா... வீட்ல வந்து பேசலாம். போனை வெச்சிடட்டுமா?"

"ஓ.கே. பைடா..."

"பை!" – என்றவாறு போனைக் கட் பண்ணினான் மதன். யமுனாவை நிமிர்ந்து பார்த்தான்.

"இப்போ பேசினது யாருன்னு தெரிஞ்சதா?"

"ஸ்ரீதர்தான்...!" – தலையாட்டி ஒப்புக் கொண்டாள்.

"இதோ பாருங்கம்மா... அவன் என்னோட நண்பன். அவன் மேல எனக்கும் அக்கறை இருக்கு. அவனைத் தேற்றி பழைய ஸ்ரீதரனா மாத்தி உங்ககிட்ட வந்து ஒப்படைக்க வேண்டியது என் பொறுப்பு.

என்னை நீங்க தாராளமா நம்பலாம். எதிர்பாராம நடந்த அதிர்ச்சியில மனம் கலங்கிப் போயிட்டானே தவிர என் ஸ்ரீ ரொம்ப நல்லவன். அவனுக்குக் கெட்டது செய்யவும் தெரியாது. நினைக்கவும் மாட்டான்."

யமுனாவின் கண்கள் கலங்கியது. "தம்பி! நானும் நல்லவதான். இவரோட பணத்திற்கோ சொத்துக்கோ ஆசைப்படுறவ இல்ல... அதை அந்தப் புள்ளைகிட்ட நீங்க தான் சொல்லிப் புரிய வைக்கணும்..."



"கலங்காதீங்கம்மா... உங்களைப் பார்த்த நிமிஷமே இதை நான் புரிஞ்சுக்கிட்டேன். ஸ்ரீயும் பொறுமையா உங்களைக் கவனிச்சிருந்தா இதை உணர்ந்திருப்பான்.

ஏமாற்றமும் ஆத்திரமும்தான் அவன் கண்ணை மறைச்சிருக்கு. நான் புரிய வைக்கிறேன். கண்டிப்பா உங்களை அவன் மனது ஏத்துக்கும்..."

"அது போதும் தம்பி! அப்படி ஒருவேளை அவருக்கு நம்பிக்கை வரலைன்னா நான் இங்கிருந்து போயிடுறேன்னு சொல்லுங்க..."

"அம்மா!"

"அப்பாவுக்கும் புள்ளைக்கும் நடுவே தடைக்கல்லா நான் ஒரு நாளும் இருக்க மாட்டேன்னு சொல்லிடுங்க... நான் போனாத்தான் அவர் இங்கே வருவாருன்னா நான் இந்த நிமிஷமே இந்த வீட்டை விட்டுப் போயிடுறேன்."

சிவசாமி பதறினார். "என்னம்மா வார்த்தை இது? ஐயா காதுல விழுந்தா என்ன ஆகும்?"

"நான் என்ன பண்ணட்டும் அண்ணே! புள்ளையைப் பார்க்க முடியாம ஒவ்வொரு நாளும் அவர் துடிக்கிறதை என்னால பார்க்க முடியலையே..."

அவரைப் பார்க்கும் போதெல்லாம் என்னாலதானே இவர் தன் பிள்ளையை இழந்து தவிக்கிறார்ன்னு என் மனசே என்னைக் கொல்லுதே...! – யமுனாவின் கண்களில் நீர் நிற்காமல் வழிந்தது.

மதனின் மனம் பதறியது. "அம்மா! ப்ளீஸ் அழாதீங்க. இதுல உங்க தப்பு எதுவுமே இல்லையே."

"இல்ல தம்பி! இதெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சு நான் உறுதியா மறுத்திருக்கணும். இவர்தான் தன் பிள்ளை மேல உள்ள நம்பிக்கையிலே தன் பிள்ளை தன்னை புரிஞ்சுக்குவான்னு உறுதியாச் சொல்லிட்டாரு."

"விடுங்கம்மா! எல்லாம் சரியாகிடும்."

"தம்பி! எவ்வளவு *சீக்கிரம்* வரமுடியுமோ அவ்வளவு *சீக்கிரமா* கூட்டிட்டு வந்திருங்கப்பா."

"சரிம்மா!"

"புள்ளையப் பார்த்த பிறகுதான் அவரோட உடம்பு குணமாகும்."

"நான் பார்த்துக்கிறேம்மா. கிளம்புறேன்."

"சரிப்பா."

நடந்தவன் நின்று தனது பேண்ட் பாக்கெட்டினுள் கையை விட்டு ஒரு சிறிய அட்டையை எடுத்து நீட்டினான்.

"அம்மா! இது எங்க வீட்டு அட்ரஸ். என் போன் நம்பரும் இருக்கு. எதுவும் அவசரம்னா தயங்காம போன் பண்ணுங்க."

"சரிப்பா!" - வாங்கிக் கொண்டாள்.

"சிவசாமி அண்ணே! வரட்டுமா?"

"சரிங்க தம்பி! தம்பிகிட்ட ஐயா நிலைமையை சொல்லி *சீக்கிரமாக்* கூட்டியாந்திடுங்க."

"சரிண்ணே! வர்றேன். வர்றேம்மா." - என்றவாறு விடைபெற்று கிளம்பிய மதனின் மனம் கனத்தது. ஸ்ரீயிடம் எப்படிப் பேசி சமாதானம் செய்யப் போகிறோம் என்ற யோசனையோடு காரில் ஏறினான்.



# 14

ஒரு வானவில் போல
என் வாழ்விலே வந்தாய்
உன் பார்வையால் எனைவென்றாய்
என் உயிரினிலே நீ கலந்தாய்!

ஐந்து மாடிக் கட்டிடம் முழுக்க கண்ணாடியால் பார்த்தப்பட்டு ஜொலித்தது அந்த ஜவுளிக்கடை. திரும்பும் திசையெங்கும் தங்களது உருவமே தெரிந்து பிரமிப் பூட்டியது.

ஒருபுறம் கண்ணாடியால் ஆன லிப்ட் ஏறுவதும் இறங்குவதுமாய் இருக்க, மின்சார படிக்கட்டுகளில் உற்சாக மாகப் பயணித்தனர் மதன் குடும்பத்தார்.

கல்யாண நிச்சயத்திற்கு புடவை எடுக்கச் செல்வதால் நாங்கள் எதற்கு என தேவகியும் அகல்யாவும் வீட்டில் இருந்துவிட, சிறியவர்கள் பட்டாளம் நகைக் கடைக்கு புறப்பட்டது.

மதனும் ஸ்ரீதரனும் காவலர்கள் போல் பின்னால் வர, உமாவும் ஜெயஸ்ரீயும் ஆர்வமாய் கடைகளை சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தனர். ரஞ்சிதாவும் சுதாகரும் முதல் ஆளாய் முன்னே சென்று கொண்டிருந்தனர்.

முன்னே சென்று கொண்டிருந்த உமா திரும்பினாள். "அண்ணா! நாம இப்போ எந்த செக்ஷன் போகணும்?"

"உமா! மாப்பிள்ளை வீட்ல இருந்து வரும்போது என்ன ட்ரெஸ் போடணும்னு ஆசைப்படுறியோ அந்த செக்ஷனுக்கு போ."

"அப்போ சூரிதார் செக்‌ஷனுக்கு போலாமா? தர
ப்ளோர்தான்."

"ஏய்! உதை வாங்கப் போறே. புடவை செக்‌ஷனுக்
போ!"

"இதென்ன அநியாயம்? கல்யாணப் பொண்
ணுன்னாலே புடவைதான் கட்டணுமா? மாப்பிள்ளை
மட்டும் என்ன வேட்டியா கட்டிட்டு வரப்போறார்?"

"அதுக்கென்ன உமா! நீ போன் பண்ணி ஆர்
போடு." – ஜெயஸ்ரீ சொல்ல, மதனும் ஸ்ரீதரனும் தலை
யாட்டினர்.

"அதானே! நீ சொன்னா மாப்பிள்ளை மறுப்பார
என்ன?"

"இப்போ பிரச்சனை மாப்பிள்ளை வேட்டி கட்டு
தில்ல."

"பின்னே?"

"நான் புடவை கட்டுறதுதான். எனக்குப் புடவை
கட்டுறதுன்னா பெரிய தலைவலி." – முகத்தைச் சுழித்தாள்

"இதுக்குத்தான் ஜெய் மாதிரி எப்பவும் புடவை
கட்டணும்றது. நீ எங்கே கேட்கிற? சூரிதார் நைட்டியைத் த
உனக்கு வேற்றென்ன தெரியும்?"

"அண்ணா! இதுதான் சமயம்னு வாரிடாதே!"

"உண்மையைத்தான் சொல்றேன். கல்யாணத்து
இன்னும் நாற்பது நாள் இருக்கு. அதுக்குள்ள நல்ல
புடவை கட்டிப் பழகிக்கோ. ஜெய்! நீ தினமும் இவளுக்
புடவை கட்டிவிட்டுடும்மா."



"சரிண்ணா!"

"என்ன சரிண்ணா. தினமும் இந்தக் கோணியக் கட்டிட்டு எப்படி நடக்கிற ஜெய் நீ? என்னால முடியாதுப்பா!"

"உமா! ஒரு ரெண்டு நாள் கால்ல இடறும். நாம பொறுமையா நடந்து பழகிட்டா சிரமமா இருக்காது."

"இது வேறயா?"

"ஆமா உமா! புடவை கட்டும்போதுதான் ஒரு பொண்ணோட அழகு அதிகரிக்கும். பார்க்கிறவங்களோட பார்வையில மதிப்பு கூடும். புடவையில உள்ள நளினம் வேற எந்த ட்ரெஸ்லேயும் வராது தெரியுமா?" – ஜெயஸ்ரீ சொல்ல, ஸ்ரீதரனின் பார்வை இயல்பாய் அவள் மீது படிந்தது.

உண்மைதான். புடவையில் நளினம் கூடித்தான் தெரிகிறது. ஜெயஸ்ரீயின் மெலிந்த உடலைப் பாந்தமாய் தழுவியிருந்தது இளம் மஞ்சள் நிற புடவை. சின்னதாய் கறுப்பு நிற எம்ப்ராய்டரிப் பூக்கள். அதில் ஜிமிக்கி வேலைப்பாடு.

அதே வேலைப்பாட்டுடன் கூடிய பிளவுஸ். அளவான இறக்கத்தோடு தைக்கப்பட்டு வெகு பொருத்தமாய் பொருந்தியிருந்தது. நீளமாய் பின்னல். காதோரமாய் இளம் மஞ்சள் நிற ஒற்றை ரோஜா.

கைகளில் தங்க வளையல்கள். காதுகளில் ஜிமிக்கி. கழுத்தில் நீளமாய் ஒற்றைச் செயின். நெற்றியில் கறுப்பு நிற ஸ்டிக்கர் பொட்டு. வேறு எந்த அலங்காரமும் இல்லாமலே முகம் பளிங்காய் மின்னியது.

எத்தனை அழகு இந்தப் பெண். தினமும் பார்க்கிறேன் இவ்வளவு நிதானமாய் பார்க்கவில்லையோ? நேரிடையாய் பார்க்க கூச்சப்பட்டு பக்கவாட்டில் தெரிந்த கண்ணாடியில் தெரிந்த அவளது பிம்பத்தைப் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீதரன்.

"ஸ்ரீ! எவ்வளவு நேரம்தான் கண்ணாடியப் பார்த்திட்டு நிற்ப?"

"ம்..." - திடுக்கிட்டுத் திரும்பினான்.

"ஏன்டா? ஏற்கனவே லேட். இதுல இந்தப் பொண்ணுங்க ட்ரெஸ் எடுத்து முடிய எவ்வளவு நேரமாகுமோ. வா சீக்கிரம்."

"நாம இப்போ எங்கே போகணும்?"

"பிப்த் ப்ளோர். அங்கேதான் பட்டுப்புடவை செக்ஷனாம். வா."

"ம்... போலாம்." - மற்றவர்களோடு இணைந்து லிஃப்ட்டை நெருங்கினர்.

"அண்ணா! இப்பவே சொல்லிட்டேன். நான் பொறுமையாத்தான் செலக்ட் பண்ணுவேன். அங்கே வந்து அவசரப்படுத்தக்கூடாது."

"கடைய மூடுறதுக்குள்ள எடுத்திடுவியா?"

"அண்ணா!"

"ஓ.கே. ஓ.கே. லிப்ட் வந்தாச்சு. ஏறுங்க." - அனைவரும் ஏறிக் கொள்ள கண்ணாடிக் கதவுகள் மூடியதும் ஜிவ்வென லிப்ட் மேலேறியது.



"ஹாய்! எவ்வளவு ஜாலியா இருக்கு." - ரஞ்சிதா சொல்லும்போதே ஐந்தாவது தளத்தில் நின்றது லிப்ட்.

"ச்சே! அதுக்குள்ள வந்திடுச்சு!" - அலுத்துக் கொண்டே வெளியே வந்தனர். பெரிய திடல் போல பரந்து விரிந்திருந்து பிரமிப்பூட்டியது பட்டுப்புடவைப் பிரிவு. வாசல் அருகே குழந்தைகள் விளையாட சிறு அறை. அதில் கலர் கலராய் பந்துகள். குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்கள்.

"அண்ணா! நாங்க இங்கேயே விளையாடிட்டு இருக்கோம் அண்ணா."

"இங்கேயா? தனியாவா?"

"உள்ளே வந்து நாங்க என்ன செய்யப் போகிறோம்? அக்காங்க எல்லாப் புடவையையும் எடுத்து பிரிச்சு டயம் பாஸ் பண்ணுவாங்க. நாங்க சும்மாதானே நிற்கணும்."

"சுதாகர்! அண்ணன்கூட சேர்ந்து ரொம்பப் பெரிய பேச்செல்லாம் பேசுற நீ. உதை வாங்கப் போற." - உமா விரல் நீட்டி எச்சரித்தாள்.

"உண்மையைச் சொன்னால் உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருது உமா?" - மதன் கேலி செய்ய, ஜெயஸ்ரீ இடையில் புகுந்தாள்.

"ஜவுளி எடுக்க வந்தோமா சண்டை போட வந்தோமா? முதல்ல அமைதியா இருங்க."

"உத்தரவு மகாராணி."

"அண்ணா! நீங்க ரெண்டு பேரும் இந்தச் சேர்ல உட்காருங்க."

"யெஸ் மேடம்!"

"ரஞ்சி! சுதாகர்! நீங்க ரெண்டு பேரும் விளையாடுங்க. அடிக்கடி எங்களைப் பார்த்துக்கணும். சரியா?"

"சரிக்கா!" - என அவர்கள் உற்சாகமாக விளையாடத் தொடங்கினர்.

"அண்ணா! நீங்க பசங்க மேல ஒரு கண்ண வெச்சிக்கங்க."

"ஓ.கே."

"உமா! நாம போலாமா?"

"ம்..."

"அண்ணா! உங்களுக்குப் போரடிச்சா நியூஸ் பேப்பர் படிங்க. இல்லன்னா பசங்களோட விளையாடுங்க."

"ஹலோ! நாங்க என்ன விளையாடவா வந்திருக்கோம்!" - ஸ்ரீ கேட்க, புன்னகைத்தாள் ஜெயஸ்ரீ.

"பின்னே?"

"பாடிகாட்ஸ்மா. பாதுகாவலர்கள்."

"சரி. அந்தப் பணியை சிறப்பாச் செய்யுங்க. நாங்க வரட்டுமா?"

"ஓ.கே. இன்னும் ஒன் ஹவர்ல வந்திடணும்."

"அது புடவை கிடைக்கிறதைப் பொறுத்தது." - என்ற உமா அண்ணனிடம் திரும்பினாள்.

"அண்ணா! உன்னோட பட்ஜெட் என்ன? சொன்னா அதுக்கேத்த மாதிரி செலக்ட் பண்ணுவேன்."



"ஒரு த்ரீ தவுஸண்ட் இல்ல போர் தவுஸண்ட் பாரும்மா. அதே மாதிரி ஜெய்க்கும் ஒண்ணு எடுத்திடு."

"எனக்கு எதுக்குண்ணா?"

"என்னம்மா நீ. அடுத்த பொண்ணு நீதானே! நீயும் எடுத்துக்க."

"இப்ப வேண்டாண்ணா. உமா கல்யாணத்துக்கு வாங்கிக்கலாம். இப்போ உமாவுக்கே கிராண்டா ஒரு புடவை வாங்கிடலாம்."

"ஜெய்! எப்பவுமே நமக்கு ஒண்ணாத்தானே ட்ரெஸ் எடுப்போம். இப்ப மட்டும் என்ன? வா."

"இல்ல. உனக்குத்தானே நிச்சயதார்த்தம். அதனால..."

"நீதானே என் பக்கத்தில நிற்ப. நாம ரெண்டு பேருமே ஒரே மாதிரி புடவை கட்டிட்டு நிற்கலாம். பார்க்கிறவங்க எல்லாம் யார் பொண்ணுன்னு திணறட்டும். வா." - ஜெயஸ்ரீயின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு போனாள் உமா.

சின்னச் சிரிப்போடு வரிசையாய் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தான் மதன். நண்பனையும் அமர வைத்தான்.

"இந்த ஜெய் எப்பவுமே இப்படித்தான். எதுக்கும் ஆசைப்படமாட்டா. அது வேணும் இது வேணும்னு கேட்கவும் மாட்டா." - என்றான் பெருமையாய்.

"மதன்! உங்கிட்ட ஒண்ணு கேட்கணுமே!"

"கேளுடா!"

"தப்பா நினைச்சுக்க மாட்டியே!"

"சும்மா கேளுடா! என்ன?"

"வந்து... ஜெயஸ்ரீயோட அப்பா இல்லன்னு சொன்னியே!"

"ஆமா!"

"ஆனா அகல்யா அம்மாவோட... அவங்களைப் பார்த்தா அப்படித் தெரியலையே?"

மதனின் முகம் ஒருகணம் மாறியது. மௌனமாய் அமர்ந்திருந்தான்.

"ஸாரி மதன்! எதுவும் தப்பாக் கேட்டுட்டேனோ!"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல ஸ்ரீ."

"சொல்ல வேண்டாம்னா விட்டுடு. நாம வேற பேசுவோம்."

"இதுல மறைக்க எதுவும் இல்ல ஸ்ரீ. எங்க சித்தப்பா செத்துப் போகல்ல."

"பின்னே?"

"அவரு... ஓடிப் போயிட்டாரு. வேற ஒரு பெண்கூட" மதன் மரத்துப் போன குரலில் சொல்ல, திகைத்துப் போனான் ஸ்ரீதரன்.

"மதன்! நீ... நீ என்ன சொல்ற?"

"என் சித்தியோட வாழப் பிடிக்கலியாம். அதனால வேற ஒரு பெண்ணைக் கூட்டிட்டு ஊரை விட்டு போயிட்டாரு."

"எ... எப்போ?"



"ரஞ்சி கைக்குழந்தையா இருந்தப்போ."

"எப்படி மதன்? மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுட்டு எப்படி ஓட முடிஞ்சது அவரால?"

"வரிசையா மூணு பிள்ளைகளைப் பெத்துக்கிற வரைக்கும் அழகா தெரிஞ்ச சித்தி அதுக்கப்புறம் அவர் கண்ணுக்கு அழகாத் தெரியலையாம்."

"வாட்?"

"ஸ்ரீ! உங்கிட்ட சொல்றதுக்கென்ன? என் சித்தப்பா கொஞ்சம் சபல புத்திக்காரர். வாலிப வயசுலயே அப்படி இப்படி அலைவார் போலிருக்கு.

கல்யாணம் பண்ணி வெச்சா சரியாகிடுவாருன்னு என் பாட்டி எடுத்த தவறான முடிவால எங்க குடும்பமே தலைகீழா மாறிப்போச்சு."

"மதன்!"

"ஆமான்டா. தாத்தா காலமான பிறகு பாட்டி வீட்டைவிட்டு வெளியே வரவே மாட்டாங்க. அதனால என் சித்தப்பாவிற்கு பெண் பார்க்கிற பொறுப்பை என் அப்பா கிட்ட விட்டாங்க.

அப்பாவும் நிறைய இடம் பார்த்து சலிச்சு கடைசியாக உறவுலயே எங்க சித்தியைப் பார்த்து பேசி முடிவு பண்ணினாங்க. சித்தி என் அம்மாவோட சித்தி பொண்ணு.

எங்க அப்பா மேல அவங்க வெச்சிருக்க நம்பிக்கையில அதிப்புல மாப்பிள்ளையைப் பத்தி எதையும் விசாரிக்காம சம்மதிச்சிட்டாங்க. ஆனா கல்யாணமான கொஞ்ச நாள்ல சித்தப்பாவோட குணம் எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு.

அப்பாகிட்ட வந்து சண்டை போட்டிருக்காங்க. அப்பா அவங்களை சமாதானப்படுத்தி, தம்பியைத் தன் கண் பார்வையில் வைத்துக் கொண்டால் தப்பு செய்ய மாட்டான் என்று எங்கள் வீட்டிலேயே சித்தப்பா குடும்பத்தை அழைச்சிட்டு வந்திட்டாங்க."

"உங்க சித்தப்பா மாறிட்டாங்களா?"

"எங்கே? நிலைமை இன்னும் மோசமாயிடுச்சு."

"ஏன்டா?"

"அப்பாவோட கண்டிப்பு சித்தப்பாவுக்கு கசப்பா பிடிக்கல்லை. அதோட சித்தி படிக்காதவங்க. ரொம்ப பயந்த சுபாவம். சித்தியை மிரட்டி பணம் வாங்கி வெளியே ஊர் சுத்தக் கிளம்பினார்.

ரஞ்சியோட டெலிவரி டைம்ல சித்தி ரொம்ப கஷ்டப்பட்டாங்க. பிழைச்சதே பெரிய விஷயம். அந்த நேரத்தில ஹாஸ்பிடல் வீடு குழந்தைகளைக் கவனிக்க சிறுவன்று பெரியவங்க இருக்க, சித்தப்பா தன் வழியை தேடிட்டுக் கிளம்பிட்டார்."

"அப்புறம்னா?"

"பக்கத்து ஊர் பொண்ணாம். எங்களுக்கெல்லாம் அது யாருன்னுகூடத் தெரியாது. அவங்களோட போயிட்டார் சித்தியோட நகைகளை எல்லாம் எடுத்திட்டுப் போயிட்டார்."

"ஐய காட்"

"எங்க சித்திக்கு எதுவுமே புரியல்லை. நிறைய நாள் பிரமை பிடிச்ச மாதிரிதான் இருந்தாங்க. இதுல ரொம்ப மனசொடிஞ்சு போனது அப்பாதான்.



தன்னாலதான் சித்தி இப்படி தனிமரமா நிக்கிறதா நினைச்சி ரொம்ப வேதனைப்பட்டு ஒரு நாள் தூக்கத்திலேயே உயிர் போயிடுச்சு."

கண்கள் கலங்கிவிட, பேச்சை நிறுத்தினாள் மதி. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறாள் என்பதைப் புரிந்து அவள் தோளை ஆறுதலாய்ப் பற்றிக் கொண்டான் ஸ்ரீதரன்.

"அதுக்கப்புறம் சித்திக்கு, சித்தி பசங்களுக்கு எல்லாமே நானும் அம்மாவும்தான். அவங்களை எதுக்காகவும் எப்போதும் கண்கலங்க விட்டதேயில்லை.

இப்பவும் யார் கேட்டாலும் எனக்கு மூணு தங்கை ஒரு தம்பின்னுதான் சொல்லுவேன். அப்படித்தான் வாழ்ந்திட்டும் இருக்கோம்."

"சாரி மதுனி! உன்னை நான் கஷ்டப்படுத்திட்டேன்."

"ம்ப்ச்...! வெளியே கலகலப்பா இருந்தாலும் என் மனசு அப்பப்போ கலங்கித் தவிக்கும் ஸ்ரீ. அதிலயும் ரஞ்சி அப்பப்போ தகப்பனைத் தேடி அழும்போது நான்... உடைஞ்சிடுவேன்."

"சின்னப் பொண்ணு இல்லையா? அதான்!"

"ஆமாண்டா. அதனாலதான் அவளுக்கு எதையும் வெளிப்படையா சொல்லல்லை. அப்பா இல்லை என்பதை மட்டும் சொல்லி வெச்சிருக்கோம்."

"ம்... எங்கிட்டயும் சொல்லியிருக்கா...!"

"அதாக்கூட இப்பல்லாம் எதுவும் கேட்கிறதில்லை. சித்தியும் முன்ன மாதிரி அழுதிட்டே இருக்கிறதில்லை.

குழந்தைங்க முகத்தைப் பார்த்துக்கொண்டு அவங்களுக்காக வாழ ஆரம்பிச்சிட்டாங்க."

"வாழ்ந்துதானே ஆகணும்!"

"எப்படியோ ஸ்ரீ. இவ்வளவு காலம் ஓடிப்போச்சு. சித்தப்பாவோட காரியத்தால எங்களுக்கு வருத்தம்தானே தவிர பெரிய இழப்பாத் தெரியல்ல. ஆனா..."

"என்ன மதன்?"

"இனிமேத்தான் பிரச்சனைகள் விஸ்வரூபம் எடுக்கும்னு தோணுது."

"ஏன்டா அப்படிச் சொல்ற?"

"உமாவைவிட ரெண்டு வயசுதான் ஜெயஸ்ரீ சின்னவ."

"சரி... அதுக்கென்ன?"

"ஸ்ரீ! உமாவை விடவும் ஜெயஸ்ரீ அழகு. ரொம்ப அமைதியான அடக்கமான பொண்ணு! பார்க்கிற யாருக்கும் அவளைப் பிடிக்கும்."

"அதான் தெரியுதே!" - என்றான் ஜெயஸ்ரீயைப் பார்த்துக் கொண்டே.

"அதனால முதல்ல ஜெய்ய கேட்டுத்தான் நிறைய வரன் வந்தது."

"ம்..."

"ஆனா எதுவுமே அமையல்ல. எல்லாரும் வந்த வேகத்திலேயே போயிட்டாங்க."

"ஏன்டா?"



"பொண்ணை எடுக்கிறவங்க குடும்பத்தைப் பத்தி நாலு இடத்தில விசாரிப்பாங்க இல்ல..."

"ஆமா!"

"சித்தப்பாவைப் பத்தித் தெரிஞ்சதும் இந்தப் பொண்ணு வேண்டாம்னு நேர்லயே சொல்லிட்டுப் போயிடுவாங்க."

ஸ்ரீதரனின் குரல் நடுங்கியது. "ஏன்? ஏன்டா?"

"பெண்ணை மட்டுமோ அவ குணநலனை மட்டுமோ யாரும் பார்க்கலடா. இப்படி வர்றவன் எல்லாம் வேண்டாம்னு சொல்லும்போது என் சித்தியும் ஜெய்யும் துடிக்கிற துடிப்பு இருக்கே... அதை... அதை வார்த்தையால சொல்ல முடியாது."

அந்த வேதனையைத் தற்போது உணர்ந்தவன் ஆயிற்றே ஸ்ரீதரன். மாப்பிள்ளையோட அப்பாவே இப்படி என்றால் மகனும் அப்படித்தான் இருப்பான் என்று பெண் வீட்டார் சொன்னதாக அன்று சொன்னாரே அப்பாவின் நண்பர்.

ஆண்பிள்ளையாகிய நானே அன்று உடைந்து போனேனே! இந்தப் பெண்ணின் மனம் எத்தனை வேதனைப்பட்டிருக்கும்?

மனம் கலங்க, திரும்பிப் பார்த்தான். ஜெயஸ்ரீயும் உமாவும் ஒவ்வொரு புடவையாய் எடுத்து ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களின் முன்னே மலைபோல் புடவை குவிந்து கிடந்தது. உமா கேட்கும் வரிசையிலிருந்த புடவைகளை

அலுக்காமல் சலிப்பு காட்டாமல் சிரித்த முகத்தோடு எடுத்து காட்டிக் கொண்டிருந்தார் கடைச்சிப்பந்தி.

உமா, ஜெயஸ்ரீயின் காதில் ஏதோ சொல்ல, அடக்கமாட்டாமல் சிரித்தாள் ஜெயஸ்ரீ. வலது கன்னத்தில் சின்னதாய் ஒரு குழி விழுந்தது.

இந்தப் பெண்ணையா பார்க்கிறவர்கள் எல்லாம் வேண்டாம் என்று சொல்கிறார்கள். இவள் தகப்பன் செய்த பாவத்திற்கு இந்தப் பெண் பாவம் என்ன செய்வாள்?

பெத்தவங்க செய்த பாவம் பிள்ளைகள் தலையில் விடியும் என்பார்களே! அது இதுதானா? இந்த பிள்ளைகளைப் பற்றி கவலைப்பட்டானா அந்தத் தகப்பன் சுயநலவாதி.

ஜெயஸ்ரீக்காக பரிதாப்பப்பட்டபோதே மனதின் ஓரமா இடித்தது. நானும் இன்று இவளது நிலையில்தானே இருக்கிறேன்.

பெற்றவர்கள் செய்த தவறான காரியத்தால் இன்று மனம் காயப்பட்டு அவமானப்பட்டு நிற்கிறோம். இனி இதே நிலையில் நாளை சுதாகரும் ரஞ்சிதாவும்கூட இதே நிலையில் நிற்பார்கள்.

தந்தையின் மீதிருந்த வெறுப்பு மீண்டும் தலை தூக்கியது. பிள்ளைகளின் மனதைப் பற்றி வருங்காலத்தை பற்றி எந்தக் கவலையும் படாத பெற்றவர்கள் இருந்து என்ன பயன்?

"ச்சே!" - தன் ஆத்திரம் முழுவதையும் திரட்டி, அமர்ந்திருந்த இருக்கையின் கைப்பிடியில் குத்தினான்.



## 15

நினைப்பது நிறைவேறும் - நீ
இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் நான்
இருந்தால் உன்னோடு - இருவரும்
சேர்ந்திருப்போம் அன்போடு!

ஸ்ரீதரனின் முகக்கடுப்பையும் ஆத்திரத்தையும் கண்டு முகம் மாறினான் மதன்.

"ஸ்ரீ! என்னாச்சு?"

"இந்தத் தகப்பன்கள் எல்லாம் ஏன்டா இப்படி இருக்காங்க?" - ஆத்திரமாய்க் கேட்டான்.

"எப்படி இருக்காங்க?"

"மனைவியை... குழந்தைகளைத் தவிக்க விட்டுவிட்டு தன் விருப்பத்திற்கு எப்படிப் போகிறார்கள்? நினைக்கவே அசிங்கமா இருக்கு."

"அவங்கதான் உணரணும் அதை... எல்லாருமே அப்படி இருப்பதில்லை ஸ்ரீ...! எத்தனையோ நல்லவங்களை நாம பார்க்கிறோமே...!"

"ம்ப்ச்! எனக்கு இதில நம்பிக்கை இல்லை."

"ஏன் ஸ்ரீ! இப்போ உன் அப்பாவை எடுத்துக்கோ... எவ்வளவு நல்லவர்!" - இதுதான் கங்காதரனைப் பற்றிப் பேச சரியான சமயம் என மெதுவாய்த் தொடங்கியவனை கை உயர்த்தித் தடுத்தான் ஸ்ரீதரன்.

"யாரு? என் அப்பா நல்லவரா?" - குரலில் கோபம் தெறித்தது.

"ஆமா ஸ்ரீ...! என் சித்தப்பாவோட கம்பேர் பண்ணும்போது உன் அப்பா நல்லவர்தானே!"

"எப்படிச் சொல்கிறாய்?"

"ஸ்ரீ! உன் அம்மா இறக்கும்போது நீ சிறுவன்தானே! உன் அப்பா நினைத்திருந்தால் அப்போதே மறுமணம் செய்திருக்கலாமே...!"

"அதைத்தான் நானும் சொல்கிறேன். அப்போதே செய்திருந்தால் விபரம் புரியாத வயதில் எனக்கு வருத்தம் தெரியாது. அந்தப் பெண்ணை அன்னையாக ஏற்றுக் கொண்டிருப்பேன்.

ஆனால் அப்போது உத்தமர் போல் வேஷம் போட்டுவிட்டு இப்போது இப்படிச் செய்து என் கழுத்தை அறுத்து விட்டார்..."

"கோபப்படாதே ஸ்ரீ! உன் அப்பா உன் அம்மாவை நினைத்து இத்தனை ஆண்டுகளாய் தவ வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்."

"உண்மைதான்... இப்போ அந்தத் தவம் யாரால் கலைந்தது? அந்த மேனகையால்தானே!"

"ஸ்ரீ! நான் சொல்வதை..."

"நோ மதன். அவர்களைப் பற்றிப் பேச வேண்டாம். நான் அதை மறக்க வேண்டும்."

"நீ மறக்கலாம். ஆனா உன் அப்பாவை நினைக்க வேண்டாமா?"

"ஏன்? அவருக்கென்ன...?"



"ஏற்கெனவே உடல்நலமில்லாதவர். இப்போ நீயும் உதறிவிட்டு வந்துவிட்டாய். உன்னை நினைத்து தவிக்க மாட்டாரா?"

"மாட்டார். என்னை நினைக்கக்கூட நேரமிருக்காது அவருக்கு...!"

"ஸ்ரீ..."

"மதன்! அவரது புது மனைவியோடு எங்காவது ஹனிமூன் போயிருப்பார்..."

"அப்படியெல்லாம் பேசாதே ஸ்ரீ!"

"ஆமாம். நீ என்ன அவருக்கே சப்போர்ட் பண்ணிட்டு இருக்கே... எனக்குத் தெரியாம அவரை மீட் பண்றியா? என்கிட்ட பேசச் சொன்னாரா?"

"சேச்சே... அப்படியெல்லாம் எதுவும் இல்லை."

"நிஜமா?"

"நிஜமாத்தான்...!"

"அப்போ இனிமே அவரைப் பத்திப் பேசாதே!"

"ஸ்ரீ! இப்போ உனக்கு யார் மேல கோபம்? அப்பா மீதா? அம்மா மீதா?"

"அம்மாவா? யாருக்கு யார் அம்மா?" - புருவத்தை சுளித்தவாறே மதனை உற்றுப் பார்த்தான் ஸ்ரீதரன்.

'உளறிவிட்டேனா?' - மதன் அவசரமாய் பேச்சை மாற்ற முயற்சிக்கும் முன் சுதாகர் வந்து நின்றான்.

"மதன் அண்ணா! நான் பாய்லட் போகணும்..."

"டாய்லட்டா... இங்கே எங்கேடா போவே?"

"கிரவுண்ட் ஃப்ளோர்ல இருக்குதாம். அந்த போர்டுல போட்டிருக்கு..."

"சரி! கொஞ்ச நேரம் வெயிட் பண்ணு... அக்கா வந்ததும் போகலாம்."

"அரை மணி நேரமா வெயிட் பண்றேன் தெரியுமா?" - கொஞ்சம் சத்தமாக சுதாகர் சொல்ல, அவசரமாக அவனது வாயைப் பொத்தினான் மதன்.

"இப்ப ஏன்டா சத்தம் போடுற. வா போலாம்..." - என்றவாறே நண்பனிடம் திரும்பினான்.

"ஸ்ரீ! நான் இவனைக் கூட்டிட்டுப் போறேன். நீ இங்கே தனியா இருக்க வேண்டாம். லேடீஸ்கூடப் போய் நில்லு."

"அங்கே எதுக்குடா?"

"அப்படியாவது சீக்கிரம் செலக்ட் பண்ணட்டும். நீயும் கொஞ்சம் அவசரப்படுத்து..."

"சரி! நீ போயிட்டு வா... ரஞ்சி?"

"அவளையும் நான் கூட்டிட்டுப் போயிடுறேன்..." - என மதன் லிஃப்ட்டை நோக்கி நடக்க, கொஞ்சம் தயக்கமாக நடந்து உமாவை நெருங்கினான்.

அதே நேரம் கையில் நான்கு புடவைகளோடு திரும்பினாள் ஜெயஸ்ரீ. எதிரே வந்தவன் மீது மோதி விடாமல் சமாளித்து நின்றாள்.

ஸ்ரீதரனின் பின்னே எட்டிப் பார்த்து, "அண்ணா எங்கே?" என்றாள்.



"சுதாகரை அழைச்சிட்டு டாய்லட் போயிருக்கான்."

"ஓ! உமா... அண்ணன் இங்கே இல்லை..." - என்றாள் உமாவிடம்.

"அதற்கென்ன? இந்த மகாராஜாவிடமே கேட்டுவிடுவோம்..." - என அவர்களை நெருங்கி வந்தாள்.

"ஸ்ரீதர் ஸார்! நூற்று ஐம்பது புடவையைப் பார்த்திட்டு இந்த நாலு புடவையை செலக்ட் பண்ணியிருக்கோம். இதுல ரெண்டை சூஸ் பண்ணுங்க பார்ப்போம்..."

"நானா?"

"ஆமா..."

"இதெல்லாம் உங்க டிபார்ட்மெண்ட். இதுல நான் என்ன சொல்ல?"

"கட்டிக்கப் போறது நாங்கதான். ஆனா பார்க்கிறது நீங்கதானே?"

"எ... என்ன?"

"பதறாதீங்க... இந்த நாலுல எந்தக் கலர் எங்களுக்கு மேட்ச்சா இருக்கும்னு சொல்லுங்களேன்... உங்க ரசனை எப்படி இருக்குன்னு பார்ப்போம்?"

"இல்லை... இதுல எல்லாம் எனக்குப் பழக்கம் இல்லை."

"ஏன் ஸார்! இதுக்கெல்லாமா டிப்ளமா படிச்சிட்டு வரணும்... சும்மா சொல்லுங்க!"

"உங்களுக்கு எது பிடிச்சிருக்கோ... அதை எடுத்திடுங்களேன்..."

"எங்களுக்கு இந்தக் கடையில உள்ள எல்லா… ஸாரியுமே பிடிச்சிருக்கு. எடுத்துக்கட்டுமா?" - உமா… கேலியாய் கேட்க, அசடு வழிய சிரித்தான்.

"உமா! அவரை ஏன் கஷ்டப்படுத்துகிறாய்? அவ… வந்துடட்டுமே…!" - பரிந்து கொண்டு வந்தாள் ஜெயஸ்ரீ.

"என்ன… சப்போர்ட்டா? நாம ஒண்ணும் இவரைக் கஷ்டப்படுத்தலையே… ட்ரெய்னிங்தானே கொடு… கிறோம்."

"ட்ரெய்னிங்கா?"

"ஆமா ஸார்! நீங்க எங்க அண்ணனோட கல்யாண… மேட்ங்கிறதால எப்படியும் அவன் வயசுதானே இருக்கும்…"

"ஆமா!"

"அப்போ கல்யாணம் பண்ற வயசுதானே… கல்யாண… பண்ணின பிறகு வொய்ஃப்புக்கு புடவை எடுக்க கடைக்கு… போனா திணறக்கூடாதில்ல…!"

"அதுக்கு?"

"அதுக்குத்தான் இப்பவே ட்ரெய்னிங் கொடுக்கிறோம்… பார்த்து செலக்ட் பண்ணுங்க."

"உமா! நீ பெரிய சாமர்த்தியசாலிதான்."

"ஆமா! அதுதான் எல்லாருக்கும் தெரியுமே!"

"பட்ச் உன் ஹஸ்பெண்ட்தான் பாவம்!" - வருத்தமாய்ச் சொன்னான்.

"ஏன்?"



"பின்னே! உன்கிட்ட மாட்டிக்கிட்டு என்ன பாடுபடப் போறாரோ?"

"ஐயோ! நீங்க ஒண்ணும் அவரை நினைச்சுக் கவலைப்பட வேண்டாம்."

"எப்படிக் கவலைப்படாம இருக்க முடியும்? ஒரே …மாச்சே…!"

உமா ஏதோ சொல்ல வாயெடுக்க, கடைக்காரர் அருகே வந்தார்.

"மேடம்! புடவையைத் தேர்ந்தெடுத்தாச்சா? பில் போடலாமா? கடையை மூட நேரமாச்சு!" - என்றார் மெதுவாக.

"ஓ! ஜஸ்ட் ஒன் மினிட் ஸார். ஸ்ரீதர் சீக்கிரம் சொல்லுங்களேன்…"

ஸ்ரீதர் வாசற்புறம் திரும்பிப் பார்த்தான். மதன் வருவதற்கான அறிகுறியே இல்லை. மீண்டும் திரும்பி ஜெயஸ்ரீயின் கையில் இருந்த புடவையைப் பார்த்தான்.

நான்குமே அற்புதமாய் இருந்தது. ஒன்று தங்கநிறம். உடல் முழுக்க தங்கநிற ஜரிகையோடு தகதகத்தது. இன்னொன்று நாவல்பழ நிறம். சிறிய பார்டரோடு சிம்பிளாய் இருந்தது.

இன்னொன்று இலைப் பச்சை நிறத்தில் கோடு கோடாய் தங்கநிற ஜரிகையோடு தெரிந்தது. இன்னொன்று …க்கமை நிறப்பட்டு. உடல் முழுக்க, தங்கநிற புட்டாவோடு …வே நட்சத்திரங்களாய் மின்னிய கற்களோடு ஜொலித்தது.

நான்கு புடவைகளையுமே மாறி மாறிப் பார்த்தான். எதையுமே ஒதுக்க மனம் வரவில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகு.

உமாவைப் பார்த்தான். "உமா! நாலு புடவையுமே சூப்பரா இருக்கு. நாலையுமே எடுத்திடுங்க."

"நாலா! அண்ணன் ரெண்டுதான் எடுத்துக்க சொன்னான்..."

"பரவாயில்லை... ரெண்டு புடவை நான் எடுத்து தந்ததா இருக்கட்டும்..."

"அச்சோ! வேண்டாம்..." - அவசரமாய்ப் பதறினாள்.

"என்ன உமா! உன் அண்ணன் வாங்கித் தந்த வாங்கிக்க மாட்டியா?"

"அ... அதுக்கில்லை. இருந்தாலும்..."

"உன் கல்யாணத்துக்காக நான் தர்ற பரிசா இருக்கட்டுமே..."

"வேண்டாம். அதை கல்யாணத்தில பார்த்துக்கலாம்"

"ம்ஹூம்... நீ இப்படித்தான் பேசிட்டே இருப்ப... இதுக்கு பில் போடுங்க!" - எனப் புடவைகளை வாங்கி சிப்பந்தியிடம் கொடுத்தான்.

"சரி! இதுல எது யாருக்குன்னு சொல்லவில்லையே..."

"உமா! நீதான் கல்யாணப் பொண்ணு. உனக்கு அந்த கோல்டன் கலர் ஸாரி. கிராண்டா இருக்கு"

"ஏய் உமா! நான் சொன்னேன்ல... அதுதான் உனக்கு சூப்பரா இருக்கும்னு...!" - என்ற ஜெயஸ்ரீயைப் பார்த்து புன்னகைத்தான்.



"அப்புறம் ஜெய்! உங்க கலருக்கு அந்த நாவல்ப கலர் சூட்டாகும். குங்குமக் கலர்கூட உங்களுக்கு பொருத்தமா இருக்கும். இது ரெண்டும் உங்களுக்கு!"

"ரெண்டு புடவையா? வேணாம்... வேணாம்..."

"ஏன் வேணாம்?"

"அவ கல்யாணப் பொண்ணு. அவளுக்கு வாங்கி கொடுக்கிறது நியாயம்... எனக்கு எதுக்கு?"

"கல்யாணப் பெண்ணோட தோழிக்கு வாங்கி கொடுத்ததா இருக்கட்டுமே...!"

"இல்லை... வேண்டாம். அம்மா திட்டுவாங்க."

"திட்டினா நான் பேசிக்கிறேன்... உமா! அந்த கி கலர் உனக்கு நான் தர்ற கிஃப்ட். உன் வாழ்க்கை பசுமை இருக்கட்டும்..." - ஸ்ரீதரன் சொல்ல, உமாவின் மு நெகிழ்ந்தது.

"தேங்க்ஸ் அண்ணா!"

"என்ன... என்ன சொன்னே?"

"தேங்க்யூ அண்ணா!" - அழுத்தம் திருத்தம சொன்னாள்.

"யப்பா! காதில தேன் பாயுது!" - ஸ்ரீதரன் கிறக்க சொல்ல, மூவரும் இணைந்து நகைத்தபோது... அவர் நெருங்கினான் மதன்.

"என்னடா! பர்ச்சேஸ் முடிஞ்சதா?"

"ம்... சூப்பரா முடிஞ்சது. பில் பே பண்ணிட்டுக் வேண்டியதுதான்."

"கலர்ஸ் எல்லாம் பிடிச்சிருந்ததாம்மா..."

"வீட்ல போய் காட்டுறோம் அண்ணா... நீயே அசந்திடுவ...!"

"நான் அசந்திடுறது இருக்கட்டும். அதைக் கட்டிக்கிட்டு நிக்கும்போது உன்னைப் பார்த்து மாப்பிள்ளை அசந்தா போதும்."

"ஸார் பில்!" - என்றவாறு வந்தவரிடம் பில்லை வாங்கிப் பார்த்தவன் விழிகளை விரித்தான்.

"உமா! பதினான்காயிரம் போட்டிருக்கு. எத்தனை புடவை எடுத்தீங்க?" - என்றவனிடம் பில்லைப் பார்ப்பது போல் வாங்கினான் ஸ்ரீதரன்.

"எங்கே கொடு பார்ப்போம்."

"அண்ணா! அது... நாங்க ரெண்டுதான் எடுத்தோம். ஸ்ரீ அண்ணாதான் நான்கு புடவை எடுக்கச் சொல்லிச்சு..."

"நானா?"

"ஆமான்னா! எனக்குக் கல்யாண கிஃப்ட்டாம்."

"அதுக்கு இப்போ என்ன அவசரம்? நீ ஏன் வாங்கினே?"

"நானா கேட்கலை அண்ணா... நாலு புடவை செலக்ட் பண்ணினோம். ரெண்டை செலக்ட் பண்ணச் சொன்னோம். அவர்தான் எல்லாத்தையும் பேக் பண்ணச் சொல்லிட்டார்."

"ஜெய்க்கு?"

"எனக்கு ரெண்டு. ஜெய்க்கு ரெண்டு."

"அப்போ ஓ.கே. ஸ்ரீ! பில்லைக் கொடு!" - எனத் திரும்பியவன் விழித்தான். அங்கே ஸ்ரீதரன் இல்லை.



# 16

நெஞ்சத்திலே நீ நேற்று வந்தாய்
நேற்று முதல் ஓர் நினைவு தந்தாய்
நினைவு தராமல் நீ இருந்தால்
கனவுலகில் நான் வாழ்ந்திருப்பேன்!

பில்லைக் கட்டிவிட்டு ஜவுளி பார்சலோடு வந்தவனிடம் மல்லுக்கு நின்றான் மதன்.

"என்ன ஸ்ரீ இது? உன்னை யார் பில்லைக் கட்டச் சொன்னது?"

"யார் சொல்லணும்? இது நம்ம வீட்டுக் கல்யாணம்னு நீதானே சொன்னே?"

"ஆமா... அதுக்காக...!"

"நம்ம வீட்டுப் பெண்களுக்கு புடவை எடுக்க நமக்குள்ள யார் பணம் கட்டினா என்ன?"

"அதுக்கில்லைடா...! உங்கிட்ட பணம்...?"

"தாராளமா இருக்கு. அதோட ஏ.டி.எம். கார்டு, கிரெடிட் கார்டு எல்லாம் இருக்கு... பேசாம வா."

"இருந்தாலும் நீ செய்தது தப்பு."

"அதெல்லாம் பிறகு டிஸ்கஸ் பண்ணலாம். முதல்ல கிளம்புவோம்... இவங்க கடையை மூடப் போறாங்க..."

"அதோட எங்களுக்கும் செம பசி. எல்லாருமா சேர்ந்து எங்களை மறந்திடுங்க!" - ரஞ்சிதா கோபமாய்க் கூற, ஸ்ரீதரன் சிரித்தான்.

"தேங்க்யூ ரஞ்சி!"

"எதுக்கு அண்ணா?"

"எனக்கும் செம பசிதான். ஆனா எப்படிச் சொல் றதுன்னு தயக்கமா இருந்தது..." – என்றான் கிசுகிசுப்பாய்.

ஜெயஸ்ரீ தனது இடதுகை மணிக்கட்டைத் திரும்பிப் பார்த்தாள்.

"அச்சோ...! மணி பதினொன்னு... இவ்வளவு நேரமாவா நாம புடவையை செலக்ட் பண்ணினோம்?"

"நாம இல்லம்மா... நீங்க?" – திருத்தினான் மதன்.

"அண்ணா! அம்மாகிட்ட வரும்போது ஹோட்டல்ல சாப்பிட்டுட்டு வந்திடுவோம்னு சொன்னோமே..."

"ஆமா."

"இப்போ இவ்ளோ நேரமாச்சே... எல்லா ஹோட்டலும் மூடியிருப்பாங்க..."

ரஞ்சிதா சிணுங்க ஆரம்பித்தாள்.

"அப்போ இன்னிக்குப் பட்டினிதானா? எனக்கு ரொம்ப பசிக்குதே!"

"இதுக்குத்தான் உங்களை வீட்ல இருங்கன்னு சொன்னேன்..."

"நீங்க மட்டும் வெளியே வந்து ஜாலியா சுத்துவீங்க. நாங்க மட்டும் வீட்ல உட்கார்ந்து என்ன பண்றதாம்?"

"நல்லா வாய் பேசு. பத்து நிமிஷம் கூடப் பசியைப் பொறுக்காதே!"



"ஷ்ஷ...! ஏன் இப்போ இவ்வளவு சத்தம்? எல்லாம் வெயிட் பண்ணுங்க...

நான் போய் காரை எடுத்திட்டு வர்றேன்..." – அதட்டினான் மதன்.

"வீட்டுக்கா போகணும்?" – உமா கேட்டாள்.

"இல்லை... கார் பார்க்கிங்லதானே காரை விட்டோம்."

"அய்யோ! நான் அதைக் கேட்கலை... காரை எடுத்திட்டு வந்து எங்கே போறோம்?"

"சொர்க்கத்துக்கு...!"

"என்ன... சொர்க்கத்துக்கா?" – அனைவரும் கோரஸாய்க் கேட்க, வாயில் ஒற்றை விரலை வைத்து அதட்டினான் மதன்.

"யாரும் பேசக்கூடாது. அமைதியா இருக்கணும். காரை எடுத்திட்டு வர்றேன்..." – என்றவாறு பார்க்கிங் ஏரியாவை நோக்கிச் சென்றான் மதன்.

"அக்கா! சொர்க்கம்னா என்ன?"

"ம்... அதை உன் அண்ணன்கிட்டதான் கேட்கணும்!"

"ஒருவேளை தியேட்டரா இருக்குமோ... இல்லையே...! அண்ணன் நம்மை செகண்ட் ஷோவுக்கு கூட்டிட்டுப் போக மாட்டாங்களே...?"

"ஒருவேளை மேஜிக் ஷோவாக இருக்குமோ?"

"ம்ஹூம்... நாம எல்லாரும் பசியோட இருக்கோம். ஸோ... அது ஒரு ஹோட்டலாத்தான் இருக்கும்!" – ஜெயஸ்ரீ அடித்துக் கூறினாள்.

"நடுசாமத்தில எந்த ஹோட்டல் திறந்திருக்குமாம். அப்படியே இருந்தாலும் காலி பாத்திரம்தான் இருக்கும்..." - என்றாள் உமா.

"நான் நினைக்கிறேன்... நீங்க நினைக்கிறது எல்லாமே தப்புன்னு..." - ஸ்ரீதரன் சொல்ல அனைவரும் அவனைத் திரும்பிப் பார்த்தனர்.

"தப்பா... எப்படி?"

"நாம வீட்டுக்குத்தான் போகப் போறோம்."

"வீட்டுக்கா?"

"ஆமா! நம்ம வீடுதானே நமக்கு சொர்க்கம்."

"ஸ்ரீதர் அண்ணா! ஏற்கெனவே நாங்க பசியில இருக்கோம். இதுல நீங்க வேற கடிக்கணுமா?"

"சரி... சரி... நான் சொல்லட்டுமா? சொர்க்கம்னா என்னன்னு...!"

"சொல்லுங்க... சொல்லுங்க..." - அனைவரின் முகங்களிலும் ஆர்வம்.

"நீங்க நாலு பேரும் சொன்ன இடத்துல ஒண்ணு...!"

"எது தியேட்டரா?"

"மேஜிக் ஷோவா?"

"ஹோட்டல்தானே?" - ஸ்ரீதரன் பதில் சொல்லும் முன் கார் வந்து நின்று ஹார்ன் அடித்தது.

"அடடா! கார் வந்திடுச்சு... முதல்ல கார்ல ஏறுங்க. பிறகு சொல்றேன்."



"எப்போ?"

"போய் இறங்கியதும்..."

"அதை நாங்களே பார்த்துப்போம். நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம்." - உதட்டைச் சுளித்தவாறே ஜெயஸ்ரீ காரை நோக்கிச் செல்ல, அவளது புடவைத் தலைப்பு காற்றில் ஆடி ஸ்ரீதரனின் முகத்தை வருடிச் சென்றது.

ஸ்ரீதரன் ஒருகணம் மெய்சிலிர்த்துப் போனான். இனம்புரியாத உணர்வோடு மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவன் போல் அவள் பின்னே செல்ல, அவர்கள் இருவரையும் முந்திக் கொண்டு சென்றனர் ரஞ்சிதாவும் சுதாகரும்...

முதல் ஆளாய் காரில் ஏறுவதற்கு இருவரும் முண்டியடிக்க, சுதாகர் பின்னால் வந்து கொண்டிருந்த ஜெயஸ்ரீ மீது மோத, திடீர் மோதலில் ஜெயஸ்ரீ பின்னால் சரிய..

அவளைத் தொடர்ந்து வந்த ஸ்ரீதரன் அவளை இருகரங்களாலும் பற்றிக் கொண்டான். பதறி விலக முயன்று, மீண்டும் ரஞ்சிதாவின் மோதலில், ஸ்ரீதரன் மீதே சாய்ந்தென்று மோதினாள்.

இருவரின் சுவாசமும் ஒன்றாய்க் கலக்கும் அளவிற்கு நெருக்கம். ஆங்காங்கே ஒளிர்ந்து கொண்டிருந்த மின்விளக்குகள். பாதி இருட்டும் பாதி வெளிச்சமுமாய் இருந்த சுற்றுப்புறம்.

உடலை வருடி விட்டுச் சென்ற குளிர்த் தென்றல். ஸ்ரீதரனின் வெப்பமூட்டும் கரங்கள். அவனது அண்மை. ஜெயஸ்ரீயின் தளிர் உடல் நடுங்கிற்று.

அதை உணர்ந்த அவனது பிடி ஆறுதலாய் அணைக்க, சட்டென்று மிரண்டு பின்வாங்கினாள்.

சிறியவர்களின் சண்டை இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்க, ஜெயஸ்ரீயை நெருங்கி நின்றான் ஸ்ரீதரன்.

"ஜெய்!"

"ம்...!" - அவளது குரலில் இன்னும் நடுக்கம் இருந்தது.

"ஒருவேளை... இதுதான் சொர்க்கமோ?"

"ம்...!"

"இந்த இடம்... நான்... நீ... இதுதான் சொர்க்கமோ?" காதோரமாய் அவன் கிசுகிசுக்க, வாய் திறந்து பே... முடியாமல் திணறிப் போனாள்.

"டேய்! இது என்ன டவுன் பஸ்ஸா? இடம் பிடிக்க... இப்படி சண்டை போடுறீங்க... உதைப்பேன். சத்தம் போடா... ஏறி உட்கார்!" - உமாவின் அதட்டலில் இருவரும் பதறி விலகினர்.

ஸ்ரீதரன் முன்பக்கக் கதவைத் திறந்து ஏறிக் கொள்ள மற்றவர்கள் அமைதியாய் ஏறியதும் கார் புறப்பட்டது.

சாலையில் பனிமூட்டம் தெரிய, நிதானமாகவே காரைச் செலுத்தினான் மதன். அநேகமாய் அனைத்து கடைகளும் மூடப்பட்டிருக்க, ஜனநடமாட்டம் குறைந்து சாலை காலியாய் கிடந்தது.

சாலையில் பார்வையைப் பதித்திருந்தாலும் ஸ்ரீதரனின் மனம் பட்டாம்பூச்சியாய் பறந்து கொண்டிருந்தது. அன்றை...



நாள் முழுவதையும் துளித்துளியாய் மனதிற்குள் அசை போட்டு ரசித்துக் கொண்டிருந்தான்.

இந்த நாள் முழுக்க... ஜெயஸ்ரீயைப் பார்த்த இன்பம் நெஞ்சிற்குள் இனித்தது. வாழ்நாள் முழுவதுமாய் இந்த நிலவு முகத்தை, கன்னக்குழி சிரிப்பை... தேன் குரலைக் கேட்டுக் கொண்டே... பார்த்துக் கொண்டே வாழ்ந்துவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றி மனதை ஆக்கிரமித்தது.

சற்றுமுன் நடந்த நிகழ்வுகளை... தன் மனப் பெட்டகத்துள் பாதுகாப்பாய் பொத்தி வைத்துக் கொண்டான். தன் வாழ்நாளின் இறுதி வரை அதைப் பத்திரப்படுத்திக் கொள்வதாக மனம் உறுதி அளித்தது.

பின்னால் அமர்ந்திருந்த ஜெயஸ்ரீக்கோ கைகால்கள் இன்னும் உதறிக் கொண்டுதான் இருந்தது. இதயம் பல மடங்கு வேகமாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

உமா பார்வையில் பட்டிருக்குமோ... அண்ணன் பார்த்திருப்பாரோ... எனப் பயம் ஒருபுறம் இருந்தாலும் ஏதோ ஒரு நினைவில் மனம் லயித்தது.

காதிற்குள் கிசுகிசுத்த அவனது வார்த்தைகளா... அவனது மென்மையான அணைப்பா... அவனது அண்மையா? எதுவோ ஒன்று அவளை இம்சித்துக் கொண்டிருந்தது.

அவளது தவிப்பை உணராதவளாய் உமா குரல் கொடுத்தாள்.

"ஜெய்! நீ ரொம்ப லக்கி... தெரியுமா?"

"ம்! நானா? ஏன் அப்படிச் சொல்றே?"

"உனக்கு அந்த ரெண்டு ஸாரியுமே பிடிச்சிருந்தது இல்ல...!"

"அது... அப்படியெல்லாம் இல்லையே...!"

"ஏய்! எனக்குத் தெரியும். நானே அண்ணன்கிட்ட சொல்லி ரெண்டு புடவையையும் வாங்கித் தந்திடணும்னு தான் நினைச்சேன். பட்! தானாவே உன் கையில கிடைச்சிடுச்சு."

"இல்லை.. ஸ்ரீதான் வாங்கிக் கொடுத்திருக்கான்..." - என்றான் மதன்.

"இருந்தாலும்... கேட்காமலே கிடைச்சது இல்ல... அதைச் சொன்னேன்."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை உமா. யார் யாருக்கு எது கிடைக்கணுமோ அது கண்டிப்பா கிடைக்கும்" - என்றான் ஸ்ரீதரன்.

"அப்படியா?"

"ஆமா! இதிலென்ன சந்தேகம்?"

"ஜெய்! என்ன நீ ஒண்ணுமே பேச மாட்டேங்கிறே?"

"நான்.. நான் என்ன சொல்ல?"

"இவரு என்ன பெரிய ஜோசியரா? யாருக்கு எது கிடைக்கும்னு சொல்ல...!"

"ஆமா! எனக்கு ஜோசியமும் தெரியும்."

"இஸிட்!"



"யா! உனக்குச் சொல்லட்டுமா?"

"எப்படி? கைரேகை பார்த்தா?"

"இல்ல... முகத்தைப் பார்த்தே சொல்லிடுவேன்!"

"எங்கே? சொல்லுங்க பார்ப்போம்."

"உன் பேர் உமா! உனக்கு ஒரு அண்ணன். ஊர் கோத்தகிரி..."

"ஏய்! ஃபிராடு... ஃபிராடு... இது எல்லாம் ஜோசியமா?" உமா கத்தினாள்.

"இல்ல... உண்மை உமா."

"நான் நம்ப மாட்டேன். எங்கே ஜெய்யுக்கு சொல்லுங்க பார்ப்போம்."

ஜெயஸ்ரீ அவசரமாய் மறுத்தாள். "அதெல்லாம் வேண்டாம்!"

மதன் சிரித்தான். "நீ ஏம்மா பயப்படுறே? ஜோசியர் என்னதான் சொல்றார்னு கேட்போமே... நீ சொல்லுடா!"

"என்ன சொல்வாரு? பேர் ஜெயஸ்ரீ... அவளுக்கு ஒரு தம்பி... ஒரு தங்கை..." - உமா சொல்ல, தலையாட்டினான் ஸ்ரீதரன்.

"இல்லை... நிகழ்காலத்தை சொல்ல மாட்டேன். எதிர்காலத்தைச் சொல்லட்டுமா?"

"எங்கே... சொல்லுங்க பார்ப்போம்?"

"இந்தப் பொண்ணுக்கு இதுவரை இருந்த திருமணத் தடை நீங்கிடுச்சு. மனசுபோல வாழ்க்கை அமையப் போகுது.

இந்தப் பொண்ணைப் பார்த்து மனசு விரும்பி ஒரு மாப்பிள்ளை பெண்கேட்டு வரப் போறான்..."

"ஸ்ரீ! நீ... நிஜமாவா சொல்றே?"

"நம்புடா... உமாவோட நிச்சயதார்த்தம் நடக்கிறப்போ இந்தப் பெண்ணுக்கும் திருமணம் கூடிடும். ரெண்டு கல்யாணத்தையும் ஒண்ணாவே நடத்திடலாம்."

மதன் மகிழ்ந்து போனான். "டேய் ஸ்ரீ! நீ நிஜமாவே அஸ்ட்ராலஜி படிச்சியா? இதுவரைக்கும் சொல்லவே இல்லை..."

"அதுதான் இப்போ சொல்றேனே... நடந்தா நம்பு"

"நடக்குமா?" - ஆவலாய்க் கேட்டான் மதன்.

"நிச்சயமா நடக்கும். வர்ற மாப்பிள்ளை பெண்ணோட மனசுக்கும் பிடிக்கும். பேர் பொருத்தம்கூட அருமையா இருக்கும்."

"என்ன பேர்... சொல்லுடா...?"

"எல்லாத்தையும் சொல்லிட்டா சுவாரஸ்யம் குறைஞ்சிடும். அதனால ஒரு க்ளூ மட்டும் கொடுக்கிறேன்."

"சொல்லு... சொல்லு..."

"பெண்ணோட பேர் முடியுற எழுத்தில மாப்பிள்ளையோட பேர் ஆரம்பமாகும். ரெண்டு பேருக்கும் பெயர் பொருத்தம் மட்டுமில்ல.. ஜோடிப் பொருத்தமும் அட்டகாசமா இருக்கும்."

முகமெல்லாம் சிவக்க சட்டென குனிந்து கொண்டாள் ஜெயஸ்ரீ.



"அடடா! பொண்ணுக்கு இப்பவே வெட்கம் வருது போய்!" - உமா கைதட்ட, மதன் சந்தோஷமாய்ச் சிரித்தான்.

"அந்தக் கண்கொள்ளாத காட்சியை நானும் பார்க்கணுமே...!" - என்றவாறு காரை ஓரமாய் நிறுத்தினான். "இதோ... சொர்க்கமும் வந்தாச்சி...!"

அனைவரும் வெளியே பார்த்து அசந்து போயினர். கண்களில் வியப்போடு காரை விட்டு இறங்கினர்.

"சொர்க்கபுரி திறந்தவெளி உணவகம்!" - என கலர் பல்புகளால் இருந்த போர்டைப் பார்த்து, "அட! இது ஹோட்டலா?" - என்றான் சுதாகர்.

"இல்லை! இதுதான் சொர்க்கம். உள்ளே வாங்க..." - என மதன் முன்னே செல்ல, அனைவரும் பின்தொடர்ந்தனர்.

"அண்ணா! என்ன இது... ஹோட்டல் மாதிரி தெரியலியே...?"

"ஹோட்டலும் வீடும் கலந்த கலவை."

"அப்படின்னா...?"

"பணம் கொடுத்து டோக்கன் வாங்கிட்டாப் போதும். நமக்கு எது வேணுமோ அதை நாமளே எடுத்துப் போட்டு சாப்பிடலாம்.

மேற்கூரை, கூபேன், சுவர் எதுவும் கிடையாது. இயற்கை காற்றை அனுபவிச்சிட்டே சாப்பிடலாம்..."

கூட்டம் அதிகமாகவே இருந்தது. சுடச்சுட சாப்பாடு தயாராகி விற்றுக் கொண்டிருக்க, கூட்டம் வந்த வண்ணம் இருந்தது.

"மதன்! இந்த ஹோட்டல் ட்வென்ட்டி ஃபோர் ஹவர்ஸ் இருக்குமா? இவ்வளவு லேட்டாகியும் கூட்டம் வருதே?"

"இது நைட் பத்து மணிக்குத்தான் திறக்கும். விடிய விடிய... சுடச்சுட சாப்பாடு கிடைக்கும். டேஸ்ட்ன்னா டேஸ்ட்... அப்படி ஒரு டேஸ்ட்."

"கூட்டத்தைப் பார்த்தாலே தெரியுதே!"

"ஓ.கே. யார் யாருக்கு என்னென்ன வேணுமோ சாப்பிடுங்க. நாங்க டோக்கன் எடுத்திட்டு வந்திடுறோம்..." - மதனும் ஸ்ரீதரனும் கேன்டீனை நோக்கிச் செல்ல, சிறியவர்கள் டேபிள் முன் சென்று அமர்ந்தனர்.

அவர்களுக்கு சற்றுத் தள்ளி இருந்த இருக்கையில் எதிரெதிராய் இருந்த இருக்கையில் அமர்ந்தனர் உமாவும் ஜெயஸ்ரீயும்.

"ஜெய்! இதையெல்லாம் நம்புறியா?"

"எதை?"

"அண்ணனுடைய நண்பர் சொன்ன கட்டுக் கதையை...!"

"என்ன... கட்டுக்கதையா?"

"ஆமா! ஜோஸியம் அது இதுன்னு அளந்தாரே... அதை நம்புறியா?"

"எனக்கு எதுவும் புரியல்ல...!"

"எனக்குக் கொஞ்சம் புரியுது. அவரு ஏதோ பிளான் பண்றாரு..."



"பிளானா?"

"ம்... அவர் சொன்ன மாப்பிள்ளை யாருன்னு நினைக்கிறே?"

"யா... யாரு?"

"உனது பெயரின் இறுதி எழுத்தில் ஆரம்பிக்கும் ஸ்ரீதரன்தான்..." - உமா வெகு உறுதியாய்ச் சொல்ல, ஆடிப் போனாள் ஜெயஸ்ரீ.

"உமா! விளையாடாதே. அவர் காதில விழுந்திடப் போகுது...!"

"நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கை இல்லையா? அவர் வாயால சொன்னாத்தான் நம்புவியா?"

"ச்சீ! சும்மா இரு. அவங்க வர்றாங்க..." - தலையைக் குனிந்து கொண்டே அதட்டினாள் ஜெயஸ்ரீ.

கையில் சிறிய பில்லோடு வந்தான் மதன். "இந்தாங்க டோக்கன். உமா நீ பர்ஸில வெச்சுக்க... அந்த மேஜையில இடியாப்பம், பரோட்டா, தோசை, சிக்கன் ரைஸ் எல்லாம் இருக்கு...

யாருக்கு எது வேணுமோ எடுத்துப் போட்டுச் சாப்பிடுங்க. காபி, டீ வேணும்னாலும் கேளுங்க... தருவாங்க."

"நீங்க எங்கே போறீங்க?"

"சும்மா... அப்படியே காலாற நடந்திட்டு வர்றோம்!"

"இந்த அர்த்த ராத்திரியில எங்களைத் தனியா விட்டுட்டுப் போகணுமா?"

"தூரமா போகலை... கண் படுற தூரத்திலதான் இருப்போம்."

"நீங்க சாப்பிடலையா?"

"வந்து சாப்பிடுறோம்... சுதாகர்! பசிக்குதுன்னு சொன்னியே... என்ன வேணுமோ சாப்பிடு."

"சரிண்ணா!"

"ஸ்ரீ! வா போகலாம்..." – என்றவாறு இருவரும் இணைந்தே நடந்தனர்.

ஆங்காங்கே டேபிளில் குடும்பமாய்... தனியாய்... நண்பர்களுடன் என அனைவரும் உணவை அருந்திக் கொண்டிருக்க...

தங்களது குடும்ப உறுப்பினர்கள் அமர்ந்திருந்த இடத்தை நன்றாய் பார்க்கும்படியாய் நின்று கொண்டனர் இருவரும்.

"சொல்லுடா! என்ன விஷயம்?" – மதன் கேட்க, தயங்கி நின்றான் ஸ்ரீதரன்.

"என்கிட்ட என்னடா தயக்கம்? சும்மா சொல்லு...!"

"மதன்! நான்... ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே...?"

"என்னடா... சும்மா சொல்லு."

"மதன்! எனக்குத் தெளிவா கோர்வையா பேச வரலை. ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்லட்டுமா?"

"ம்... சொல்லு."



"எனக்கு... உன் தங்கை... ஜெயஸ்ரீயை ரொம்பப் பிடிச்சிருக்குடா!" – தயங்கித் தயங்கிச் சொன்ன நண்பனை வியப்பாய் ஏறிட்டான் மதன்.

"ஸ்ரீ! நீ... என்ன சொல்றே?"

"உன் தங்கையை எனக்குத் தருகிறாயா? என் வாழ்நாள் முழுக்க அவளைப் பூ மாதிரி வெச்சுப்பேன். அழவிடாமக் காப்பாத்துவேன்."

மதனின் கண்கள் மலர்ந்தன. "ஸ்ரீ! நிஜமாத்தான் சொல்றியா?"

"சத்தியமா?"

"அப்போ நீ சொன்ன ஜோசியம்?"

"நான்தான் அந்த மாப்பிள்ளை... பேர் ஸ்ரீதரன்!"

"டேய்... மச்சான்!" – நண்பனை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான் மதன்.

"மதன்! உனக்கு... இதுல சம்மதமா?"

"சம்மதமா? இதைவிடப் பெரிய சந்தோஷம் என்னடா இருக்க முடியும்! நான்... நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்டா... தேங்க் யூ நண்பா!"

மலர்ந்து சிரித்தான் ஸ்ரீதரன். "மதன்! என்னை... உங்க வீட்ல மாப்பிள்ளையா ஏத்துப்பாங்களா?"

"அதெல்லாம் என் பொறுப்பு. நீ ஏன் அதைப்பத்தி கவலைப்படுறே? நான் இன்னிக்கே அம்மாகிட்ட... தாத்தாகிட்ட பேசிடுறேன்..." – என்றான் உற்சாகமாய்.

# 17

புத்தம்புது ஓலை வரும்
இந்தப் பூவுக்கொரு மாலை வரும்
நந்தவனங்கள் பூ மாலை கட்டும்
நாதஸ்வரங்கள் பொன்மேளம் கொட்டும்!

இரவின் அமைதியில் தாத்தாவின் அறையில் அனைவரும் கூடியிருந்தனர். அகல்யா, தேவகி, சுந்தரமூர்த்தி, மதன்.

அனைவரின் முகங்களையும் பார்த்தான் மதன்.

"இப்படி ஒண்ணுமே பேசாம இருந்தா எப்படி? நான் என் நண்பனின் விருப்பத்தைச் சொல்லிட்டேன். என்னோட விருப்பமும் இதுதான். இனிமே உங்க சம்மதம் மட்டும்தான் வேணும்."

"நாங்க சொல்றது இருக்கட்டும். முதல்ல இதுக்கு அந்தப் பையன் வீட்ல சம்மதிப்பாங்களா?" - தேவகி கேட்டாள்.

"கண்டிப்பா சம்மதிப்பாங்கம்மா... வீட்டுக்கு ஒரே புள்ளை ஸ்ரீ. அவன் விருப்பத்துக்கு மறுப்பு சொல்ல மாட்டாங்க அப்பா!"

"அவர் சம்மதம் சொல்றது இருக்கட்டும். முதல்ல தகப்பனும் மகனும் இப்படி சண்டை போட்டுட்டு இருக்காங்களே.. இவங்க எப்படி ஒத்துப்போவாங்க?"

"அதானே! ஏன்ப்பா மதன்! தகப்பனும் மகனும் ஒருத்தரையொருத்தர் பார்க்காம இருந்தா நாம எப்படிப்பா சம்பந்தம் பேச முடியும்?"



"சித்தி! ஸ்ரீயோட கோபம் நியாயமானது. பட் அவன் கோபக்காரன் இல்லை. அவனைச் சமாதானப்படுத்தி அவங்க அப்பாவோட சேர்த்து வெச்சப்புறம்தான் கல்யாணம்."

"மதன்! அவங்க அப்பா ஏன் இப்படிப் பண்ணினார்?"

"அம்மா! அவர் ரொம்ப நல்லவரும்மா. கொஞ்சம் உடம்பு முடியாதவர். அந்த அம்மாதான் பார்த்துக்கிட்டாங்க போலிருக்கு.

ஆனா இன்னமும் என்னால அவர் கல்யாணம் பண்ணியதை நம்ப முடியலை."

"நீங்க என்னப்பா ஒண்ணுமே பேசாம இருக்கீங்க?" - தேவகி கேட்டதும் வாய் திறந்தார் சுந்தரமூர்த்தி.

"ஸ்ரீதரனைப் பத்தி நாம யோசிக்க வேண்டாம்மா... புள்ளை சொக்கத்தங்கம். ஒரு குறை சொல்ல முடியாது. கண்ணுக்கும் மனசுக்கும் நிறைவான மாப்பிள்ளைதான்."

"பின்னே என்ன தாத்தா... சரின்னு சொல்ல வேண்டியதுதானே?"

"இல்லடா! கல்யாண விஷயத்தில அப்படியெல்லாம் சட்டுன்னு முடிவு எடுத்திடக்கூடாது."

"ஏன்?"

"இது ஒண்ணும் சின்னப் புள்ளைங்க விளையாட்டு இல்லைப்பா... கல்யாணம்கிறது ஆயிரம் காலத்துப் பயிர்."

"அது சரி தாத்தா! இப்போ எதுக்கு யோசிக்கணும்னு சொல்றீங்க? ஸ்ரீயைப் பத்தியோ அவன் குடும்பத்தைப் பத்தியோ உங்களுக்குத்தானே நல்லாத் தெரியும்?"

"தெரியும்டா!"

"வேறென்ன?"

"மதன்! கங்காதரன் இத்தனை வயசுக்கு மேல இப்படிப் பண்ணலாமா? ஊர்க்காரங்க என்ன சொல்லுவாங்க? நாம பொண்ணைக் கொடுக்கும் முன்னே இதெல்லாம் யோசிக்கணும்டா...!"

"தாத்தா!" - அதிர்ந்து போனான் மதன்.

"ஆமான்டா... கல்யாணம்னா சும்மா இல்லடா...!"

"வெரிகுட் தாத்தா. ரொம்ப நல்லாயிருக்கு. நம்ம வீட்டுப் பெண்ணைப் பார்த்திட்டுப் போறவன் எல்லாம் சொல்ற அதே வார்த்தையை நீங்களும் சொல்றீங்களே... இது என்ன தாத்தா நியாயம்?"

"மதன்...! தாத்தாவையே எதிர்த்துப் பேசுற அளவிற்குப் பெரிய ஆளாகிட்டியா நீ?"

"சும்மா இருங்கம்மா. ஒவ்வொரு முறையும் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நம்ம ஜெய்யை ரிஜெக்ட் பண்ணும்போது நாம எவ்வளவு வலியை அனுபவிக்கிறோம்!

அதே வலியை நாம அடுத்தவங்களுக்குக் கொடுக்கலாமா? வேற என்ன காரணம் வேணா சொல்லுங்க... நான் ஒத்துக்கிறேன்.

ஆனா இப்படி ஒரு கேவலமான காரணத்தைச் சொல்லி, ஜெய்க்குக் கிடைக்கப் போற அருமையான வாழ்க்கையைக் கெடுத்திடாதீங்க...!" - மதன் கோபமாய்ச் சொல்ல, வாயடைத்துப் போனார் சுந்தரமூர்த்தி.



"அப்பா! அவன் சொல்றதும் சரிதானே! நம்ம ஜெய்க்கு என்ன குறைச்சல்னு சொல்லுங்க...

ஆனா வர்றவன் எல்லாம் அவ தகப்பனைக் காரணம் காட்டித்தானே நிராகரிச்சாங்க...

இப்ப நாமும் அதையே செய்யலாமா?

பாவம் அந்தப் புள்ளை.... தன்னோட வேதனையை மறக்கத்தான் இங்கே வந்திருக்கு. நாம இப்படிச் சொன்னா... அது மனசு நொறுங்கிப் போயிடாதா?"

"சொல்லுங்கம்மா... வயசாகிட்டா... பழமைவாதியா இருக்கணும்னு இல்லை தாத்தா. ஊருக்காக வாழ வேண்டாம் தாத்தா. நமக்காக வாழுவோம். அடுத்தவங்களையும் வாழ வெச்சிப் பார்ப்போம். ப்ளீஸ் தாத்தா!

என் தங்கையையும் என் நண்பனையும் சந்தோஷமா வாழ அனுமதிங்க தாத்தா! ரெண்டு பேருமே காயம் பட்டவங்க. காயம்பட்டவங்களாலதான் அதனோட வலியை உணர்ந்து மருந்தா மாறமுடியும்.

ஸ்ரீ நல்லவன். என் தங்கையை அவன் நிச்சயமா சந்தோஷமா வாழ வைப்பான். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு.

என் தங்கையும் அவனோட மனசைப் புரிஞ்சுகிட்டு சந்தோஷமா வாழுவா... ப்ளீஸ் தாத்தா!" - மதன் நிறைஞ்சிய குரலில் சொல்ல, புன்னகைத்தார் சுந்தரமூர்த்தி.

"நீங்க எல்லாரும் இவ்வளவு சொல்லும்போது நான் என்னப்பா சொல்லப் போறேன்? நடத்துங்கப்பா... பிள்ளைங்க சந்தோஷமா வாழட்டும்."

"தாத்தா! நீங்களா சொல்றீங்க?" - வியப்பாய்க் கேட்டான்.

"உனக்கு உன் தங்கை மேல இவ்வளவு அக்கறை இருக்கும்போது எனக்கு என் பேத்திமேல அக்கறை இருக்காதா? சந்தோஷமா இருக்குடா. செய்... எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமா கங்காதரன்கிட்ட பேசு.

முடிஞ்சா நாளைக்கே பேசுங்க... அவன் நிச்சயம் சம்மதிப்பான். நம்ம உமாகுட்டி நிச்சயத்தோடயே ஜெயாக் குட்டி நிச்சயத்தையும் சேர்த்து வெச்சிடு."

"தாத்தா... தேங்க்யூ தாத்தா!" - உற்சாகமாய் தாத்தாவைக் கட்டிக் கொண்டான் மதன்.

"டேய்! போதும்டா. என்கிட்ட பேசின மாதிரி கங்காதரன்கிட்டயும் பேசி சம்மதம் வாங்கிடு. ஸ்ரீதரன் கோபத்தையும் மறக்க வை. சீக்கிரமா கல்யாணத் தேதியைக் குறிச்சிடலாம்."

"கண்டிப்பா தாத்தா... உங்களையே சமாளிச்சிட்டேன் மத்ததெல்லாம் ரொம்ப சுலபம் தாத்தா! எல்லாம் நான் பேசிக்கிறேன்."

தேவகி மகனை இடித்தாள். "மதன்! முதல்ல சித்திகிட்ட சம்மதமான்னு கேட்டியா?"

"அம்மா?"

"பாரு! சித்தியோட முகமே சரியில்லை..." - தேவகி சொன்னதும்தான் அகல்யாவின் பக்கமாய்த் திரும்பினான். அம்மா சொன்னது உண்மை.



அகல்யாவின் முகம் கலங்கிப் போயிருந்தது. தயக்கமும் விரக்தியுமாய் வாடிப் போயிருந்தது. மதனின் உற்சாகம் சட்டென வடிந்துவிட, மெல்ல சித்தியின் தோளைத் தொட்டான்.

"சித்தி!"

"ம்...?" - திடுக்கென நிமிர்ந்தாள்.

"என்னாச்சு சித்தி?"

"எ... என்ன மதன்?"

"நான் பேசினதுல உங்களுக்கு விருப்பம் இல்லையா?"

"அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லப்பா...!"

"சித்தி! உங்களுக்கு ஸ்ரீயைப் பிடிக்கலையா?"

"சேச்சே! அந்தப் புள்ளையைப் போயி பிடிக்காமப் போகுமா?"

"பின்னே என்ன சித்தி?"

"என்னவோ... மதன்! எனக்குப் பயமாவே இருக்கு."

"ஏன் சித்தி? ஒருவேளை ஸ்ரீயோட அப்பா இன்னொரு கல்யாணம் பண்ணிகிட்டதை நினைச்சுத் தயங்குறீங்களா?" - மதன் கூர்மையாய்ப் பார்த்தவாறே கேட்க, அவசரமாய்ப் பதறி மறுத்தாள் அகல்யா.

"ஐயோ! அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லப்பா... கட்டினவளையும் பச்சைக் குழந்தைகளையும் அம்போன்னு விட்டு ஓடிப்போன உன் சித்தப்பாவை விட அவர் ஒண்ணும் மோசமானவரில்லப்பா...!

சின்ன வயசிலேயே மனைவியை இழந்தும் இத்தனை வருஷமா கண்ணியமா வாழ்ந்திருக்காரு... கடைசி காலத்தில் தன்னைத் தாங்கிக் கொள்ள ஒரு துணை வேணும்னு நினைச்சுக்கூட அவர் அந்தப் பொண்ணை மணந்திருக்கலாம்...

அந்தப் பெண்ணுக்கு என்ன குறையோ? இல்லே, யாருமே இல்லாத அநாதையோ? ஏதோ காரணத்தால் தான்... அந்தப் பெண்ணும் அவரை மணக்கச் சம்மதித்திருப்பாள்.

அதனால நாம அவங்க வாழ்க்கையைப் பத்தி எந்தக் குறையும் சொல்லக் கூடாதுப்பா... அது அவரவர் சொந்த விருப்பம்!"

"இவ்வளவு தெளிவா யோசிக்கிறீங்க. வேறு எதைப் பத்தி சித்தி பயப்படுறீங்க? "

"என் பயமெல்லாம் உன் தங்கையை நினைச்சுத் தாம்பா."

"யாரு? ஜெய்யா?"

"ஆமாம்ப்பா!"

"ஏன் சித்தி? அவளுக்கு என்ன?"

"உனக்குத்தான் தெரியுமே. கல்யாணப் பேச்சை எடுத்தாலே ரொம்பப் பயப்படுறா. வேண்டாம்னு சொல்லி அழுறா. இதுக்கு அவ எப்படி சம்மதிப்பா? அதை நினைச்சுத் தான் பயப்படுறேன்."

"ப்பூ! இவ்வளவுதானா? நான் என்னவோ ஏதோன்னு நினைச்சிப் பயந்திட்டேன். ஜெய் சம்மதிச்சிடுவா சித்தி. நீங்க பயப்பட வேண்டிய அவசியமே இல்லை."



"என்னப்பா சொல்றே?"

"அவளுக்கு ஸ்ரீயை நிச்சயமா பிடிக்கும். எனக்குத் தெரியும்."

"என்ன?"

"ஆமா சித்தி. நான் பார்த்தவரைக்கும் சொல்றேன். நிச்சயமா சரின்னு சொல்லிடுவா!"

தேவகி எழுந்தாள். "மதன்! இருந்தாலும் அவகிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு மேற்கொண்டு பேசுவோமே. ஏன்னா நம்மோட விருப்பத்தை விட அவ விருப்பம்தான் முக்கியம்."

"ஆமாம்பா. எனக்கும் அதுதான் சரின்னு தோணுது."

"இவ்வளவுதானே. கேட்டுடுவோம். முதல்ல உமா பேசிப் பார்க்கட்டும். பிறகு நாம பேசலாம். சரியா?" - மதனின் கேள்விக்கு அனைவரும் புன்னகையோடு தலையசைத்தனர்.

## 18

நான்கு கண்ணில் இன்று
ஒரு காட்சியானது வானம்
காற்று பூமி இவை சாட்சியானது
நான் உனைப் பார்த்தது
பூர்வ ஜென்ம பந்தம்!

**சி**லீரென வீசிச் சென்ற கடும் குளிர் காற்று ஜெயஸ்ரீயின் உடலை வருடிச் சென்றது. அதைவிடவும் உமாவின் கேள்வி நடுக்கத்தை வரவழைத்தது. பயமாய் உமாவைப் பார்த்தாள்.

"உமா! நீ என்ன சொல்றே?"

"உனக்கு அவரைப் பிடிச்சிருக்கா ஜெய்?"

"ய... யாரை?"

"ஸ்ரீதரை. இவ்வளவு நேரமா அவரைப் பத்தித்தானே பேசினோம்."

"வேண்டாம் உமா."

"என்ன வேண்டாம்?"

"இந்தப் பேச்சு வேண்டாம்."

"ஏன் வேண்டாம்? நேற்றே பேசித் தீர்த்திருக்கணும். டிஸ்டர்ப் இல்லாமப் பேசணும்னுதான் இங்கே கூட்டிட்டு வந்திருக்கேன்."

மாலை மயங்கி இருள் சூழ ஆரம்பித்திருந்த நேரம், இன்று சீக்கிரமே பனி கொட்ட ஆரம்பித்திருந்தது. குளிர் காற்று உடலை நடுங்கச் செய்தது.

வீட்டின் பின்புறமாய் அமைந்திருந்த தோட்டத்தில் அமர்ந்திருந்தனர் இருவரும். கோடையில் குளிர்ச்சியாய் ரசிக்க வைக்கும் தோட்டம் பனிக்காலத்தில் குளிரால் வாட்டியது. தலை லேசாக வலிக்கத் துவங்கியது.

"உமா! வீட்டுக்குள்ள போயிடலாமா?"

"ஏன்?"

"லேசா தலை வலிக்குது."

"ஜெய்! நாளைல இருந்து கெஸ்ட் வந்திடுவாங்க. அப்புறம் தனியாப் பேச டயமே கிடைக்காது. அதான் இப்போ பேசுறேன்."

•



"என்ன பேசணும்?"

"நான் நினைக்கிறேன் ஸ்ரீ உன்னை விரும்புறார்னு."

"உளறாதே உமா!"

"உண்மையைத்தான் சொல்றேன். உம் மனசிலகூட அவர் மேல ஒரு ஈடுபாடு இருக்கு."

"சேச்சே..." – அவசரமாய் மறுத்தாள்.

"இதுல ஒன்னும் தப்பில்ல ஜெய். ஸ்ரீதர் நல்லவர்தான். அவர் பேமிலியும் ரொம்ப நல்லமாதிரின்னு அண்ணன் அடிக்கடி சொல்லுவான்."

"ஆனா என் பேமிலி அப்படி இல்லையே உமா?"

"ஜெய்."

"பெண் பார்க்க வர்றவங்க எல்லாம் எதைக் கேட்கிறாங்க, என்ன சொல்றாங்கன்னு உனக்குத் தெரியுமே!"

"அதில்லடி."

"இல்ல உமா! எனக்குக் கல்யாணம் குடும்ப வாழ்க்கை ...ல் உள்ள ஆர்வம் போயிடுச்சு. எந்த எதிர்பார்ப்பும் இல்ல."

"இப்படிச் சொன்னா எப்படி ஜெய்?"

"வேறென்ன சொல்ல? அப்பா செய்த தப்புக்கு நான் என்ன பண்ணுவேன் உமா. ஓடிப்போனவன் பொண்ணு ஒழுக்கமானவளா இருக்க மாட்டாளா? அது ஏன் எந்த மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கும் தெரிய மாட்டேங்குது?"

"எல்லாரும் ஒரே மாதிரி இருக்க மாட்டாங்க ஜெய்!"

"நிறைய பேரைப் பார்த்தாச்சு உமா. எனக்கு இப்பல்லாம் கல்யாணம்கிற பேச்சைக் கேட்டாலே வெறுப்பா இருக்கு."

"ஜெய்... இப்படி மனசொடிஞ்சி பேசாதே!"

"இதுக்குத்தான் உமா! இந்தப் பேச்சு வேணாம்னு சொன்னேன்..."

"ஜெய்! இதுவரை வந்த வரனெல்லாம் பெரியவங்களாத் தேடி வந்தது. ஆனா இது அப்படியில்ல.. அவர் உன்னை விரும்புவது எனக்கு நல்லாத் தெரியுது.

அவரோட பார்வையில... பேச்சுல ஒவ்வொரு அசைவிலயும் நான் அதைப் பார்க்கிறேன். விரும்பி வர்ற வாழ்க்கையை ஏத்துக்க உனக்கு என்ன தயக்கம்?"

"உமா! நீ புரியாமப் பேசுற..."

"நானா?"

"ஆமா! நீ சொல்ற மாதிரி ஒருவேளை அவர் என்னை விரும்பினாலும் கல்யாணம்னு வரும்போது அவர் சம்மதம் மட்டும் போதுமா? அவரைப் பெத்தவங்க வருவாங்க பேசுவாங்க...

அப்புறம் அப்பாவைப் பத்தி தெரிஞ்சப்புறம் காறித் துப்பிட்டுப் போவாங்க... இவரும் போயிடுவாரு. அதுக்கப் பிறகு என் நிலைமை என்னாகும்னு யோசிச்சியா?" கண்களில் நீர் துளிர்த்தது.

"ஜெய்!" – உமாவின் குரல் தடுமாறியது.

"இதுவரை வந்த மாப்பிள்ளைகளை நான் பார்த்ததில்லை... ஆனா இவரைப் பார்க்கிறேன்... பேசுகிறோம்...



சிரிக்கிறோம்... இப்படியே இருந்திட்டுப் போயிடுறோம்... உமா.

எனக்கு இது போதும். இந்த சில நாட்களா நானும் கவலை மறந்து சந்தோஷமாத்தான் இருக்கேன். இதுக்கு மேல கல்யாணம் அது இதுன்னு ஆசைப்பட்டு என்னை நானே வருத்திக்க விரும்பலை."

"ஜெய்! நீ தேவையில்லாமப் பயப்படுறே?"

"இல்லை உமா! இந்தப் பயம் என் உடம்போட உறைஞ்சு போச்சு. இது மாறாது... விட்டுடு..."

"ஒருவேளை அவர் ஃபேமிலியில உன்னை ஏத்துக்கிட்டா?"

"கற்பனைகளை வளர்த்திட்டு கஷ்டப்பட வேண்டாமே...!"

"நீ ஏன் இப்படித் தப்பாவே நினைக்கிறே... எல்லாருமே முட்டாளா... பத்தாம்பசலியா... இருக்க மாட்டாங்க..."

"உமா! என்னால தலைவலியைத் தாங்க முடியலை... ப்ளீஸ்! இந்தப் பேச்சை விடேன்..." – தலையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"சரி! நான் பேசலை. ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன். அதையாவது கேளு...."

"என்ன?"

"இன்னும் ஒரு நாள்தான் இருக்கு. அதுக்குள்ள நல்லா யோசி."

"எதை?"

"அவர் சொன்னதைப் பத்தி..."

"எது? அவர் சொன்ன ஜோசியத்தையா?"

"ம்..."

"உமா! அவர் ஏதோ டைம் பாஸுக்காக விளையாட்டாச் சொன்னதை வெச்சா நீ என்னை இப்படிக் குழப்பினே?"

"இல்லை ஜெய். நான் சொன்னது விளையாட்டு இல்லை... உண்மை... சத்தியமான உண்மை." – வெகு அருகே கேட்ட ஸ்ரீதரனின் குரலில் மிரண்டு இருவரும் பதறி எழுந்தனர்.

நிழல் உருவமாய் அவர்களை நெருங்கினான். "தேங்க்ஸ் உமா!"

"எதுக்கு அண்ணா?"

"என்னை... என் மனதைப் புரிந்து கொண்டதற்கு... எனக்காக ஜெய்யுடன் பேசியதற்காக...!"

"ஜெய் எனக்கு சகோதரி மட்டுமில்லை... என் தோழியும்கூட!"

"தெரியும். தினமும் பார்க்கிறேனே..."

"அவள் பயப்படுவதிலும் அர்த்தம் இருக்கிறது. ஏன்னா...?"

"எல்லாம் எனக்குத் தெரியும் உமா. நான் ஜெய்யிடன் ஒரு பத்து நிமிடம் பேசலாமா?"

"தாராளமாய்... நான் வெயிட் பண்றேன்!" – என நகர்ந்தவளைக் கைபற்றி நிறுத்தினாள் ஜெயஸ்ரீ.



"எங்கே போற உமா?"

"இதோ அந்த மரத்தடியில நிக்கிறேன்... பேசிட்டு வா."

"பேச எதுவுமில்லை... வா போகலாம்!" – என உமாவுடன் நடக்க ஆரம்பித்தாள்.

"என்னைப் பிடிக்கலையா ஜெய்?" – ஸ்ரீதரனின் கேள்வியில் சட்டென நின்றாள்.

உமாவின் முகம் புன்னகையால் விரிந்தது. தோழியிடம் இருந்து தனது கையை விடுவித்துக் கொண்டு விலகி நடந்தாள்.

"சொல்லு ஜெய். என்னைப் பிடிக்கலையா?" – அவன் மீண்டும் கேட்க, பதிலின்றி தடுமாறினாள்.

"அ... அப்படியெல்லாம் இல்ல...!"

"பிறகேன் என்னை ஒதுக்குகிறாய்?"

"இல்லை... உங்களுக்கு என்னைப் பற்றி... என் குடும்பத்தைப் பற்றி...!"

"எல்லாம் தெரியும்."

"என்ன?" – திகைப்பாய் நிமிர்ந்தாள்.

"எப்படி? யார்... யார் சொன்னது?"

"மதனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்."

"ஓ! பரிதாபத்தால் ஏற்பட்ட விருப்பமா இது?" – அடிபட்ட குரலில் அவள் கேட்க, அவசரமாய் மறுத்தான் ஸ்ரீதரன்.

"நோ... நோ... அப்படி இல்லை...!"

"பின்னே? என்னைப் பார்த்தாலே எள்ளும் கொள்ளும் வெடிக்குமே உங்க முகத்தில... பிறகெப்படி பிரியம் வரும்?"

"உண்மைதான். வெறுப்பு வரும்தான். ஆனால் உன்மீது மட்டுமில்லை ஜெய். பெண்கள் மீதே வெறுப்பு வரத்தான் செய்தது. ஆனால் அது மாறியது உன்னால் தான்...!"

"நீங்க... உங்களுக்கு லவ் ஃபெய்லியரா?"

"சேச்சே! லவ் பண்ணினாத்தானே தோற்பதற்கு?"

"பிறகென்ன பெண்கள் மீது அவ்வளவு வெறுப்பு?"

"சொல்கிறேன். நானும் உன்னைப் போல் பாதிக்கப் பட்டவன்தான்."

"என்ன?"

"யெஸ். உன்னைவிட மோசமாய்ப் பாதிக்கப்பட்டவன்."

"எ... என்ன சொல்றீங்க?"

"உன் அப்பா நீங்க எல்லாம் குழந்தையா இருக்கும்போது ஓடிப்போனார். ஆனா... என் அப்பா...!"

"சொ... சொல்லுங்க."

"எப்படிச் சொல்றது? என் அப்பா இத்தனை வயசுக்கு அப்புறம் ஒரு... ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார்...!"

"எ... என்ன?"

"ஆமாம்... இப்ப நினைச்சாலும் எனக்கு உடம்பெல்லாம் கூசுது."



"உங்க அம்மா?"

"நான் சின்னப் பிள்ளையா இருக்கும்போதே அம்மா இறந்திட்டாங்க..."

"எ... எப்படி?"

"உடம்பு சரியில்லாம... ஜாண்டிஸ்ல இறந்துட்டாங்க..."

"அப்போ... அதுக்குப் பிறகு உங்க அப்பா இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலையா?"

"இல்லை... எனக்காகத்தான் வாழ்ந்தாரு. ஆனா இப்போ ரெண்டு மாசம் முன்னாலதான்..."

"கல்யாணம் பண்ணினது உங்களுக்குத் தெரியாதா?"

"நான் அமெரிக்காவிலதான் மேல் படிப்பு படிச்சிட்டு இருந்தேன். லீவுல வந்திட்டுப் போவேன். என்கிட்ட ஒரு வார்த்தைகூடச் சொல்லாம இந்தக் காரியம் பண்ணிட்டார்.

கோபத்தில வீட்டை விட்டு வெளியேறித்தான் இங்கே வந்தேன். உனக்குத் தெரியுமா ஜெய்? அவமானம் தாங்காம சூஸைட் பண்ணிக்கத்தான் அந்த மலைமேல ஏறினேன்..."

"ஐயோ!"

"ரொம்பக் கஷ்டமா இருந்ததால அந்தப் பாறைமேல வந்து படுத்தேன். தொடர்ந்து பல நினைவுகள்... வருத்தங்கள்... சுற்றுப்புறமே மறந்து போயிட்டேன்... உன் குரல்தான் என்னை எழுப்பிச்சு.

ஏற்கெனவே அந்தப் பொண்ணுமேல இருந்த கோபம், எரிச்சல் எல்லாமே சேர்ந்துதான் உன்மேல கோபத்தைக் காட்ட வெச்சது... அப்பவும் உமா மேல வந்த கோபம் உன் மேல வரலை.

உன் முகத்தைப் பார்த்து என்னால கோபப்பட முடியலை... உனக்கு என்னாலதான் தேள் கடிச்சதுன்னு நினைச்சு ரொம்ப வேதனைப்பட்டேன்..."

"இப்போ... உங்க அப்பா?"

"அவரை விட்டுட்டு வெளியே வந்திட்டேன். அவரைப் பார்க்கலை!"

"ஏன்?"

"பிடிக்கலை... மேலும் மேலும் வெறுப்பை வளர்க்க விரும்பலை...

ஜெய்! நான் நிறையப் படிச்சிருக்கேன். எந்த வேலையும் சுலபமாக் கிடைச்சிடும். நாம கல்யாணம் பண்ணிட்டு அமெரிக்காவில போய் செட்டிலாகிடலாம்..."

"ஏன்?"

"இந்த ஊர் வேண்டாம் ஜெய்... பார்க்கிறவங்க எல்லாம் அப்பா செய்த காரியத்தைப் பத்தியே பேசுறாங்க... யாரையுமே பார்க்கப் பிடிக்கலை..."

"அப்போ உங்க அப்பா?"

"அவரைப் பார்த்துக்கத்தான் ஆள் இருக்கே... எனக்குன்னுதான் யாருமே இல்லை...!"

"நான் இருக்கேன்."

"ஜெய்!"

"நான் இருக்கேன் ஸ்ரீ. காயம் பட்டவங்களுக்குத்தான் வலியோட வேதனை புரியும். எனக்கு உங்க வேதனை புரியுது."



"தேங்க் யூ ஜெய்!" - அவளது கரத்தைப் பற்றி கண்களில் வைத்துக் கொண்டான்.

"ஸ்ரீ!"

"சொல்லும்மா..."

"இது... பரிதாபத்தால், இரக்கத்தால் ஏற்பட்ட பிரியம் இல்லையே!"

"ம்ஹூம்... உன்னைப் பார்த்ததில் இருந்தே ஏற்பட்ட பிரியம். உன் மனம் நோகும்படி பேசிவிட்டு எத்தனை முறை வருத்தப்பட்டிருக்கிறேன் தெரியுமா?"

"ம்...?"

"நிஜம்.. இந்தக் குழந்தை முகத்தைப் பார்த்தால் எப்படி கோபப்பட மனம் வரும்?"

"பார்க்கும்போதெல்லாம் சீறுவீர்களே?"

"என்னை நானே ஏமாற்றியிருக்கிறேன் ஜெய். உன்னை முதன்முறையாய் பார்த்தேனே... மழையில் நனைந்த அந்த முகம்.. அந்த மென்குரல்... அந்தக் கொலுசொலியின் சிணுங்கல்... எல்லாம்... இங்கே பசுமையாய் இருக்கிறது...!" - இதயத்தைத் தொட்டுக் காட்டினான்.

"ஆமா! உங்களுக்கு நிஜமாவே ஜோசியம் தெரியுமா?"

"யாருக்குத் தெரியும்?"

"பின்னே! நேற்று சொன்னீங்களே...!"

"அதெல்லாம் ஐயாவோட மனசை உனக்குத் தெரிவிக்கத்தான்..."

"அச்சோ! மதன் அண்ணா அதையெல்லாம் உண்மைன்னு நினைச்சிடுச்சே...!"

"உண்மையாகப் போகிறதே... ஜெய்!"

"இருந்தாலும் அண்ணனை ஏமாற்றியது போலிருக்கே...!"

"உன் அண்ணனிடம் எல்லாம் பேசிவிட்டேன்."

"எல்லாமா?"

"ம்...!"

"எப்போ?"

"நேற்று இரவே...!"

"அச்சோ! தப்பா நினைச்சிட்டாங்களா?"

"உன் தங்கையை எனக்கு மணமுடித்துத் தருவாயான்னு கேட்டா... ஏன் தப்பா நினைப்பான்?"

"அப்படியா கேட்டீங்க?"

"ஆமாம்."

"அப்படின்னா... உமாகிட்டயும் நீங்கதான் சொன்னீங்களா?"

"சேச்சே! மதன் சொல்லியிருக்கலாம்."

"அப்போ எல்லாருக்கும் தெரிஞ்சிருக்குமே...!"

"கல்யாணம், நிச்சயதார்த்தம்னா எல்லாருக்கும் தெரியணும்... ஜெய்!"

"நிச்சயதார்த்தமா?"



"ஆமா."

"யாருக்கு?"

"நமக்குத்தான்..."

"அச்சோ! எப்போ?"

"நாளை மறுநாள்...!"

"அன்னிக்கு உமாவுக்குத்தான் நிச்சயதார்த்தம்."

"நமக்கும் அன்னிக்குத்தான் நிச்சயம்."

"யார் சொன்னது?"

"நான், மதன், தேவகிம்மா, அகல்யா ஆன்ட்டி."

"எல்லாரும் பேசிட்டீங்களா?"

"ம்..."

"அப்போ என்கிட்ட யாருமே கேட்கலையே?"

"ஏய்! பொய் சொல்லாதே..."

"நிஜமா யாரும் கேட்கலை!"

"இப்போ கொஞ்ச நேரம் முன்னால உமா கேட்டா... இப்போ நான் கேட்டேன்..."

சிணுங்கலோடு தலையைக் குனிந்து கொண்டாள். அவளது முகத்தை நிமிர்த்தினான்.

"ஜெய்!"

"ம்..."

"உனக்கு அந்தக் குங்குமக் கலர் பட்டுப் புடவை பிடிச்சிருக்கா?"

"ரொம்பப் பிடிச்சிருக்கு."

"அதுதான் நம்ம நிச்சயதார்த்தப் பட்டு."

"ம்...?"

"ம்... அதைக் கட்டிட்டு தலைநிறைய பூ வெச்சிட்டு... என் முன்னால வந்து நீ நிற்கணும்... அதைப் பார்த்து அப்படியே மயங்கிடணும் நான்..." - ஸ்ரீதரன் சொல்ல,

"போதும்ப்பா... எவ்வளவு நேரம்தான் நான் கால் கடுக்க நிற்பது?" - என உமா குரல் கொடுத்ததும், அவனிடமிருந்து பதறி விலகி, உமாவை நோக்கி ஓடினாள்.

## 19

என்றும் உனக்காக உயிர் வாழும்
துணையில்லையா - அவள் ஒளி
வீசும் எழில் கொண்ட சிலையில்லையா
அவள் வாழ்வு நீ தந்த வரமல்லவா!

**ய**முனா தந்த மருந்தைக் கஷ்டப்பட்டு விழுங்கினார் கங்காதரன். அவரது மார்பை நீவிவிட்டாள் யமுனா.

"இன்னும் கொஞ்சம் வெந்நீர் குடிக்கிறீங்களா?"

"வேண்டாம்மா... போதும்."

"சரி... கொஞ்ச நேரம் உட்கார்ந்திட்டு அப்புறம் படுங்க..."

"யமுனா!"

"என்னங்க?"

"மதன் போன் பண்ணினானா?"



"இல்லைங்க... போன் வந்தா சொல்லாமல் இருப்பேனா?"

"எனக்குப் புள்ளையோட குரலையாவது கேட்கணும் போல இருக்கு!"

"நான் வேணா போன் பண்ணித் தரட்டுமா?"

"வேணாம்... வேற யாராவது எடுப்பாங்க. மதன் பேசட்டும். நம்ம புள்ள கோபமெல்லாம் முதல்ல குறையட்டும்..."

"சரிங்க."

"யமுனா!"

"என்னங்க?"

"நான்தான் இப்போ எழுந்து நடமாடுறேனே...!"

"ஆமா! அதுக்கென்ன?"

"மதன் வீடு வரைக்கும் போயிட்டு வரவா?"

"அவ்வளவு தூரமா?"

"இதோ இருக்கிற கோத்தகிரிதானே... கார்ல போயிட்டு வந்திடுறேன்."

"வேணாங்க... இப்பத்தான் மூச்சை சீரா விடுறீங்க... இப்போ டிராவல் பண்ணி அதிகமாகிட்டா கஷ்டம்!"

"அதெல்லாம் ஒண்ணும் பண்ணாது."

"சொன்னாக் கேளுங்க... இன்னும் ஒரு வாரத்துல செக்-அப்புக்குப் போகணுமே... அப்போ டாக்டர்கிட்ட கேட்டுட்டுப் போகலாம்."

"இன்னும் ஒரு வாரமா?"

"ஒரு வாரம்தான்..."

"யமுனா! என்னால அவ்வளவு நாள் காத்திருக்க முடியாது. புள்ளையைப் பார்க்கணும் போல இருக்கு."

"உங்க ஆசை புரியுதுங்க... ஆனா உடம்பு சரியாகட்டுமே...!"

"அது எப்பவுமே இப்படித்தானே இருக்கப் போகுது?"

"இல்லை... வேளாவேளைக்கு மருந்து சாப்பிட்டு ரெஸ்ட் எடுத்தா சீக்கிரமே சரியாகிடும்."

"ம்க்கும்... நீயும் இதையேதான் சொல்லிட்டு இருக்கே...? எனக்கு நம்பிக்கை இல்லை!"

"இப்படியெல்லாம் விரக்தியாப் பேசக் கூடாது. நம்பிக்கையோட இருக்கணும்..."

"நம்பிக்கையோடத்தான் இருந்தேன். ஆனா..."

"என்னங்க?"

"கொஞ்சம் பொறுமையா இருந்து என் பேச்சைக் கேட்காமப் போயிட்டானே...!"

"எல்லாம் சரியாகிடும்."

"என் புள்ளை இதுவரை என்கிட்ட கோவிச்சதே இல்லம்மா...!"

"இந்தக் கோபமும் சீக்கிரம் மாறிடும்ங்க..."

"அப்படியா சொல்றே?"



"நான் மதன் தம்பிகிட்ட எல்லாம் தெளிவா சொல்லி அனுப்பியிருக்கேன். அவர் நம்ம புள்ளைகிட்ட பேசி அனுப்பி வைப்பாரு..."

"அப்படி என்ன சொல்லி அனுப்பினே?"

"எல்லாம் பிறகு சொல்றேன்... முதல்ல படுத்து ரெஸ்ட் எடுங்க."

"அதான் எப்பவும் படுத்தே இருக்கேனே...!"

"நல்லா ரெஸ்ட் எடுக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்காரே?"

"இந்த மதன்பய ஒரு போனாவது பண்ண மாட்டானா?"

"அங்கே அவருக்கு என்ன வேலையோ?"

"ஆமா! அவன் தங்கைக்கு நிச்சயதார்த்தம்னு சொன்னானே... பார்த்தியா யமுனா! நம்மை ஒரு வார்த்தை கூப்பிடலையே...?"

"கூப்பிடத்தான் வந்தாருங்க... உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னதும் எப்படிக் கூப்பிடுறதுன்னு தயங்கிச்சோ என்னவோ?"

"என்னைக் கூப்பிடவா வந்தான்?"

"அப்படித்தான் அந்தத் தம்பி சொல்லிச்சு."

"அதானே! ரொம்ப நல்ல புள்ளை மதன். நீ ஊர்ல இருந்து வந்தா மதனும் நம்ம வீட்லதான் இருப்பான். ஸ்ரீ ஊருக்குப் போறவரைக்கும் போக மாட்டான்..." - கங்காதரன் பெருமையாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தொலைபேசி அழைத்தது.

"யமுனா! யாருன்னு பாரேன்?"

"சரிங்க...!" - என்றவள் போனை எடுத்ததும் முகம் மலர்ந்தாள். ரிஸீவரை மூடிக் கொண்டு, "என்னாங்க! போன்ல மதன்...!" - என்றாள்.

"கொடு... என்கிட்ட கொடு! நான் பேசுறேன்..." - வேகமாக எழுந்து வந்து ரிஸீவரை வாங்கினார்.

"மதன்! எப்படிப்பா இருக்கே?"

"நல்லா இருக்கேன்ப்பா! உங்களுக்கு உடம்பு எப்படி இருக்கு?"

"ம்... பரவாயில்லைப்பா...!"

"மருந்தெல்லாம் சரியா சாப்பிடுறீங்களாப்பா...?"

"சாப்பிடுறேன்ப்பா... என் புள்ளை எப்படி இருக்கான்? பக்கத்தில இருக்கானா?"

"ஸ்ரீ... கொஞ்சம் வெளியே போயிருக்கான்ப்பா...!"

"பக்கத்தில இல்லையா?" - ஏமாற்றமாய் முகம் வாடினார்.

"அப்பா! வருத்தப்படாதீங்க.. நான் அவனைப் பத்திப் பேசத்தான் இப்போ போன் பண்ணினேன்."

"என்னப்பா?"

"அப்பா! உங்களுக்கு உடம்பு நல்லா இருந்தா... இங்கே நம்ம வீட்டுக்குப் புறப்பட்டு வர முடியுமா?"

"என்னப்பா! எதுவும் அவசரமா? என் புள்ளைக்கு...!"

"எல்லாம் நல்ல விஷயம்தான்ப்பா...!"



"நல்ல விஷயம்... அட! உன் தங்கை நிச்சய தார்த்தம்னு சொன்னியே... அதுவா?"

"அதுவும்தான்."

"அப்படின்னா?"

"அப்பா! உங்ககிட்ட முக்கியமான விஷயம் பேசணும்...?"

"சொல்லுப்பா... ஏன் தயங்குற?"

"நாளைக்கு என் தங்கைக்கு மட்டுமில்ல... நம்ம ஸ்ரீக்கும் நிச்சயதார்த்தம்..."

"என்ன?" - கங்காதரனின் உடல் அதிர்ந்தது. யமுனா [illegible]ட்டமாய் கணவனைப் பற்றிக் கொண்டாள்.

"என்னங்க! என்னாச்சு? ஏன் பதறுறீங்க?"

"ஒண்ணுமில்ல... சும்மா... லேசான அதிர்ச்சி!" - என்றவாறே ரிஸீவரை காதில் வைத்தார்.

"சொல்லுப்பா...!"

"அப்பா! நீங்க தப்பா எடுத்துக்காதீங்க... இது திடீர்னு முடிவாயிடுச்சு..."

"என்கிட்ட சொல்லணும்னு தோணிச்சே... ரொம்ப சந்தோஷம்ப்பா!"

"ஸாரிப்பா...!"

"பரவாயில்லை. உன் தங்கைதான் பெண்ணா?"

"ஆமாம்ப்பா! ஸ்ரீயோட விருப்பத்துலதான் நாங்க சம்மதிச்சோம்."

"போன முறை என்னைப் பார்க்க வரும்போது என்கிட்ட எதுவும் சொல்லலியே... நீ?"

"நேற்றுதான்ப்பா எங்களுக்கே தெரியும். அதுக்கப் புறம்தான் வீட்ல பேசி முடிவு பண்ணினோம்."

"நீ அப்பவே நிச்சயதார்த்தம்னு சொன்னியே?"

"ஐயோ அப்பா! நான் சொன்னது என்னோட மூத்த தங்கை. இப்போ ஸ்ரீக்கு பேசியிருக்கிறது என்னோட அடுத்த தங்கை."

"சரிப்பா... நல்லபடியா நடக்கட்டும்...!"

"என்னப்பா இப்படிச் சொல்லிட்டீங்க. இது உங்க புள்ளை நிச்சயம். நீங்க இல்லைன்னா எப்படி?"

"நான் எதுக்குப்பா அங்கே? நான்தான் அவனுக்கு வேண்டாத ஆளாகிட்டேனே... எப்படியோ என் புள்ளைக்கு ஒரு நல்லது நடந்தா சந்தோஷம்தான்...!"

"அவன் சின்னப்பையன். கோபப்படலாம். அதுக்காக நாம அப்படியே விட்டுடலாமா?"

"நான் என்னப்பா செய்ய முடியும்?"

"புறப்பட்டு வாங்கப்பா... முடிஞ்சா அம்மாவையும் கூட்டிட்டு வாங்க. நேர்ல பார்த்துப் பேசி ஸ்ரீயை சமாதானப்படுத்துங்க... அவனைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா?

புரிஞ்சுப்பான்... ஒரே பிள்ளையோட நிச்சயதார்த் தத்தை நீங்க பார்க்க வேண்டாமா? அதுக்காகத்தான் கூப்பிட்டேன்..."



"என் மகன் என்னைக் கூப்பிடச் சொன்னானா?"

"இல்லைப்பா! நான் அவனுக்கு தெரியாமத்தான் போன் பண்றேன். நீங்க வந்து பேசுங்க... பொது இடத்தில அவன் கோபப்பட மாட்டான்."

"வேண்டாம்ப்பா... நாங்க வந்தா ஏதாவது பிரச்சனையாகிடும்...!"

"பிரச்சனை ஆனாத்தானே தீர்வு கிடைக்கும். ஒருத்தரை ஒருத்தர் பார்க்காம இருந்தா பிரிவு நிரந்தரமாகிடும்ப்பா... எதுவா இருந்தாலும் உடனே பேசிச் சரி பண்ணிடணும்...!"

"சரிப்பா..."

"புறப்பட்டு வந்திடுறீங்களா?"

"சரிப்பா! எதுக்கும் என் மகன்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுடவா?"

"கெட்டுது கதை... அவன் இப்பத்தான் சகஜநிலைக்குத் திரும்பி வர்றான்... நீங்க போன்ல பேச வேண்டாம்... டென்ஷனாயிடுவான்...!"

"நேர்ல வந்தா இன்னும் கோபப்படுவானே...?"

"வீட்ல நிறைய விருந்தாட்கள் வந்திருக்காங்கப்பா... அதோட அவன்தான் மாப்பிள்ளை... மத்தவங்க முன்னாடி கோபப்பட்டுக் கத்த முடியாது."

"அப்போ... நாங்க வரலாமா?"

"கண்டிப்பா வரணும். நீங்க வந்து ஆசீர்வாதம் பண்ணினாத்தான் அவங்க நல்லா வாழ்வாங்க."

"வர்றோம்ப்பா..."

"கண்டிப்பா அம்மாவையும் அழைச்சிட்டு வாங்க. இது உங்க மருமகளோட வேண்டுகோள்!"

"என்ன? என் மருமகளே சொன்னாளா?"

"ஆமாம்ப்பா... அவதான் ஸ்ரீயை எப்படியும் சமாளிச்சுடலாம்னு சொல்லி என்னைப் போன் பண்ணச் சொன்னா...!"

"போதும்ப்பா... மனசு குளிர்ந்து போச்சு. என் புள்ளை சந்தோஷமா வாழ்வான்கிற நம்பிக்கை இருக்கு..."

"புறப்பட்டு வாங்கப்பா. வந்து ஆசீர்வாதம் பண்ணுங்க!"

"வர்றேன்ப்பா... கண்டிப்பா வர்றேன்... எம் மருமக எப்படி இருப்பா மதன்?"

"வந்து பாருங்களேன்... பார்த்திட்டுச் சொல்லுங்க."

"உன் தங்கையாச்சே... தங்கமான பொண்ணாத்தான் இருப்பா. நான் உடனே கிளம்பி வர்றேன்."

"சரிப்பா... வெச்சிடுறேன்!" – என்றவாறே போனை வைத்தான் மதன். ஆவலாய் அவனையே பார்த்துக் கொண்டு நின்ற ஜெயஸ்ரீ அவசரமாய்க் கேட்டாள்.

"என்ன அண்ணா சொன்னாங்க?"

"உடனே கிளம்பி வர்றாங்களாம்."

"அப்பா! பயந்திட்டே இருந்தேன். இனிமேத்தான் நிம்மதி."



"ஏம்மா! இது ஸ்ரீக்குத் தெரிஞ்சா கோபப்படுவானே...?"

"அதுக்காகப் பெத்தவங்களைக் கூப்பிடாம விடலாமாண்ணா...? அவருக்குக் கோபம். அதனால பேசாம இருக்காரு... நாளைக்கே கோபம் போனதும் இதையெல்லாம் நினைச்சு வருத்தப்படக் கூடாதில்ல...!"

"அதுவும் சரிதான்..."

"அண்ணா! அவங்கள்லாம் வர்ற வரைக்கும் இவருக்குத் தெரிய வேண்டாம்."

"சரி!"

"அண்ணா! அவங்களுக்கு என்னைப் பிடிக்குமில்ல...?"

"உன்னைக்கூட பிடிக்காமப் போகுமா? நீ தேவதைடா!"

"அண்ணா! அப்பாவைப் பத்தித் தெரிஞ்சா மறுத்திடுவாங்களோ...?" – ஜெயஸ்ரீயின் குரலில் நடுக்கம் தெரிந்தது. பரிவோடு அவளது தலையை வருடினான்.

"ஏன்டா பயப்படுறே? ஸ்ரீயோட ஃபேமிலி ரொம்ப நல்ல ஃபேமிலி. அவங்க அப்பா ரொம்ப நல்லவர். படிச்சவர்... இதையெல்லாம் ஒரு பிரச்சனையா எடுத்துக்க மாட்டாங்க... தைரியமா இருடா கண்ணு!"

"சரிண்ணா!"

"அந்த அம்மாகூட ரொம்ப நல்ல பொண்ணாத்தான் தெரிஞ்சாங்க!"

"வரட்டும்... பேசிப் பார்க்கலாம். ஒரே பையனோட நிச்சயதார்த்தம் நடக்கும்போது அவங்க இருக்க வேண்டாமா?"

"வேண்டாம்... வேண்டாம்!" - ஸ்ரீதரனின் கோபக் குரலில் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர். கோபமாய் நின்று கொண்டிருந்தான் ஸ்ரீதரன்.

"வா... வா ஸ்ரீ! எப்போ வந்தே?"

"உன்னோட வளர்ப்புத் தந்தைகிட்ட பேசிட்டு இருந்தியே... அப்பவே வந்திட்டேன்."

"ஸ்ரீ!"

"பேசாதே... உன்மேல எவ்வளவு நம்பிக்கை வெச்சிருந்தேன். நீயும் என்னை ஏமாத்திட்டே இல்ல?" - கண்கள் சிவக்கக் கேட்டான்.

"இல்ல ஸ்ரீ...! நான் உனக்காகத்தான்...?"

"நோ... எனக்காகன்னு சொல்லாதே! உனக்காக உங்க குடும்பத்திற்காகன்னு சொல்லு..."

"ஸ்ரீ! ஏன் இப்படிப் பிரிச்சுப் பேசுற?"

"ஆமா! நாளைக்கு உன் உறவுக்காரங்க எல்லாம்... மாப்பிள்ளைக்கு அம்மா, அப்பா இல்லையா...? அநாதைப் பயலான்னு கேட்பாங்கன்னுதானே... எனக்குத் தெரியாம போன் பண்ணி வரச் சொல்றே?

இவங்கதான் எங்க சம்பந்தின்னு ஊர் முன்னால தலை நிமிர்ந்து சொல்லணும்... நான்... என் மனசு என்ன பாடுபட்டாலும் உனக்குக் கவலையில்லை... அப்படித்தானே!"

"ஏங்க! இப்ப ஏன் இவ்வளவு கோபப்படுறீங்க? அண்ணன்கிட்ட நான்தான் போன் பண்ணச் சொன்னேன்!" - ஜெயஸ்ரீ பதறினாள்.



"ஜெய்! நீ... நீ கூட என்னோட ஃபீலிங்க்ஸைப் புரிஞ்சுக்கலை இல்ல...!"

"அப்படி இல்லைங்க... நான்?"

"உனக்கு நான் மட்டும் வேண்டாம். என் குடும்பம் மூலமா வர்ற சொத்து எல்லாம் வேணும் இல்ல...!"

"ஐயோ! இப்படியெல்லாம் பேசாதீங்க... உங்க அப்பாவுக்கு நீங்க ஒரே பிள்ளை. உங்க வாழ்க்கையில நடக்கிற நல்லதை உங்க அப்பா பார்க்க வேண்டாமா?

நீர் அடிச்சு நீர் விலகாதுன்னு சொல்வாங்களே... இன்னிக்கு மனவருத்தத்தில பிரிஞ்ச நீங்க... இப்படியே விலகிப் போயிடக்கூடாதுன்னுதான் நம்ம கல்யாணத்திலயாவது நீங்களும் அப்பாவும் சேரணும்னுதான்... நான் இப்படிப் பண்ணினேன்."

"எனக்குத்தான் அந்த உறவே வேண்டாம்னு சொல்றேனே...?"

"அப்படிச் சொல்லாதீங்க... அப்பான்ற உறவு எவ்வளவு முக்கியம்னு எனக்குத் தெரியும். ஏன்னா அதை உணர்ந்தவ நான்...!" - கண்கள் கலங்க நிறுத்தினாள்.

அவளது கண்களில் கண்ணீரைக் கண்டதும் சற்று பதறினான் ஸ்ரீதரன்.

"ஜெய்!"

"ஸ்ரீ! எனக்குத்தான் அப்பா இல்லாமலே போயிட்டாரு... இத்தனை வருஷமா அந்த உறவோட அன்பை உணர முடியாமப் போயிடுச்சு... இனி என் மாமனார் மூலமா அந்த அன்பை உணர்ந்து கொள்கிறேனே...!"

"இல்லை ஜெய்... நான்?"

"எனக்கு மாமனார், மாமியார் வேணும் ஸ்ரீ! நீங்க சொல்ற சொத்தைவிட இந்த உறவுகள் பெரிசு ஸ்ரீ. நம்ம குழந்தைகளுக்கு தாத்தா, பாட்டி வேணும் ஸ்ரீ... நீங்க என்னோட ஃபீலிங்க்ஸையும் புரிஞ்சுக்குங்க...!"

ஸ்ரீதரன் பேச்சு வராமல் தடுமாற, மதன் அவனது தோளைத் தொட்டான்.

"ஸ்ரீ! முதல்ல கோபப்படுறதை விட்டுட்டு நான் சொல்றதைக் கேளு. நீ மட்டும் கொஞ்சம் பொறுமையா இருந்திருந்தா... பிரச்சனை இவ்வளவு தூரம் வந்திருக்காது."

"என்ன?"

"ஆமான்டா! யாரையுமே ஒரே பார்வையில பிடிச்சிடுவியே...! நீ உன்னோட அம்மாவை ஐ மீன் உன்னோட சின்னம்மாவைப் பார்த்தியா?"

"மதன்! அவளைப் பத்திப் பேசாதே... என் அப்பாவை மயக்கினவ... அவ!"

"இல்லடா! அவங்களைப் பார்த்தா அப்படித் தெரியலை!"

"என்ன? நீ அவளைப் பார்த்தியா?" - குரலில் கோபம் தெறித்தது.

"ஆமா."

"எப்போ? எங்கே?"

"நீ இங்க வந்த பிறகு... உன் வீட்ல போய் பார்த்தேன்."



"மதன்! நீ...?"

"பொறுமையாக் கேளு. நீ நம்ம வீட்டுக்கு வந்த பிறகு சிவசாமி அண்ணன் உன்னைத் தேடி இங்கே வந்திட்டார் தெரியுமா?"

"என்ன?"

"ஆமா! அப்பாவுக்கு ரொம்ப உடம்பு முடியாமப் போயிட்டதா சொன்னாரு... உன்னைக் கையோட கூட்டிட்டுப் போலாம்னு வந்திருக்கார்..."

"எதுக்கு? சொத்து, பத்திரத்தில எதுவும் கையெழுத்துப் போட நான் தேவைப்படுறேனா?"

"சும்மா சொத்து சொத்துன்னே சொல்லாதே ஸ்ரீ...! என்ன பெரிய சொத்து? மண்ணுக்குள்ள போகும்போது சொத்தா கூட வரும்?"

"வேற எதுக்கு ஒரு வயதான நோயாளியைக் கட்டினாளாம்?"

"இதுக்கான பதிலை நீ அவங்ககிட்டதான் கேட்கணும்... இன்ஃபாக்ட் நீ கேட்காமலே அவங்க சொல்லியிருப்பாங்க... நீதான் பொறுமையில்லாமக் கிளம்பி வந்திட்டே?"

"மதன்! தெய்வமா மதிச்ச அப்பா... நண்பனாப் பழகின அப்பா... ஒரு பொண்ணைக் காட்டி இதுதான் உன் சின்னம்மான்னு அறிமுகப்படுத்தும்போது என் மனசு அப்படியே சுக்குநூறா நொறுங்கிப் போச்சு!

நொறுங்கின மனசோட நின்னு... அவங்களை விசாரிச்சுக் காரண காரியங்களை ஆலோசிக்க முடியுமா? சொல்லு... உன்னால அது முடியுமா?"

"உன்னோட ஆதங்கம் எனக்குப் புரியுது ஸ்ரீ. பட்! எந்தக் காரியத்துக்குப் பின்னாலயும் ஒரு காரணம் இருக்குமே!"

"என்ன பொல்லாத காரணம்?"

"அது என்ன காரணம்னு நீ தெரிஞ்சுக்கத்தான் அவங்களை இங்கே வரச் சொன்னேன். வரட்டும்... பேசுவோம். பிறகு முடிவு பண்ணலாம்."

"அவங்க முகத்திலேயே விழிக்கத் தயாரா இல்லை... நான்!"

"இப்படி அடம் பிடிக்காதே ஸ்ரீ! மத்தவங்களோட சூழ்நிலையையும் நாம யோசிக்கணும். எனக்குத் தெரிஞ்சு அந்த அம்மா எந்தத் தப்பான எண்ணத்தோடயும் உங்க அப்பாவை மணக்கலை!"

"அதெப்படி அவ்வளவு உறுதியா சொல்றே? அவளைப் பத்தி உனக்கு என்ன தெரியும்?"

"எனக்கு எதுவும் தெரியாதுதான். ஆனா மனுஷங்க முகத்தை வெச்சே அவங்களை என்னால கணிக்க முடியும்."

"ஜோசியக்காரன் மாதிரி பேசாதே... மதன்!"

"இல்லை ஸ்ரீ! நீ கோபமா இருந்ததால அவங்களை சரியாப் பார்த்திருக்க மாட்டே... அப்படியே பார்த்திருந்தாலும் ஆத்திரம் உன் கண்ணை மறைச்சிருக்கும்."

"நீ அப்படி என்னதான் பார்த்தே?"

"பார்த்தேன்டா... அந்த அம்மாவோட கண்ல உண்மையான அன்பைப் பார்த்தேன். பேச்சுல... வார்த்தையில... கனிவைப் பார்த்தேன். அவங்க உங்க



அப்பாவைக் கவனிச்சுக்கிட்டதைப் பார்க்கும்போது அது போலித்தனமான நடிப்பாத் தெரியலை!

ஒரு தாயோட பரிவு, கரிசனம், பொறுமை அதுல தெரிஞ்சது. நீ சொல்ற மாதிரி சொத்துக்காக வந்த பெண்ணா இருந்தா உங்க அப்பா மூச்சுத் திணறலோட பாடுபடும்போது ஏன் ஓடி ஓடி மருந்து கொடுத்து கவனிக்கணும்...

போனா போகட்டும்... சொத்து கைக்கு வந்தாப் போதும்னு கைகட்டிப் பார்த்திட்டு இருக்கலாமே...! உங்க அப்பா துடிக்கிறதைப் பார்த்திட்டு ஏன் கண்ணீர் விடணும்?"

"அப்படி நடிச்சாத்தானே உங்களை மாதிரி ஆட்களை நம்ப வைக்க முடியும்?"

"அபத்தமாப் பேசாதே ஸ்ரீ! கடைசியா நான் புறப்படும்போது அவங்க ஒரு வார்த்தை சொன்னாங்க... ஸ்ரீ!"

"என்னவாம்?"

"நீ உன் அப்பாவோட சேர அவங்க தடையா இருக்க மாட்டாங்களாம். நான் வெளியேறினாத்தான் சின்னவர் வருவாருன்னா நான் இந்த நிமிஷமே அவங்க அப்பாவை விட்டு... இந்த வீட்டை விட்டுப் போயிடுறேன்னு சொன்னாங்க... ஸ்ரீ!"

"எ... என்ன?"

"பணத்துக்காக வந்திருந்தா எப்படிப் போக நினைப்பாங்க? நீ நினைக்கிறது தப்பு ஸ்ரீ. உண்மையிலேயே அவங்க நல்லவங்க...!" - மதன் சொல்ல ஸ்ரீதரனின் முகம் குழப்பத்திற்குள்ளானது. லேசான கலவரமும் தோன்றியது.

# 20

கண்ணிலே என்ன உண்டு
கண்கள் தானறியும் - கல்லிலே
ஈரமுண்டு கண்களா அறியும்?
என் மனம் என்னவென்று - என்னை
அன்றி யாருக்குத் தெரியும்?

**வீ**டு முழுக்க விருந்தினர் கூட்டம் நிறைந்திருக்க, கல்யாணக் களை கட்டியிருந்தது. மாலை நேரச் சிற்றுண்டி தேநீர் என அனைவரும் பரபரப்பாய் சுழன்று கொண்டிருக்க, அகல்யா மகளிடம் வந்தாள்.

"ஜெயாம்மா! இப்படி வா?"

காபியைக் கோப்பைகளில் ஊற்றிக் கொண்டிருந்த ஜெயஸ்ரீ நிமிராமலே கேட்டாள்.

"என்னம்மா?"

"யாருக்கு காபி ஊத்துற?"

"வந்திருக்கிறவங்களுக்குத்தான்... சாந்தி அத்தை ஃபேமிலி இப்பத்தான் வந்தாங்க!"

"அதையெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம். நீ இப்படி வா!"

"ம்ப்ச்! என்னம்மா...?" - என அருகே வந்தாள்.

"உன் மாமனார், மாமியார் வந்து எவ்வளவு நேரமாச்சு... காபி கொடுக்க வேண்டாமா?"

"இன்னும் இல்லைம்மா... உமாகிட்ட சொன்னேன். அவ மெஹந்தி போட்டிருக்கா..."



"அறிவு இருக்கா உனக்கு? நீதானே போய்க் கொடுக்கணும்...?"

"நானா?"

"ஆமா! பொண்ணு பார்க்க வந்ததா இருக்கட்டும். போ... முகம் கழுவி புடவை மாத்திட்டு வா."

"ஏன்? இந்தப் புடவை நல்லாத்தானே இருக்கு...?"

"சொன்னாக் கேளு... முதமுதலா உன்னைப் பார்க்கும்போது லட்சணமா இருக்க வேண்டாமா? கட்டில்ல மஞ்சள் பட்டுப் புடவை எடுத்து வெச்சிருக்கேன்...!"

"பட்டுப் புடவையா? அது எதுக்கும்மா?"

"சும்மா கேள்வி கேட்டுட்டு நிற்காதே... போய் உடுத்திட்டு வா... அப்படியே அந்தக் கல்மாலையும் போட்டுக்கோ...!"

"ஏம்மா! ஒரு காபி கொடுக்க இவ்வளவு அலங்காரமா? இதெல்லாம் ஓவராத் தெரியலை?"

"வம்பளக்காதே... முதல்ல சொன்னதைச் செய்."

"செய்யாட்டி விடவா போறீங்க...?" - முணுமுணுத்த வாறே தன் அறைக்குள் நுழைந்து பத்தே நிமிடத்தில் புது மணப்பெண்ணாய் வெளியே வந்தவளைப் பார்த்து திருஷ்டி கழித்தாள்.

"ம்... இப்பத்தான் மகாலக்ஷ்மியாட்டம் இருக்கே... இந்த ட்ரேயை எடுத்திட்டுப் போ!" - என கையிலிருந்த ட்ரேயைக் கொடுத்தாள் அகல்யா.

சிறு கிண்ணங்களில் குலோப் ஜாமுன் ஜீராவில் மிதந்து கொண்டிருந்தது. எடுத்துச் சாப்பிட ஸ்பூன்

செருகப்பட்டிருக்க, ஒரு தட்டில் போண்டா, வெங்காய பஜ்ஜி, காபி ஜக்... கூடவே நான்கு கப்.

"போய்க் கொடுத்திட்டு... நைட்டுக்கு என்ன சமைக் கணும்னு கேட்டுட்டு வா."

"சரிம்மா...!"

"உடனே வந்திடாதே. கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசிட்டு வா."

"சரி!"

"மாப்பிள்ளை கோபப்படாம பார்த்துக்க... பதமா பேசச் சொல்லு!"

"சரிம்மா!"

"முதல்ல இனிப்பைக் கொடு. அதுதான் சம்பிரதாயம்."

"சரிம்மா... போகட்டுமா?"

"இரு. போனதும் அவங்க கால்ல விழுந்து நமஸ்காரம் பண்ணு. அப்பத்தான் மரியாதையா இருக்கும்."

"சரிம்மா!"

"அப்புறம்..."

"அம்மா! இப்படியே பேசிட்டு இருந்தா நைட் ஆயிடும். நான் போகட்டுமா... வேண்டாமா?"

"சரி... சரி.. போ. பார்த்துப் பதமா நடந்துக்கம்மா...!"

"சரிம்மா... அம்மா! நீங்களும் வாங்கம்மா... தனியா போக ஒரு மாதிரி இருக்கு."



"நான் வரக்கூடாதும்மா..."

"ஏன்மா?"

"அதெல்லாம் உனக்குப் புரியாது. நீ போ... அண்ணன் அங்கேதான் இருக்கான்."

"சரி...!" - என்றவாறு படியேறி மாடிக்குச் செல்ல, எதிரே வந்தான் மதன்.

"என்னம்மா நீ... இவ்வளவு நேரமா என்ன பண்ணிட்டு இருந்தே...?"

"இல்லண்ணா! எல்லாருக்கும் காபி கொடுத்திட்டு..."

"சரி வா... அவங்க உனக்காகத்தான் வெயிட் பண்றாங்க..."

"எனக்கா?"

"ஆமாம். அவங்க பேசும்போது நீயும் கூட இருக் கணும்னு விரும்புறாங்க... வா!" - என முன்னே சென்றான்.

"அண்ணா! அவர் எதுவும் கோபமாப் பேசிட லையே...?"

"அவன் இன்னும் ரூமுக்குள்ளயே வரலை... கோபமா சிட்-அவுட்லதான் நிக்கிறான். அதோ பாரு...!" - மதன் சொல்ல, திரும்பிப் பார்த்தாள் ஜெயஸ்ரீ.

உயரமாய் வளர்ந்து நின்ற தென்னை மரங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீதரன். கோபமாக இருக்கிறான் என்பதை அவனது விறைத்த உடலும் வெறித்த பார்வையும் உணர்த்த, நாவை ஈரமாக்கிக் கொண்டாள் ஜெயஸ்ரீ.

"ஸ்ரீ! வாங்க... காபி சாப்பிடலாம்."

"எனக்கு எதுவும் வேண்டாம்."

"ஏங்க?"

"உன் மாமியார், மாமனாருக்குத்தானே கொண்டு வந்தே? போய்க் கொடு. நல்லா சாப்பிடட்டும்."

"முதல்ல உள்ளே வாங்க. வாங்கன்னு... சொல்றே னில்ல...!"

"ஜெய்! நீ போ. நான் வரலை..."

"ஏங்க இப்படிப் பண்றீங்க? வீட்டுக்கு வந்தவங்களை இப்படி அவமானப்படுத்தலாமா?"

"நானா வரச் சொன்னேன்? யார் கூப்பிட்டது அவங்களை?"

"தப்புதான் தம்பி. உங்க விருப்பம் இல்லாம நாங்க வந்திருக்கக்கூடாது...!" – என்றவாறே யமுனா வெளியே வர, அவள் பின்னே வாடிய முகத்துடன் கங்காதரன் வந்தார்.

"அண்ணா! இதைப் பிடியேன்..." – என்றவாறு கையில் இருந்த ட்ரேயை மதனிடம் கொடுத்து விட்டு, பெரியவர்களின் காலில் விழுந்து வணங்கினாள்.

"ஆசிர்வாதம் பண்ணுங்க மாமா. அத்தே... நீங்களும்...!"

"அமோகமா இரும்மா. தீர்க்கசுமங்கலியா வாழும்மா...!" – இருவரும் மனம் நிறைய வாழ்த்த, புன்னகையோடு எழுந்தாள்.



"அத்தே! நீங்க ரெண்டு பேரும் உள்ளே வாங்க. காபி சாப்பிடுங்க."

"இல்லம்மா! இருக்கட்டும்... நாங்க கிளம்புறோம்!"

"என்ன? கிளம்புறீங்களா?"

"ஆமாம்மா... என் புள்ளைக்கு நாங்க இங்கே வந்ததே பிடிக்கலை... அவனுக்குப் பிடிக்காம நாங்க எதுக்கு இங்கே இருக்கணும்?"

"அடடா! பிள்ளைக்குப் பிடிக்காத எதையுமே செய்ய மாட்டாங்களே... ம்ஹூம்...!" – முகத்தை திருப்பிக் கொண்டான் ஸ்ரீதரன்.

"தம்பி! உங்களுக்குப் பிடிக்காதது நான்தானே... எதுக்காக அப்பாவையும் சேர்த்து தண்டிக்கிறீங்க?"

"இதோ பாருங்க... நான் யார் கூடவும் பேச விரும்பலை... தயவு செய்து போயிடுங்க..."

"போயிடுறேன்ப்பா..." – லேசான அதிர்வோடு திரும்பினாள்.

"நான் போயிடுறேன்ப்பா... அதுக்கு முன்னால சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டுப் போயிடுறேனே...!"

"யமுனா! என்னம்மா நீ?"

"இல்லைங்க... எனக்குத்தான் அம்மான்னு கூப்பிட ஒரு குழந்தையைப் பெத்துக்க முடியாது. எனக்கு அந்தக் கொடுப்பினையும் இல்லை. ஆனா உங்களுக்குக் கிடைச்ச அற்புதமான பிள்ளையை நான் பிரிக்க மாட்டேன்..."

யமுனா தொண்டை அடைக்கப் பேச, ஜெயஸ்ரீ மதன் உட்பட ஸ்ரீதரன்கூட லேசாய் திடுக்கிட்டுப் போனான்.

"தம்பி! நான் ஒரு நர்ஸ். உங்க அப்பாவுக்கு ட்ரீட்மெண்ட் பண்ணின ஹாஸ்பிடல்ல நர்ஸா இருந்தேன். அப்பத்தான் உங்க அப்பாவைத் தெரியும்.

எனக்குக் கல்யாணமாகி நாலஞ்சு மாசம்தான் ஆகியிருந்தது..." - யமுனா சொல்ல இன்னும் அதிர்ந்தான்.

"என்ன? கல்யாணமாயிடுச்சா? அப்படின்னா இன்னொருத்தன் மனைவியையா...?"

"தம்பி! முழுவதையும் சொல்லி விடுகிறேனே... அதன் பிறகு நீங்க என்ன பேசினாலும் கேட்டுக்கிறேன்...!"

பற்களைக் கடித்துக் கொண்டு நின்றான். "ஒரு நாள் ராத்திரி நேரம்... உங்கப்பாவுக்கு ரொம்ப உடம்பு முடியாம ஹாஸ்பிடலுக்கு கொண்டு வந்தாரு சிவசாமி அண்ணன்...

அன்னிக்கு கடுமையான மழை. டாக்டரும் ஊர்ல இல்லை. அதனால டாக்டருக்குப் போன் பண்ணிக் கேட்டு, டாக்டர் தன்னோட ஃபிரண்ட் ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போகச் சொன்னதால, கார்லயே கூட்டிட்டுப் போனோம்.

மூச்சுவிட முடியாம திணறியவரைப் பார்த்து தனியா அனுப்ப மனமில்லாம... முதலுதவி செய்ய என்னை அனுப்பினாங்க... என்கூட இருந்த நர்ஸ் எல்லாரும்...

தம்பி! நீங்க நம்பினாலும் சரி... மறுத்தாலும் சரி... அந்த நிமிஷம் உங்க அப்பாவை நான் என் தகப்பனாகத்தான் நினைச்சேன். என் மடியில அவர் தலையை வெச்சிக்கிட்டு, அவரோட நெஞ்சை நீவி விட்டுக்



கொண்டு, மூக்கில விடுற ட்ராப்ஸ விட்டுட்டு ரொம்ப பாதுகாப்பாத்தான் போனோம்."

மூவருமே யமுனாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, கங்காதரன் கண்கள் பனிக்க நின்றிருந்தார்.

"மழை அதிகமா இருந்ததால கார் லேசா சறுக்கிப் பள்ளத்தில விழுந்திடுச்சு."

"ஐயோ...!" - மூவருமே பதறினர்.

"சின்னப் பள்ளம்தான். அதனால உயிருக்கு ஒண்ணும் சேதமில்லாமல் போச்சு. எப்படியோ போராடி வெளியே வந்து உங்க அப்பாவை முதல்ல மேலே ஏத்திட்டோம். அப்புறமா நான் ஏறும்போது மழையில நனைஞ்ச பாறையில பிடிப்பு கிடைக்காம கீழே விழுந் திட்டேன்....

கீழே விழுந்த இடத்தில கூர்மையான பாறையோட முனை என் வயித்தில பாய்ஞ்சிடுச்சு...!" - யமுனா, மேலே பேச முடியாமல் நிறுத்தினாள்.

"ஓ... காட்!" - மதன் நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தான். ஜெயஸ்ரீயின் கண்கள் குளமாக, ஸ்ரீதரனிடம் அசைவே இல்லை.

யமுனாவின் தலையைப் பரிவாய் வருடியவாறே, கங்காதரன் தொண்டையை செருமிக் கொண்டு பேசத் துவங்கினார்.

"மழை நேரம் என்பதால் உதவிக்கு ஆள் இல்லாம தவிச்சு... விடியும்போதுதான் ஆஸ்பத்திரிக்குப் போக முடிஞ்சது. அதுவரை இவளுக்கு ரத்தம் நிற்கவே இல்லை...

எந்த இடத்தில காயம் பட்டதுன்னு தெரியாத அளவிற்கு இரத்தம்.

ஆஸ்பத்திரியில சேர்த்திட்டு என்னை வேற பிரிவுல சேர்த்திருந்தாங்க... நாலு நாள் கழிச்சு என்னால எழுந்து நடமாட முடிஞ்ச பிறகு இவளைத் தேடினேன்.

இந்த ஹாஸ்பிடல்ல முடியாதுன்னு வேற ஹாஸ்பிடலுக்கு அனுப்பிட்டதா சொன்னாங்க... எந்த ஹாஸ்பிடல்ன்னு தெரியலை...

பிறகு எப்பவும் போல நான் போற ஹாஸ்பிடலுக்கு செக்-அப்புக்குப் போனேன்.

அங்கேயும் இவ இல்லை... கேட்டதுக்கு வேலைக்கு வர்றதில்லைன்னு சொன்னாங்க... கொஞ்ச நாள் தேடிட்டு அப்புறம் மறந்திட்டேன்.

ஒரு ரெண்டு வருஷத்துக்கு அப்புறமா திரும்பவும் பார்த்தேன். அடையாளமே தெரியாம மாறிப் போயிருந்தா. எங்கே பார்த்தேன் தெரியுமா?"

"எங்கே?" - ஸ்ரீதரன்தான் கேட்டான். அவனது குரலில் கோபம் குறைந்திருந்தது. கங்காதரனின் முகம் லேசாய் மலர்ந்தது.

"பாறை அருவி மேலே...!"

"பாறை அருவிக்கா? அங்கே ஏன் போனீங்க?" - நடுக்கமாய் யமுனாவைப் பார்த்தே கேட்டான் ஸ்ரீதரன்.

"தற்கொலை பண்ணிக்க...!"

"எ... என்ன?" - மூவரின் முகமும் அதிர்ந்தது.



"எதுக்காக அத்தே?" - கம்மிய குரலில் ஜெயஸ்ரீ கேட்க, புன்னகைத்தாள் யமுனா.

"விபத்தில என் கர்ப்பப்பை சிதைஞ்சு போச்சும்மா... அதில இருந்த நாற்பது நாள் கருவும்..."

"கடவுளே!" - கண்ணை மூடிக் கொண்டாள்.

"என் கணவருக்கு என்மேல ரொம்ப கோபம். என்னால இனி தாயாக முடியாதுன்னு தெரிஞ்சு போச்சு.

இனி நான் தேவையில்லைன்னு என்னை டைவர்ஸ் பண்ணிட்டு இன்னொரு கல்யாணமும் பண்ணிக்கிட்டாரு...!"

"ஐயோ!"

"எங்க வீட்ல அஞ்சு பொண்ணுங்க... நான் மத்தவங் களுக்கு பாரமா சுமையா ஆகிட்டேன். அதனால பொறந்த வீடும் நரகமாகிப் போச்சு...

புகுந்த வீடும் ஒதுக்கிடுச்சு. பொறந்த வீடும் வெறுத் திடுச்சு... நான் எங்கே போவேன்? அதனாலதான் அந்த முடிவை எடுத்தேன்.

வீட்டுலயே ஒரு முழம் கயித்தில தொங்கியிருக்கலாம். ஆனா என்னோட கடைசிப் பயணத்துக்குக் கூட அவங்க செலவு செய்ய வேண்டாம். கஷ்டப்பட வேண்டாம்னுதான் அங்கே போனேன்.

என்னோட பிணம்கூட யாருக்கும் கிடைக்க வேண்டாம்னு தான் போனேன். ஏன்னா பாறை அருவியில இருந்து குதிச்சா எலும்புகூட மிஞ்சாதுன்னு எனக்குத் தெரியும்."

"நல்ல வேளை... என் கண்ல பட்டா... நான் நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து விசாரிச்சேன்... அப்பத்தான் எல்லாத்தையும் சொல்லி அழுதா... என்னால தாங்க முடியலைப்பா!

என்னாலதானே இப்படி ஆச்சுன்னு மனம் ரணமா வலிச்சது. யாருமே இல்லாம இவ தனியா நிற்க முழுக் காரணம் நான்தானே... அதனால அவளைக் கடைசி வரை நம்ம கூடவே வெச்சுக் காப்பாத்தணும்னுதான் நம்ப வீட்ல தங்க வெச்சேன்...

நீ வந்த பிறகு உன்கிட்ட எல்லாம் பேசி ஏதாவது செய்யலாம்னு இருந்தேன். ஆனா கொஞ்ச நாள்ல பிரச்சனை வேற விதமா வந்திடுச்சி...!"

"என்னப்பா? என்ன பிரச்சனை?" - ஸ்ரீதரன் மொத்தமாய் மாறி இருந்தான். முகம் கனிவையும் அன்பையும் தேக்கி வைத்திருந்தது.

"இது பொல்லாத உலகம்ப்பா... யாரையும் வாழ விடாது. சாகவும் விடாது. யாரையாவது ஏதாவது சொல்லிட்டே இருக்கும்..."

"யாரு...? என்ன சொன்னாங்க?"

"யமுனா நம்ம வீட்டோடயே இருந்தது நிறைய பேரோட கண்ணை உறுத்தியது. கங்காதரன் ஒரு பொண்ணை வெச்சிருக்கான்னு பேச ஆரம்பிச்சிட்டாங்க...

இதுல யமுனா ரொம்ப உடைஞ்சிப் போயிட்டா... நல்லது யார் கண்ணிலயுமே படாது போலிருக்கு... தொடர்ந்த மூச்சுத் திணறலால... எனக்கு இதயமும் பலவீனமாப் போச்சு...



உன் படிப்பு முடியுற சமயம் உன்னைப் பயமுறுத்த வேண்டாம்னு... சொல்லாம... யமுனாவே என்னை வேற ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டுப் போக ஆரம்பிச்சா... வாரத்தில ரெண்டு நாள் போயிட்டு வந்தோம்.

இதைப் பார்த்தவங்க... நாங்க ஜோடி போட்டு ஊர் சுத்துறதா அசிங்கமாப் பேசினாங்க...

நான் ஆம்பிளை... என்னை அது பெரிசா பாதிக்கலை.

ஆனா யமுனா பாவமில்லையா?

எந்தத் தப்புமே செய்யாம அவ ஏன் பழிச் சொல்லை கேட்கணும்... அதனால ரொம்ப யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்தேன்... முதல்ல தயங்கின யமுனாவும் வேற வழி யில்லாம ஒத்துக்கிட்டா...!"

"எ... என்ன முடிவு?"

"என் மனைவிங்கிற அந்தஸ்தைக் கொடுக்கிற முடிவு. யமுனா என் மனைவின்னு ஊருக்கே தெரிவிக்கிற முடிவு."

"அப்போ வீட்ல வெச்சே கல்யாணம் பண்ணிக் கிட்டீங்களா?" - ஸ்ரீதரனின் குரல் தடுமாறியது.

"இல்லப்பா...!"

"பின்னே...?"

"உன் அம்மா படத்து முன்னால நின்னு உன் அம்மாவோட தாலியை... யமுனாவே கட்டிக்கிட்டா!" - கங்காதரனின் பதிலில் மொத்தமாய் ஆடிப்போனான்.

# 21

கலங்கும் போது சேறு – அது
தெளியும் போது நீரு
கடவுள் போட்ட கோடு – அதை
திருத்தப் போவது யாரு?

யமுனா விசும்பிக் கொண்டிருக்க, ஸ்ரீதரன் வாயடைத்துப் போய் சிலையாய் நிற்க, மதன் அதிர்ச்சியாய்க் கேட்டான்.

"அப்பா! என்னப்பா சொல்றீங்க?"

"ஆமாம் மதன். இது எனக்கும் யமுனாவுக்கும் மட்டுமே தெரிந்த உண்மை. என் மனைவிதான் இதற்கு சாட்சி."

"ஏன்? எதுக்காக... இப்படி?"

"கங்காதரன் ஒரு பொண்ணை வெச்சிட்டு இருக்கான் கிறதைவிட, புதுசாக் கல்யாணம் பண்ணிக்கிட்டானாம்னு சொல்றது எனக்கு அசிங்கமாத் தெரியல்ல...

கங்காதரனோட வெப்பாட்டி போறாங்கிறதைவிட இவதான் கங்காதரனோட மனைவிங்கிறதை யமுனாவும் பெருமையாத்தான் நினைக்கிறா. அவளுக்குன்னு யார் இருக்கா?

கடைசி வரை என் வீட்ல வாழ அவளுக்கு ஒரு அடையாளம் வேணும்னு நினைச்சுத்தான் இந்த முடிவை எடுத்தேனே தவிர, இந்த முடிவால என் புள்ளை என்னை விட்டுப் போயிடுவான்னு நினைக்கல்ல.



அவன் வந்ததும் எல்லாத்தையும் தெளிவாச் சொல்லி என் காலத்துக்குப் பிறகும் இந்தப் பொண்ணுக்கு ஒரு சகோதரனா... பாதுகாவலா நின்னு வாழவைப்பான்கிற நம்பிக்கையிலதான் இதை அவன்கிட்ட போன்லகூட சொல்லல...!"

"இதை ஏன் என்கிட்ட முதல்லயே சொல்லல?" – கண்ணீர் பொங்க ஆத்திரமாய்க் கேட்டான் ஸ்ரீதரன்.

"எப்படியப்பா சொல்றது? இந்த உண்மை நம்ம சிவசாமிக்கே தெரியாது. அதனாலதான் நீ கேட்டப்போ வீட்டுக்குள்ள போய் பேசலாம்னு சொன்னேன்.

நீ கேட்கலை. வெளியே நின்னு விசாரிச்சதால அப்படிச் சொல்ல வேண்டியதாகிப் போச்சு."

"ஸ்ரீ! நான் சொன்னேன்ல.... ஏதாவது ஒரு காரணம் இருக்கும்னு!"

"தம்பி! எனக்கு உங்க சொத்து, பணம் எதுவுமே வேண்டாம்ப்பா. அது எல்லாம் எனக்கு எதுக்கு?

அதை ஆள எனக்கென்ன உரிமை இருக்கு. பிள்ளையும் கிடையாது. பிறகெப்படிப்பா நான் சொத்து சேர்க்க ஆசைப்படுவேன்?"

"இல்ல... நான்... ஸாரி."

"உங்க அப்பா இந்த முடிவைச் சொல்லும்போது நான் ஒத்துக்கலப்பா. ஏன்னா வளர்ந்த பிள்ளையை வைத்துக் கொண்டு செய்கிற காரியமா என ஊரார் காறித்துப்புவார்களே என்று எனக்கும் பயம்தான்.

உன் அப்பாதான் தன் பிள்ளையிடம் நான் சொல்லிக் கொள்வேன். அவன் புரிந்துகொள்வான் என்று என்னைச் சம்மதிக்க வைத்தார். எனக்கும் மனதின் ஒரு ஓரத்தில் துளி நப்பாசை!

என்னையும் ஒரு பிள்ளையின் அம்மா என்று சொல்லிக்கொள்ளும் வாய்ப்பல்லவா இது. அதனாலதான் சம்மதிச்சேன். தம்பி! இந்த நகையெல்லாம் உன் அம்மாவுடைய நகை.

ஊருக்காகத்தான் நான் இதைப் போட்டிருக்கிறேன். மத்தபடி உனக்குக் கல்யாணம் முடிஞ்சதும் உன் மனைவிக்கே கொடுத்து விடுகிறேனப்பா. எனக்கு... இந்தத் தாலி மட்டும் போதும்!" - என்றாள் விசும்பலோடு.

"ஸ்ரீ! ஊருக்குத்தாம்ப்பா நாங்க கணவன் மனைவி. வீட்டுக்குள்ள அவ எனக்கு சேவை செய்யற தாயா... என் மகளாத்தாம்ப்பா வாழ்ந்திட்டு இருக்கா...

இந்த உடம்புல உயிர் இருக்கிற வரைக்கும் உன் அம்மாதாம்ப்பா என் மனைவி. எந்தக் காலத்திலும் என் மனைவிக்கு... அவளோட ஆன்மாவுக்கு நான் துரோகம் பண்ணமாட்டேன். என்னை நம்புப்பா!"

நடந்தவற்றை கிரகித்துக் கொள்ள முடியாமல் உறைந்து போய் நின்றான் ஸ்ரீதரன். மனம் நெருஞ்சி முள்ளாய் குத்திக் கொண்டிருந்தது.

என் அவசரப்புத்தியால் எத்தனை பெரிய பிழையைச் செய்துவிட்டேன். இத்தனை வருடமாய் வளர்த்த தந்தையை சற்றும் யோசிக்காமல் என்னவெல்லாம் பேசிவிட்டேன்?



இந்தப் பெண்ணைக்கூட பணத்திற்காக உடம்பை விற்பவள்... அது இதுவென்று காது கூசும்படி பேசினேனே... கடவுளே! மன்னிக்கக்கூடிய பிழையா அது?

இல்லை. எனக்கு மன்னிப்பே இல்லை. நான் மனிதனே இல்லை. எதையும் ஆராயாமல் அடுத்தவர்கள் மனதைப் பற்றி சிந்திக்காமல் காயப்படுத்திய நான் மிருகம்.

மன்னிப்பு கேட்டால் மட்டும் இந்தப் பாவம் தீருமா? தீராது. அன்று ஒருநாள் உடல்நலமில்லாமல் படுத்தபோது எத்தனை ஏங்கினேன்.

பரிவோடு தைலம் போட்டுவிட்ட அந்தக் குழந்தையை என் தாயாய் எண்ணினேனே...!

இன்று அதேபோல்தானே அப்பாவும் நினைத் திருக்கிறார். அவரை எப்படி நான் தவறாக எண்ணினேன்?

நான் அத்தனை பேசியும் என்னைத் தேடி வந்திருக்கிறார் என்றால் இந்தப் பெண்ணிற்கு எத்தனை பெரிய மனது இருக்கும்!

மதன் சொன்னபோது இந்தக் கண்களில் உண்மையான அன்பு இருக்கிறதே! இந்த அன்புதானே அன்று என் தந்தையைக் காப்பாற்ற வைத்தது.

என் தந்தையைக் காப்பாற்றச் சென்றதால்தானே, தன் குழந்தையை... தன் வாரிசை... தன் கருவறையையே இழந்துவிட்டாள்.

எத்தனை பெரிய இழப்பு? கட்டியவன், பெற்றவர்கள், குடும்பம், சந்தோஷம்... என எல்லாவற்றையும் இழந்த வளுக்கு என்னால் எதைத் தரமுடியும்?

சொத்து சொத்து என்றேனே. இந்தப் பெண்ணிற்கு இந்த உலகையே கொடுத்தாலும் இழப்பை ஈடுசெய்ய முடியாதே? என்ன செய்யப் போகிறேன்?

என்ன செய்தால் இவர்களது வேதனை மாறும்? அம்மா என்று அழைக்கலாமா? அப்படி அழைத்தால் இவர்களது பாரம் தீருமா? இறுதிவரை இருவருக்கும் மகனாக இருந்து... என் கடமையைச் செய்யலாமா?

மதன் வந்து தோளைத் தட்டினான். "டேய் ஸ்ரீ! இப்படி எதுவும் பேசாம நின்னா எப்படி?"

"ம்? நான்... நான் என்ன பேசுறது?"

"ஏதாவது பேசுடா. முதல்ல ஸாரி கேள்."

"மதன்! வெறுமனே ஸாரி கேட்கிற அளவுக்கு நான் பேசல்லடா. நிறைய... நிறைய பேசிட்டேன். நான் எப்படி?"

"என்னங்க! நீங்க என்ன வேணுமின்னேவா பேசுனீங்க? எந்தத் தப்புக்கும் நிச்சயமா மன்னிப்பு உண்டுங்க. போங்க..."

"இல்ல ஜெய்! என்னால..."

"வேண்டாம்ப்பா!" - யமுனா தடுத்தாள். ஸ்ரீதரன் கலக்கமாய் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"நீ ராஜகுமாரன். அந்த வீட்டு வாரிசு. நீ எதுக்காகவும் கலங்க வேண்டாம். மன்னிப்பும் கேட்க வேண்டாம். உன் அப்பாகூட உங்க வீட்டுக்குப் போயிடுப்பா?"

"என்ன? உங்க வீட்டுக்கா?"



"ஆமா! அது உங்க வீடுதானே. நான் அடைக்கலம் தேடி. இடையில் வந்தவதானே...

இனியும் உங்களுக்கு நடுவே பிரிவை உண்டாக்க மாட்டேன். நான் போயிடுறேன்."

"யமுனா! நீ என்ன சொல்றே?"

"ஆமாங்க. நான் போயிடுறேன்..."

"எங்கேம்மா போவே?"

"நிச்சயமா தற்கொலை பண்ணிக்க மாட்டேங்க. எங்கேயாவது போய் வாழ்ந்துக்கிறேன்."

"ஏம்மா! நான் இருக்கும் போது..."

"இல்லங்க... நீங்க உங்க பிள்ளைக்கு மட்டும்தான் சொந்தம்."

"அவன் உன்னை ஏத்துப்பான்..."

"அவரால முடியாதுங்க. அதை எப்படிச் சொல்லன்னு புள்ளை தயங்குதே...

நாம புள்ளையை இதுக்கு மேலயும் கஷ்டப்படுத்தக் கூடாதுங்க..."

"இல்ல யமுனா! எம்புள்ள மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. ஸ்ரீ...! அதான் எல்லா உண்மையையும் சொல்லிட்டேனேப்பா. நீ... நீ... நான் சொன்னதை நம்பலியா?"

"நம்புறேன்ப்பா..."

"பின்னே என்னப்பா? யமுனா வீட்டை விட்டுப் போறேன்றாளே? நீ ஒண்ணும் பேசாம நிற்கிற?"

"போகட்டும்ப்பா" – ஸ்ரீதரனின் உறுதியான பதிலில் அனைவரும் திடுக்கிட்டுப் போயினர். யமுனாவின் முகம் விரக்தியாய் புன்னகைத்தது.

"நான் கிளம்புறேன்..." – பொதுவாய் சொல்லிவிட்டு அவள் நகர, அவளது கைபற்றி நிறுத்தினாள் ஜெயஸ்ரீ.

"அத்தே! ஒரு நிமிஷம்...." – என்றவள் கோபமாய் ஸ்ரீதரனின் பக்கம் திரும்பினாள்.

"ஸ்ரீ! என்ன மனுஷன் நீங்க? இத்தனை நேரம் இவங்க பேசினதைக் கேட்டுமா உங்க மனசு மாறல்ல? உங்க மனசு என்ன கல்லா?"

"ஸ்ரீ! எப்படிடா இப்படி மாறின? அவங்க சொன்னதைக் கேட்டு நாங்களே கலங்கிப் போயிட்டோம். நீ ஏன்டா கல்லு மாதிரி நிற்கிறே?"

"அண்ணா! நீ இரு. நான் பேசுறேன். ஸ்ரீ ! இப்போ சொல்றேன் கேளுங்க... நீங்க இவங்களை ஏத்துக்கிறீங்களோ இல்லையோ நான் என் மாமியாரா ஏத்துகிட்டேன்."

"ரொம்ப சந்தோஷம்!"

"மாமாவும் அத்தையும் இருந்தாத்தான் நான் உங்க வீட்டுக்கு வருவேன்."

"ஜெய்!"

"ஆமா! இதுல எந்த மாற்றமும் இல்லை."

யமுனா குறுக்கிட்டாள். "இதோ பாரும்மா... நீ வாழ வேண்டிய பொண்ணு. இனிமேத்தான் உங்க வாழ்க்கையே



ஆரம்பமாகப் போகுது. என்னால உங்களுக்குள்ள மனஸ்தாபம் வரவேண்டாம்."

"இல்ல அத்தே! அப்படியென்ன பிடிவாதம் இவருக்கு?

எதுவும் தெரியுறதுக்கு முன்னால கோபம் இருந்தது நியாயம். இப்போதான் எல்லாம் தெரிஞ்சுபோச்சே..."

"ஜெய்! அவங்கதானே போறேன்... போறேன்னு சொல்றாங்க. நானா போகச் சொன்னேன்?"

"அப்போ?"

"அவங்களுக்கே எங்க மேல அக்கறை இல்லை. என்னை விடு. எங்க அப்பாமேலகூட அக்கறை இல்லையே?"

"ஐயோ! நான் அப்படிச் சொல்லலியே?" – யமுனா பதறினாள்.

"பின்னே? எங்கமேல அக்கறை இருந்தா போவேன்னு சொல்லுவீங்களா? நீங்க எதுக்காக எங்க வீட்டுக்கு வந்தீங்க?"

"தம்பி!"

"நீங்க எதுக்காக எங்க வீட்டுக்கு வந்தீங்க?"

"உங்க அப்பாவைக் கவனிச்சுக்க. சேவை செய்ய..."

"இப்போ போறேன்னு சொல்றீங்களே. இனிமே யாரு எங்க அப்பாவைப் பார்த்துப்பாங்க?"

"தம்பி!"

"ஒரே ஒரு நாள்... கொஞ்சநேரம்தான் உடம்பு சரியில்லாம படுத்தேன். அப்பத்தான் உறவோட அருமையை உணர்ந்தேன். என் அப்பா எத்தனை நாள் தனிமையில கஷ்டப்பட்டிருப்பாங்கன்னு யோசிச்சேன்.

என் அப்பா ஆக்ஸிடென்ட் ஆனதைக்கூட நான் லீவுக்கு வந்த பிறகுதான சொன்னாங்க.

ஆனா அந்த ஆக்ஸிடென்டுக்கு பின்னால உங்களோட துயரம் இருந்தது எனக்குத் தெரியாது."

"விடுங்க தம்பி! நடந்ததை மாற்ற முடியாது!"

"மாற்ற முடியும்..."

"தம்பி?"

"உங்ககிட்ட ஒரு உதவி கேட்கலாமா?"

"கேளுப்பா! நான் என்ன செய்யணும்?"

"எங்க அப்பா ரொம்ப பாவம். சின்ன வயசுலயே அம்மாவை இழந்திட்டு எனக்காக வாழ்ந்தாங்க."

"அதுதான் தெரியுமேப்பா...!"

"அப்பாவுக்கு கடைசிவரை உங்களால துணையிருக்க முடியுமா?" - கண்கள் கலங்க, ஸ்ரீதரன் கேட்க,

அனைவரின் முகமும் நிதானமாய் மலர்ந்து பிரகாசிக்க, கங்காதரன் கண்கள் பனிக்க மகனை நெருங்கினார்.

ஸ்ரீதரனின் கண்கள் உடைப்பெடுக்க, தந்தையைக் கட்டிக் கொண்டான்.



# 22

வசந்தங்கள் வாழ்த்தும் பொழுது
உனது கொடியில் பூவாவேன்
இலையுதிர் காலம் முழுதும்
மகிழ்ந்து உனக்கு வேர் ஆவேன்!

"அப்பா!" - உதடு துடிக்க அழைத்தவனை நெருங்கினார் கங்காதரன்.

"ஆமாப்பா! இது இவளே கட்டின தாலிதான். நான் கட்டலைப்பா. உன் அம்மாவுக்கு நான் துரோகம் பண்ணமாட்டேம்ப்பா..."

"அப்பா!"- கண்ணீரோடு தந்தையைக் கட்டிக் கொண்டான்.

"மன்னிச்சிடுங்கப்பா! நான் தப்பு பண்ணிட்டேன். நிறைய தப்பாப் பேசிட்டேன். என்னை மன்னிச்சிடுங்கப்பா. மன்னிச்சிடுங்கப்பா..." - குழந்தையாய் தேம்பியவனைக் கண்ணீரோடு வருடினார்.

"விடுப்பா! நீ எம்புள்ள. என்னை என்ன வேணும்னாலும் பேசலாம்..."

"இல்லப்பா! நான் உங்களை ரொம்பக் காயப் படுத்திட்டேன். அவங்களையும்..." - என்றவன் நிமிர்ந்தான். கண்ணீரைத் துடைத்தவாறே யமுனாவைப் பார்த்தான்.

"உங்களையும் நான் ரொம்ப அசிங்கமாப் பேசிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க."

"பரவாயில்லப்பா!"

"நான்.. உங்களை... அம்மான்னு கூப்பிடலாமா?" - தயக்கமாய் கேட்டவனை நம்பமுடியாமல் பார்த்தாள் யமுனா. மற்றவர்களின் முகம் மகிழ்ந்து சிரிக்க, கண்ணீரோடு தலையாட்டினாள் யமுனா.

"கூப்பிடுப்பா. தாராளமாக் கூப்பிடு. இந்த ஜென்மத்தில எனக்கு அந்தக் கொடுப்பினை இல்லைன்னு நினைச்சேன். நீ அந்தப் பாக்கியத்தைக் கொடுத்திட்டே !" - தொண்டை யடைக்க, விம்மியவளின் காலில் விழுந்தான்.

"அம்மா! என்னை மன்னிச்சிடுங்கம்மா...!"

"எழுந்திருப்பா! எழுந்திரு..." - பதட்டமாய் அவனைப் பற்றி எழுப்பினார்.

"நான் நிறைய தப்பு பண்ணிட்டேம்மா. எதையும் யோசிக்காம உங்களைப் பேசவிடாம... தப்பு... பெரிய தப்பு. மன்னிச்சிடுங்க..."

"வேண்டாம்ப்பா. எங்களோட ராஜா நீ. வருத்தப்படக் கூடாது. உன் அப்பா சொல்வாங்க. நீ ரொம்ப கலகலப்பான பிள்ளைன்னு. இத்தனை நாளா அந்தக் கலகலப்பை பறிச்ச பாவி நான்தான்!"

"இல்லம்மா.... நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. என் அப்பாவை நான் சந்தேகப்பட்டிருக்கக் கூடாது."

"அடடா! எவ்வளவு நேரம்தான் இப்படியே பேசிப் போராடிப்பீங்க. இது என்ன மெகா சீரியலா? சும்மா அழுதிட்டே இருக்கிறதுக்கு.... கலகலப்பா ஏதாவது பேசுங்கப்பா..." - என்றவாறு வந்து நின்றாள் உமா.



"யாரு இந்தப் பொண்ணு?" - என யமுனா கேட்க, மதன் உமாவை அதட்டினான்.

"ஏய் வாயாடி! உன்னை யார் மேலே வரச்சொன்னது? கீழே போ."

"சும்மா இருண்ணா. நானும் பேசி முடிப்பீங்க... முடிப்பீங்கன்னு எவ்ளோ நேரம் வெயிட் பண்றது?"

"ஏன்? உனக்கு என்ன வந்தது?"

"என்ன வந்ததா? கீழே பெரியவங்க எல்லாரும் எவ்வளவு டென்ஷனா இருக்காங்க தெரியுமா? முள்மேலே நிற்கிற மாதிரித் தெரியுது..."

"ஏம்மா?" - யமுனா புன்னகையோடு கேட்டாள்.

"என்ன ஏம்மா? சம்பந்தி வீட்டுக்காரங்க சமாதானம் ஆயிட்டாங்களா? இல்லை... பிரச்சனை பெரிசாகிடுமா? நாம மேலே போலாமா... வேண்டாமா? நாளைக்கு நிச்சயதார்த்தம் நடக்குமோ என்னவோன்னு ஆயிரம் டென்ஷன்!"

"அதுக்காக நீ முந்திரிக்கொட்டை மாதிரி மேலே வந்திட்டியா?"

"அண்ணா! நீ எதுக்கு இங்கே இருக்க? எல்லாரையும் அழவிட்டு வேடிக்கை பார்த்திட்டு நிற்கவா வந்தே?"

"ஏய்! வாயை மூடு."

"பின்னே! அதான் எல்லாரும் பேசியாச்சு. தப்பை உணர்ந்தாச்சு. மன்னிப்பும் கேட்டாச்சு. போதுமான அளவு

கண்ணீரும் விட்டாச்சு. அதோட விடவேண்டாமா? சும்மா வளவளத்துகிட்டே இருந்தா..."

ஸ்ரீதரனின் முகம் புன்னகைத்தது. "யாரு? நாங்களா வளவளக்கிறோம்?"

"பின்னே நானா?"

"பாருங்கப்பா! உங்களைப் பிரிஞ்சு வந்ததை விட இவகிட்ட மாட்டிட்டுத்தான் நான் ரொம்பக் கஷ்டப் பட்டுட்டேன்..."

சிரித்தார் கங்காதரன். "ஏம்மா! நீ அவ்வளவு பெரிய டெரர்ரா?"

"ஹலோ! உங்க பிள்ளையை விடவா?"

"ம். எங்க பிள்ளை தங்கம்..." - பரிந்து கொண்டாள் யமுனா.

"ஆமாமா... உங்க பிள்ளையை நீங்கதான் மெச்சிக்கணும்..."

"ஏன்? என் பிள்ளைக்கென்ன?"

"பிள்ளையா இது? துர்வாச முனிவரே பெட்டர். அவ்வளவு கோபம் வருது. எப்போப் பாரு சரவெடி மாதிரி வெடிச்சிட்டே இருப்பாரு."

"இல்லையே. எம்புள்ளைக்கு கோபப்படவே தெரியாதே!"

"ஜெய்! கேட்டியா? தேசிங்கு ராஜாவுக்கு கோபமே வராதாம். கேட்டுக்க... உம் மாமனார் சொல்றதை?"



"உமா! சும்மா இரு. பெரியவங்ககிட்ட கூடக்கூட பேசக்கூடாது."

"பாருடா! எப்படி இது?"

"அவ என்னோட வொய்ஃப் தெரியுமா? எனக்குத்தான் சப்போர்ட் பண்ணுவா."

"அடப்பாவி! ஒரே நாள்ல இப்படி மாறிட்டியே?"

"உமா! போதும்..." - என அதட்டிய மதன் யமுனாவைப் பார்த்து புன்னகைத்தான்.

"இது என் தங்கை உமா. கொஞ்சம் வாய்..."

"கொஞ்சம் இல்லப்பா. நிறையவே..."

"அண்ணா! எனக்கு வில்லனே நீதான்" - பற்களைக் கடித்தாள் உமா.

"பரவாயில்லம்மா. இந்தக் காலத்தில வாய் இல்லாட்டி பொழைக்க முடியாது. உன்னை எனக்கு ரொம்பப் பிடிச் சிருக்கு" - யமுனா உமாவின் கன்னத்தை வருடினாள்.

"தேங்க்ஸ் ஆன்ட்டி! ஐ லைக் யூ."

"போதுமே... இனிமே உமாவைக் கையில பிடிக்க முடியாதே!"

"ஸ்ரீதர் அண்ணா! என்ன அம்மா, அப்பா வந்தவுடனே ரொம்ப தைரியம் வந்திடுச்சோ?"

"என்ன?"

"என்னையே வாரிவிடுற அளவுக்குத் தைரியம் வந்திடுச்சா. ஜெய்! உங்க வீட்டுக்காரர்கிட்ட சொல்லி வை..."

"என்ன சொல்லணும்?"

"இந்த வீட்ல உமாதான் வெரி இம்பார்ட்டெண்ட் பர்ஸன். அவளைப் பகைச்சுக்கிட்டா நம்ம கல்யாணமே நடக்காதுன்னு சொல்லிவை."

"ஏய்! வாயாடிக் கழுதை! வாயை மூடு. முதல்ல கீழே போ."

"சரி... சரி... இன்னிக்கு இது போதும். முதல்ல எல்லாரும் கீழே வாங்க. சாப்பாடு சூடு ஆறிப்போயிடும்."

"இதுக்குத்தான் மேலே வந்தியா? வந்த உடனே கூப்பிட்டிருக்கலாம்மில்ல. ஏன் இவ்வளவு நேரமா பிளேடு போட்டே?"

"பிளேடு போட்டதாலதான் எல்லார் முகமும் சிரிச்சமாதிரி இருக்கு. இல்லேன்னா அழுதிட்டேதான் இருந்திருப்பீங்க."

"அட ஆமாம்... ரொம்ப நல்ல பொண்ணும்மா நீ. உன்னை மாதிரி ஒரு பொண்ணு வேணும்" – என்றார் கங்காதரன்.

"மன்னிக்கணும் ஸார். உங்களுக்கு நான் கிடைக்க மாட்டேன்! அவதான் உங்க மருமக!" – என ஜெயஸ்ரீயைக் காட்டினாள்.

"அதனால என்ன? எனக்கு பொறக்கப் போற பேத்தி உன்னை மாதிரி கிடைக்கட்டும்..."

"அப்பா! தாங்க முடியாதுப்பா." – ஸ்ரீதரன் பரிதாபமாய்ச் சொல்ல கோபமாய் முறைத்தாள் உமா.



"உங்களை மாதிரி சிடுமூஞ்சிகளை விட என்னை மாதிரி வாயாடி பரவாயில்லதான்..."

லேசாய் கைதட்டினான். "வெரிகுட்! உமா. உண்மையை ஒத்துக்கிட்டதுக்கு..."

"போதும். வீட்டுக்கு வந்த பெரியவங்களை எவ்வளவு நேரம்தான் ஒரு காபிகூட கொடுக்காம பேசிட்டு இருக்கிறது... அத்தே! மாமா! வாங்க சாப்பிடலாம். இவளை விட்டா இன்னிக்கெல்லாம் பேசிட்டே இருப்பா..." – யமுனாவின் கைபற்றி அழைத்தாள் ஜெயஸ்ரீ.

"அடியேய்! குடும்பக் குத்துவிளக்கே! இதெல்லாம் ரொம்ப ஓவர்டி. மாமியார் வந்ததும் நான் ரெண்டாம் பட்சமாகிட்டேனா?"

"என்ன உமா!"

"ஜெய்! விடு அவளை... உமா! நீ போய் சாப்பாடு எடுத்து வை. நாங்க வர்றோம்..."

"நாளைக்கு வச்சுக்கிறேன் உங்களை..." – மிரட்டலாய்ச் சொல்லிவிட்டு அவள் விலகி நடந்ததும், புன்னகையோடு திரும்பினான் மதன்,

"ஸாரி! என் தங்கை எப்பவும் இப்படித்தான். கொஞ்சம் கலகலப்பா பேசுவா. தப்பா எடுத்துக்காதீங்க..."

கங்காதரன் சிரித்தார். "அட என்னப்பா நீ! என்ன அருமையான பொண்ணு. அஞ்சே நிமிஷத்தில எல்லோரையும் சிரிக்க வெச்சிட்டாளே... எனக்கு இன்னொரு மகன் இல்லையேன்னு இப்பத்தான் வருத்தமா இருக்கு."

"ஏன்ப்பா?"

"ரெண்டு புள்ளைங்க இருந்தா இந்த ரெண்டு பொண்ணையுமே எங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிருப் பேனே எங்க மருமகளா?"

"நல்ல வேளைப்பா... இதை உமா நிற்கும்போது சொல்லாம விட்டீங்க..." - ஸ்ரீதரன் கிண்டலாகச் சொன் னான்.

"ஏன்?"

"சொல்லியிருந்தா இப்ப என்ன கெட்டுப்போச்சு... உங்க வயசுக்கு இன்னொரு பிள்ளை பெத்துக்கலாமே... அவன் வளர்ந்த பிறகு நானே கட்டிப்பேன்னு சொல்லுவா?"

"ஏங்க! பெரியவங்க கிட்ட இப்படியா பேசுவாங்க?"

"உமா இருந்தா இதைவிட அதிகமா சொல்லியிருப்பா.."

"ஸ்ரீ! உமா காதில விழுந்தா இதுக்கும் சண்டைபோட ஆரம்பிச்சிடுவா. பேசாம வா. சாப்பிடப் போகலாம்." - மதன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கீழிருந்து உமா அழைத்தாள்.

"அண்ணா! உன்னைத் தேடி யாரோ வந்திருக்காங்க?"

"இதோ வர்றேன். யாரா இருக்கும்?" - என்றவாறே மதன் கீழே இறங்க, மற்றவர்களும் பின்தொடர்ந்தனர். இறுதியில் கீழே இறங்க முயன்ற ஜெயஸ்ரீயைத் தன் பக்கமாய் இழுத்துக் கொண்டான் ஸ்ரீதரன்.

"என்ன பண்றீங்க?" - கோபமாய் கிசுகிசுத்தாள்.



"ஸாரிடா!" - காதோரமாய் கொஞ்சினான்.

"எதுக்கு?"

"கோபத்தில உன்கிட்ட கொஞ்சம் கடுமையாப் பேசிட்டேன். வெரி ஸாரிடா!"

"உங்களுடைய வழக்கமே இதுதானே..."

"ஸாரிம்மா! இனிமே உன்கிட்ட கோபமே படமாட்டேன். ப்ராமிஸ்!"

புன்னகைத்தாள். "சரி... வாங்க போகலாம்."

"தேங்க்ஸ்டா!"

"இது எதுக்கு?"

"உன்னாலதான் என் பேரண்ட்ஸோட மனசு புரிஞ்சது. நீ மட்டும் போன் பண்ணி அவங்களை வரச் சொல்ல லன்னா நான்... எப்படி?"

"சரிங்க. போனதெல்லாம் போகட்டும். இப்பத்தான் எல்லாம் சரியாகிடுச்சே. இனி அதைப்பத்தி பேசவேண்டாம்."

"இல்ல ஜெய்! ஆரம்பத்தில இருந்தே நீ எனக்கு நல்லது மட்டும்தான் பண்ணியிருக்க... நினைச்சிருக்க.... ஆனா நான்...?"

"என்னங்க?"

"உன்னை ரொம்பக் காயப்படுத்தியிருக்கேன். ஸாரிடா!"

"இப்ப ஏன் வருத்தப்படுறீங்க? விடுங்க."

"இல்லடா! நான் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்தியிருக்கேன். ஆனா உனக்கு எம்மேல கோபமோ வெறுப்போ வரவே இல்லையா?"

அமைதியாய் புன்னகைத்தாள். "ம்ஹூம்..."

"ஏன்?"

"ஏன்னா... இந்த முகத்தைப் பார்த்தா கோபமே வராது!"

"பின்னே?"

"கனவு வரும். ப்ரியம் வரும்.. சிரிப்பு வரும்..."

"ஹேய்! சொல்லவே இல்லையே?"

"எதை?"

"இதையெல்லாம்..."

"நீங்க கேட்கவேயில்லையே?"

"சரி... இப்பக் கேட்கிறேன்... சொல்லு. என்னை நிஜமாவே உனக்குப் பிடிச்சிருக்கா. இல்லே உன் அண்ணன் சொன்னதாலதான் ஒத்துக்கிட்டியா?"

"முதல்ல என் கேள்விக்குப் பதில் சொல்லுங்க."

"என்ன?"

"நிஜமாவே என்னைப் பிடிச்சிருக்கா?"

"ஏய்! என்ன கேள்வி இது?"

"பதிலைச் சொல்லுங்க..."



"இந்த உலகம் எவ்வளவு பெரிசா இருக்கோ... அவ்வளவு பிடிக்கும்."

"பொய்யில்லையே!"

"சேச்சே! சத்தியமான உண்மை."

லேசாய் துளிர்த்த கண்ணீரோடு புன்னகைத்தாள். "தேங்க்ஸ்!"

"எதுக்குடா?"

"இல்ல... என் ஃபேமிலியப் பத்தி தெரிஞ்சப்புறம் என் மேல பரிதாபப்பட்டுத்தான் என்னைப் பெண் கேட்டீங்கன்னு நினைச்சேன்!"

"சேச்சே! உண்மையைச் சொன்னால் நீ நம்ப மாட்டாய் ஜெய்?"

"ம்..."

"உன்னை முதன்முதலாய் பார்த்தேனே... மழையில் நனைந்து உன் முகத்தில் இருந்து நீர் சொட்ட, என் முகத்திற்கு வெகு அருகே உன் முகத்தைப் பார்த்தேனே...

அப்பவே நீ எனக்குள்ள பதிஞ்சு போயிட்ட. அதனாலதான் உன்மேல எனக்குக் கோபமே வரல்ல. வராத கோபத்தை வலுக்கட்டாயமா வரவழைச்சுத் திட்டியிருக்கேன்... தெரியுமா?"

"சரி... எவ்வளவு நேரம்தான் பேசுறது? கீழே தேடுவாங்க. வாங்க போகலாம்..."

"உன்கிட்ட பேசிட்டே இருக்கணும் போலிருக்கு..."

"அதுதான் காலம் பூரா பேசப்போறோமே..." - ஜெயஸ்ரீ சிரிப்போட சொல்லும்போதே மதனின் குரல் கேட்டது.

"டேய் ஸ்ரீ! இங்கே வாடா... *சீக்கிரம்!*"

"என்னாச்சு இவனுக்கு? வா ஜெய்..." - என்றவாறே வேகமாய் படியிறங்கி வந்தான்.

கூடவே ஜெயஸ்ரீயும் ஓடிவர, கூடத்தில் புதிதாய் ஒரு நபர் நின்று கொண்டிருந்தான்.

"என்ன மதன்?"

"இவர் என்னவோ சொல்றாரு... என்னன்னு கேளேன்?"

"யார் இவர்? யாரு ஸார் நீங்க?"

வந்தவன் கம்பீரமாய்த் திரும்பினான். "என்னோட பேர் ஸ்ரீகாந்த்!"

"சரி..."

"இந்த வீட்ல ஒரு பொண்ணு இருக்குன்னு கேள்விப் பட்டேன்..."

"வ்வாட்?"

"பொண்ணு பார்க்க வந்திருக்கேன்..."

"என்ன? இந்த நேரத்திலயா?"

"ஸாரி ஸார். அட்ரஸ் தெரியாம சுத்தினதுல லேட் டாயிடுச்சு."



"என்ன மதன் இது? யாரு இவர்? இங்க வேற எந்தப் பொண்ணு இருக்கு? - குழப்பமாய் மதனிடம் கேட்டான் ஸ்ரீதரன்.

"அதையும் அவர்கிட்டயே கேளு..."

"யாரைப் பொண்ணு பார்க்க வந்தீங்க?"

"பேரு ஜெயஸ்ரீ. அப்பா இல்ல. அம்மாவும் ஒரு தம்பியும் தங்கையும் இருக்காங்க..."

"அடப்பாவி! யாருடா நீ?"

"ஸார். மரியாதையாப் பேசுங்க ஸார்."

"ஸ்ரீ! உன்னோட ஜோசியம் வேலை செய்யுதுன்னு நினைக்கிறேன். வருங்காலத்தில் நீ பெரிய ஜோதிட சிகாமணி ஆயிடுவியோ என்னவோ?"

"டேய் ! நான் ஏதோ என் மனசை ஜெய்க்கு தெரியப் படுத்த சும்மா ஒரு உதார் விட்டேன்டா!"

"எனக்கு ஜோசியமும் தெரியாது. அதையெல்லாம் நான் நம்புறதும் இல்லை..."

"அண்ணா! நான் சொன்னதுதான் சரி பார்த்தியா?" - உமா கேலியாய்ச் சொல்ல, அனைவரும் சிரித்தனர்.

"இது எல்லாம் உமாவின் விளையாட்டா? ராட்சஸி. ஐந்தே நிமிடத்தில் அலைக்கழிக்க வைத்து விட்டாயே..." - என உமாவை அடிக்க விரட்டினான் ஸ்ரீதரன்.

"எக்ஸ்க்யூஸ்மி ஸார்! இது என்னோட வொய்ஃப். இவளை அடிக்க நான் அனுமதிக்க மாட்டேன்..." - என்றான் ஸ்ரீகாந்த்.

"அடடா! நீங்கதான் அந்த பாக்கியசாலியா!

உங்க முகத்தைப் பார்க்கத்தான் ஆவலா இருந்தேன். வாழ்த்துக்கள்!"

"தேங்க் யூ!"

"எதுக்குன்னு கேட்க மாட்டீங்களா?"

"எதுக்கு?"

"இவகிட்ட வசமா மாட்டினீங்களே அதுக்கு!" - என ஸ்ரீதரன் சிரிக்காமல் சொல்ல...

இம்முறை உமா கோபமாய் விரட்டத் தொடங்கினாள். வீடு முழுக்க சிரிப்பலை பரவியது.